அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM
Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Lic# M08007147 Mortgage Agent
Cell: 416-543-6614
Tel: 905-470 2845 Fax: 905 470 2219
E-mail: das@centumoptima.com
Website: centumoptima.com

தாய் வீடு
THAIVEEDU யூன் 2009 HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®

# தமிழின் துயர் களைய 'நிமிர்வோம்'



படம்: www.ninaivukal.com

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PMCI

விபத்து
AAA Accident Claim Services
Theven Kankesu
Tel : 416-939-8789/416-720-6587
FREE Lawyer Consultation will be arranged
TORONTO AND GTA, OTTAWA, LONDON AND WINDSOR

PMCI MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

MARGOSA CREDIT UNION
Nurturing the Community
Tax Free Savings Account (TFSA) 2.00%
Premium Savings @ 2.00%
Opening Hours: Mon-Fri: 10.00 a.m. to 5.00 p.m.
Suite 100A, 2100 Ellesmere Road, Toronto, ON. M1H 3B7
Tel: 416-915-8989

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Markham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

வீடும் வீடுசார் விடையங்களுக்குமான பத்திரிகை


R&S AUTO SALES
HONDA - TOYOTA - GM MINI VANS ON THE SPOT FINANCING
சிறந்த சேவைக்கான பல விருதுகளைப் பெற்ற வாகன விற்பனை முகவர்
Tel: 416.412.3838
Fax: 416.412.1174
5310 Finch Ave, Unite 23, Scarborough
between Markham and middlefield
Radha


வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்
CENTURY 21 SERVICES PLUS
5855, Taschereau blvd (office 207)
Brossard, Quebec
J4Z 1A5
sugumaran@sympatico.ca
SUGUMARAN SINNIAH
(Chartered real estate broker)
Office : (514) 299-3186
(450) 926-1881


வீடு வியாபாரம் வாங்க விற்க நாடுங்கள்
• Residential • Industrial
• Commercial • Investment
HOMELIFE
Higher Standards
Professional & Friendly Services
Logan Appulingam
Sales Representative
Direct : 416-200-6120
Email : logan7@rogers.com
HomeLife/GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Road, Suite 206, Toronto, ON. M1S 3Y3
Bus.: 416-321-6969 Fax : 416.321-6963
Highest Standard Agents.... Highest Results!...


416.200.5470
ELECTRICAL - PLUMBING & DRAINAGE SERVICES
SANTHA
www.santha.ca
416-200-5470


வீடு வியாபார ஸ்தாபனம்
வாங்க விற்க
Your #1 Choice
Logan Manikavasagar
Broker
Direct : 416.708.9903
Century 21
Percy Fulton Ltd. Brokerage*
Email : sales@loganhotproperties.com
Kalai Logan
Sales Representative
Direct : 416.697.9903
Buy or Sell Your Properties? Real Estate is My Job...Worry Free for you...


HIGHPOINT LASER
100 IRONSIDE CRESCENT, UNIT #10, TORONTO, ONT M1X 1M9
Toll Free: 1.877.281-9997 • Fax: 416-297-6113
www.HighPointLaser.ca • email: Sales@HighPointLaser.ca
Brand Name Toner Cartridges for
Copy Machines
Laser Printers
Fax Machines.
brother EPSON DELL hp
LANIER LEXMARK Panasonic IBM
SAMSUNG PitneyBowes XEROX
SHARP Canon
1. TN 350 - $45
2. Q7551X - $70
3. Q6000 - $50
4. E250 Toner - $60
5. FX-10-104 - $45
6. QU6511A - $60
WE RECYCLE
Lower Cost - 100% Guaranteed - Call For Delivery - 416-297-9994

தாய் வீடு
THAIVEEDU HOME & LIVING

## வென்றெடுக்காமல் தோற்றுத்தான் போனார்கள்!

நமது வாழ்க்கையில் எத்தனையோ இழப்புகளையும், துயரத்தையும் நாம் கடந்து வந்திருக்கின்றோம். ஆனால் இன்றைய நம் நிலைமை போல் இனி ஒரு இழிந்த நிலைமை இலங்கைத் தமிழர்களுக்குக் கிடையாது, கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு மிகப்பெரிய மனிதப் பேரழிவு.

ஒவ்வொரு தமிழனுக்கும் உதடுகளில் இருந்து வார்த்தைகள் வருவதற்கு முன்னர் கண்ணீர்தான் கொட்டுகின்றது. மனநிலை பாதிக்கப்பட்ட மனிதர்களாக நாம் நடைப்பிணமாகத் திரிகின்றோம்.

வென்று விட்டோம்! என்ற சிங்களத்தின் இனவாத கூக்குரல். ஆனாலும் அவர்கள் தோற்றுத்தான் போனார்கள்.

அவர்கள் நிச்சயமாகத் தோற்றுத்தான் போனார்கள். ஒரு தமிழ் குழந்தையின் இதயத்தைக் கூட அவர்களால் வென்றெடுக்க முடியவில்லை. எப்போதுமே ஆறமுடியாத, ஆழமான வடுவை தமிழர்களின் இதயங்களில் ஏற்படுத்திவிட்டார்கள். இதனால் இலங்கைத் தமிழர்களுக்கும் அவர்களுக்குமான உறவில் நிரந்தரமான பிரிவை ஏற்படுத்திவிட்டார்கள்.

இதன் விளைவுகள் என்ன? என்பது இப்போது அவர்களுக்குப் புரியாது.

இனி நாம் எங்கிருந்து தொடங்குவது?

ஆத்திரம், கோபம், பழிவாங்கும் உணர்வுகள் நமக்கு ஏற்படுவது இயற்கை. ஆனால் இன்றைய சூழ்நிலையில் மட்டுமல்ல, என்றைய சூழ்நிலையிலும் இவை ஒன்றுமே ஒரு இனத்தின் அரசியல் விடுதலைக்கு பயன்தரப் போவதில்லை.

ஒன்றை மட்டும் நாம் புரிந்து கொள்ளவேண்டும், எமது இன்றைய பேரிழப்பு உலகத்தின் கண்களை சற்றுத் திறந்துள்ளது.

பல நாடுகள், உலக அளவில் கருத்து தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வலிமை உடைய பத்திரிகைகள், மனித உரிமை ஆர்வலர்கள், எழுத்தாளர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள் என்று பலரும் இலங்கை இனவாத அரசிற்கு எதிராக செயலாற்றி வருகின்றார்கள்.

"இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு இந்தியா மறைமுகமாக துணை போயிருக்கின்றது" என்று இந்தியப் படையில் உயரதிகாரியாகப் பணியாற்றிய அசோக் மேத்தா லண்டனில் இருந்து வெளிவரும் "த ரைம்ஸ்" நாளிதழுக்கு அளித்த நேர்காணலில் குற்றம் சாட்டியிருக்கிறார்

இந்த ஆண்டு ஜனவரியில் காசா பகுதி மீது குண்டுவீச்சு நடத்தி 926 பேரை படுகொலை செய்ததற்காக இஸ்ரேல் மீது போரியல் குற்ற வழக்கு தொடர்ந்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்த இந்திய அரசு, சிறிலங்காவுக்கு எதிரான தீர்மானத்தை மட்டும் எதிர்த்ததாக "த ரைம்ஸ்" நாளிதழ் தெரிவித்துள்ளது.

இலங்கைப் போருக்கு இந்தியா உதவியதை மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிரிவு இயக்குநர் பிறட் அடம்சும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

"இலங்கைப் படுகொலையில் இருந்து தப்பி வந்த யாரும் இலங்கை அரசுக்கு எதிராக கனடாவில் வழக்கு வைக்கலாம்" என்று எங்கள் தத்து தாயான கனடா அரசு அறிவிக்கவுள்ளது.

இவை எல்லாம் உலகமாற்றத்தின் சில உதாரணங்கள். இன்னமும் நிறைய நடக்கின்றது, நடக்க இருக்கின்றது.

நாம் மனதுக்குள் துயரை அடக்கிவைத்து நோயாளியாகாமல் அழுவோம், வாய்விட்டு அழுவோம். கூரிய வாளை விட எங்கள் கண்ணீர் சக்தி வாய்ந்தது.

அதேவேளை எமக்குள்ளான பகைமை விடுத்து ஒன்றுபட்டுச் செயற்படுவோம், ஒன்றிணைவோம்.

III




## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

யூன் மாதக் குறிப்புகள்

- இம் மாதம் 21ஆம் திகதி தந்தையர் தினம் (Father's Day).
- இம் மாதம் 21ஆம் திகதியிலிருந்து கோடை காலம் ஆரம்பிக்கிறது.
- உங்கள் தோட்டத் தரைகளில் களைகள் (Weeds) காணப்படுகின்றதா என்பதை பரிசோதித்து, உடனடியாக அவற்றை அகற்றுவதற்குரிய நடவடிக்கை எடுங்கள்.
- அளவுக்கு அதிகமான நீர் விடாதீர்கள். அதிகமாக நீர் விடுவதால் நீர் தேங்கி நிற்க வழிவகுக்கும்.
- வெப்பமேற்றும் கருவிகளை (furnance) பரிசோதித்து, தேவையெனில் திருத்தம் செய்யுங்கள் (service).
- தீயணைப்புக் கருவியின் (fire extinguishers) குழாயின் வாயில்கள் அடைபடாமல் இருப்பதை உறுதிப்படுத்துங்கள்.
- உங்கள் வீட்டு யன்னல்களை உட்புறமும் வெளிப்புறமும் கழுவி துப்பரவு செய்யுங்கள்.
- HVAC( Heat, Ventilation, and Air Condition Filter) இன் வளி வடிகட்டியினூடாக (air filter) வளிமண்டல மாசுகள் வீட்டினுள் சுற்றோட்டத்திற்குட்படாதவாறு உற்பத்தியாளரால் விதந்துரைக்கப்பட்டபடி, சுத்திகரியுங்கள்.
- வீட்டிற்கு வெளியே பயன்படுத்தும் பொழுதுபோக்கு உபகரணங்கள் அனைத்தும் வேலை செய்யக் கூடிய நன்னிலையில் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துங்கள்.
- உற்பத்தியாளரால் கூறப்பட்டபடி, கராஜை தன்னிச்சையாகத் திறக்கக் கூடிய கருவியை (Garage Door Opener) பரிசோதிக்குக.
- வெப்பத்தை விரும்பும் பூக்கும் தாவரங்களான செவ்வந்தி, லில்லி, மணிவாழை, ரோஜா, கோழிக் கொண்டை, கோலியாஸ் ஆகியவற்றை நாட்டுங்கள்.
- இலையுதிர் காலத்திற்குரிய பூக்கும் தாவரங்களான ரியூலிப்ஸ் (tulips), டபொடில்ஸ் (daffodils), ஆகியவற்றின் கிழங்குகளை பெற்றுக் கொள்வதற்கு ஒழுங்கு செய்யுங்கள்.
- ரோஜாச் செடிகளுக்கும் புற்தரைகளுக்கும் பசளை இடுங்கள்.
- அதிகாலையில் நீர் விடுவதால், உங்கள் தாவரங்கள் நீரை உறிஞ்சுவதற்கு போதுமான காலம் இருப்பதால், இருட்டுவதற்கு முன்னர் நிலம் வரண்டு விட வழி ஏற்படுகின்றது.

தொகுப்பு: மகேன் சிங்கராசா

Publisher & Editor : P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், கருணா, பொன்னையா விவேகானந்தன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம்.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம்.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள் - For More Info : Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Toronto விநியோகம் : கிளி (சிவராஜா)
Montréal விநியோகம் : சுகுமாரன் சின்னையா
1-514-299-3186
Ottawa விநியோகம் : அலெக்ஸ் சிவசம்பு
1-613 -276-7253

Tel : 416-646-3422, 416.400.6406
Fax : 416.849.0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

www.inayam.net

# இலங்கைத் தமிழருக்கெதிரான இருண்ட போரின் ஒரு அத்தியாயத்தின் முடிவு

- அ. கணபதிப்பிள்ளை -

கடந்த ஆண்டிலிருந்து மெதுவாக நகர்த்தப்பட்ட ஈழப்போர், ஆயுதப் போராகவும் பிரச்சாரப் போராகவும் முழு வடிவம் பெற்று, தமிழருக்கு எதிரான இன அழிப்புப் போராக மாறியதை பல ஊடகங்கள் சுட்டிக் காட்டத் தொடங்கியிருந்தன. இலங்கை அரசு பயங்கரவாதத்திற்கு எதிரான போராக இதனை வர்ணித்துக் கொண்டதுடன், இலங்கைத் தமிழரைப் பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுக்கின்ற ஒரு செயற்பாடாக உலகை நம்பவைத்துக் கொண்டிருந்தமையினால் இந்தப் போர் ஒரு இருண்ட போராகவும் உயிரிழப்புக்கள் மறைக்கப்பட்ட போர்ப் பின்னணியைக்கொண்டதாகவும் இருந்தது. இரும்புத்திரைக்கு அப்பாலிருந்து மனித உரிமை மீறுதல்களை முன்னின்று நடாத்திய உதாரண நாடுகளின் பின்னணியில் நடந்த போரென்று மேற்குலக ஊடகங்களின் கண்டனங்களுக்கு உள்ளாக்கப்பட்ட இப்போரின் தாக்கங்கள் தொடர்ந்த வண்ணம் இருப்பதே இந்தப் போரின் அடிப்படை நோக்கத்தினைத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

2002ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், சமாதானப் பின்னணியில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை மூலம் இலங்கைத் தமிழர் அனுபவித்த 'பெரும்பான்மையினர் ஜனநாயகத்தின்' அழிவுகளிலிருந்து தீர்வு ஒன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தமிழர்களை நம்பவைத்தது. ஆனால், கடந்த வருடம் ஜனவரி 3ம் திகதி இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டு, சமாதான நடுவர்களையும் யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களையும் ஜனவரி 16ஆம் திகதிமுதல் அனைத்துச் செயற்பாடுகளிலிருந்தும் இடைநிறுத்தம் செய்ததுடன் ஐ.நாவும், இணைத் தலைமைநாடுகள் என வர்ணிக்கப்பட்ட ஜப்பான், அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் நிகழப்போகும் பாரிய மனித அவலத்தினைச் சுட்டிக்காட்டியிருந்தன. ஐநாவின் செயலர் பான் கீ மூன் இரத்த வெள்ளத்தைத் தடுக்க ஒரு அரசியல் தீர்வினை முன்வைக்கும்படியும் போர்வழித் தீர்வு இலங்கைக்கு எப்பொழுதுமே சாத்தியமற்றதெனவும் தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்நிலையில், இலங்கை அரசினாற் தொடங்கப்பட்ட போர் பயங்கரவாதத்துக்கு எதிரான போராகச் சித்தரித்துக் காட்டப்பட்டதுடன், கிழக்கு மாகாணத்தில் இலங்கை அரசு நடத்திக் காட்டிய போரினைப் போன்று ஒரு போரையே இலங்கை அரசு நடாத்தி முடிக்கும் என சர்வதேச நாடுகளும் நம்பியிருந்தன. இதனால் இப்போரின்மூலம் விடுதலைப் புலிகளிடமிருந்து மக்களைப் படிப்படியாக வெளியேற்றி, புலிகளைத் தனிமைப்படுத்திவிட முடியும் என்ற இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறையினை நம்பியிருந்த பல நாடுகளும் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த போர்த்திட்டங்களை முற்றுமுழுதாக விளங்கிக் கொண்டிருக்கவில்லை.

இந்தப் போரின் கபடத் தன்மையைத் தெரிந்து கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறை, இது இறுதிப் போர் என்பதனை மக்களுக்குத் தெளிவாக்கியது. 1976இல் 10,000 ஆள்படையணியினரைக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் கருணாவின் பிரிவுக்குப் பின் 5,000 பேரைக் கொண்டதாக இருப்பதாகவே இலங்கை அரசு தெரிவித்தது, அதே வேளை இலங்கை அரசு தனது போருக்கான படையணியை 300,000 ஆகவும் போர்ச் செலவினத்தை வருடம் 40 சதவீதத்தாலும் அதிகரித்தது. இந்நிலையில் இராணுவத் தீர்வு மூலமே இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காணமுடியும் என்ற நம்பிக்கையினைச் செயற்படுத்தத் தொடங்கியிருந்தது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காணமுடியும் என்ற நம்பிக்கையினைச் செயற்படுத்தத் தொடங்கியிருந்தது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டிருந்த 13ஆவது திருத்தச் சட்டமூலம் நடைமுறைக்கு ஒவ்வாததாகவும் அன்றைய நோக்கத்திலிருந்து காலாவதியாகிவிட்டதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தபொழுதிலும்கூட, அந்தச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்வுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை இலங்கையும் இந்தியாவும் மறைமுகமாக ஏற்றுக்கொண்டிருந்தன. தீர்வுத் திட்டம் உறுதியாகிவிட்ட நிலையில் அதனை ஏற்றுக்கொள்ளாதிருப்பவர்கள் விடுதலைப் புலிகளே என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டன.

தமிழர்களின் பிரதிநிதிகள் என்ற தகுதியினைப் பெற்றிருந்த விடுதலைப் புலிகளும் அவர்களுக்குச் சாதகமாக இருந்த தமிழரசுக்கட்சிசார் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களது கொள்கையில் உறுதியாக இருக்கும்வரையில் தமிழர்களுக்கு 13ஆவது சரத்து வழியிலான தீர்வுத்திட்டத்தினைக் கையளிக்க முடியாது என்பதனை இலங்கை அரசு முழுமையாக நம்பியதனால் விடுதலைப் புலிகளை பங்காளர் பக்கத்திலிருந்து தனிமைப்படுத்தவும் கூட்டணியினரை பாராளுமன்றத்திலிருந்து அகற்றவும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலத்தில் இலங்கை அரசு கொள்வனவு செய்த சீன ஆயுதங்களும் சீனாவின் வற்புறுத்தலினால் பாகிஸ்தான் வழங்கியிருந்த ஆயுதங்களும் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளினால் வழங்கப்பட்ட இராணுவப் பயிற்சிகளும் இலங்கையின் போர்வழித் தீர்வுக்கும் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கும் வழியுண்டென்பதனை நம்பும்படி செய்தன. இந்நிலையில், இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் மீதான அரசியல் பொருளாதார பிரதேச அக்கறையும் கலந்து கொண்டதே இலங்கைக்கு போரில் வெற்றி கிடைக்கும் என்பதனை உறுதிப்படுத்தியது. இந்தியா மேற்கொண்ட பிரதேச நலன்களின் செயற்பாடுகளினூடாக இலங்கையில் தமிழர்களுக்கு சமத்துவமான ஒருவாழ் நிலையினைத் தோற்றுவிப்பதே இந்தியாவின் நோக்கம் என்பதனை ஏனைய நாடுகளுக்குத் தெரிவிப்பதாக இந்தியாவின் புரிந்துணர்வு ஒப்பந்த காலச் செயற்பாடுகளாகவும் அமைந்திருந்தன. இதன் பின்னணியில் கிழக்கு மாகாணத்தில் போர் முடிவடைந்ததும் இலங்கையில் சமத்துவமான சமாதானச் சூழல் தோன்றிவிட்டதாக இந்தியாவிலிருந்து இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனைப் பின்பற்றி ஐரோப்பிய நாடுகள் சிலவும் இந்தியாவின் பிரச்சாரப் போர்வலையினுள் சிக்கியிருந்தமையினைக் காணமுடிந்தது. இதன்படி 2007ல் இந்தியாவிலிருந்த 100,000 அகதிகள் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக செய்தி நிறுவனங்கள் தெளிவுபடுத்தின. இலங்கை அரசினால் தமிழுக்குக் கொடுக்கப்பட்ட சமஉரிமையும் மாவட்டசபை அதிகாரங்களும் தமிழர் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழப் போதுமானதென சர்வதேசத்தை நம்பவைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கை முழுவதும் இனக் கலவரங்கள் தோன்றுவதற்கும் அதன்வழி சிங்கள தமிழ் குரோதங்கள் வளர்வதற்கும் முன்னர் இத்தகைய சட்டங்கள் இலங்கை அரசாங்கங்களினால் முன்வைக்கப்பட்டிருந்தால் ஒருவேளை இன்று காணும் மாறாவடுக்கள் மறைக்கப்பட்டிருக்கலாம்.

இலங்கைத் தமிழர்கள், பரம்பரை பரம்பரையாக பேரினவாத அடக்குமுறைக்கும் அரச அதிகாரப் பாராமுகத்துக்கும் உட்படுத்தப்பட்டிருந்தமையினால் பெரும்பான்மையினரின் ஜனநாயகத்தின் பாதிப்பினை உணர்ந்தவர்களாக இருந்ததுடன், அதனை நீக்கும்பொருட்டு, கூட்டாட்சி, சுயநிர்ணயம், தனிநாடு ஆகிய ஆலோசனைகளைச் சிங்கள அரசியல்வாதிகள் அங்கீகரிக்காதவிடத்தும் அவர்களிடம் முன்வைத்து அதற்காகவும் போராடினார்கள். சிங்கள அரசியல்வாதிகளால் பரஸ்பரம் முன்வைக்கப்படாத எத்தகைய அரசியற் சீர்திருத்த ஆலோசனைகளும் இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதும் அத்தகைய புரிந்துணர்வு ஏற்பட்ட ஓரிரு சந்தர்ப்பங்களிலும்கூட அதனை அழிக்க பெரும்பான்மை பல வழிகளில் முயன்றது என்பதும் வரலாற்று உண்மை. அதுபோன்றதொரு நிகழ்வுதான வன்னிப் போர்.

வன்னிப் போரில் பலநாடுகளின் அனுபவங்கள் பெறப்பட்டன. இந்திய அமைதிப்படை கனரக ஆயுதங்கள் பயன்படுத்தாமையே தனது அன்றைய தோல்விக்குக் காரணம் என்பதனை 1989இல் தெளிவுபடுத்தியிருந்தனர். அத்துடன் இலங்கை அரசைமுன்வைத்தே உள்நாட்டுப் போராக விடுதலைப்புலிகளுக்கெதிரான போரை நடத்தியிருக்க வேண்டும் என்பதனையும் நம்பியிருந்ததால் அத்தகைய நடைமுறைக்கு இந்தியா தனது ஒத்துழைப்பை வழங்கியது. கடைசிநேரத்தில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடாது என்ற கோரிக்கையை இந்தியா இலங்கை அரசிடம் தெரிவித்திருந்தாலும் பாராமுகமாக இருந்தமையிலிருந்தே இந்தியாவுக்கு அடிப்படை நோக்கமாக இருந்தது கனரக ஆயுதப் பாவனையே என்பது தெளிவாகத் தெரிகிறது.

> “ போருக்குப் பின்னைய இணக்கப்பாடு
> மூன்றாந்தரத்தலையீடு இன்றி
> நிகழமுடியாத தொன்று.
> இலங்கையில் நடைபெறும் சம்பவங்களையிட்டுப்
> பாராமுகமாயிருப்பதும்,
> அவற்றை விசாரித்து நடவடிக்கை எடுக்கும்படி
> இலங்கையைக் கோருவதும்,
> இலங்கையில் நடப்பவை உள்நாட்டு விவகாரம்
> என இலங்கையை அதன் போக்கில் விடுவதும்,
> தமிழினத்தை அழிப்பதற்கொப்பாகும். ”

5ம் பக்கம் பார்க்க...

## கூர் - 2009

**விரைவில் வெளிவரவிருக்கும் கனடா தமிழ் கலை, இலக்கியத் தொகுப்புக்கான ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
கவிதை, சிறுகதை, கட்டுரை எதுவாயினும் ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக
எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**

மின்னஞ்சல்:
**koorcircle@gmail.com**

மேலதிக தொடர்புகளுக்கு: தேவகாந்தன் 416-458-9426, டானியல்ஜீவா 416-500-9016, கௌசல்லா 416-299-6392
கூர் கலை, இலக்கிய வட்டம், 102 Hntingdale Blvd., Scarborough, ON M1W 1T1

4ம் பக்கத் தொடர்ச்சி...

இலங்கைத் தமிழர் சுமார் 30,000 பேர் கொல்லப்படுவதற்கு கனரக ஆயுதங்களின் பயன்பாடுதான் காரணம் என்ற கருத்து மேற்குலக செய்தி நிறுவனங்களினாலும் புலனாய்வு நிறுவனங்களினாலும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

சுமார் 3 சதுர மைல் பரப்பளவில் 400,000 மக்களைக்கொண்டதும் உயர் சனத்தொகை அடர்த்தி கொண்டதுமான எந்த ஒரு நாடும் உலகில் இருந்ததில்லை. அது விடுதலைப் புலிகளின் ஆளுகைக்குட்பட்டிருந்த தற்காலிக பிரதேசம் என்பதனை நிறுவனங்கள் சுட்டிக் காட்டியதுடன், அப்பகுதி பாதுகாப்பு வலயம் என்ற தகுதியை இழப்பதற்கு சர்வதேச உலகு காரணமாக இருந்தது என்பதும் சுட்டிக்காட்டப் பட்டது. இவ்வாண்டு ஜனவரி முதல் போர் நிறுத்தத்துக்கான கோரிக்கைகள் பல நாடுகளிடமும் சர்வதேச நிறுவனங்களிடமும் இருந்து இலங்கைக்கு முன்வைக்கப்பட்டும் அது தொடர்பான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

மடு, மன்னார் பிரதேசங்களின் போர் நிலைகளுக்குப் பின்னர் வன்னிப் போர் இருண்ட போராகவே உலகுக்குக் காட்டப்பட்டது. இலங்கை அரசால் கிளிநொச்சியிலிருந்து தொண்டு நிறுவனங்கள் வெளியேற்றப்பட்டமையும் அதிகாரபூர்வமான ஊடகத்துறையின் அனுமதி மறுக்கப்பட்டமையும் இருண்ட போரின் உதயத்தை உலகுக்கு வெளிக்காட்டியது. அன்றே ஐ.நாவில் செல்வாக்குப் பெற்ற நாடுகள் நினைத்திருந்தால் போர்அழிவினைத் தடுத்திருக்கலாம்.

நவீன தொடர்பு சாதனக் கருவிகளான செய்மதி மூலப் படங்கள், விமானப் படங்கள் என்பவற்றின் உதவியுடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டபொழுதிலும் இப்போரின் படுகொலைகள் வெளியே தெரியாது மறைத்து வைக்கப்பட்டேயிருந்தன. போர் முடியும் எதிர்பார்ப்பு 24 மணித்தியாலங்களாகக் குறைத்துச் சொல்லப்பட்டதன் பின்னரே போரின் இழப்புகள் பற்றிய செய்திகள் ஐ.நா.விலிருந்து கசியத் தொடங்கின.

ஆயினும், இலங்கை அரசு 24 மணித்தியாலத்தில் முடிக்கமுடியாத நிலை தோன்றவும் இந்தியாவின் முதலைக்கண்ணீரின் மத்தியில் தீவிரமான கனரக ஆயுதப் பயன்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதேவேளை அந்தப் பிரதேசத்தில் இருபதாயிரம் மக்கள் மாத்திரம் இருப்பதாகச் சாதித்தது.

வன்னி மாவட்டங்களான கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகியவற்றில் இருந்த சுமார் 550,000 மக்களில் 400,000 மக்கள் விடுதலைப் புலிகளின் பிரதேசப் பின்வாங்குதலுடன் இணைந்து சென்றிருக்கிறார்கள். வவுனியா மாவட்டம், மன்னார் மாவட்டம் ஆகியவற்றின் சில பகுதிகள் இலங்கை அரச கட்டுப்பாட்டுக்குள் இருந்தமையினால் அங்கிருந்த மக்கள் சுமார் 150,000 பேர் வவுனியா, மன்னார் ஆகிய நகரங்களைச் சூழ்ந்த பகுதிகளில் வாழ்ந்திருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்த 128,000 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தின் 122,000 பேரும் முழுதாகவே இடம்பெயர்ந்தனர். மன்னார் மாவட்டத்திலிருந்தும் வவுனியா வடக்கிலிருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்கால், மாத்தளன் பகுதிகளுக்குச் சென்றமை நீண்டதொரு ஆள், உடைமை இடப்பெயர்வாக இருந்தது. இடம்பெயர்ந்த எல்லோரது உடைமைகளும் அந்தக் குறுகிய வலயத்தின்மீது வீசப்பட்ட எறிகணைகளுக்குள் ஆகுதியாகிவிட்டன.

ஏப்பிரல் மாதம் வரையில் இந்த நெருக்கடியான மக்கள் கூட்டத்தில் 7,000 வரையான இழப்புகள் பதிவாகியிருந்ததாக ஐ.நா.அறிக்கைகள் வெளிவந்தன. மே மாதம் 1ம் திகதியிலிருந்து 19ஆந் திகதிவரையில் நாளாந்தம் 1,000 பேரின் இழப்புகள் இருந்ததாகவும் இதனையே சுமார் 20,000 பேர் இறந்ததாக பிரித்தானிய ரைம் செய்தி நிறுவனங்கள் செய்மதிப் படங்களை ஆதாரம் காட்டி உறுதி செய்திருந்தது.

பிரித்தானிய ஊடக அறிக்கையினைத் தொடர்ந்து, பிரான்ஸ் நாட்டின் லெ மொண்தேயும் அதிகளவு பொதுமக்கள் கொல்லப்பட்டமையினை உறுதிப்படுத்தியது. போர் முடியும் தறுவாயில், 100 ஆயிரம் பேர் அங்கிருந்ததாகவும் அதில் 20,000 பேர் கொல்லப்பட்டதாகவும் கூறும் அறிக்கைகளை இலங்கைத் தேசிய பாதுகாப்பு மையமும் வெளியுறவு அமைச்சகமும் மறுத்திருக்கின்றன.

புள்ளிவிபரங்களின்படி 400 ஆயிரம் பேரில் 280 ஆயிரம் பேர் 40 தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றும், அவர்களது பாதுகாப்புக்கு மனித உரிமை ஆணைக்குழு முக்கிய நடவடிக்கை எடுக்கவில்லையென்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. மே மாதம் 16ஆந் திகதி அங்கிருந்த 100,000 பேரில் அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் வெளிவந்ததாகச் சொல்லப்பட்ட 88,000 பேரினைவிட மிகுதியான 12,000 பேர் எவ்விதம் காணாமற் போயிருக்கிறார்கள் என்பது தெளிவுபடுத்தப் படவில்லை என்ற கருத்தும் முன்வைக்கப் பட்டிருந்தது. இவ்வாறு மொத்த இறப்பு 30 ஆயிரத்திலிருந்து 20,000 வரை வேறுபடுகின்றபோது பிரித்தானிய ஊடகம் இறந்த உடலங்களை எண்ணிப் பெற்றுக்கொண்டதன் தரவுகளின் மூலமே 20,000 பேர் கடைசிப் போர் நாட்களில் இறந்ததாக உறுதிபடத் தெரிவிக்கிறது.

இத்தகைய புள்ளிவிபரங்களும் அவை தொடர்பான ஆய்வுகளும் வெளிவருவதற்கு முன்பாகவே, உடனடியாக மனித உரிமை மீறல்பற்றிய விசாரணை நடவடிக்கைகள் தேவையில்லை, யுத்தத்தின் பின்னரான மீள் கட்டமைப்பும் சமாதானமும்தான் ஒரு நாட்டுக்குத் தேவை என்பதன் அடிப்படையில் இலங்கையின் பிரச்சாரப் போருக்கு ஆசிய நாடுகள் ஆதரவை வழங்கின. போரை முன்னின்று நடாத்தியதாகச் சொல்லப்பட்ட நாடுகளே தங்களைக் காப்பாற்ற வேண்டிய தேவையில் உலக மக்களுக்கு தங்களிடம் கோபமில்லை என்பதனை சட்டப்படி உறுதி செய்து வெற்றியடைந்துவிட்டன. ஆனால், புத்த தர்மத்தின் வழியில் சென்ற இந்தியா, சீனா, இலங்கை அதன் கர்மத்தை அனுபவிக்காமல் போகமாட்டா என்பதனை எதிர்காலம் தெளிவுபடுத்தும்.

இருண்ட போரின் மறுஅத்தியாயம் தொடங்கி விட்டது. இலங்கை அரசின் கொலைகளுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் எதிராக இலங்கையே விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கும் என்று முன்னரும் பலமுறை ஏமார்ந்த நாடுகள் இந்தத்தடவையாவது இலங்கையின் மீது மனித உரிமை மீறுதல் தொடர்பான நிகழ்வுகளை வெளியே கொண்டுவர முயன்று கொண்டிருக்கின்றன. இலங்கையின் கூட்டணிகளிடையே கசப்பு ஏற்படுகின்ற பொழுதில் தான் ஒருவேளை அது சாத்தியமாகும்.

புலம்பெயர் நாடுகளிலுள்ள. தமிழ்உறவுகள் இலங்கை உறவுகளின் அவலங்களை நீக்க ஐ.நா அமைப்பையே நம்பியிருக்க வேண்டிய சூழலிலிருக்கிறார்கள். போருக்குப் பின்னைய இணக்கப்பாடு மூன்றாந்தரத்தலையீடு இன்றி நிகழமுடியாத தொன்று. இலங்கையில் நடைபெறும் சம்பவங்களையிட்டுப் பாராமுகமாயிருப்பதும் அவற்றை விசாரித்து நடவடிக்கை எடுக்கும்படி இலங்கையைக் கோருவதும் இலங்கையில் நடப்பவை உள்நாட்டு விவகாரம் என இலங்கையை அதன் போக்கில் விடுவதும் தமிழினத்தை அழிப்பதற்கொப்பாகும்.

போரின் பின்னிகழ்வுகளின் கண்காணிப்பு ஐநா அமைப்பின் தலைமையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்காகச் சில நாடுகள் தமது பிரதிநிதிகளை இலங்கையிற் தங்க வைக்கக் கூடிய சூழலை ஏற்படுத்தவேண்டும். ஆட் கடத்தல் கொலைச்சம்பவங்கள் தொடருவதும், அவை பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பாதுகாக்கப்படுவதும், ஆகிய நிகழ்வுகள் தமிழர்களுக்கு மீண்டும் மீண்டும் அழிவை ஏற்படுத்தும் செயற்பாடு என்பதனை மனதிற் கொண்டு தமிழர்கள் கட்சிசார் குழுசார் விரோதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டுநின்று எதிர்த்துச் செயற்பட வேண்டிய நாள் தொடங்கிவிட்டது.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■




# மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

**Ravi. Paramu**
Broker
**Direct: 416-262-4176**

HOMELIFE HIGHER STANDARDS




**McCowan / Denision**
3 Bedrooms 2 Washroom
Finished Basement w/o




**Morningside / Staines**
3 Bedrooms 3 Washroom




**14th / McCowan**
3 Bedrooms 3 Washroom
Part Finished Basement w/o



**HomeLife Today Realty Ltd., Brokerage***

**Bus: 416-298-3200**

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

*Independently Owned and Operated, Realtor

# RBC RESIDENTIAL MORTGAGES

- 1st Time Home Buyers
- Pre–Approvals
- Builder Rate Hold Programs
- Refinance, Renewals & Switch for Free
- Debt Consolidation
- Home Equity Line of Credit
- New Immigrant & Self Employed Programs



| RATE SPECIAL | |
|---|---|
| 4 Yrs Fixed | 4.29 % |
| 5 Yrs Fixed | 4.34 % |
| Variable Closed | 3.30 % |
| Variable Open | 3.50 % |

**Three Locations to Serve you**

**Royal Bank**
Eglinton & Sinnott
2043 Eglinton Ave E
Scarborough, ON
M1L 2M9

**Royal Bank**
Kingston & Steeple Hill
670 Kingston Road
Pickering, ON
L1V 1A6

- digi Media -

RBC

**Ram Krish**
RBC Mortgage Specialist
Direct **416-526-4996**
Email: ram.krish@rbc.com



# பசளைகளை தெரிவு செய்தலும் உபயோகித்தலும்



மகேன் சிங்கராஜா
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

உங்களது வீட்டுத்தோட்டப் பயிர் செய்கைக் காகவோ அல்லது புற்தரையை சிறந்த முறையில் பராமரிப்பதற்காகவோ பயன் படுத்துவதற்கு பல்வேறு வகையான பசளை கள் உள்ளன. அவை பிரதானமாக நான்கு வகைகளாக வகுக்கப்படுகின்றன.

- உலர் பசளைகள் (Granular (Dry) Fertilizers)
- திரவ பசளைகள் (Liquid Fertilizers)
- செயற்கை பசளைகள் (Synthetic Fertilizers)
- சேதன பசளைகள் (Organic Fertilizers)

## உலர் பசளைகள்:

இலகுவாக பயன்படுத்தக்கூடிய காரணத்தி னால் இந்த வகை பசளைகளே தற்போது பிரபல்யமாக விளங்குகிறது. சிறு துணிக் கைகளால் ஆன இந்த பசளைவகை இரு வகைப்பட்டவை.

- நேர இடைவெளியின் பின் மெதுவாக அதன் பயனை வெளியேற்றப்படும் பசளை
- மண்ணினுள் விரைவாக அதன் பயனை வெளியேற்றப்படும் பசளை

## மண்ணினுள் மெதுவாக வெளி விடப்படும் பசளை:

இவ்வகையான பசளை மண்ணில் தூவப்பட்ட பின்பு 2 முதல் 6 மாத காலப் பகுதியில் மண்ணினுள் மிகவும் மெதுவாக வெளிவிடப் படுகிறது. எனவே பசளையை ஒரு தடவை தூவிய பின்பு அடுத்த சில மாதங்களுக்கு பசளையை பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படாது. ஈரலிப்பான காலங்களிலும், மண்ணில் உள்ள நுண்ணங்கிகளின் செயற் பாடுகளினாலும், இப்பசளையில் உள்ள சத்துப் பொருட்கள் (Nutrients) மண்ணினுள் பரவுதல் விரைவாக நடைபெறுகிறது. இவ்வகையான பசளையைப் பயன்படுத்துவதனால், அது நீண்ட காலத்திற்கு பயன் ஏற்படுத்துவதுடன், புற்தரை கருகிப் போவதற்கான வாய்ப்பும் குறைக்கப்படுகிறது.

## விரைவாக பரவும் பசளை:

இவ்வகையான பசளைகள் புற்களுக்கு தேவையான கனிப்பொருட்களை, குறிப்பாக நைதரசனை உடனடியாக வழங்குகிறது. இதன் காரணமாக புற்கள் விரைவாக வளருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கும்.

அதே சமயம் இவ்வகையான பசளையைப் பயன்படுத்துவதனால் புற்கள் விரைவில் கருகக்கூடிய அபாயம் உண்டு. அதேவேளை அடிக்கடி பசளையிட வேண்டிய தேவையும் அதிகளவு நீர் பாய்ச்ச வேண்டிய தேவையும் ஏற்படும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

## திரவ வகை பசளைகள்:

இவ்வகையான பசளை உள்ள ஒரு கொள்கலனுடன் ஓர் ரப்பர் குழாயை(hose)இணைத்து புல்வெளி மீது விசிறப்படுகிறது. இவ்வகையான பசளையை புற்தரையில் சமமான அளவில் பரவுவதன் மூலம் புல் கருகக்கூடிய வாய்ப்பை குறைக்க முடியும். அது மட்டுமன்றி இவ்வகையான பசளை மிக விரைவாக வேர்களை சென்றடைவதனால் புல்லின் வளர்ச்சி துரிதப்படுத்தப்படுகிறது.

களைகள் (Weeds) நிறைந்துள்ள இடங்களில் களைகொல்லி (Herbicide) திரவத்துடன் கலந்த திரவ பசளையை விசிறுவதனால் களைகள் விரைவாக கொல்லப்படுவதை காணலாம்.

திரவ வகை பசளைகள் குறுகிய காலத்திற்கு மட்டுமே செயற்படுகின்றன. இதனால் அடிக்கடி பசளையிட வேண்டி நேரிடுவதனால் அதிக செலவு ஏற்படும் என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## 3. செயற்கை பசளைகள்:

இரசாயன முறையில் உற்பத்தி செய்யப்படும் இவ்வகைப் பசளைகள் அவற்றில் உள்ள சத்துப் பொருட்களை உடனடியாக வெளியேற்றுவதன் காரணமாக புற்கள் விரைவில் பசுமை நிறமடைகின்றன. இவ்வகை பசளைகள் விரைவில் மண்ணினுள் துளைத்துச் சென்று விரைவான பயனை ஏற்படுத்துகின்றன. ஆனால் இந்த பயன் குறுகிய காலத்திற்கு மட்டும் நிலைத்திருப்பதனால் அடிக்கடி பசளையிட வேண்டி நேரிடும் இவ்வகையான பசளையை சரியான முறையில் பயன்படுத்தாவிடில் புற்தரை கருகக்கூடிய நிலை ஏற்படலாம்.

## 4. சேதனப் பசளைகள்:

இவை ஆடு, மாடு, பன்றி போன்ற விலங்கு களின் உடற் பாகங்கள், உடற் கழிவுப் பொருட்கள் என்பவற்றில் இருந்து பெறப்படு கின்றன. இவை புல்வெளியில் தூவப்பட்ட பின்பு மிகவும் மந்த கெதியிலே சிதைவடைந்து நைதரசனை வெளியேற்றுகின்றன.

## பசளைகளைப்பற்றி அறிந்து கொள்ளுதல்:

ஆரோக்கியமான மண்ணில் இயற்கையாக காணப்படும் நைதரசன் (N) பொசுபரசு (P) பொட்டாசியம் (K) என்பவற்றிற்கு மாற்றீடாக அமையும் மூலப் பொருளே பசளை என அழைக்கப்படும். பசளைகளில் காணப்படும் கனிப்பொருட்கள் விலங்களின் கழிவுப் பொருட்கள், இலைகள், விலங்குகளின் எலும்பு, சதைகள், இரத்தம், சிறகுகள் மற்றும் சேதனப் பொருட்கள் என்பவற்றிலிருந்து பெறப்படுகின்றன. பசளைகள் மண்ணை வளம்படுத்த உதவுகின்றன. அவை நேரடியாக தாவரங்களுக்கு உணவாக அமைவதில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம்.


பசளைகளில் உள்ள நைதரசன், இலைகள் உருவாகுவதற்கு உதவுகிறது. பொசுபரசு வேர் உருவாக்கத்திற்கும் பூக்கள் தோன்றுவதற்கும் உதவுகின்றது. பொட்டாசியம் என்னும் மூலகம் பூக்கள் உருவாகுவதற்கும். தாவரத்தின் வீரியத்திற்கும் உதவுகிறது.

பசளைகளை கொண்ட பொதிகளில் N,P,K ஆகிய இந்த மூன்று மூலகங்களும் எந்த விகிதாசாரத்தில் உள்ளன என குறிப்பிடப் பட்டிருக்கும். (உ-ம்) ஒரு பசளைப் பொதியின் மீது 16-4-8 என்று குறிப்பிட்டிருந்தால் அப் பொதியினுள் 16 சதவீத நைதரசன், 4 சதவீத பொசுபரசு, 8 சதவீத பொட்டாசியம் உள்ளது என அறியலாம். ஏனைய 72 சதவீதம் பொதுவாக முருகைக் கல் அல்லது களிமண் துணிக்கைகளாக இருக்கும்.

## தாவர உணவு (Plant Food)

பல நோக்கங்களுடைய தாவர உணவுகளும் பசளைகள் என்ற பிரிவில் உள்ளடங்குகின்றன. அவை துணிக்கைகளாக அல்லது திரவங்களாகவும் வில்லைகள் அல்லது மண்ணுக்குள் நேரடியாக நாட்டக்கூடிய Spikes என்னும் வடிவத்திலும் விற்பனை செய்யப்படுகின்றன.

அதிகளவு இலைகளைக் கொண்டுள்ள தாவரங்களுக்கான உணவில் அதிகளவு நைதரசன் காணப்படும். பூக்கும் மரங்களுக்கு பயன்படுத்தப்படும் தாவர உணவு வகையில் அதிகளவு பொஸ்பரசு காணப்படும்.




## களைகொல்லிப் பொருட்களை உள்ளடக்கிய பசளை வகைகள்:

அவை இருவகைப்படும்

- முளைப்பதற்கு முன்பு பயன்படுத்தப்படும் வகை
- களைகள் முளைத்த பின்பு அவற்றை அழிப்பதற்கு பயன்படுத்தப்படும் வகை

## பசளைகளை எப்போது பயன் படுத்த வேண்டும்:

Scott's Turf Builder என்று அழைக்கப்படும் பசளை, புல்வகையான தாவரங்களை சீரான வேகத்தில் வளருவதற்கு உதவுகிறது.

ஒரு புற்தரையை பராமரிக்கும் திட்டத்தின்படி வருடம் ஒன்றுக்கு நான்கு தடவைகள் பசளையிடப்படுகிறது.

இளவேனிற்கால ஆரம்பம் (பெப்ரவரி – ஏப்ரல்) இந்தக் காலத்தில் பசளையிடும் போது வேர் கள் பலமடையச் செய்யப்பட்டு புல் வளர்ச்சி துரிதப்படுத்தப்படும்.

பிந்திய இளவேனிற்காலம் (மே–யூன்) இந்தக் காலத்தில் புல் மிக உயிர்ப்புடன் வளர்ந்து அதிகளவு கனிப்பொருட்களை உபயோகிக்கிறது. எனவே இந்த வேளையில் பயன்படுத்துவதற்கென தயாரிக்கப்பட்ட பசளையை வழங்குவது அவசியம்.

பிந்திய கோடை காலம் (ஆகஸ்ட்) கோடை காலத்தில் உள்ள வெப்பத்தினால் புற்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன. எனவே இந்த வேளையில் பசளைகளை விசிறுவதன் மூலம் புல்லின் ஆரோக்கியமான வளர்ச்சியை உறுதி செய்ய முடியும்.

இலையுதிர் கால ஆரம்பம் (செப்டெம்பர் – ஒக்டோபர்) குளிரான இரவுகளும், மழை வீச்சியும், காலைப் பனியும் இந்த வேளையில், பசளைகளை விசிறுவதன் மூலம் கோடை காலத்தில் ஏற்பட்ட பாதிப்பை சீர்செய்ய முடியும். ஒரு நாளின் எந்த நேரத்தில் பசளையை விசிற வேண்டும் என்பதல்ல. பருவகால சூழ்நிலையின் அடிப்படையில் தங்கியுள்ளது. அடுத்த 24 மணித்தியாலங்களில் மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டால் சில வகை பசளைகள் பயன்படுத்தப்பட மாட்டாது.

மேலே தரப்பட்ட விபரங்களின் அடிப்படையில் வெவ்வேறு பருவகாலங்கள், மண்ணின் தன்மை, புல்லின் வகைகள் போன்ற வெவ்வேறு காரணிகள் அடிப்படையில் பயன்படுத் தப்படும். பசளைகளின் வகைகளும் வேறுபடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

mahensingaraja@thaiveedu.com

■ ■ ■

ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices
உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்

Sales - Service - Installations
Custom Made
Wood & Vinyl Shutters: California Style Shutters, Plantation Style Shutters, Traditional Style Shutters, Arches
(We Do Any Colour Of Paint & Stain)
Blinds: Vertical Blinds, Venetian Blinds, Wood Blinds, Bamboo Shades, Roller Shades, And More
Draperies: Swags, Sheers, Valance, Curtains, And More
Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:

தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# All your Real Estate needs



ஞானி நரசிங்கம்
Sales Representative

**416-937-8090**

ஜூடி ஞானேந்திரன்
Sales Representative

**416-629-9797**

"வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க"

**Attractive low mortgage Rate**

**3.05%** 3year closed

**2.89 %** Open Variable

**Office: 416-321-6969**

## Staines / Morningside




**$419,900**

**"7 Weaver Cres"**
Detached brick 2 Storey
4 bedrooms/ 2full washrooms
5 years old, Separate Entra
Approx 2,200 square feet

## Markham / Steeles




**$354,000**

For sale or lease. Brand new
2 retail stores available
High traffic area, Many Usage
Facing Markham Road
Exterior and interior entrances


## McCowan/Steeles



**$359,900**

**"87 Stather Cres"**
Detached brick 2 Storey
3 bedrooms with full washrooms
Finished Basement/Approx 1600 Sq ft
many upgrades to list

## Finch / Staines



**$399,900**

Detached brick 2 Storey
4 bedrooms with a full washrooms
Sep. Entrance/ hard wood floor
many upgrades to list


## Brimley / Eglinton




**$499,000**

Golden opportunity to own attractive
updated Medical /Prof Building
Main floor has 5 fully equipped Exam
rooms, 1 W/R and reception area.
2nd floor has 7 examination rooms
2 washrooms and office

## 9th Line/ 14th Ave



**$719,000**

Detached brick 2 Storey
4 bedrooms with 4 full washrooms
Finished Basement, hard wood floor
Approx 3200 Sq ft, 150k upgrade
Custom kitchen with Granite counter

**HomeLife GTA Realty Inc., Brokerage*1711 Mccowan Rd, Suit # 206 Toronto, ON M1S 3Y3**

This is not intended to solicit properties currently under contract*Independently Owned and Operated**Some Conditions may apply

# கண்ணுக்குள் நூறு கதைகள்

## இதயம் மலர்கிறது - 12



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiogapher -

### கண் அழுக்கம் (Glaucoma)

சென்ற இதழில் கண்களைப்பற்றி எழுதியிருந்தேன். அதன் தொடர்ச்சியாக கண் அழுக்கம் பற்றி எழுதுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.


எமது உடலெங்கும் ஊட்டச் சத்துக்களைக் குருதிக்குழாய்கள் காவிச் செல்கின்றன. ஆனால், கண்களில் கருவிழித்திரையில் குருதிக்குழாய்கள் இருந்தால் அவற்றினூடாக ஒளி செல்லமாட்டாது.

கண்களின் கருவிழி, வில்லை என்பன தவிர்ந்த ஏனைய கோளப்பகுதியில் இரத்த நாடிகள், நாளங்கள் என்பன பரந்துபட்டு இருக்கின்றன. இவை கண்களுக்குரிய போசாக்கை ஊட்டிய வண்ணம் இருப்பதுடன் பௌதிகச் சமநிலையையும் பேணுகின்றன.

நாம் காணும் காட்சிகள் கருவிழியினூடாகச் சென்று விழித்திரையில் விம்பமாக விழுகின்றன. இவை பின்பு மூளையினால் காட்சிகளாக உணரப்படுகின்றன. கரு விழிகள் ஒளி ஊடுபுகும் தன்மை கொண்டதாகவும், அவற்றின் மேற்பரப்பு குவிந்தும் இருப்பதனால் மிகவும் திறமையான முறையில் ஒளி முறிவடைந்து ஒரு வில்லையைப் போன்று தொழிற்படுகின்றது. பெரிய அளவிலான ஒளிமுறிவு கண்களில் காணப்படும் வில்லைகளிலும் பார்க்க கருவிழிகளிலேயே ஏற்படுத்தப்படுகின்றன. இதனால் தான் லேசர் கதிர் மூலம் கருவிழிகளின் குவியத்தை மாற்றி கண்பார்வையைச் சீர் செய்கிறார்கள். கருவிழிகள் அதன் நடுப்பகுதியில் 0.5 மிமீ தடிப்பாகவும் சுற்று வட்டப்பகுதியில் 1 மி.மீ. தடிப்பாகவும் இருக்கும் மெல்லியதாக இருந்தாலும் அதன் அமைப்பு ஐந்து படைகளைக் கொண்டது.

கருவிழிகளின் உட்பகுதிக்கு ஊட்டச்சத்தானது பிதிர்த்தசைகளினால் சுரக்கப்படும் நீர்மயவுடனீரில் இருந்து கிடைக்கின்றது. கருவிழியும், விழிவெண்படலமும் சுற்றிவரச் சந்திக்கும் இடம் சுற்றுவட்ட விழிம்பு என்று அழைக்கப்படும். ஊட்டச்சத்தானது கருவழியின் வெளிப்புறத்திற்கு கண்ணீர் சுரப்பியிலிருந்தும், அதன் உட்புறம் நீர்மயவுடனீரினாலும், கருவிழியின் சுற்றுப்புறப்பகுதி விழிவெண்படலமும், கருவிழியும் சந்திக்கும் சுற்று வட்ட விழிம்புகளில் உள்ள வலைப்பின்னல் போன்ற குருதிக் குழாய்களில் இருந்தும் கிடைக்கின்றன.

சாதாரணமாக கண் அழுக்கம் 13மி.மீ பாதரசத்திற்கு 19 மி.மீ – பாதரசத்திற்குமிடையில் இருக்கும். ஒவ்வொருவரினதும் கண்களின் தாங்குசக்தி வித்தியாசமானது. சிலரிற்கு 20 மி.மி பாதரச அளவு கண் அழுக்கத்தின் போது பார்வை நரம்பு பாதிப்படைந்து பார்வை பாதிக்கப்படும், அதே வேளையில் சிலர் அதே 20 மி.மி பாதரச அளவில் கண்ணரம்பு பாதிப்படையாது இருப்பதைக்




இப்பகுதியின் விரிவான படம் கண்ணின் கோணப்பகுதிகளை தெளிவுபடுத்தும்

காணக்கூடியதாக இருக்கின்றது. எப்படியிருப்பினும் கண்வைத்தியரின் ஆலோசனைப்படி ஒழுகுவது இங்கு மிகவும் வேண்டற்பாலது.

கண்ணில் உள்ள மதிய விழித்திரை நாடியின் ஒவ்வொரு துடிப்பின் போதும் கண் அழுக்கம் 1 தொட்டு 2 மி.மீ பாதரசம் வரையில் கூடும். அதேபோல் சுவாசத்தின் பொழுதும் 4 மி.மீ பாதரசம் வரையில் கண் அழுக்கம் கூடலாம். இதேபோல் அதிக அளவு நீர் அருந்தினாலும் கண் அழுக்கம் தற்காலிகமாகக் கூடும். நீர் போதியளவு பருகாது விட்டால் கண் அழுக்கம் தற்காலிகமாகக் குறையும்.

### கண் அழுக்கம் நால் வகைப்படும்

- திறந்த கோணக் கண்ணமுக்கம் (Open angel glaucoma)
- மூடிய கோணக் கண்ணமுக்கம் (Close angle glaucoma)
- வேறு காரணங்களால் ஏற்படுவது
- ஒடுங்கிய கோணக் கண்ணமுக்கம் (Narrow angle glaucoma)




### திறந்த கோணக் கண் அழுக்கம்

பொதுவாகக் காணப்படும் கண் அழுக்கம் இதுவாகும். கண்ணுக்குள் அழுக்கம் மிகவும் ஆறுதலாகக் கூடிக்கொண்டு வந்து கண் பார்வையைப் படிப்படியாகப் பாதிக்கவல்லது. அநேகமாக பக்கப்பார்வைகள் முதலில் பாதிக்கப்படும். கண்களில் எந்தவிதமான நோவோ அல்லது எச்சரிக்கை சமிக்ஞைகளோ தென்படமாட்டாது. அசட்டையாக இருந்து விட்டால் சில சமயங்களில் பார்வையை இழக்க வேண்டி வரும்.

கருவிழியின் பின்னால், கண்வில்லைக்கும் கதிராளிக்கும் முன்பகுதியில் அமைந்துள்ள அறை போன்ற கூடத்தினுள் "நீர்மயவுடனீர்" சுரக்கப்பட்டும், அதேவேகத்தில் அகற்றப்பட்டுக் கொண்டும் இருக்கும். நீர்மயவுடனீர் அகற்றப்படுவதற்கு கருவிழிப்படலத்திற்கும், கதிராளிக்கும் இடையே அமைந்துள்ள கோணப்பகுதியில் வலைப்பாடுடைய கால்வாய்கள் உண்டு. இக்கால்வாய்கள் தூர்ந்து போவதனால் நீர்மயவுடனீர் அகற்றப்படும் விகிதம் குறைகின்றது. இதனால் நீர்மயவுடனீரின் அளவு அதிகரிக்க கண் அழுக்கம் ஏற்படுகின்றது.

### மூடிய கோணக் கண்ணமுக்கம்

இங்கு கண்களில் உள்ள வலைப்பாடுடைய கால்வாய்கள் மூடப்பட்டு இருக்கும். கால்வாயை மூடும் காரணிகள் வலைப்பின்னலிலேயே இருக்கலாம். கதிராளியில் இருந்து விடுபடும் நிறப் பொருட்கள், கண்களில் ஏற்படும் முளைகளில் உள்ள கலங்கள், செங்குருதிச் சிறுதுணிக்கைகள் மற்றும் சில துணிக்கைகள் போன்றவை இதற்குக் காரணமாக இருக்கலாம். சில சமயங்களில் கதிராளி அழற்சி நோயின் பொழுது நார்த்தசைகள் போன்றவை ஏற்பட்டு இரு பகுதிகள் ஒட்டுப்படுவதால் இக் கால்வாய்கள் அடைக்கப்படலாம்.

இது தவிர மத்திய விழித்திரை நாளம் அடைபடும் பொழுது மிகவும் உக்கிரமான முறையில் இந்நோய் ஏற்படலாம்.

எப்படி இருப்பினும் இந்நோய் மிகவும் அரிதாவே காணப்படுகின்றது. இங்கு கண் அழுக்கம் சடுதியாகக் கூடும் காரணத்தால் அவ் அழுக்கத்தை உடனே குறைக்காது விட்டால், கண்பார்வை பாரியதாகப் பாதிக்கப்படும். கண்களில் அதிகளவு வேதனை, மங்கிய பார்வை போன்றவை இதன் குணங்குறிகளாக இருக்கும். இதில் நாட்பட்ட வகையிலான (CHRONIC FORM) மூடிய கோண கண் அழுக்க நோயும் உண்டு. இது மிகவும் மெதுவாக அரும்பி அநேகமாகக் குணங்குறிகள் இன்றிக் காணப்படுவதனால் எச்சரிக்கையுடன் செயற்படுவது அவசியம்.

பிதிர்தசைகளால் நீர்மயவுடனிர் சுரக்கப்பட்டு கண்ணின் முன்கூடம், பின்கூடம் இரண்டும் நிரம்புகின்றன. இதில் உள்ள ஊட்டச் சத்துக்கள், கருவிழியின் உட்பக்கம், வில்லை மற்றும் அதனை அண்டிய பகுதிகளைப் போசிக்கின்றன. தொடர்ச்சியாகச் சுரக்கப்பட்டும், வெளியேற்றப்பட்டுக் கொண்டுமிருக்கும்

14ம் பக்கம் பார்க்க...


முதலுதவி கற்பதற்கும், வர்மப் புள்ளி வைத்திய ஆலோசனைகளிற்கும்

**Dr. Kandiah Senthilathan**

Registered Medical Officer (SLMC)
Acupuncturist (MAcF)

First Aid & CPR Instructor
(Certified in Canada)

ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில் உங்கள் இடத்திற்கு வந்து முதலுதவி கற்பிக்கப்படும்.

647-801-9252, 416-502-9252

GP TELECOM

இரமணன் திரு
(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We

- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டாமல் சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344



# Buy & Sell Residential and Commercial Properties



**Raj. A. Rasaratnam** B.Com.

*Sales Representative*

**416-726-8055**

argaccountax@rogers.com

**HomeLife/ GTA Realty Inc.**
Real Estate Brokerage*

1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3

Bus: (416) 321-6969
Fax: (416) 321-6963

*Independently own and operated

**$310,000**



Sheppard & Meadowvale
3 + 1 br Townhouse With Finished Basement + Walk-Out!! Easy Access To Hwy 401, Close To Uoft And New Centennial College!!

**$359,900**



Markham & Passmore
3 br Semi, Close to Ttc, Schools, Shopping, Ceramic Tiles In Kit.Foyer & Baths, Pot Lights, Main Flr Laundry, Skylight, Vaulted Ceiling.

**$369,900**



Markham & Steeles
4 bdrm Builders Model House! 3 Yr Old, 2000 Sq.Ft, Upgraded Kitchen, Open Concept, Many Windows, Bright rooms, Close to Shopping, School,Hwy 7,407

**$369,000**



Denison & Featherstone
4 br, Open Concept Family Room And Dining Room, New Hardwood Floor Throughout Main Floor, New roof

**$489,900**



14th Ave & 9th Line
4 br, 3 Yrs New, Maple Hardwood & Ceramic Floors On Main Level. Oak Staircase. Kitchen W/Granite Counter Top, Stainless Steel Appliances.

**$512,000**



14th Ave & 9th Line
4 br, Dazzling Fieldgate Home (2410 Sq.Ft.). Combined Liv/Din Rms W/9Ft Ceilings And Oak Staircase, Gas Fireplace & Tv Niche Graces The Family Room.

Mortgage arrangement, Business incorporation
and corporate tax preparation

**(416) 726-8055**

# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS
UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

**416.438.1688**

Fax: 416 438 1612

RBC Financial Group

1421 Kennedy Rd,
Scarborough, ON. M1P 2L6

# “வீடு” வினாவும் விடையும்

தாய்வீடு வாசகர்களுக்கு அன்பு கலந்த வணக்கங்கள். இன்று எங்களில் பலர் தமது குடும்ப அங்கத்தவர்களை வன்னியில் இடம் பெற்ற மனித பேரவலத்தில் பறிகொடுத்துள்ளோம். அந்த வரிசையில் நானும் ஒருவன் என்பதனால் அவர்களின் வேதனைகளை நன்கு அறிவேன். இன்று யாருக்கு யார் ஆறுதல் சொல்லுவதென்பது தெரியாமலுள்ளது. இவ்வளவு இழப்புக்களும் எமக்கு சொல்லித்தந்த பாடம்தான் என்ன?

தமிழர்கள் ஒற்றுமையற்றவர்கள், தமக்குள் சச்சரவு கொண்டவர்கள் போன்ற பல கேலிக் கதைகளை நாம் அதிகம் கேள்விப்பட்டிருப் போம். இன்று மாற்றுச் சமூகங்களும் வேற்று நாடுகளும் எம்மை எவ்வாறு பார்க்கின்றது? எங்கேயோ ஒரு மூலையில் இடம்பெற்றுக் கொண்டிருந்த உரிமைப் போராட்டம் முதலாம் தர நாடுகளில் எல்லாம் மூர்க்கம் பெற்றிருக்கின்றது அல்லவா, எமக்குள் உறங்கிக் கொண்டிருந்த சுதந்திரதாகம் இன்று வெறியாகி உருமாறியிருக்கின்றது அல்லவா, எமது சமூகம் ஒற்றுமையானது உணர்வுபூர்வமானது, ஒழுங்குகள் நிறைந்தது என்றெல்லாம் யாவருக்கும் நாம் புரியவைத்திருக்கின்றோம் அல்லவா, மேற்கத்தேய நாடுகளையெல்லாம் எமக்காக குரல் கொடுக்க வைத்திருக்கிறோம் அல்லவா, இவைக்கெல்லாம் கொடுக்கப்பட்ட விலைதான் இன்னுயிரை தாரை வார்த்த இழந்த எம் உறவுகள்.

ஓர் உயிர் பெறுமதி மதிப்பிட முடியாதது! அவ்வாறாயின் ஒருசலட்சம் உயிர்கள்???

புலம்பெயர் சகோதர சகோதரிகளே! எங்க ளிடம் கையளிக்கப்பட்டுள்ள கடமைகள் எவ்வளவு பெறுமதி வாய்ந்தது என்பதனை கணக்கிட்டுக் கொள்ளுங்கள். அன்றிலிருந்து இன்றுவரை ஏன் அன்றிலிருந்து இனிமேலும் நாம் தமிழர் சொல்வதெல்லாம் ஒன்றுதான். நாம் யாருக்கும், எந்த நாட்டிற்கும், எந்த தேசத்திற்கும் எதிரானவர்கள் அல்லர். எமக்கு வேண்டியதெல்லாம் சுதந்திரமாக வாழ்வதற்கு ஓர் இடம். அதுதான் தமிழீழம். எனவே இன்றைய நெருக்கடிகள் நிறைந்த வாழ்க்கையில் நாட்டுப்பழு, குடும்பப் பழு போன்ற சூழ்நிலைகளுக்குள்ளும் நாம் சபதமெடுத்துக்கொள்வோம். சந்தர்ப்பவசமோ விதி வசமோ நாம் புலம்பெயர்ந்தோம், நாமும் தமிழர்தான். உணர்வுள்ள தமிழர்.

...

வீடும் வீடுசார் துறையின் ஆக்கங்களில் மாதாந்தம் நேயர்களின் பலதரப்பட்ட கேள்விகளுக்குரிய விளக்கங்களை ஆராய்வதுபோல், இம்முறையும் கேட்கப்பட்ட தரமான வினாக் களை ஆராய்வோம்.

**வீடுகளின் விலைகள் சற்றுக் குறைந்திருப்பதாக கூறுகிறார்கள். இத்தருணத்தில் எனது வீட்டினை விற்கு வேறு வீடு வாங்குவது நன்மையானதா?**

வேந்தன், Scarborough

நீங்கள் கூறுகின்ற விலை வீழ்ச்சியானது ஓர் விகிதாசார அடிப்படையிலேயே கணக்கிடப் படுகின்றது. உதாரணமாக விலை வீழ்ச்சி 5வீதம் என வைத்துக்கொண்டால் சுமார் \$200,000 பெறுமதியான வீட்டின் விலை \$10,000 டொலர் குறைந்தும், \$300,000 பெறுமதியான வீட்டின் விலை \$15,000 டொலர் குறைந்தும் காணப்படும். அவ்வாறாயின் நீங்கள் ஓர் சிறிய வீட்டிலிருந்து பெரிய வீட்டிற்கு குடி பெயர எண்ணியிருப்பின் இதுவே சரியான தருணம். மாறாக பெரிய வீடுகளை விற்று சிறிய வீடுகளுக்கு குடிபெயர எண்ணுபவர்களுக்கு இது சரியான தருணம் அல்ல. அது மாத்திரமன்றி மிகவும் குறைவாக காணப்படுகின்ற வட்டி விகிதத்தின் பலன்களையும் அனுபவிப்பதற்கு இது நல்ல தருணம். இன்று 5 வருடங்களுக்குரிய மோட்கேஜ் 3–3.5% மாக காணப்படுகின்றது. 400,000 பெறுமதியான வீட்டிற்கு மாதாந்த கட்டுப்பணமாக சுமார் \$1500,00 வரை இருக்கும்.

**Refinance முறை மூலம் எனது கடன் அட்டைகளை அடைப்பதற்கு குறைந்த வட்டியினை பெற்று அனுபவிக்கலாம் என்பதனால் நான் Refinance செய்வதற்கு ஒழுங்கு செய்தேன். எனது வீட்டினை பெறுமதி மதிப்பீடு செய்தவர்கள் மிகக் குறைவாகவே மதிப்பிட்டுள்ளனர். அதற்கான காரணம் என்ன?**

தீபன், Brompton

சமகால சந்தையில் இதுவொரு அன்றாட நிகழ்வாகிவிட்டது. ஒரு வீட்டினை மதிப்பீடு செய்வதென்பது குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் குறிப்பிட்ட வீதியில் அல்லது அதன் சுற்றுவட்டாரத்தில் விற்கப்பட்ட ஒரே மாதிரியான வீடுகளின் விலைகளை கணக்கிட்டே முடிவு செய்வார்கள். இன்று இதன் செயற்பாடுகளை எதிர்பார்ப்பு பொருளாதாரம் ‘என்னும் காரணியும்’ தீர்மானிக்கின்றது. அதாவது கடன் வழங்குனர்கள் Safe play என்று சொல்லக்கூடிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் மிகவும் அவதானமாகியுள்ளனர். ஆதலால் நாட்டின் பொருளாதாரம் பற்றிய ஓர் பயத்தினாலேயே ஓர் வீட்டினை Refinanceக்காக மதிப்பீடு செய்யும் வேளை களில் சற்று குறைவாகவே மதிப்பீடுகள் இடம்பெறுகிறது. மாறாக உங்கள் வீட்டினை விற்பதாயின் வீடு விற்பனைத் துறையினரின் உதவியுடன் மதிப்பீடு செய்துகொள்ளலாம்.

**தொடர்மாடிக் கட்டிடங்களில் முதலீடு செய்வதைப் பற்றி உங்களது கருத்து என்ன?**

பகீரதி, Toronto

நம்பிக்கையான முதலீடாயின் நன்று. இருப்பினும் கீழ்வரும் காரணிகளையும் கருத்தில் கொள்ளுங்கள். நகரின் மத்தியில் புதிதாக நிர்மாணிக்கப்படும் Condoகள் பொதுவாக விலை வீழ்ச்சி கொள்வதில்லை. அதற்கான காரணங்களாக வேலைவாய்ப்பு, போக்கு வரத்து, பாடசாலை வசதிகள், கொள்வனவு வசதிகள் என்று ஓர் நகர வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து காணப்படுவதே. மாறாக நகர்ப்புறங்களிலும் போக்குவரத்து வசதிகளை அடிப்படையாகக் கொண்ட Condoகளும் திடமான விலையினை கொண்டுள்ளது. தற்போதைய கட்டுமாணங்கள் பல புதிய தொழில்நுட்பங்களுடன் கூடி காணப்படுவதால் சக்தி விரயக்கட்டுப்பாடுடையது. இதன் மூலமும் உங்கள் முதலீடுகள் பாதுகாக்கப் படும். முதலிடுவதற்காக நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கின்ற பகுதி கவனதிற்கொள்ள வேண்டியதொன்று.

**புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கின்ற வீடுகளை பெற்றுக்கொள்ளும் போது கவனத்தில் கொள்ளவேண்டியவை யாவை?**

நிரஞ்சன், Withy

கண்களால் பார்க்காத ஒரு பொருளினை படத்தில் பார்த்து பெற்றுக்கொள்வதுதான் புது வீடுகள் வாங்குவது என்பது. இருப்பினும் வீடுகள் சம்பந்தமான பூரணத் தகவல்கள் மற்றும் பரிச்சயமுள்ளவர்களுடன் சென்று, அப்பகுதியில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை பார்வையிட்டு பெற்றுக்கொள்வது ஏமாற்றத்தைத் தவிர்க்கும் என்பது மட்டுமன்றி, வீடு கட்டுநர்கள் எவ்வகையான (தரமான) கட்டிட பொருட்களை உபயோகிக்கிறார்கள், கட்டுனர்களின் தரம், போன்றவற்றையும் இணையத்தளங்களிளோ அல்லது அனுபவசாலிகளிடமோ தெரிந்துகொள்ளுங்கள். பொதுவாக ஒரு வீட்டிற்குரிய படத்தில் A, B, C என்று மூன்று வகையான பிரிவுகள் (சற்று மாறுபட்ட) காணப்படும். உங்கள் தெரிவுகள் அவதானமாக இருத்தல் அவசியம். நான் படத்தைப் பார்த்து ஏமாந்துவிட்டேன் என்று பலர் பல விடயங்களில் கூறியிருக்கின்றார்கள். ஆகவே அனுபவஸ்தர்களின் ஆலோசனையைப் பெறுங்கள்.

> “ நீங்கள் வருடக்கணக்கில் காத்திருந்து வாடகைப்பணமாக செலுத்தும் தொகை உங்கள் சார்பாக எந்தவொரு முதலையும் சேகரிக்காது. மாறாக உங்களுக்கென பெற்றுக்கொள்கின்ற வீட்டில் மாதாந்தம் நீங்கள் செலுத்துகின்ற பணத்தில் ஒரு பகுதி முதலுக்கு வழிகோலும். ”



**கருணா கோபாலபிள்ளை**

- வீடு விற்பனை முகவர் -

**தினசரி செய்திகள் மூலம் இன்றைய காலங்கள் வீடு வாங்குவதற்குரிய பருவம் என்று அறிகின்றோம். இது வோர் உண்மையான தகவல் என்ப தனை எவ்வாறு அறிந்துகொள்வது? அண்டைநாடானா அமெரிக்காவின் தாக்கம் இங்கும் ஏற்படுமா என்கின்ற ஆதங்கத்தில் நான் வருடக்கணக்கில் காத்திருக்கின்றேன்.**

கருணாகரன், Vaughan

முதலாவதாக இன்றைய காலம் வீடு வாங்குவதற்குரிய காலம் என்பதா என்கின்ற கேள் விக்கு பின்வரும் காரணங்களைப் பார்ப்போம். அதாவது, குறைந்த விலையும் கூடிய தெரிவு களும் மனநிறைவான மனை அமைத்துக் கொள்ள ஏதுவாகும். அதுமட்டுமன்றி வரலாறு பதிவுகள் போல் இன்று கடன் பெறும் வட்டி விகிதம் மிகவும் குறைந்து காணப்படுகின்றது. இவ்விரண்டு காரணிகளுமே உங்கள் கேள்விக்கு பதிலாகும். நீங்கள் வருடக்கணக்கில் காத்திருந்து வாடகைப்பணமாக செலுத்தும் தொகை உங்கள் சார்பாக எந்தவொரு முதலையும் சேகரிக்காது. மாறாக உங்களுக்கென பெற்றுக்கொள்கின்ற வீட்டில், மாதாந்தம் நீங்கள் செலுத்துகின்ற பணத்தின் ஒரு பகுதி முதலுக்கு வழிகோலும்.

நன்றி வாசகர்களே,

தமிழர் எமக்கோர் பாரிய திருப்பத்தினை ஏற்படுத்தப்போகின்ற காலமிது. நாம் இழப்ப தற்கு இனி என்னதான் இருக்கின்றது என்கின்ற நிலையில் வெளிநாடுகளின் தலையீட்டினை எதிர்பார்த்து காத்திருக்கின்ற கட்டாயத்தில் உள்ளோம். இழப்புக்கள் ஒன்றும் எமக்குப் புதிதல்ல. உணர்வுகளை நாம் இழக்காதவரை எதையும் இழக்கவில்லை என்பதுதான் உண்மை. ஒவ்வொன்றுக்கும் ஒரு காரணம் உண்டு. இன்று நாம் அனைவரும் பங்கெடுக்க வேண்டிய காலம். அவ்வாறான ஓர் கட்டத் திற்கு தமிழர் நாம் தள்ளப்பட்டுள்ளோம். ஆகவே உணர்வுடன் ஒற்றுமையாகச் செயற் படுவோம். வெற்றி நிட்சயம்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***

***Fax: 416-849-0594***

***Tel: 416-646-3422***




வீடு வியாபார நிலையம் வாங்க விற்க
$185.000
McCowan & Steeles
2+1 Bedrooms 2 Washroom
$159.900
Weston & Sheppard
2 Bedrooms 2 Washroom
$334.000
Rutherford / Hwy 400
3 Bedrooms 4 Washroom
Finished Basement
$599.000
WOODBRIDGE
Rutherford / Western Rd
4 Bedrooms, 4 Washroom
Finished Basement
$424.000
BRAMPTON
Gore & Cottrelle
4 Bedrooms,3 Washroom
In Cambridge
GAS STATION WITH CONV. + LOTTO 649 + WAREHOUSE +GARAGE
$845.000
In Colborne
GAS STATION
CAR WASH & CONV.
$89.000
with Property.
$575.000
In Niagara
SHELL GAS STATION
$1,400.000
In Burlington
ESSO GAS STATION
$159.000
In Fort Erie
ESSO GAS STATION
$2,299.900
மேலும் பல GAS STATION களும் விற்பனை
நிலையங்களும் விற்பனைக்குண்டு
நம்பிக்கை நேர்மை நட்பான சேவைக்கும் அழையுங்கள்
சத்தி மருதப்பா
Sales Representative
(முழுநேர வீடு விற்பனை முகவர்)
416-816-1500
*Some conditions may apply
Affiliate Realty Inc.
Brokerage
208 - 80 Corporate Drive,
Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900
Century 21


HOMELIFE FUTURE REALTY
HOMELIFE HIGHER STANDARDS
7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8
Office: 905-201-9977
Fax: 905-201-9229
Markham/Mjr.Mack
$2400/Month
Commercial Unit for Rent. Mjr.Development in Progress. Many Possible Uses. Location!! Location!!
Morningside/Old Finch
$299,900
3 Bedrooms. 3 Washrooms. Excellent Starter Home. Neutral Decor. 183' Deep Lot.
16th Ave/9th Line
$509,000
4 Bedrooms. 4 Washrooms. Finished Basement. Luxuriously Upgraded. Hardwood Floors.
LOKAN SUNDARAM
Broker
416-450-3984
lokan.homelife@gmail.com
LOW INTEREST RATES! OPPORTUNITY TO BARGAIN! ACT NOW!! BUY WITH LOKAN!
CALL ME FOR ALL YOUR, MORTGAGE AND RE-FINANCING NEEDS

# உடல் நலத்தைப் பாதிக்கும் மன நலம்

சிவாஜினி
பாலராஜன்



வாழ்வின் போக்கு பிடிபடும் வரையில் அழுத்தங்களின் தாக்குதலுக்கு ஆளாகும் அனைத்து மக்களும் ஆடிப்போய் விடுகிறார்கள். செய்த செயல் ஒன்றிற்கு எதிர்பார்த்த விளைவு ஏற்படாத போதும், எதிர்பாராத எதிர் விளைவுகள் ஏற்படும்போதும் மக்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். அதுவும் மிகவும் முக்கியமாக தாய்நாட்டை விட்டு புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் வசித்துக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கு இக்காலம் ஒரு சோதனைக் காலமாகத் தான் இருக்கின்றது. வேதனையும் சோதனையும் மாறி மாறி வரும் இக் காலகட்டத்தில் பல மக்கள் மன அழுத்தத்திற்கு ஆழாகி இருப்பதை அறிய முடிகின்றது. ஆனால் மறு பக்கமாகப் பார்த்தீர்களானால் மன அழுத்தம் சிறிதும் அற்ற வாழ்க்கை கூட கடினமானதாகத் தான் இருக்கும். சிறிது மன அழுத்தம் வாழ்வில் பற்றையும் பிடிப்பினையும் வளர்க்கக் கூடியதாக இருக்கும் எனக் கூறப்படுகின்றது.

பொதுவாக வெளியே தெரியாத வலி, சொல்லத் துடித்தாலும் சொல்ல விடாமல் தடுக்கிற தயக்கம், எந்தச் செயலையும் செய்ய விடாமல் சோர்ந்துபோகச் செய்யும் மன உளைச்சல் ஆகியவை மன அழுத்தத்தின் அடித்தளங்களும் அறிகுறிகளும் ஆக கருதப்பட்ட போதிலும் தற்போதைய சூழலில் நம்மவருக்கு ஏற்பட்டிருக்கும் வலி, வேதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்ற போதிலும் அளவுக்கதிகமான பெருஞ்சுமையாக இருக்கின்ற காலகட்டத்தில் எங்களில் பலர் இருக்கின்றனர். சொந்தங்களைத் தொலைத்தவர்களும் தொலைத்தோமா இல்லையா என்ற நிச்சயமாகத் தெரியாத நிலையில் தவிப்பில் இருப்போருமாக எங்கள் மக்களை எந்நாளும் கலக்கிக் கொண்டிருக்கும் பய உணர்வு மன அழுத்தத்தை ஏற்படுத்தி விடுகின்றது என்பதனை நன்றாகவே உணர்ந்து கொள்ள முடிகின்றது.

மிகச்சிலருக்கு மன அழுத்தம் காரண காரியங்களின்றியே வருவதுண்டு. சிலருடைய பழக்கம் சரியோ பிழையோ தங்களுக்குத் தான் அனைத்தும் தெரியும், தாங்கள் தான் மற்றவர்களிலும் பெரியவர்கள் அல்லது மற்றவர்களை விட வசதி படைத்தவர்கள் இப்படி அனைத்திலும் தங்களை முன்னுதாரணமாகக் காட்ட வேண்டும் என்று நினைப்பதால் எந்த நேரமும் எங்கே மற்றவர்கள் தங்களைக் குறைத்து மதிப்பிட்டு விடுவார்களோ என்றகாரணத்தினால் சதா எதையாவது மனதில் போட்டுக் குழப்பிக் கொள்வார்கள். அவர்களுடைய வாழ்வில் எந்த நேரமும் ஒரு இறுக்கமான சூழ்நிலையே காணப்படும். இப்படிப்பட்டவர்களுக்குக் கூட மன அழுத்தம் ஏற்படுகின்றது. எங்களுக்குத் தெரியாத விடயத்தை மற்றவர் சொல்லும் போது கேட்டு அறிந்து கொள்வதில் எவ்விதத்திலும் நாங்கள் குறையப் போவதில்லை என்ற எண்ணம் இருப்பின் மிகவும் சுலபமாக எதையும் சாதித்து விடலாம்.

ஏமாற்றம், பயம், நிராகரிப்பு, எரிச்சல், அதிக வேலை, அதிக சிரத்தை, குழப்பம், இறப்பு, விவாகரத்து, நோய்கள், பதவி இழப்பு, கடன், போன்றவை மனவழுத்தத்தின் முக்கிய தூண்டுகோல்களாக இருந்த போதிலும் சிலருக்கு தேர்வு, போக்குவரத்து நெரிசல், நட்பு முறிவு போன்ற சிறு காரணிகளும் மேலும் சிலருக்கு புகை பிடித்தல், சரியான உணவுப் பழக்கம் இல்லாமை, போதை மருந்துப் பழக்கம் போன்ற அவர்களே தேடிக் கொண்ட செயன்முறைகளும் கூட மன அழுத்தத்திற்கு காரணியாக இருக்கலாம். முக்கியமாக புகை பிடிப்போருக்கு நிக்கோட்டின் மன அழுத்தத்தினைக் தூண்டக் கூடிய காரணியாகப் பார்க்கப்படுகின்றது. மன அழுத்தம் சில நல்ல காரணிகளால் கூட வரலாம் என சில ஆய்வுகள் கூறுகின்றன. உதாரணமாக திருமணம், பதவி உயர்வு போன்றவை கூட சிலரது மன அழுத்தத்திற்கு காரணமாக இருந்திருக்கின்றன.

பொதுவாக ஆண்களைவிட இரண்டு மடங்கிற்கும் அதிகமான பெண்கள் மன அழுத்தத்திற்கு உட்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. பத்திலிருந்து இருபத்தைந்து வீதமான பெண்கள் மன அழுத்தத்தினால் பாதிக்கப் படுகின்றனர். இதற்கு முக்கியகாரணம் பெண்களில் ஏற்படும் ஓமோன் மாற்றங்களாகும். உதாரணமாக கர்ப்பிணிக் காலம் (pregnancy), பிள்ளை பிறந்த பின்னர் (postpartum), கருச்சிதைவு ஏற்பட்ட காலம் (miscarriage), மாதவிடாய்ச் சக்கரத்தில் ஏற்படும் மாற்றங்கள் (menstrual cycle changes, pre-menopause, menopause.).

மன அழுத்தம் பரம்பரை அலகுகள் மூலம் கடத்தப்படுவதாகவும் சில ஆய்வுகள் கூறுகின்றன. வீட்டில் மன அழுத்த நோயாளிகளான குழந்தைகள் அல்லது சகோதரங்கள் இருப்போருக்கு கூட மன அழுத்தம் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

சில சமயங்களில் மன அழுத்தம் நோயாளியினால் சுயமாக உணர்ந்து கொள்ளக் கூடியதாகவும் சில சமயம் வெளிப்படையாகத் தெரிந்து கொள்ள முடியாத அழுத்தமாகவும் இருக்கும். இந்த வெளிப்படையாக தெரியக் கூடிய அல்லது சுயமாக உணர்ந்து கொள்ளக் கூடிய விதமான மன அழுத்தம் உள்ளவரை அடையாளம் காண்பது இலகுவான காரியம் என்பதால் அதிலிருந்து மீள்வதும் இலகுவாக இருக்கும். ஆனால் இந்த வெளிப்படையாகத் தெரியாத மன அழுத்தம் தான் மக்களுக்கு மிகவும் நெருக்கடியினையும் பிரச்சனைகளையும் உருவாக்கக் கூடியதாக அமைந்து விடுகின்றது.

## யாரை மன அழுத்தம் ஆட்கொள்ளவில்லை

உளவியல் நிபுணர்களின் கருத்துப்படி நம் சிந்தனையில், செயலில், பார்வையில் மாற்றங்கள் ஏற்படும் போது அதை நாம் சுதாகரித்துக் கொண்டு உடனே சரி செய்ய முடியும் என்றால், நமக்கு மன அழுத்தம் இல்லை என்று பொருள். உதாரணமாக நாம் புத்தகம் அல்லது செய்தித்தான் படிக்கும்போது நம் கண்கள் ஒவ்வொரு எழுத்தையும் படிப்பதில்லை. வார்த்தையின் முதல், கடைசி எழுத்தை மட்டும் பார்த்து வேகமாக படித்து விடுகிறோம் என்கிறார்கள் அவர்கள். அதாவது வார்த்தைகளின் இடையில் எழுத்துக்கள் மாறி மாற்றல்கள் ஆனால் கூட முதல், கடைசி எழுத்தை வைத்து படித்து விட முடிந்தால் நாம் மன அழுத்தம் இல்லாதவர் என பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

## நல்ல மன அழுத்தமும் கூடாத மன அழுத்தமும் (Positive and Negative Stress)

நல்ல மன அழுத்தம் கடினமாக உழைக்கவும், செயல்களைச் செம்மையாகச் செய்யவும் வழிவகுக்கும். நம் ஒவ்வொருக்கும் சிறப்பாகப் பணிபுரிய சிறிதளவு மன அழுத்தம் தேவை என்றாலும் அது குறைந்த அளவில் நம் கட்டுப் பாட்டுக்குள் இருக்க வேண்டும். தீய மன அழுத்தம் அல்லது அளவுக்கதிகமான மன அழுத்தம் ஒரு மனிதனிடம் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தி உடலில் அல்லது உணர்ச்சியின் அறிகுறிகளாக வெளிபடும். இதனால் மனிதனை அளவுக்கதிகமாக மது பானங்களைக் குடிக்கவும், உலகை மறக்க வைக்கும் போதைப் பொருட்களுக்கு அடிமையாக்கவும் தூண்டும்,

தீவிர மன அழுத்ததால் உடலில் நோய் சமாளிப்பு ஆற்றல் அழிந்து போகும். தீவிர இதயநோய், உயர் இரத்த அழுத்தம் முதலான உடல் நலக் குறைகளும் சோர்வு, ஏக்கம், கவலை போன்ற மனச் சிக்கல்களும் அம்மனிதனை வந்தடையும். மன அழுத்தத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ளப் பழகுவது நம்மை நாமே மகிழ்வாக வைத்திருக்கவும் ஆரோக்கியமாக வைத்திருக்கவும் உதவும்.

மன அழுத்தத்தினை மருத்துவம் அக்கியூட் ஸ்ரெஸ் (Acute stress), எபிசாடிக் அக்யூட் ஸ்ரெஸ் (Episodic Acute Stress), குரோனிக் ஸ்ரெஸ் (Chronic stress), ட்ராமிக் ஸ்ரெஸ் (Traumatic Stress), பருவகால பாதிப்பினால் ஏற்படும் ஸ்ரெஸ் (Seasonal affective disorder) என பல விதமாகப் பிரிக்கின்றது.

## அக்கியூட் ஸ்ரெஸ் (Acute stress)

திடீரென நிகழும் நிகழ்வினால் ஏற்படும் நிரந்தரமற்ற மனவழுத்தம் அக்கியூட் ஸ்ரெஸ் (Acute stress) எனப்படும். இது எங்களால் சமாளிக்கக் கூடியதாகவே இருக்கும். இதயத் துடிப்பு அதிகரித்து இரத்த அழுத்தம் அதிகரிக்கும், தலையிடி, திடீரென ஒரு அமைதியின்மை போன்றவை அறிகுறிகளாகும். சொற்ப நேரத்தில் இவ்வுணர்வுகள் மறைந்து பழைய நிலைக்கு ஆளாகிவிடுவோம்.

## எபிசாடிக் அக்யூட் ஸ்ரெஸ் (Episodic Acute Stress)

தொடர் நிகழ்வுகளினால் ஏற்படுவது எபிசாடிக் அக்யூட் ஸ்ரெஸ் எனப்படும். பதவி உயர்வுக்கு தகுதியுடையவர் நீங்களாக இருந்த போதிலும் சில காரணங்களால் கிடையாமை அதைத் தொடர்ந்து ஏதாவது நோய்வாய்ப்படுதல் அல்லது விவாகரத்து இப்படியான நிகழ்வுகள் சில சமயம் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படுதல் இவ்வாறான மனவழுத்தத்திற்குக் காரணமாகும். இதற்குரிய அறிகுறிகளாவன சமிபாடின்மை, தொடர்ந்த தலையிடி, நித்திரைக் குறைவு போன்றவை. இந்நிலையில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்கவும் அதே சமயம் இதனைக் கையாளவும் வேண்டும். இல்லையெனில் இது குரொனிக் ஸ்ரெஸ்ஸிற்கு இட்டுச் சென்றுவிடும்.

## குரோனிக் ஸ்ரெஸ்(Chronic stress)

இயல்பான நீண்ட காலக் குடும்பச் சூழ்நிலைகளில் வருவதுளனவும் அதே சமயம் எபிசாடிக் அக்யூட் ஸ்ரெஸ் கூடுதலான சமயங்களில் இதனைத் தோற்றுவிக்கும். மேலும் இது பல விதமான மீளுவதற்குக் கஸ்டப்படக் கூடிய கெட்ட பழக்க வழக்கங்களைத் தூண்டுவதாகவும் அமையும்.

## ட்ராமிக் ஸ்ரெஸ்(Traumatic Stress)

ஏதோ ஒரு வித அதிர்ச்சியில் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீண்டு வராமல் இருக்கும் நிலை. இது மனோ நிலையினைப் பாதிக்கும் அளவிற்குச் சென்று விடுகின்ற ஒரு பாரதூரமான நிலையாகும்.

## எவ்வளவு மன அழுத்தத்தினை ஒருவர் தாங்கிக் கொள்ளலாம்

இது ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அளவினதாக அமைவதாக வைத்திய ஆய்வுகள் கூறிய போதிலும் முக்கியமாக ஒருவரது குடும்பச் சூழல், அவரது குடும்பத்தவரது அல்லது உறவினர்கள் வழங்கும் ஆறுதல், பரம்பரை, உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் திறமை (emotional intelligence) போன்ற காரணிகளினால் நிர்ணயிக்கப் படுகின்றது.

## மன அழுத்தத்தினால் உடலில் ஏற்படும் இடையூறுகள்

அடிக்கடி தலைவலி, மயக்கம், தலைச்சுற்றல், உடல் நடுக்கம், மார்பில் எரிச்சல், மலச் சிக்கல் அல்லது பேதியாதல் போன்றவை ஏற்படும். சில சமயங்களில் காதில் தொடர்ந்து ரீங்கார ஒலி கேட்பது போலவும் இருக்கும். அத்துடன் இது உயர் இரத்த அழுத்தம், இதயவலி, உடம்பில் கடி ஏற்படல், தோற் கட்டிகள், கடுமையான தலைவலி போன்றவற்றையும் ஏற்படுத்தும். சிலருக்கு முதுகு வலி, அதிகமாக பசி எடுத்தல் போன்றவை உண்டாகும்.

## மன அழுத்தத்தினால் உணர்ச்சியில் ஏற்படும் இடையூறுகள்

பெரும்பாலான நேரத்தில் ஒர் அழுத்தமான மன நிலையில் எதையோ பறிகொடுத்தது போன்ற மனோநிலை இருப்பதுபோல் தோன்றுவது. அடிக்கடி மனநிலை மாறுவது - ஒரு நிமிடம் சந்தோஷமாகவும், அடுத்த நிமிடமே எல்லாம் இழந்தமாதிரி இருப்பது. எப்பொழுதும் சோம்பலாகவே இருப்பது, பலவீனம் (feeling of weakness) மற்றும் வாழ்க்கையில் பிடிமானத்தை இழந்து போவது. அடிக்கடி கோபம் வருவது, அதை அடக்கத்தெரியாமல் மற்றவர்களிடம் எரிச்சல் அடைவது, தூக்கத்தில் மாற்றங்கள் - குறைவான தூக்கம். திடு திப்பென்று முழித்துக்கொள்வது. திடீரென்று எடை கூடுவதோ அல்லது எடை குறைவது தன்னைப்பற்றி ஒரு தாழ்வான எண்ணம், மற்றும் குற்றவுணர்வு எண்ணங்கள் (feeling of guilty and losing self esteem) சிந்தித்து தெளிவாக செயல் பட முடியாத ஒரு நிலை. தற்கொலை பற்றிய எண்ணங்கள், தற்கொலை செய்ய முயற்சி செய்வது, அதில் தோல்வி அடைவது, குடும்பத்தைக் கவனிக்க முடியாமல் தடுமாறுவது... இதுதான் மன அழுத்தத்தின் ஆரம்பக்கால கட்டம்.

## மன அழுத்தத்தை போக்குவதற்கான வழிமுறைகள்

சிகிச்சை தேவைப்படும் அளவு மன அழுத்-

14ம் பக்கம் பார்க்க...

> “ மகிழ்ச்சியாக இருக்கும்போது
> நீங்கள் புன்னகைக்கிறீர்கள் என்பது எவ்வளவு
> உண்மையோ,
> புன்னகைக்கும் போதெல்லாம்
> மகிழ்ச்சியடைகிறீர்கள் என்பதும் உண்மை.
> நரம்புகளில் தொடங்கும் மெல்லதிர்வுகள்
> முகத்திலுள்ள தசைகளை அசைத்து,
> பாதுகாப்பான உணர்வை
> மூளைக்கும் கொண்டு செல்லும் அற்புதம்
> ஒவ்வொரு புன்னகையின் போதும் நிகழ்கிறது. ”

# உடல் நலத்தைப் பாதி...

13ம் பக்கத் தொடர்ச்சி...

தத்தை முற்ற விடுபவர்களுக்கு சிகிச்சையே தீர்வு. ஆனால் அன்றாட வாழ்வில் நிகழும் சம்பவங்களால் ஏற்படும் பின்னடைவுகள் - மன அழுத்தங்கள் ஆகியவற்றை சரி செய்ய உலகெங்கும் உள்ள மனவியல் நிபுணர்கள் சில வழிமுறைகளைக் கண்டறிந்துள்ளனர்.

பல்வேறு சூழல்களில் பரிசோதிக்கப்பட்டு பலன் தருபவை என்று உறுதி செய்யப்பட்டுள்ள இந்த வழிமுறைகள், மன அழுத்தத்திலிருந்து உடனடி விடுதலை தருவதுடன் அடுத்தபடிநிலை நோக்கி நகர்வதற்கும் கைகொடுக்கின்றன.

மன அழுத்தத்திற்கு உடனடி நிவாரணம் தரக் கூடிய சில பயிற்சி முறைகள், நீண்டகால நிவாரணத்திற்குரிய பயிற்சிமுறைகள் - இரண்டையுமே மனவியல் நிபுணர்கள் பட்டியலிட்டிருக்கிறார்கள் அவையாவன...

- சில நேரங்களில் எதாவது ஒரு வேலையை செய்து கொண்டிருக்கும்போது, காரணமே இல்லாமல் கடுமையான மன அழுத்தம் ஏற்படலாம். சீக்கிரமாக செய்து முடிக்க வேண்டிய வேலைகளாக இருந்தால், அதில் முழுமையாக கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்படும். இந்த நேரங்களில் ஒரு ரப்பர் பேண்டால் கைகளைக் கட்டிக் கொள்ளலாம்.

- பேப்பரைத் துண்டு துண்டாகக் கிழித்துப் போடுவதால் சிலருக்காவது மன அழுத்தத்தை குறைத்துக்கொள்ள உதவியாக இருக்கின்றது. பேப்பரைக் கிழிக்கும்போது கேட்கின்ற சத்தமும், கிழித்து முடித்தவுடன் ஏற்படுகின்ற உணர்வும், அதாவது நாம் எதையோ செய்துவிட்டோம் என்று தோன்றுவது. இது நல்லது தான். இது மன அழுத்தத்துக்கு தீர்வாக இருக்கிறது.

- ஒரே விஷயம் தான் உங்களை மீண்டும் பதட்டப்பட வைக்கிறது என்றால், கண்களைக் கொண்டு தீர்வு காணலாம் என்றும் மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். எந்த விஷயம் உங்களை அலட்டுகின்றதோ, அந்த விஷயத்தை நன்றாக யோசித்த பிறகு, தலை அசைக்காமல், கண்ணின் மணிகளை இரு பக்கங்களிலும் வேகமாக அசைக்கவும். இதை இருபது தடவை செய்து பார்த்த பிறகு நமது நாடியைப் பிடித்துப் பார்த்தால், கண்டிப்பாக மன அழுத்தம் குறைந்திருப்பதை உணரலாம். இது பலருக்கும் உதவியாக இருக்கின்றது என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

- அதிக அளவில் உணவை உட்கொள்பவர்கள், சாப்பிட்ட பிறகு 15 நிமிடம் தூங்குவது நல்லது. இதனால் புத்துணர்வு அதிகமாவதற்கும், மன அழுத்தம் குறைவதற்கும் வழி வகுக்கலாம்!

- **ஆழ்ந்த சுவாசம்:** கீழை நாடுகள், மேலை நாடுகள் இரண்டுமே ஒப்புக்கொள்கிற உத்தி இது. ஆழ்ந்த சுவாசத்தின் மூலம் இரத்தத்தில் பிராணவாயுவின் அளவு அதிகரிப்பதால் உங்கள் தசைகள் தளர்வுநிலை அடைகின்றன. மனம் இயல்புநிலை அடைகின்றது. அடிவயிற்றில் கையை லேசாக அழுத்திக் கொண்டு ஆழமாக சுவாசிப்பதன் மூலம் அடிவயிற்றின் அசைவுகளையும், உடலும் மனமும் தளர்வு நிலை அடைவதையும் கண்கூடாக உணரலாம்.

- **மனஅழுத்தம் தீர விரல் அழுத்தம்:** உள்ளங்கைகளில், மற்ற கையின் கட்டை விரலால் தொடர் அழுத்தம் தருவது தொடங்கி, முழுமையான மசாஜ் செய்துகொள்வது வரையிலான உடல் தளர்வு நிலை உத்திகள் மன அழுத்தத்தைப் போக்குகிற திறன் கொண்டவை.

- **புன்னகையின் சக்தி:** மகிழ்ச்சியாக இருக்கும்போது நீங்கள் புன்னகைக்கிறீர்கள் என்பது எவ்வளவு உண்மையோ, புன்னகைக்கும் போதெல்லாம் மகிழ்ச்சியடைகிறீர்கள் என்பதும் உண்மை. நரம்புகளில் தொடங்கும் மெல்லதிர்வுகள் முகத்திலுள்ள தசைகளை அசைத்து, பாதுகாப்பான உணர்வை மூளைக்கும் கொண்டு செல்லும் அற்புதம் ஒவ்வொரு புன்னகையின் போதும் நிகழ்கிறது என்கிறார் டாக்டர் கூப்பர். புன்னகையின் சக்தி புரிய வேண்டுமா? புன்னகைத்துத்தான் பாருங்களேன்.

- **கடைவாய் - ஒரு ரகசியம்:** மனதில் உருவாகும் அழுத்தம் வந்து படிகிற இடங்களில் ஒன்று கடைவாய் இணைப்புகள்.பற்களை இறுகக்கடித்து, காதுக்குக்கீழ் சுட்டுவிரலால் அழுத்திக் கொண்டு, நீளமாக மூச்சிழுப்பதும், வாயைத் திறந்தபடி காற்றை வெளியே விடுவதும், அழுத்தத்தின் சுவடுகளை உடலில் தங்காமல் வெளியேற்ற மேலைநாட்டு ஆய் வாளர்கள் கண்டு பிடித்திருக்கின்ற வழி.

அடுத்தது என்ன...? மன அழுத்தத்திற்கு ஆளாகிற பலரும் தன்னிரக்கத்தைத் தவிர்க்க முடியாமல் தவிக்கிறார்கள். "எனக்கேன் இது நிகழ்ந்தது? மற்றவர்களுக்கு இப்படி இல்லையே" என்கிற எண்ணங்கள் எழும்போது தன்னிரக்கம் நம் செயல் திறனை மேலும் பாதிக்கிறது. மாறாக, அடுத்தது என்ன?" என்ற அணுகுமுறையைக் கைக்கொள்கிற போது, செயல்படவேண்டும் என்ற தூண்டுதல் வேகம் பெறுகிறது.

- **எழுதிப்பாருங்கள்:** மனஅழுத்தத்தைத் தந்த சம்பவம், அதன் விளைவுகள், கையாள்வதற்கு மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகள், உடனடி நடவடிக்கைகள் ஆகியவற்றை ஒரு காகிதத்தில் எழுதுங்கள். மனதுக்குள்ளேயே பலவற்றையும் யோசிப்பதைவிட எழுதும் போது ஒரு புதிய தெளிவு பிறக்கிறது. அந்தத் தெளிவே மன அழுத்தத்திலிருந்து விடுபடும் சக்தியைக் கொடுக்கிறது. தெளிவாக எழுதிப் பார்க்கும்போது தீர்வை நோக்கிப் பலஅடிகள் வைத்தது போன்ற மன நிறைவை எளிதில் எட்டமுடிகிறது.

**தடாலடிகளைத் தள்ளிப்போடுங்கள்:** அழுத்தம் கொடுக்கும் பதட்டம் காரணமாக தடாலடியாய் சில தவறான முடிவுகளை எடுக்கத் தோன்றும். அந்த நேரப் பதட்டத்தில் எது தவறு எது சரி என்று சிந்திக்காமல் செயல்படுவது சேதங்களை வளர்க்கும். எனவே, மனம் பதட்டமாக இருக்கும்போது முடிவெடுப்பதைத் தள்ளிப்போடுங்கள். பத்து வரை மனதுக் குள்ளேயே எண்ணி விட்டு, சிறிது தூரம் உலவிவிட்டு, பதட்டம் தணியும் வரை பொறுமையாய் இருந்தால் ஆக்கபூர்வமான முடிவுகள் சாத்தியமாகும்.

**காபி குடிப்பதைக் குறையுங்கள்:** காபி மிகவும் சுகமானதுதான். ஆனால் மன அழுத்தம் ஏற்படும் நேரங்களில் காபியைத் தவிர்ப்பது நல்லது என்கிறார் ஜேம்ஸ் ட்யூக் என்கிற ஆய்வாளர். தூய குடிநீர், பழச்சாறுகள் போன்ற பானங்கள் புத்துணர்வு தருவதாகவும் மன அழுத்தத்தைப் போக்கும் சக்தி தருபவையாகவும் இருக்கும்.

**முடியாத விஷயங்களை மறுத்துச் சொல்லுங்கள்:** எல்லோரையும் திருப்திப் படுத்தும் எண்ணம் எங்கேயோ நமக்குள் இருக்கிறது. இது வேண்டாத விஷயங்களையும் மேலே தூக்கிப் போட்டுக் கொண்டு, மற்றவர்களிடம் சிரித்தாலும், நம் உள் வட்டத்துக்குள் எரிந்துவிழச் செய்கிறது. இந்தக் கூடுதல் பாரம், மன அழுத்தத்தை வளர்த்து விடும் என்பதால், செய்யமுடியாதவற்றையும் செய்ய விரும்பாதவற்றையும் நாசூக்காய் மறுத்துச் சொல்வதே நல்லது.

**நறுமணங்களின் நலம் பெறுங்கள்:** தீயவாசனையை அடையாளம் கண்டு முகம் சுளிக்கும் அளவுக்கு மனிதர்கள் நறுமணங்களின் சுகத்தில் ஈடுபட்டு அனுபவிப்பதில்லை. நறுமணம் தரும் மலர்கள், எண்ணெய் வகைகள் ஆகியவற்றின் மூலம் மனதை மிக விரைவில் லேசாக்கிக் கொள்ளமுடியும். விலங்குகளில் கூட இவ் ஆராய்ச்சியினை நடாத்தி வெற்றி கண்டுள்ளார்கள்.

**உங்கள் உஷ்ணமே உங்களுக்குதவும்:** டேவிட் சோபெல் என்ற மனநல மருத்துவர், மிக எளிதான வழியொன்றைச் சொல்கிறார். இரண்டு கைகளையும் பரபரவென்று தேய்த்து மூடிய கண்களுக்கு மேல் வைத்து, ஆழமாக சுவாசிக்கும்போதே அந்த உஷ்ணத்தையும் உள் வாங்குகிறபோது, புதிய உத்வேகம் உங்களுக்குள்ளேயே உருவாகும் என்கிறார் அவர்.

**கவலைக்கென்று நேரம் ஒதுக்குங்கள்:** மனதில் தோன்றும் கவலைகள் எல்லா நேரமும் உங்களை அரித்தெடுப்பதை அனுமதிக்காதிருக்க வழி உண்டு. கவலைகள் என்னவென்று பார்க்க ஒரு நேரம் ஒதுக்குவது, கால்மணி நேரம் என்று வைத்துக்கொண்டால், அந்தக் கால் மணி நேரமும் கன்னத்தில் கைவைத்துக்கொண்டு கவலைப்பட வேண்டியதில்லை. கவலைகளை ஆராய்ந்து அவற்றை உங்கள் கட்டுக்குள் கொண்டு வரத்தான் அந்த நேரம்.

**நொறுக்குத் தீனி நொறுக்குங்கள்:** கார்போஹைட்ரேட் கொண்ட நொறுக்குத் தீனியை நொறுக்கினால் அதிலிருந்து செரிடானின் உங்கள் மனதை அமைதிப்படுத்தும் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

**வைட்டமின் வேண்டும்:** வைட்டமின் பி, மற்றும் கல்சியம் போன்ற சத்துக்களை சிறிதளவு சேர்த்துக்கொண்டே வருபவர்கள் அவ்வளவு எளிதாக மன அழுத்தத்திற்கு ஆட்பட மாட்டார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

"நாமும் மன அழுத்தம் இன்றி
நலமே வாழ்வோம்".

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***

# கண்ணுக்குள் நூறு..

9ம் பக்கத் தொடர்ச்சி...

இந்த நீர்மயவுடனீர் கால்வாய்கள்தடைபடும் பொழுது கண்ணிலுள்ள அமுக்கத்தை ஏற்படுத்துகின்றது.

### வேறு காரணங்களால் ஏற்படுவது

கண்களில் ஏற்படும் காயங்கள், வீக்கங்கள், முளைகள் (TUMOR) கண்வில்லை வெண் படல நோய் போன்றவை கண் அமுக்க நோயை ஏற்படுத்தலாம். நாட்பட்ட கட்டுப் பாட்டில் இல்லாத நீரிழிவு நோயும் இதற்கொரு காரணமாகலாம்.

### குணங்குறிகள்

- கண்களில் அதிக வேதனை
- கண்கள் சிவந்து இருந்தல்
- கருவிழிகள் வீங்குதல்
- கண்மணிகள் விரிவடைந்து அதன் அளவுகள் அதாவது சுருங்கி, விரியாது இருத்தல்,

குணங்குறிகள் அற்ற நிலையும் உண்டு.

### ஒடுங்கிய கோணக்கண் அமுக்க நோய்

அநேகமாக ஆசிய மக்களிடையே காணப்படுவது. சாதாரணமாக இரண்டு கண்களையும் பாதிக்கும். கண் அமுக்கம் சடுதியாகக் கூடுவது இல்லை. கண்நோவு அல்லது வேறு அறிகுறிகள் இருப்பதில்லை. கால்வாய்கள் ஒடுங்கி இருப்பதால் அவை அடைபடுவது சுலபம். அப்படி அடைபடும் பொழுது கண் அமுக்க நோய் ஏற்பட்டு சிகிச்சை பெறவேண்டி ஏற்படும்.

### கண் அமுக்க நோய் யாரைத் தாக்கும்?

வயது – அநேகமாக 50 வயதின்மேல்
ஆபிரிக்க – அமெரிக்கர்களுக்கு இளவயதிலும் வரலாம்.
ஆசிய நாட்டவர்கள் - இரத்த உறவினர்களுக்கு இருந்தால் வரக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.
அதிகளவில் கட்டுப்படாத குருதியமுக்கம்.
கட்டுப்படாத நீரிழிவு நோய்

ஒருமுறையாவது கண்வைத்தியரை நாடிப் பரிசோதனை செய்வதன் மூலம் இலகுவாக கண் அமுக்க நோயைக் கண்டு பிடித்து விடலாம். அதன் பின்பு கண்வைத்தியர் உங்கள் கண்களின் நிலைபற்றி ஆலோசனை கூறுவார்.

### நோயை அடையாளம் காணுதல்

கண்வைத்தியர் உங்கள் கண்களைப் பரிசோதிக்கும் பொழுது பல்வேறு விதமான உபகரணங்களைப் பயன்படுத்துவார். கண் அமுக்க நேரம் அநேகமாக ஒரு பாரம்பரிய நோயாகக் கருதலாம். உங்களுடைய வைத்தியம் சம்பந்தமான சரித்திரத்தைக் கேட்டு எழுதும் பொழுது உங்களது குடும்பத்தவர்களில் எவருக்காவது கண் அமுக்க நோய் இருந்ததுண்டா? என அறிந்துகொள்வார். பிரதானமாக நீங்கள் எடுக்கும் மருந்துகள், மற்றும் நோய்கள் பற்றி அறிந்து கொள்வார்.

கண் அமுக்கத்தை அழுத்தமானி (Tono meter) என்னும் உபகரணத்தால் அளக்கலாம். அடுத்ததாக கண்களினுள் ஏற்படும் மாற்றங்களை கண்மானியூடாகப் பார்வையிட்டு கண்களின் அடியில் உள்ள பார்வைத்தட்டும், நரம்புத்தட்டும் எந்த நிலைகளில் உள்ளன என்பதை ஆராய்வார்கள். இவற்றைப் படம் பிடிக்கவும் முடியும்.

ஏற்கனவே கூறியபடி கருவிழிக்கும், கதிராளிக்கும் இடையே அமைந்துள்ள கோணங்கள், அகலமாக அல்லது ஒடுங்கியதாக அல்லது மூடப்பட்டு இருக்கின்றனவா என்பதை கண் கோணமானி (Gonioscope) ஊடாக அவதானிப்பார்.

அடுத்ததாக உங்களது சுற்றுவிழிப்பார்வை (Peripheral vision) நன்றாக இருக்கின்றதா என்பதை சுற்றுவிரிப்பார்வைமானி (Perimetry) யைப் பாவித்து அறிவார். பரந்துபட்ட சுற்று விரிப்பார்வையில் ஏதாவது ஒரு இடத்திலோ, பல இடங்களிலோ பார்வைகள் பழுதுபட்டு இருந்தால் இந்த மானியில் இருந்து எடுக்கப்படும் அளவுகள் அவற்றைச் சுட்டிக் காட்டும்.

### சிகிச்சை

உற்பத்தியாகும் நீர்மயவுடனீரின் சுரக்கும் அளவைக் குறைக்கலாம் அல்லது அடைபட்ட குழாயைத் திறந்து சேர்ந்து கொண்டிருக்கும் நீர்மயவுடனீரை வழமை போல் வெளியேற்றிக் கொண்டிருக்க வகை செய்யலாம்.

சுரப்பின் அளவைக் குறைப்பதற்குக் கண் வைத்தியர் உங்களுக்கு மருந்து வில்லைகள் அல்லது கண்ணுக்குள் விடும் திரவ மருந்துகள் தரலாம்.

சுரப்பின் அளவைக் குறைக்காமல், சுரக்கப் படும் திரவம் வெளியேறும் வகையில் வேறு விதமான கண் மருந்துத் துளிகள் அல்லது லேசர் சிகிச்சை அல்லது சத்திர சிகிச்சை மூலம் தடைகளை நீக்கி கால்வாயைத் திறந்து விடலாம்.

மருந்துகளால் ஏற்படும் விளைவுகள் பற்றி உங்கள் வைத்தியரிடம் கலந்தாலோசிப்பது நல்லது.

லேசர் சிகிச்சை, சத்திர சிகிச்சை போன்றவையும் நல்ல பலனைத்தரும். கண்வைத்தியரை அணுகி அவரது ஆலோசனைப்படி சிகிச்சையில் பங்குபற்றவும்.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■


For all your Real Estate needs...
First Prize
2009
Buy or sell any properties with us and WIN this new BMW car and More prizes**
Buy. Sell. Lease.
$399,900
Good Investment In Excellent Location Step To G.M. Cntr In Dntn Oshawa. Near Future Courthouse &Well Running Mexican Restaurant With Fine Dining .
Ravi Raveendran- Broker
Direct: 416-817-8479
$395,900
All Brick, Open Concept 4 Bedroom Detached Home, Professionally Finished 2 Bedroom Basement In-Law Suite With Walk-Out To Patio.
Jayanthi Sritharan-Broker
Direct: 416-918-5872
$610,000
Beautiful Arista Lavenham Model around 3200 sqft. $15k upgrades, open concept, corner lot
Seelan Siva Aiyadurai-Broker
Direct: 416-451-0271
$189,900
Very Convenient Location!!! Low Rise Condo. Steps To Ttc, Hwy 401, Woodside Square Shopping Mall
Wilton Gnanapragasam
Sales Representative
Direct: 416-554-4747
$419,900
Hardwood Floor On Main Floor In Living, Family, Dining. Freshly Painted, Lots Of Upgrades Hardwood Floor.
Wilton Gnanapragasam
Sales Representative
Direct: 416-554-4747
$320,000
Immaculate Affordable Spacious 3 Yrs New Mattamy Built Freehold Townhouse With Separate Entrance To Finished Basement With One Bedrm
Sasi Chelvaratnam
Sales Representative
Direct: 416-725-1125
$449,000
Beautiful house in Scarborough area. 4 Bedrooms with finished basement. Close to everything. Lots of Upgrades.
Justin William- Broker
Direct: 416-803-7344
$369,000
Open Concept Family Room And Dining Room, New Hardwood Floor Thru Main Floor. New Roof (2006) And New Windows (2006)
Ravi Raveendran- Broker
Direct: 416-817-8479
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd, Suite 206, Scarborough, On.
Office: 416.321.6969
This is not intend to solicit properties currently listed for sale
*Independently owned and operated
** conditions apply


Air-On
HOME IMPROVEMENT CENTRE
Lowest price in Town
Tel:416-840-3093
*HEATING & COOLING
*GAS FURNACES
*AIR CONDITIONERS
*HUMIDIFIERS
*EXHAUST RANGE HOOD
*ELECTRICAL
*PLUMBING
*WINDOWS
*ROOFING
*PAINTING
*FLOORING
Get up to $2,000 Bonus & Rebates
plus 10 yrs parts & Labour warranty
No Payment For 6 Months*
Financing Available*
*OAC
@ GTA Square
5215 Finch Ave unit 163, Middledield & Finch
Heating & cooling


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...
வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்....
$152,000
York Mills & Victoria Park
2 Bedrooms 1 Washroom
$219,900
Ellesmere & Birchmont
2 Bedroom 2 Washroom
Indoor Pool, Sauna.
$237,500
Townline & Adelaide
3Bedrooms 3 Washroom
Part Finished Basement
$269,900
Morningside & Finch
3+2 Bedrooms 4 Washroom
LAND FOR SALE
ST.CLAIR & PHARMACY
$499,900
$304,900
Hoover Par & Nineth Line
3 Bedrooms 3 Washroom
$334,900
Warden & St.Clair
2+1 Bedrooms 2 Washroom
$339,000
Morningside & Staines
3 Bedrooms 3 Washroom
$339,900
Bellamy / Lawrence
3 Bedrooms 2 Washroom
Finished Basement
$339,900
Whites & Highview
4 Bedrooms 3 Washroom
$349,900
Morningside & McLevin
4+2 Bedrooms 43 Washroom
$479,900
14 th & McCowan
3 Bedrooms 3 Washroom
Part Finished Basement W / O
$649,900
Brand New Home
McLaughin Rd & Derry Rd
5 Bedrooms 3 Washroom
Looking for New & Experienced Sales Rep.
Please Contact Us...
Ravi Logarajah B.Sc
Tharsi Rajenthiram B.B.A
*Sales Representative
Call : 416-843-7474
HOMELIFE
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
*Independently Owned and Operated, Realtor
BUS: 416-298-3200 / FAX: 416-298-3440


குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
புகைப்பிடிக்காத 30 வயதுடைய ஆணுக்கு $200 000 காப்புறுதி $17.28 மட்டுமே! (T10. R.C.)
RBC Insurance
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
தனா மாணிக்கவாசகர்
Broker
Life Insurance
Critical Illness Insurance
Disability Insurance
Mortgage Insurance
RRSP - Start from $25
Loan approval within 24hrs - Bad credit no problem
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)
INSURANCE SERVICE INC.
Cell: 416-728-5772
Business: 416-290-1200

# மின்சாரச் செலவும் கட்டுப்பாடும்

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -



## வீடும் விடியலும் - 40

### மின்சாரச் செலவைக் கட்டுப்படுத்து-வதற்கான ஆலோசனைகள்:

பொதுப்படையாகக் கூறுவதானால் பாவனை-யில் இல்லாத உபகரணங்களை நிறுத்தி விடுங்கள். ("If You Aren't Using It - Shut It Off") இங்கு வானொலி, கம்பியூட்டர், குளிரூட்டிகள், தொலைக்காட்சி, உட்பட மின் விளக்குகளும் உள்ளடக்கப்படுகின்றது.

காலத்தின் மாற்றத்திற்கேற்ப எங்கள் பழக்க வழக்கங்களையும் நாங்கள் மாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது. அதாவது எதிர் காலத்தில் மின்சாரப் பாவனைக்கான கட்டணம் எவ்வளவு பாவிக்கின்றோம் என்ற அடிப்படையில் இல்லாது எப்போது? பாவிக்கின்றோம் என்ற அடிப்படையில் அறவிடப்பட இருக்கின்றது. அதாவது அதிகரித்த தேவையின் காரணமாக இரவில் பாவிக்கும் மின்சாரத்தை விட பகலில் பாவிக்கும் மின்சாரத்திற்கு இரட்டிப்பு கட்டணம் அறவிடப்பட இருக்கிறது. உதாரணமாக காலை 11 மணிக்கு 9.16 சதமாக / KWH இருக்கும் கட்டணம் மாலை 5 மணிக்கு 7.6 சதமாக / KWH இருக்கும் இரவு 10 மணிக்கு 4.2 சதமாக /KWH இருக்கும். சூரியன் மேலே உயர உயர கட்டணமும் கூடிப் பின்னர் மாலையில் குறைவடையத் தொடங்கும். சனி, ஞாயிறு தினங்களில் கட்டணம் மேலும் குறைவாக இருக்கும். இத்தகைய சூழலுக் கேற்றவாறு நாமும் எமது பழக்கவழக்கங்களை முடிந்தளவு மாற்றுவதன் மூலம் மிகுந்த பலனை அடையமுடியும்.

சில செயற்பாடுகளை கட்டணம் குறைந்த நேரங்களில் மேற் கொள்ளுவதன் மூலம் அதிக பலன் பெறமுடியும். உதாரணமாக உடுப்பு துவைத்தல், பாத்திரம் கழுவும் இயந்திரங்களைப் பாவித்தல், அதிக மின்சாரத்தை நுகரக் கூடிய பாண் தயாரிக்கும் இயந்திரங்களைப் பாவித்தல் அல்லது Baking செய்தல் போன்றவற்றை இரவு நேரத்திற்கு மாற்றி விடுதல் பலன் தரக்கூடியது. மேலும் கூறுவதானால் தானாக இயங்கும் TIMERஐ பொருத்துவதன் மூலம் நாம் நித்திரையாக இருக்கும் போது இவை விழித்திருந்து செயற்பட்டு எமது செலவினைக் கட்டுப்படுத்த துணை புரியும். குறைந்த விலையில் TIMER களை வாங்க முடியும் என்பதனை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. $10 டொலருக்கு குறைவாக இவற்றை வாங்க முடியும். சிறிய முதலீடு காலப் போக்கில் பாரிய சேமிப்புக்கு வழிவகுக்கும்.

கோடைகாலத்தில் குறிப்பாக கனடாவில் வெப்ப அலைகளின் (HEAT WAVE) தாக்கத்திற்கு முகங்கொடுக்கத் தயாராக வேண்டும். இதற்குப் பலவிதமான ஆலோசனைகள் கூறப்படுகின்றன. ஒரு சில மாதங்கள் ஆனாலும் வீட்டில் இருக்கும். வெப்பத்தின் தாக்கத்தால் பலரும் அவதிப்படுவது உண்டு.

வீடுகளில் பல தேவைகளுக்காக மின்சாரம் பாவிக்கப் படுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் எத்தகைய வழியில் மின்சாரத்தைச் சேமிப்பதன் மூலம் செலவைக் குறைத்துக் கொள்ளலாம் என்பது பற்றி ஆராய்வது சிறந்தது.

### குளிர் ஊட்டிகள் (Air conditioning)

பலரும் கோடைகாலத்தில் AIR CONDITIONஐப் பாவிப்பது வழக்கம். வீட்டில் நாம் பாவிக்கும் மின்சார உபகரணங்களில் மிக அதிக அளவு மின்சாரத்தை நுகர கூடியதும் அதிக செலவை ஏற்படுத்தக் கூடியதும் குளிரூட்டிகள் என்றால் அது மிகையல்ல. எனவே இதனை மிகத் தேவையான நேரங்களில் மட்டும் பாவித்து அதற்கான பதிலீட்டு வழிகளில் ஈடுபடுதல் நல்லது.

மிக அதிகளவு மின்சாரத்தை நுகர்வதனால் மிக அதிகளவு செலவை ஏற்படுத்தக் கூடியவை குளிரூட்டிகள். எனவே அவற்றை மிக அவசியமான போது மட்டும் பாவிப்பது நல்லது. THEMOST CONTROLERஐ $26^{C}$ பாகைக்கு மேல் இயங்கும் விதத்தில் பாவித்தல் சிறந்ததும் லாபகரமானதும் ஆகும்.






தவிர இயற்கையான முறைகளில் வெப்பத்தை தணிக்க வழி காண்பது மேலும் பலன் தரவல்லது.

### மேலும் சில ஆலோசனைகள்:

- வீடு சூடேறதவாறு பார்த்துக் கொள்ளல். அதாவது மாலை தொடக்கம் இரவு நேரங்களில் சாளரங்கள் ஊடாக குளிர்காற்றை உள்வாங்கி, பகல் வேளைகளில் உள் வாங்கப்பட்ட குளிர் காற்றை தப்பித்து விடாதபடி பார்த்தக் கொள்ளல்.("Keep the heat out & invite the cool air in")
- உஸ்ணம் கூடிய வேளைகளில் சூடான காற்றை காற்றாடி மூலம் வெளியேற்றல்.
- திரைச் சீலைகளை பகலில் மூடி இரவில் திறந்து விடல்.
- ATTIC பகுதியில் கோடை காலத்தில் வெப்பம் மிக அதிகமாக இருக்கும். அந்த வெப்பத்தை தணிக்க பல மணி நேரம் குளிரூட்டிகள் இயங்க வேண்டி இருக்கும். ATTICல் தலைக்கு மேலே அடைபட்டிருக்கும் வெப்பமான காற்றை வெளியேற்ற காற்றாடிகள் (FAN) போடப்பட்டால் உங்களது மின்சாரச் செலவில் பாரிய வித்தியாசத்தைக் கண்டு கொள்ள முடியும். அத்துடன் இத்தகைய காற்றாடிகள் கூரையின் ஆயுட் காலத்தைக் கூட்டவும் உதவும். ஒரு கல்லில் இரு மாங்காய் என்பது இங்கு சாலவும் பொருந்தும்.
- நிலக்கீழ் அறை உள்ளவர்கள் கோடை காலத்தில் அங்கு அடை பட்டிருக்கும் குளிர்காற்றை மேற் பகுதிக்குப் பரப்புவதன் மூலம் வீடு வெப்பமாவதைக் குறைக்க முடியும்.
- FURNACE உடன் பொருத்தப்பட்டிருக்கும் காற்றாடியைத் தனியாகப் பாவிப்பதில் எந்தவித தப்பும் கிடையாது. குளிரூட்டியுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்தளவு மின்சாரத்தை மட்டுமே காற்றாடிகள் நுகர்கின்றன.






### சமைத்தல்:

எம்மவர் மத்தியில் சமையற்கலை மிகப் பிரபல்யமானது. நீண்ட நேரம் சமைப்பதில் பலருக்கு இன்பம். ஆனால் மாதாந்த கட்டணங்கள் செலுத்தப்படும் போது அதன் தாற்பரியம் பலருக்கும் புரிவதில்லை. தொடர் மாடிக் கட்டிடத்தில் இருப்பவர்களுக்கு இதனைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் கிடையாது. பிறரது செலவில் சமையல் செய்து சம்பாதிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் சில தொடர் மாடிக் கட்டிட குடியிருப்பாளர்கள். எது எப்படியாயினும் சமையல் துறையில் மின்சாரத்தைக் கட்டுப் படுத்த சில ஆலோசனைகள்:

- மின்சாரத்தில் இயங்கும் அடுப்புகளை விட GAZல் இயங்கும் அடுப்புகள் சிக்கனம் வாய்ந்தவை. அத்துடன் பழைய அடுப்புகளை விட புதிய அடுப்புகள் (ENERGY EFFICIENT) குறைந்த அளவு மின்சாரத்தை உள் வாங்கி அதிகளவு வெப்பத்தைத் தரக்கூடியவை. எனவே பழைய அடுப்புகளைத் திருத்துவதை விட புதிய சிறந்த அடுப்புகளை பிரதியீடு செய்வது பற்றியும் சிந்திக்கலாம்.
- அடுப்புச் சூடாக இருக்கும் போதே மேலதிக உணவுகளை தயார் செய்யலாம். அடிக்கடி போடுவதைத் தவிர்ப்பது நல்லது.
- சூடாக இருக்கும் போதே OVENஐ சுத்தம் செய்வது நல்லது. இங்கு குறிப்பிடப் படுவது தானே சுத்தமாக்கும் அடுப்புகள். (SELF CLEANING OVEN)
- சமைக்கும் போது மூடிச் சமைத்தல் விரயத்தைத் தவிர்க்கக் கூடியது. அத்துடன் சூழலையும் பாதுகாக்கும்.
- அமுக்க முறையில் இயங்கும் சமையல் பாத்திரங்கள் (PRESSER COOKER) மிக இலாபகரமானது. நேரத்தையும், பணத்தையும் சேமிக்கக் கூடியவை.
- MICROWAVEன் பாவனையைக் கூட்டுவது இலாபகரமானது. சாதாரண MICROWAVE, 1.6 KW மின்சாரத்தை நுகர்ந்து 600W சக்தியை உருவாக்குகிறது. நேரத்தை மீதப்படுத்தும் அதேவேளை சாதாரண அடுப்புகளுடன் ஒப்பிடும் போது 50% - 75% வரை செலவைக் குறைக்கவல்லது என சில ஆராய்ச்சிகள் கூறுகின்றன.



- அடுப்பில் பாத்திரங்களை வைக்கும் போது பாத்திரத்தின் அளவுக்குத் தகுந்த மாதிரியான அளவான அடுப்பைப் பாவிப்பதும், அவை பொருந்தக்கூடிய விதத்தில் நடுவில் வைப்பதும் வீணான வெப்ப விரயத்தைத் தவிர்க்க வழிவகுக்கும். உதாரணமாக அப்பச் சட்டியை சாதாரண அடுப்பில் வைத்தால் நுகரப்படும் வெப்பத்தை விட விரயமாகும் வெப்பம் தான் அதிகமாக இருக்கும். புத்திசாலியான சிலர் அதற்கென சில உலோக வளையங்களைப் பாவிக்கிறார்கள்.

### வெளிப்புற விளக்குகள். (Exterior Lights)

**SOLAR LIGHTS:**
**(சூரியக்கதிரில் இயங்குபவை)**

வீட்டிற்கு வெளியே பாவிக்கக்கூடிய சூரிய ஒளியில் இயங்கக் கூடிய பூந்தோட்ட விளக்குகள் பிரபல்யம் அடைந்து வருகின்றன. பகலில் உள்வாங்கும் சூரிய ஒளியை சேமித்து இரவில் வெளிச்சம் தரும் இத்தகைய விளக்குகள் மிக இலாபகரமானவை. மிக அழகான பல்வேறு வடிவங்களில் இவை சந்தைப்படுத்தப் படுகின்றன. இவற்றைப் பொருத்துவதும் மிக இலகு.


**SENSOR LIGHTS / MORTION LIGHTS:**

அசைவுகளைக் கண்டதும் குறிப்பிட்ட நேரத்திற்கு தானே இயங்கி தானாக நிற்கும் மின் விளக்குகளும் பயன் உள்ளவை. வீட்டிற்கு வெளியிலும் வாசல் போன்ற பகுதிகளிலும் இவற்றைப் பயன் படுத்தலாம். இவை மின் சாரத்தைச் சேமிக்க உதவும்

அதேவேளை பாதுகாப்பையும் (Security)

19ம் பக்கம் பார்க்க...




WHO DO YOU CALL?
Town Of Markham
Customer Service Centre: (905) 477-5530
Noise Complaints
(905) 477-5530
Low Water Pressure
(905) 475-4862
Gas Leak
1-866-763-5427
Garbage / Recycling Collection
(905) 415-7535
HOMELIFE
Homelife Landmark Realty Inc
3300 Finch Ave East Suite 208
Scarborough Ontario
Manga Arunasalam
Broker
Cell: (416) 816-8775
Res: (905) 944-9604
Bus: (416) 293-5093
RESIDENTIAL/COMMERCIAL
BUYING / SELLING
Street Trees
(905) 475-5861
(905) 415-7535
Street Parking
(905) 477-7000
Ext 2050
Sewer Odour
(905) 475-4862
Street Ploughed / Salted
(905) 475-4866
Basement Flooding
(905) 475-4862
Special Pick Up
(905) 415-7535
Yard Waste
(905) 415-7535
*Each office is independently owned and operated
Not intended to solicit properties currently listed for sale or those under agency contract


வீடுகள் விற்பனைக்கு FOR SALE
MARKHAM
McCowan / 407
$499,000
7 yrs old Detached, 5 Bedrooms and 4 washrooms, Almost 2800 Sq ft,
MARKHAM
Markham / 14th Ave
$462,900
Detached, 4+1 Bedrooms and 4 washrooms Basemnt Apartment,
MARKHAM
Markham / Elson
$389,000
Semi- Detached, 4+2 Bedrooms and 4 washrooms Basemnt Apartment,
MARKHAM
McCowan / 16th Ave
$498,800
Detached, 4 +1 Bedrooms and 5 washrooms Finished Basemnt
SCARBOROUGH
McCowan / Lawrence
$314,900
Detached Bungalow, 3+1 Bedrooms and 2 Washrooms, Basemnt Apartment
SCARBOROUGH
Markham / Passmore
$319,900
Semi-Detached, 4 Bedrooms and 3 washrooms , Only 6yrs old.
MISSISSAUGA
Mavis / Derry
$347,000
Semi-Detached, 3+2 Bedrooms and 4 washrooms , Finished Basement.
MISSISSAUGA
McLaughlin / Derry
$315,000
Semi-Detached, 3+1 Bedrooms and 3 washrooms , Finished Basement.
BRAMPTON
Sandlewood / Edenbrook
$369,900
Detached, 4 Bedrooms and 3 washrooms , 5 yrs old. New hardwood.
KenKirupa
Sales Representative
INSPIRED BY YOU
Thinking of Selling?
Contact Me Today.
Direct 416 294 9322
Office 416 491 4002
RE/MAX
Re/Max Crossroads Realty Inc., Brokerage
905areahomes.ca 416homes.ca
Mortgages can be arranged for 2.85 % Interest rate

# வெள்ளையர்கள் தகவல்

## குமார் புனிதவேல் பக்கம்

எமது தாய்நாடான இலங்கையை ஆண்டவர்களில் பிரித்தானியர்களும் ஒருவர். இவர்கள் எம்மை நூற்றி ஐம்பது வருடங்களுக்குமேல் ஆட்சி செய்தார்கள். அவர்கள் பற்றி சில சுவையான தகவல்களை இங்கு தருவேன். தமிழர் தகவல் படித்தால் மட்டும் போதுமா? பிரித்தானியர் தகவலையும் படியுங்கள்.

### தகவல் 1:

பிரித்தானியர்கள் பெரும்பாலும் திருமணங்களை ஆனி மாதத்தில் தான் வைப்பார்கள். அது எம்மவர் போல் ஆடிமாதம் நல்ல கருமங்கள் செய்வதற்கு கூடாத மாதம் என்பதால் அல்ல. உண்மையான காரணம் அவர்கள் வெய்யில் காலத்தில் ஆரம்பமான வைகாசியில் வருடம் ஒருமுறை செய்யும் குளியலை செய்வார்கள். எனவே ஆணி மாதத்தில் அவர்கள் உடல்கள் இன்னும் துர்நாற்றம் இல்லாமல் இருக்கும். ஆனாலும் ஏதும் துர்நாற்றம் வீசினாலும் என்று மண மகள் கையில் பூச்செண்டை (Flower Bouquet) வைத்திருப்பார்கள். உடல் நாற்றத்தை மறைப்பதற்கு இந்த பாரம்பரியத்தின் விளை வாகத்தான் இன்றும் மணமகள் கையில் பூச்செண்டு வைத்திருக்கும் பழக்கம் கையாளப்படுகிறது!.

### தகவல் 2:

அவர்கள் குளிப்பதற்கு ஒரு பெரிய தொட்டியில் நீர் நிரப்பப்படும். வீட்டின் தவலைன் (Man of the house) நல்ல துப்பரவான வெந்நீரில் குளிக்கும் பேற்றை முதலில் பெறுவார். அதைத் தொடர்ந்து வீட்டில் உள்ள மற்ற ஆண்கள் அந்த நீரில் குளிப்பதற்கு உரிமை உள்ளவர்களாவார்கள். இதைத் தொடர்ந்து பெண்களும் பிள்ளைகளும் குளிப்பார்கள். இவர்கள் எல்லாரும் கழுவிய நீரில் குழந்தைகள் குளிப்பாட்டப்படுவார்கள்! இதனால் தான் இன்றும் ஆங்கிலத்தில் don't throw the baby out with the bath water" என்னும் வாக்கு வழக்கத்தில் உள்ளது. அதாவது குளித்த நீருடன் குழந்தையையும் எறிய வேண்டாம் என்று கூறுவார்கள்.

### தகவல் 3:

அவர்கள் வீடுகள் தடிகள் ஏதும் இல்லாமல் வைக்கோல் அடர்த்தியாக குவிப்பதன்மூலம் கூரை செய்யப்படும். தடிகள் ஏதும் இல்லாமையால் இந்தக் குவியல் மிகத் தடிப்பாயிருக்கும். இந்த வைக்கோல் போர்கள் நாய் பூனை எலிகள் போன்றவை குளிர்காய்வதற்கு ஒதுங்குவதற்கு அனுசரணையாக இருக்கும். இப்படி வசிக்கும் நாய் பூனை போன்ற சிறு வளர்ப்பு மிருகங்கள் பெருமழை பெய்யும் வேளைகளில் ஈரமாயிருப்பதால் வழுக்கி விழுவதுண்டு. இதனால் தான் பெருமழை பெய்யும்போது 'It is raining cats and dogs" என்று குறிப்பிடுவார்கள். அதாவது பெருமழையை பூனை நாய்களாக பெழிந்தது என்று குறிப்பிடுவார்கள்.

### தகவல் 4:

இப்படி வைக்கோல் கூரையில் இருந்து பூச்சி, பூரான் போன்றவை கொட்டுவதை தவிர்க்க முடியாது. இப்படி கொட்டும் தூசு, பூச்சி போன்றவை கொட்டுவது கட்டிலை சுத்தமாக வைத்திருப்பதற்கு பெரும் இடைஞ்சலாய் இருந்தது. எனவே கட்டிலின் நான்கு மூலைகளிலும் தூன்களை நட்டு அவற்றில் ஒரு கட்டில் விரிப்பை (Bed Sheet) போட்டு விட்டார்கள். இவை கட்டிலினை அசுத்தப்படுத்தாமல் வைத்திருக்க உதவியாய் இருந்தது. இதனால் தான் Canopy bed அதாவது நாலு தூண்களும் மேலே ஒருவிரிப்புமுடைய கட்டில் தோன்றக் காரணமாய் இருந்தது.

### தகவல் 5:

அக்காலத்து வெள்ளையர்கள் வீட்டை சாணம் போட்டு மெழுகுவதை அறிந்திருக்கவில்லை. அனேகமானவர்கள் வீட்டுத்தரை குப்பையாக இருந்தது. ஆனால், பணக்காரர் வீடுகளில் மட்டும் தரையில் "சிலேட்டு" பதித்திருப்பார்கள் (Slate) இதனால்தான் ஆங்கிலத்தில் "Dirt poor" என்ற பதம் தோன்றியது. ஒருவர் பரம ஏழை என்றால் Dirt poor என்று அழைக்கப்பட்டார். அடுத்து சிலேட்டு பதித்த தரை பனிக்காலத்தில் வழுக்கும் தன்மையுடையதாய் இருந்தது. அப்படி வழுக்காமல் இருப்பதற்கு தரையில் வைக்கோலை பரவி வைப்பார்கள். புதிதாக ஒரு விருந்தினர் வரும் வேளையில் இருக்கும் வைக்கோலின் மேலே புதிய வைக்கோலை பரவுவார்கள். இதனால்தான் 'to spread the new hey' என்ற பதம் தோன்றியது. இப்படியாக பரவும் வைக்கோல் நிறைந்து சிறிது காலத்தில் முன் கதவை திறக்கும் வேளைகளில் வெளியில் கொட்டுவது வழக்கம். இதை தவிர்க்கும் முகமாக வாசலில் ஒரு பலகை வைப்பார்கள். அதன் பெயர் தான் threshold. Thresh என்றால் தமிழில் "சூடு" எனப் பொருள்படும். எனவே சூட்டுதடை எனபொருள்பட 'threshold என வாசற்படியை இன்றும் குறிப்பிடுவார்கள்.

### தகவல் 6:

அக்கால வெள்ளையர்கள் வீடுகளில் அடுப்புக்கு மேல் ஒரு பெரிய கேத்தல் எப்போதும் தொங்கிய வண்ணமிருக்கும். ஒவ்வொரு நாளும் அடுப்பை பற்றவைத்து, அந்த கேத்தலை அடுப்பில் வைத்துவிட்டு தினமும் வெவ்வேறு உணவு வகைகளை போடுவார்கள் வேகுவதற்கு. பெரிய புராணக்காலத்திலும் அதற்குமுன்பும் குருத்துவாழை இலை விரித்து சாப்பிட்டவர்கள் நாங்கள். எனவே சற்று வியப்பாகத்தான் இருக்கும். அவர்கள் மாமிசம் கிடைக்காத காரணத்தினால் பெரும்பாலும் மரக்கறிகளை போட்டுத்தான் அவிப்பார்கள். இப்படி அவித்த Stew (சுப் அல்லது கூழ்) தான் அவர்கள் இரவு உணவாக இருக்கும். மிஞ்சியதை கேத்தலிலே இரவு குளிரில் இருக்க விட்டுவிடுவார்கள். மீண்டும் முதல் நாள் கூழ் பானையில் அடுத்தநாள் உணவு வகைகளை போட்டு அவிப்பார்கள். சில சந்தர்ப்பங்களிலே அந்த கேத்தலில் பல நாள் உணவுவகைகள் தங்கிவிடுவது வழக்கம். இதனால் தான் ஒரு சிறு ஆங்கில பாடல்

"peas porridge hot, peas porridge cold
peas porridge in the pot, nine days old என்ற பாட்டு வழக்கில் வந்தது.

### தகவல் 7:

சில நாட்களில் அவர்களுக்கு பன்றி இறைச்சி கிடைத்தால் அது பெரிய விஷேசமாக கணிக்கப்படும். விருந்தினர்கள் வந்தால் பன்றி வாரலை வீட்டில். (Bacon) பெருமையாக தொங்கப்போட்டு வைப்பார்கள். இது அவர்கள் ஐஸ்வரியத்திற்கு ஒரு அறிகுறி. அந்த Bacon இல் இருந்து சிறு துண்டை வெட்டி விருந்தாளிக்கு கொடுத்து எல்லாருமாக இருந்து சாப்பிட்டு மகிழ்வார்கள். எப்படி இருக்கிறது அக்கால ஆங்கிலேயன் விருந்தோம்பல்.

### தகவல் 8:

அக்காலத்து செல்வந்தராயுள்ள ஆங்கிலேயர் தேட்டுகள் வைத்திருந்தார்கள். இவை ஈயக் கலப்புடைய Ceramic தட்டுகள். அதிக அமிலத்தன்மையுடைய உணவுகள் இந்த ஈயத்தை உணவுடன் கசியச் செய்தது. ஈயம் நச்சுத்தன்மையுடைய ஒரு உலோகமாதலால் மரணங்கள் கூட சம்பவித்தது. இத்தகைய ஈயக்கசிவு பெருமளவு தக்காளிப்பழத்தில் உள்ள அமிலத்தன்மையால் ஏற்பட்டமையால் கிட்டத்தட்ட 400 வருடங்களுக்கு ஆங்கிலேயர் தக்காளியை நஞ்சு என்று ஒதுக்கி வைத்த தகவல் புதுமையான ஒன்று அல்லவா?

### தகவல் 9:

எமது நாட்டவரைப் பார்த்து சாதி வெறி பிடித்தவர்கள் என்று ஆங்கிலேயர் கூறினாலும் அக்காலத்தில் சமுதாய தரத்தின்படி தான் பான் கூட பகிரப்பட்டது. வேலை செய்பவர்கள் (சூத்திரர்களுக்கு) பானின் கருகிய அடிப்பக்கம் கொடுக்கப்பட்டது. வேலை வாங்கும் குடும்பத்தினர் நடுப்பகுதியை உண்டனர். முருகளான மேல் பகுதியை விருந்தினர்க்கு கொடுத்தனர். அவர்களுக்கு நல்ல விருந்தோம்பல் பண்பு இருந்திருக்க வேண்டும்.

### தகவல் 10:

அக்காலத்தில் ஆங்கிலேயர் ஈயத்தினால் செய்த பாத்திரங்களில் மதுபானத்தை அருந்தினார்கள். இந்த மதுவும் ஈயமும் கலப்பதால் ஏற்படும் விளைவுகளால் குடிப்பவர்கள் சில தினங்களுக்கு சுய நினைவின்றி இருப்பார்கள். இவர்கள் இறந்துவிட்டார்கள் என்று எண்ணினாலும் அவர்கள் மீண்டும் விழிப்பார்களா என்று பார்ப்பதற்காக சமையலறை மேசையில் நினைவிழந்தவரை கிடத்திவிட்டு வீட்டாரும் இனத்தாரும் அங்கு விழித்திருந்து (Wake up) உண்டு குடித்துக்கொண்டிருப்பார்கள். இதனால் ஏற்பட்ட பாரம்பரியம் தான் மரணவீடுகளில் 'Holding a wake' எனும் விழித்திருக்கும் பழக்கமாகும்.

### தகவல் 11:

இது வினோதமானதும் வித்தியாசமானதுமான தகவல். இங்கிலாந்தில் சனத்தொகை பெருகிய காரணத்தால் புதைப்பதற்கு இடம்காணாது போய்விட்டது. எனவே மிகப் பழைய கிடங்குகள் மீண்டும் கிண்டப்பட்டு சவப்பெட்டிகளில் எஞ்சி இருக்கும் எலும்புகள் Bone House எனப்படும் எலும்பு வீடுகளில் வைக்கப்பட்டு புதைகுழி மீண்டும் பாவிக்கப்பட்டது. இப்படி சவப்பெட்டிகளை எடுத்து திறந்தவேளையில் இருப்பத்தைந்தில் ஒரு சவப்பெட்டியில் உள்ளே விறாண்டப்பட்டு இருக்கும் அடையாளங்கள் காணப்பட்டது. இதனால் சிலர் இறக்காமல் புதைத்தது தெரியவந்தது. எனவே சவப்பெட்டியில் ஒரு கயிறை வைத்து குழிக்கு மேல் ஒரு மணியை கட்டி வைத்தார்கள். விழித்து எழுந்தால் மணியை அடிப்பதற்காக. இரவு முழுவதும் ஒருவர் புதைத்தவருக்கு அண்மையில் விழித்திருப்பார். மணி அடிக்கிறதா என்று பார்க்க. இதனால் தான் இரவு விழித்து வேலை செய்வதை 'Grove yond shift' என அழைக்கும் வழக்கு ஏற்பட்டது.

இப்போ நீங்கள் பல ஆங்கிலேயர் தகவல்கள் அறிந்து அறிவாளியாகிவிட்டீர்கள். அதற்கு எனது வாழ்த்துக்கள்.

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

# மின்சாரச் செலவும்...

17ம் பக்கத் தொடர்ச்சி...

தரவல்லவை. பொருத்தமான இடங்களில் வீட்டிற்கு உள்ளும் இவற்றைப் பயன் படுத்தலாம். குறிப்பாக நிலக்கீழ் அறைக்குச் செல்லும் படியில் உள்ள விளக்குகள் பல வீடுகளில் நீண்ட நேரம் எரிவதை அவதானிக்க முடியும். படியை அண்மிக்கும் சந்தர்ப்பத்தில் தானே on ஆகி சில நிமிடத்தில் தானே நிறுத்தப்படுமானால் அது காலப் போக்கில் குறிப்பிட்ட சேமிப்பிற்கு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இரவு நேரத்தில் தானே on ஆகி சூரிய ஒளியைக் கண்டதும் நிறுத்தப்படும் விளக்குகளும் பாவனையில் உள்ளன. தானே இயங்கி, தானாக நிறுத்தப்படும் தன்மை வாய்ந்தவை. ஆனாலும் இரவு முழுவதும் தொடர்ந்து எரிவது அவசியமா என்பதையும் சிந்திக்க வேண்டும். சில பூந்தோட்ட விளக்குகள் இரவில் தானே on ஆகிய போதிலும் குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் நிறுத்தப்படக்கூடிய கட்டுப்பாட்டைக் கொண்டவை. (1, 2, 3மணி என) இவற்றை உரிய முறையில் பாவித்தால் அதன் மூலம் பயன் பெறமுடியும்.

### Seasonal Leds

கிறிஸ்மஸ், புதுவருடம் போன்ற காலங்களில் வெளிப்புறத்திலும், உட்புறத்திலும் அலங்காரங்களுக்குப் பாவிக்கக் கூடிய Energy saver lights பாவனைக்கு வந்துள்ளன. சாதாரண விளக்குகளோடு ஒப்பிடுகையில் இவை 95% குறைந்தளவு மின்சாரத்தை நுகரக்கூடியவை என்பதோடு 100 மடங்கு காலம் நிலைக்கக் கூடியவை. இவை கடந்தவருட இறுதியில் (November & December) Mississauga, Streetville பகுதிகளில் Energy conservation bureauவினால் இலவசமாக மாற்றீடு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சில வீடுகளின் அமைப்பை உற்று நோக்கினால் மின் விளக்குகளை பாவிக்க வேண்டிய அவசியமே இல்லாத அளவு இயற்கையான வெளிச்சம் உள்ளவையாக இருக்கும். வீடுகள் அவ்வாறு அமைவது அவரவர் அதிஸ்டத்தைப் பொறுத்தது. மாறாக இருண்ட வீடுகளில் அதிகளவு நேரம் பாவிக்கப்படும் மின் விளக்குகளுக்கு, CLF, Blub,Timer, Tube light போன்றவற்றைப் பாவிப்பது காலப் போக்கில் அதிக பலனைத் தரவல்லது. புதிய தொழில் நுட்பத்தில் சிறிது தொகைப்பணம் முதலீடு செய்வது எவ்வளவு இலாபகரமானது என்பது எமது பழக்க வழக்கத்தில் தங்கியுள்ளது. சிலர் வீட்டில் விழிப்பாக இருக்கும் போது கூட இருட்டில் தான் இருப்பார்கள். சிலரது வீடுகளில் சிறியவர் தொடக்கம் முதியவர் வரை தேவையற்ற விளக்குகளை நிறுத்துவதில் மிகக் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். மாறாக வேறு சிலர் வீடுகளில் எப்போதும் ஏதோ கொண்டாட்டம் நடப்பது போல் ஒரே வெளிச்சமாக இருக்கும். சிலர் படுக்கைக்குச் செல்ல இரவு 1மணிக்கு மேலாகும். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் மேற் கூறப்பட்ட தொழில் நுட்பங்களைப் பாவிக்கும் போது ஏற்படக் கூடிய பலாபலன்களின் அளவுகள் எம்மவரின் பழக்க வழக்கத்திற்கு ஏற்றவாறு மாறுபடக் கூடியது.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■

National Driving Institute

Male & Female Experience Instructors
will Teach For G1, G2 Road Test

Early Appointment For G1, G2 Road Test

Please Call:

Mrs. Saththi 416-816-1500 / 905-653-3878

# கொண்டோ வாங்குவது எப்படி?

ஆங்கிலத்தில் AUDREY M LOEA அவர்கள் எழுதிய "BUYING A CONDO" என்னும் நூலியிருந்து முக்கிய விடயங்களை 'தாய்வீடு' வாசகர்களுக்கு தருகிறேன்.

## கொண்டோமெனியம் கொள்வனவு செய்யும் நபரோ அல்லது அபிவிருத்திசெய்பவரோ ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய என்ன நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

விற்கும், வாங்கும் ஒப்பந்தத்தில் இரு பகுதியினரும் ஒப்பமிட்டதன்பின் அந்தத் தொகுதியின் விலை உறையவிடப்படுகிறது அந்த ஒப்பந்தம் அபிவிருத்தி செய்யப்படுபவரால் முடிவிற்கு கொண்டு வரப்படலாம். அந்த ஒப்பந்தம் ஒரு பொருளாதார தன்மையை உள்ளடக்கியதாகவும் தேதி மற்றும் அபிவிருத்திசெய்பவர் அந்தக் தேதிக்குள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் கொண்ட மெனியம் யுனிற்றுகள் விற்க வேண்டியிராவிட்டால், அந்தக் கொண்டோ அபிவிருத்தியை நிறுத்திவிடக்கூடும். இந்தத் திட்டம் தொடருமா? எவ்வளவு காலத்தில் முடிவுறும் என்பதை தெரிந்து கொள்ள நீண்ட காலம் காத்திருக்க வேண்டியிருக்கும் நீதி மன்றம் இந்தக் கட்டிட அபிவிருத்தியினை நிறுத்தலாம்.

## நான் எப்போது என்னுடைய புதிய கொண்டோ மெனியம் பகுதியில் குடியேறுவது?

கொண்டே கோப்பரேஷன் உருவாகும் வரை கொண்டோ யாருக்கும் விற்கமுடியாது. பல கொண்டோ தொகுதிகளை வாங்கினால் தான் அவற்றின் உரிமைகளை அவற்றின் சொந்தக்காரருக்கு மாற்றமுடியும். இதை "Occupancy Closing" என்பார்கள், அதுவரை உள்ள காலத்தை "Interim Occupancy" என்பார்கள்.

நீங்கள் விரும்பும் குடியிருப்புத் திட்டத்தின் நிர்மான நிலையை அவதானியுங்கள், சொன்ன தேதியில் முடிவுறும் போல் தெரிகிறதா வாங்கும் விற்கும் ஒப்பந்தம் அபிவிருத்தியாளர்கள் ஒப்பந்தத்தை நீடிக்க அனுமாதிக்கின்றது. கட்டிடத் தொகுதிகள் முடிவுறும் தேதியைத் துரிதப்படுத்தவும் இந்த ஒப்பந்தம் இடம் அளிக்கின்றனது. Tarion முறையில் நிர்மாணிக்கப்பட்ட, வதிவிடக் கொன்டோ மெனியம் வாங்கும் ஒருவர் குறிப்பிட்ட தேதிக்குள் கொண்டோ நிர்மாணிக்கப்பட முடியா விட்டால் அல்லது அபிவிருத்தியாளர்கள் குடியிருப்புகளை குறிப்பிட்ட தேதிக்குள் கையளிக்க முடியாவிடின் கொண்டோ வாங்கியவர் ஒப்பந்தத்தை தன்னிச்சையாக முறிக்க முடியாது. ஏனெனில் கொண்டோ வாங்கியவர் கொண்டோவிற்கு குடிவந்ததும் ஒப்பந்த அடிப்படையில் வரமுடியாமல் தாமதமாக வர நேர்ந்தால் அதற்கு கொண்டோ நிர்மாணிப்பவர் பொறுப்பாயிருந்தால் ஒன்ராறியோ புது குடியிருப்பு உத்தரவாத சட்டத்தின் கீழ் 120 நாட்களின் மேல் தாமதமானால் அவர் 5,000டாலர் வரை கொண்டோ நிர்மாணிப்பவரிடம் நஷ்டஈடு கோரலாம்.

நீங்கள் ஒரு கொண்டோ வாங்குவதற்கு கொண்டோ அறிவிப்பாளர் அறிவித்தவுடன் வாங்கினால் 2 வருடம் வரை கொண்டோவைப் பெறுவதற்கு காத்திருக்க வேண்டும். மேலும் ஒப்பந்தத்தின் படி நிர்மாணவேலை முடிய தாமதமாகலாம், இதற்கு காரணம் நிர்மாண அபிவிருத்தியாளர் தனது புதிய கொண்டோக்களில் 60–70% குடியிருப்புகள்

**பாகம் - 3**



விற்றதின் பிறகே கொண்டோ நிர்மாண வேலையை நிர்மாணிப்பார் எனவே அது எவ்வளவு காலத்தில் விற்பனையாகின்றது என்பதை பொறுத்து நீங்கள் காத்திருக்கும் காலம் நீடிக்கும் பொதுவாவே கொண்டே மெனியத்திற்கு காத்திருக்கும் காலம் நீடிக்கும்.

விற்பனை ஆரம்பித்ததின் பிறகு கொண்டோக்கள் கட்ட ஆரம்பித்த காலத்தில் வாங்குவதாயின் கொண்டோ நிர்மாணிப்பவரால் உங்களுக்கு கொண்டோ கையளிக்கும் தேதியை நம்பகமாக தரக்கூடும், அல்லது கட்டி முடித்த அல்லது மீண்டும் விற்பனைக்கு வந்த கொண்டேமெனியத்தை வாங்க வேண்டும். இப்படிச் செய்வதால் கொண்டோ வாங்குபவர் பூர்ணமான கொண்டோவை பார்ப்பதுடன் வாங்குவதற்காக காத்திருக்க வேண்டிய அவசியமுமில்லை

## கொண்டோக்கள் விற்கும்போது அபிவிருத்தியாளர் கையாள வேண்டிய சட்டங்கள் எவை? உண்மை விளக்க அறிக்கை என்றால் என்ன? என்னுடைய கட்டுப்பணத்தற்கு என்னகும்?

அபிவிருத்தியாளர் ஒரு கொண்டோவை விற்பதிலும், அதைப் பதிவு செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றார். கொண்டோ மெனியம் சட்டம் கொண்டோ நிர்மான மற்றும் விற்பனை போன்ற விடயங்களை வரையறுக்கின்றது. ஒரு வாடிக்கையாளர் வாங்கும் கொண்டோவிற்குரிய பணம் அபிவிருத்தியாளரின் வழக்கறிஞரால் ஒரு trustல் இடப்பட்டு பாதுகாக்கப்படும். அதற்கு வட்டியும் கொடுக்கப்படும். வாடிக்கையாளருக்கு கொடுக்கப் படும் விளக்க அறிக்கையில் கொண்டோ பற்றிய சகல விபரமும், கொண்டோ பற்றிய சட்ட திட்டங்களும், அராங்கம் கொண்டோ உரிமையாளரிடம் எதிர் பார்க்கும் சகலதும் அடக்கிதாக இருக்கும்.

## கொண்டோமெனியம் கோப்புரேஷன் கொண்டோ பதிவு செய்த ஒருவருடத்தில் செய்ய வேண்டியவை.

- Performance Audits
- Resove Fund Studies
- Tumover Audits

இவற்றிற்கான செலவு பொதுச் செலவு இடப்பட்டுவிடும்.

வாங்குதல் விற்பனை ஒப்பந்தம் கைச்சாத்து ஆனவுடன் அபிவிருத்தியாளர் எவ்வித தாமதமுமின்றி அந்தத் திட்டத்தை ஒரு கொண்டோமெனியம் கோப்பரேஷன் பதிவு செய்ய வேண்டும் அத்துடன் அந்த தொகுதியை வாங்குபவர் பெயருக்கு மாற்றிக் கொடுக்க வேண்டும்.

அபிவிருத்தியாளர் அந்த திட்டத்திற்குரிய சரியான பணத்தை ஒதுக்க வேண்டும் அபிவிருத்தியாளர் சில வேளைகளில் கொண்டோ நிர்மாணத் தொகையை, குறைத்துக் காட்டுவதுண்டு இதற்கு காரணம் வாங்குபவர்களுக்கு கவர்ச்சி இருக்க வேண்டுமென்பதற்கே. வாங்குபவர் என்ற முறையில் பொது நிர்மாணச் செலவுகள் அதிகரித்துக் கொண்டே போகும் என்பதை கொண்டோவின் புதிய சொந்தக்காரர் உணர்ந்திருக்க வேண்டும்

## குடியிருப்புக் கட்டணம்

ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட தியதியிலிருந்து கொண்டோப் பதிவுப் பத்திரத்தில் ஒப்பம் இட்ட பிறகும் கட்டணங்கள் அதிகரிக்கமாட்டாது.




**S.K. பாலேஸ்**

- வீடு விற்பனை முகவர் -


பொதுச் செலவிற்கான மதிப்பீட்டுக் தொகை, அந்தச் சொத்தின் தனிவரி மதிப்பீட்டுத் தொகை, ஒப்பந்த முடிவு திகதியில் மிகுதியாக இருக்கும் கட்டுத் தொகை, அதற்குரிய வட்டியுடன் கட்டப்பட வேண்டும். இத்தொகையை Unpaid Balance due on Closing என்று அழைப்பர்.

வாங்கும் விற்கும் ஒப்பந்தத்திற்குப் பிறகு அபிவிருத்தியாளர் மேலதிக பத்திரங்களை கொண்டோ வாங்குபவரிடம் கொடுத்தால், அவற்றை அவர் தனது வழக்கறிஞரிடம் கலந்து ஆலோசித்து அதில் முக்கியமான மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தால் அவர் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்துச் செய்யலாம்.

நூறு டாலர் பணம் கட்டி ஒரு Status Certificateஐ ஒரு கொண்டோ வாங்குபவர் பெற வேண்டும். இந்த சான்றிதழுடன் கொண்டோக்குரிய சகல பத்திரங்களையும் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக கட்டணங்களாக:

- நிலம் மாற்றுவரி (Land Transfer Tax)
- மேலதிக Landscaping charges (IF ANY)
- அபிவிருத்திக் கட்டணம், அழுக்கு அகற்றும் கட்டணம் (Development Charges and Sewer Impost charges)
- Utility Hook U85

என்பன செலுத்தவேண்டியிருக்கும்.

skbales@thaiveedu.com

■ ■ ■


**House for Sale**

Pharmacy & Lawrence

LIST $329,900

SOLD $336,000




**Century 21**

Affiliate Realty Inc.

S.K Bales

CRA, CAR, MVA, FRI, CRES.

Tel- 905-201-0929, Cell- 416-801-3219.



**Canadian Home Appraisals Inc.**

Residential & Commercial Appraisals

CHAI CANADIAN HOME APPRAISALS INC.

S.K.Bales

CRA, CAR, MVA, FRI, CRES

Managing Director


Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

**MY PROFESSIONAL DESIGNATIONS:**

- CRA (Canadian Residential Appraiser)
  Designation with Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada
- Car: ( Certified Appraisal Reviewer)
  Designation with Canadian National Association of Real Estate Appraisers.
- MVA( Market Value Appraiser-Residential
  Designation with The Canadian Real Estate Association
- FRI (Fellow of the Real Estate Institute)
  Designation with Real Estate Institute of Canada
- CRES ( Certified Real Estate Specialist)
  Designation with Real Estate Institute of Canada
- RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER
  Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21

Affiliate Realty Inc.



S.K.Bales

CRA, CAR, MVA, FRI, CRES
Real Estate Broker
Residential & Commercial

TEL: 416-290-1200
CELL: 416-801-3219

Commercial Member


# வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...


## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**






**Neilson/ Mclevin**




**$244,900**
Town house, Bed rooms 3, Washrooms 2
Close To Schools, Shopping, Health Care, Recreation Centres,

**Lawrence/ Brimley**



**$255,000**
Detached Bungalow, Bed rooms 3+2 , Washrooms 2
Professionally Renovated Basement With Separate Entrance. Close To Schools And

**14th/9th Line**



**$277,000**
Detached 1½ Story Bed rooms 3, Washrooms 2
Lot Backs Open Space. Shopping, 407, Transportation, Hospital All Nearby.

**Medowvale /Sheppard**




**$289, 900**
Townhouse, Bed rooms 3, Washrooms 2
FWalk Out From Family Rm, Open Concept Design 14X13 Feet Deck Direct Access To The Garage

**Mccowan/14Thavenue**



**$310,800**
Link 2 Story, Bedrooms 3, Washrooms 2,
Fabulous Family Home On Beautiful Lot On Quiet Crescent.***

**Brimley/Steeles**




**$322,000**
Linmk 2 Story, Bedrooms 3 Wasroom 3,
Walk To Famous Schools, 3 Min. Walk To Steeles, One Bus To Bus Terminals,

**9th Line & Hoover Park Dr**



**$345, 000**
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3,
Approx 1900 Square Feet, Close To Public School,Bus Station & Shopping Centre

**Denison/Featherstone**



**$369,000**
Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3,
New Hardwood Floor Throughout Main Floor. New Roof And New Windows

**Hwy 7/9th Line**




**$369,500**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3
Car Garage. Move-In Cond. Lots Of Upgrades,Bay Window

**9th Line & 16th Ave**



**$369,900**
Detached 2 story , Bed rooms 4 Washrooms 3,
Double Door Entry And High Ceiling. Close To 2000 Sq. Ft Many Upgrades

**Markham/Steeles**



**$399,000**
Detached 2 Story, Bedrooms 5, Washrooms 4,
Rare 5 Bedroom Home In A Quiet Neighborhood

**Finch And Staines**



**$399,900**
Detached 2 Storys, Bed rooms 4, Washrooms 3
Steps To School And Ttc.Fully Fenced Backyard. Double Car Garage

**W,Markham/S.14th**



**$399,900**
Link 2 Story, Bedrooms 4, Washrooms 3,
Fully Fenced Yard*Walk To Ttc/Schools/Shops/Restaurant/Church/Comm. Ctr/Park

**Middlefield/Highglen**



**$399,900**
Link 2 Story, Bedrooms 4 +1 Washrooms4
Finished Bsmt With Liv Rm, Bdrm And 4Pc Bath,

**Mccowan/Steeles**




**$448,888**
Link 2 Story, Bedrooms 4, Washroom 3
New Laminated Floor,New Kitchen & Kitchen Cabinets(Nov06),New Garage

**Mccowan & Elson**



**$454,900**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 4,
Finished Basement With Kitchen & Washroom Hardwood Floors Throughout

**Ninth Line And Steeles**



**$475,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3,
Well-Maintained & Mint Condition. 2400Sq.Ft. A Quiet Neighbourhood!

**Finch/Morningside**




**$475,900**
Detached 2 Story, Bedrooms 9+2 Washrooms 4+2
With Separate Entrance And W/O Basement. Ttc At Door Step. Close To School And

**14th Ave / 9th Line**




**$479,888**
Detached 2 Story Bed rooms 4 ,Was rooms 3 Fully Fenced Yard With 2 Gates
Main Floor Laundry With Access To Garage .

**Kennedy/Highglen**




**$799,000**
Detached 2 Story Bed rooms 4+4, Washrooms 5,
Professionally Finished Basement, Approx 4000 Sf Hardwood Floors

**Rossland/Salem**




**$299,900**
Detached 2 Story Bed rooms 3, Washrooms 3,
Walkout From Kitchen To Private Back Garden. Direct Access To Garage

**Sales of Businessl**




**$489,900**
Sale Of Business With Property Gas Stations.
Fall Service, Coin Car Wash And Large Convinience Store-

**Sales of Business**



**$219,900**
Sale Of Business Without Property Gas Stations.
Gas Station Plus Convenience Store Business In Gta


RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7


**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# கனடாவில் புதியவர்களுக்கு உதவ...

# (Newcomers in Canada)

**ஜீவா திசைராஜா**



### கனடிய வாழ்க்கை முறை குடும்ப வாழ்வும் குடும்ப சட்டமும்:

கனடாவில் உள்ள அநேகமான மக்கள் ஓரிரண்டு பிள்ளைகள் இருந்த போதும் ஓர் குடும்பத்தை கொண்டு நடத்துவதற்கு இருவரது வருமானம் தேவை என்பதை அறிந்துள்ளனர். பெற்றோரும் பிள்ளைகளும் குடும்ப வாழ்வின் சட்ட திட்டங்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். இங்கு கணவன், மனைவி, பிள்ளைகள் எவரும் எவரையும் உடலியல் ரீதியாக தாக்குவது தண்டனைக்குரிய குற்ற மாகும்.

பிள்ளைகள் கனடாவினுள் வரும்போது கனடிய வாழ்க்கை முறையினை பாடசாலை, தொலைக்காட்சி, திரைப்படங்கள் மூலமாக மிக விரைவில் கற்றுக்கொள்வார்கள். ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியையும் மிக விரைவில் கற்றுக் கொள்வார்கள்.

பெற்றோரும் கனடாவில் குடியேறியவுடன் வீடு மற்றும் வேலை தேடுவதில் ஈடுபடுவதுடன் பிள்ளைகளை விட மிக மெதுவாகவே ஆங்கிலத்தையோ அல்லது பிரெஞ்சு மொழியையோ கற்றுக் கொள்வார்கள்.

பெற்றோர் அதிக அனுபவம் உடையவர்களாதலால் கனடிய வாழ்க்கையினை பிள்ளைகளை விட வேறோர் கண்ணோட்டத்துடனேயே நோக்குவர். பிள்ளைகள் வளரும் போது இந்த வேறுபாடு இன்னும் அதிகரிக்கும். இதற்கு பெற்றோரின் கனடிய அனுபவங்கள் பிள்ளைகளை விட வேறானதாக இருப்பதே காரணமாகும். இந்த வேறுபாடுகள் குடும்பத்தின் எல்லா அங்கத்தவர்களின் நடத்தையையும் பாதிப்பதுடன், பெற்றோருக்கும் அவர்களது பிள்ளைகட்கும் இடையில் மன அழுத்தத்தையும் ஏற்படுத்தும்.

ஆசிரியர்கள், வைத்தியர், பொது சுகாதார வேலையாட்கள், சமூக ஊழியர், குடியேற்ற



ஊழியர்கள், ஏற்கனவே குடியேறியுள்ள நண்பர்கள், உறவினர்கள் ஆகியோர் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகட்கும் உங்கள் அனுபவங்களை விளங்கிக் கொள்ளவும் உங்கள் எதிர்காலத்தைப் பற்றிய தெரிவுகளை மேற் கொள்ளவும் உதவுவார்கள். கனடாவில் குற்றம் புரியும் இளைஞர்கள் தமது செயல்கட்கு பொறுப்பேற்க வேண்டியவர்களாக இருந்த போதிலும் குற்றம் புரிந்த வளர்ந்தோருக்குரிய தண்டனைகள் வழங்கப்படுவதில்லை. இளைஞர்கட்கான சட்டமானது Youth Criminal Justice Act எனப்படும்.

எல்லா கனடியர்களும் பொது இடங்களில் புதியவர்களை நட்புடன் வரவேற்காத போதிலும் சிலர் அளவுக்கு அதிகமாக நட்புடன் இருப்பார்கள்.

### முக்கியமான சமூக பழக்க வழக்கங்கள்

சமூக நடைமுறைகள் (சட்டங்கள் அல்ல) கனடாவில் அநேகமான நடத்தைகளை தீர்மானிக்கின்றது. சில பாரம்பரியங்கள் நன்கு தாபிக்கப்பட்டு மரியாதையுடன் ஆனால் உறுதியாக அமுல்படுத்தப்படுகின்றது. உதாரண மாக சிலவற்றைப் பார்ப்போம்.

### நிரையில் நிற்றல்:

எங்கு சென்றாலும் முதலில் வந்தவர் முதலில் சேவைகளைப் பெறுமுகமாக (First Come – First Served) ஒழுங்கு வரிசையில் நிற்பார். இடையில் புகுந்து செல்லல், தள்ளிக் கொண்டு, நெரித்துக் கொண்டு செல்லுதல் போன்றன விரும்பத்தகாததாக உள்ளது. உதாரணமாக: பஸ்ஸிற்காக காத்திருக்கும் போது கூட எமது நாட்டைப் போல் நிரையில் நிற்பதற்காக கம்பி அடித்து வைக்கா விட்டாலும் ஒழுங்காகவே நிற்கும் முறை காணப்படுகின்றது.

### தனிப்பட்ட வீடுகளில் புகை பிடித்தல்:

அநேகமான கனடியர்கள் புகைபிடிப்பதில்லை. யாருடைய வீட்டிற்காவது சென்றால் புகைபிடிப்பதற்கு அனுமதி கேட்க வேண்டும். அத்துடன் அவர்கள் வீட்டில் புகைபிடிக்காவிட்டால் வீட்டிற்கு வெளியே சென்று புகை பிடிக்கும்படி கூறுவார்கள்.

### உரிய நேரத்திற்குச் செல்லுதல்:

பாடசாலைக்கோ, வேலைத்தலத்திற்கோ அல்லது கூட்டத்திற்கு செல்வதாயினும் நீங்கள் சரியான நேரத்திற்கு செல்ல வேண்டும். ஒருவரை குறிப்பிட்ட நேரத்தில் தொழில் தொடர்பாக பேசுவதற்காக அழைத்தால் 10 அல்லது 15 நிமிடங்கட்கு மேல் காத்திருக்க மாட்டார்கள். சமூக நிகழ்வுகளிற்கு ஆரம்பிக்கும் நேரத்திற்கு முன்னரான 30 நிமிடங்களுள் நீங்கள் அங்கு செல்ல வேண்டுமென எதிர்பார்ப்பார்கள்.

### சூழலை மதித்தல்:

கனடியர்கள் இயற்கைச் சூழலை மதிப்பதுடன் கண்ட இடங்களிலும் குப்பை போடுவதை தவிர்க்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள் கழிவுக் காகிதங்களையோ, குப்பைகளையோ வீதியில் எறிதல் அல்லது காரிலிருந்து வெளியே எறிதல் தவிர்க்கப்படல் வேண்டும். நீங்கள் சரியான குப்பைத் தொட்டியைக் கண்டறியும் வரை உங்கள் குப்பைகளை நீங்களே வைத்திருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பார்கள்.

### பேரம் பேசுதல்:

விலைகளைக் குறைப்பதற்காக பேரம் பேசுதல் கனடாவில் பொதுவானதொன்றல்ல. ஆனால் இதற்கு விதி விலக்குகளும் உண்டு. உதாரணமாக, ஓர் வீடு அல்லது கார் அல்லது விலையுயர்ந்த தளபாடம் போன்றவற்றை வாங்கும் போது பேரம் பேசுவார்கள். தனிப்பட்ட விதமாக பொருட்களை விற்போரும் பேரம் பேசுவார்கள்.

28ம் பக்கம் பார்க்க...



# முழு நேர வீடு விற்பனை முகவர்



5215 Finch Ave East
Business and the Unit



1410 Bayly St
Business For Sale



Middlefield & Finch
2 BR + 1 WR



16th & 9th Line
4 BR + 3 WR



Staines & Finch
3 BR + 3 WR



Markham & Bur Oak
4 BR + 3 WR

பல வீடுகள் விற்பனைக்கு - அழையுங்கள் வாரத்தில் ஏழு நாட்களும்

**NO DOWN PAYMENT 416.786.2463**

**WRITTEN GUARANTEED BANK RATES THROUGH YOUR MORTGAGE BROKER**



Finch & Tapcott
4 BR + 2 WR
Freehold Townhouse



Markham & Sheppard
3 BR + 2 WR
Freehold Townhouse

**Punch Sockalingam**
Broker
Century 21
Affiliate Realty Inc. Brokerage *
Tel : 416-290-1200



**Help! Payless Computers 416-564-2008**

Services and Repair - Same Day Service - We Come To You

**Menan Rasanayagam** 78 Boulderbrook Dr., Toronto, ON. M1X 2C3



Nada.G.Nadarajah B.V.Sc
Sales Representative

# Buying or Selling Homes

Selling Commission , As Low As 1%

**Call Nada**
Cell: 416 – 616 – 8751
Bus: 416 – 293 – 5093

HomeLife Higher Standards
HomeLife Landmark Realty Inc. Brokerage

Platinum Award Winner
Ontario Emerald Club Member



**Middlefield/Steeles**
2-Storey
3+2 Bedrooms - 3 Washrooms
Excellent Location



**Westney/Sullivan**
Detached - 2 Storey
3 Bedrooms - 2 Washrooms
Finished Basement



**Warden/Finch**
Condo 2-Storey Townhouse
3+3 Bedrooms - 3 Washrooms
Finished Bsmt, W/O



**Dixie/Finch**
Detached 2-Storey
3 Bedrooms - 3 Washrooms
Part. Finished Basement



**Kennedy/Eglinton**
Detached Bungalow
3+4 Bedrooms - 2 Washrooms
Bsmt. Apartment w/ Sep. Entrance




**Pharmacy/McNicoll**
Linked - 2 Storey
3 Bedrooms - 2 Washrooms
Finished Basement



**Rosebank/Finch**
Detached 2-Storey
4 Bedrooms - 3 Washrooms
Approx. 1900 Sq.ft



**9th Line/16th**
Detached 2-Storey
3 Bedroom - 3 Washrooms
Approx. 1970 Sq. ft



நலம் நாடுவதும் அதுவே
உங்கள் மாற்றத்தின் மாற்றத்திற்கு என்னை அழையுங்கள்
$78,500
Neilson/Sheppard
$94,900
Eglinton /Markham
$98,900
Eglinton /Kennedy
$99,900
Eglinton /Markham
$108,000
Midland/Eglinton
$109,000
Seppard/Markham
$117,000
Kennedy/401
$130,000
Neilson/Sheppard
$199,900
Neilson/Sheppard
$219,500
Neilson/Sheppard
$259,900
Neilson/McLevin
$269,900
Sheppard/Morningside
$279,900
Sheppard/Markham
$289,000
Finch/Markham
$289,000
Victoria Park/Lawrence
$369,000
Markham/Steeles
$373,000
S of Hwy7/E of 9th
$374,800
Middlefield/Dennison
$429,000
9th Line/16th Ave.
24 Hrs 416 856 6900
RE/MAX
Tel: 905 470-9800
Fax: 905 470-7770
www.realtronhomes.com
Realtron Realty Inc., Brokerage
Independently owned and operated
7800 woodbine Ave. PH
Markham ON L3R 2N7
Kathir S Kathirgamanathan P. Eng.
www.kathirsubramaniam.com
Email: kathirhomes@gmail.com
Call me for a change
Sales Representative

## அழகிய பூஞ்செடிகள்

# மணிவாழை

## (Canna)

### வீட்டுத் தோட்டம் - 16



செல்லையா சந்திரசேகரி

### அறிமுகம் :

அழகிய பூஞ்செடிகள் இயற்கையின் எழில் நிறைந்த காட்சிகளுக்கு வனப்பூட்டுபவை. இவற்றின் பசுமை நமது கண்களுக்கும் மன துக்கும் இதமளிக்கின்றது. எமது தோட்டத்தை அழகு படுத்தும் வகையில் இன்றைய இதழில், மணிவாழை என்ற பிரமிப்பூட்டும் செடியை அறிமுகப்படுத்துகின்றேன். கன்னா (Canna) எனும் பேரினம் ஏறக்குறைய 20 சிற்றினங்களைக் கொண்டுள்ளது. இது, தனிக்குடும்பம் கன்னாசியேயைச் (Family Cannaceae) சேர்ந்தது. இச்செடியானது வெப்பமண்டலத்துக் குரியதாக இருந்தபோதிலும் பூக்களின் அதி கவர்ச்சி காரணமாக அநேக உலக நாடுகளிலும் வீட்டுத்தோட்டங்களில் வெப்பகாலங் களில் வளர்க்கப்படுகின்றன. முதலான மணி வாழை (Canna indica) எனப்படுவது இந்தியாவிலிருந்து கிழக்குத் தேசத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் ஐரோப்பாவிற்கு பரவியிருக்கின்றது. இப்போது இந்தியா. இலங்கை, மலேசியா, ஆபிரிக்கா இன்னும் ஏனைய நாடு களிலும் வளர்க்கப்படுகின்றன.



### செடியை எப்படி வளர்ப்பது:

இச்செடி தண்டுக்கிழங்கின் முளைகளிலிருந்து வளர்ந்து, நீண்ட காலம் வருடந்தோறும் நிலைத்து வளரக்கூடியது. இதனைக் கரையோரமாக இயற்கைப்பசளை கூடிய மண் தரையும் அளவான நீர், முழுமையான சூரிய ஒளியும் கிடைக்கக்கூடிய இடத்தில் வளர்க்கலாம். தண்டுக்கிழங்குகள் கூடுதலான மாச்சத்துக்களைச் சேமித்து வைக்கும். வளர்ச்சிக்கு மாச்சத்து பயன்படும். உறைபனியின் ஆபத்து இல்லாதவேளை, இளவேனிர்க் காலத்தில் கிழங்குகளைப் பதிக்கலாம். ஒன்று அல்லது இரண்டு வளரும் முளைகள் இருக்கும் படி வேர்களைப் பிரித்து 2-3 அங் ஆழத்தில் 2-3 அடி இடைவெளி தூரத்தில் நடலாம். நடும்போது கூடுதலான இலைப்பசளையும் இயற்கைப்பசளையும் கலந்து போட வேண்டும். நீர் வளர்வதற்கு அவசியம். செழிப்பாக வளரும்போது, செடியின் இலைகள் அகலமாகவும் கடும்பச்சைநிறமாகவும் தட்டையான அமைப்பாக தண்டிலிருந்து ஒன்றுவிட்ட தொன்றாகவும் காணப்படும். வளரும் செடிகளுக்கு மாதம்தோறும் போதியளவு நைதரசன் பசளை உபயோகிக்க வெண்டும். இலைகள் வேறுபட்ட நிறங்களிலும் அல்லது பலநிறப்பட்ட நிறங்களையுடையதாகவும் சில இனங்களில் காணப்படும். சாடிகளிலும் மேற்குறித்த விதி களின்படி செடிகளை உண்டாக்கி வீட்டுக்குள்



வைத்து அழகு பார்க்கலாம். வித்துக்கள் மூலமும் செடியை விருத்தி செய்யலாம்.

### பூத்துக் குலுங்கும் வண்ண மலர்கள்:

உள்ளத்திற்கு உற்சாகம் ஊட்டுபவை வண்ணமலர்களே. பூக்கள் இனத்தைப் பொறுத்து வேறுபட்ட நிறங்களில் காணப்படும். சிவப்பு, செம்மஞ்சள், மஞ்சள் நிறங்களும் இதைவிடக் கூட்டுநிறங்களும் பொதுவானவை. பூக்கள், மூன்று புல்லிகளையும், மூன்று அல்லிகளையும் உடையவையாக ஒரு தானியக்கதிர் போன்றதான பூந்துணரொன்றில் அடுக்கப்பட்டிருக்கும். இவை சிறியவையாகவும் கேசரங்களுக்கு மறைவாக இருப்பதாலும் கண்களுக்குப் புலப்படுவதில்லை. அல்லிகளாகத் தென்படுவது திரிபடைந்துள்ள கேசரங்களாகும். மூன்று அறைகளுள்ள சூலகம் ஒடுக்கமான சூலகத் தண்டைக் கொண்டிருக்கும். மகரந்தச் சேர்க்கைக்கு ஏற்றவகையில் நிறமானது எடுப்பாக இருக்கின்றது. அதனால் தேன், மகரந்தம் எடுப்பதற்காக வண்டு, வெளவால், ரீங்காரம் செய்யும் சிறிய பறவைகள் போன்றவை நாடிவருகின்றன.

### நோயின் தாக்கம் :

பெருமளவில் நோயின் தாக்கம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இருந்தபோதிலும் ஒருவித பங்கசுவான 'கன்னாதுாவல்' எனும் நோய் தாக்கச் சந்தர்ப்பம் உண்டு. செடியின் இலைகளில் செம்மஞ்சள் நிறமானபுள்ளிகள் காணப்படும். இன்னும் சில இலேசான வைரஸ் தாக்கத்தினாலும் இலைகள் பாதிப்படையலாம். பூக்கள் வாடுகின்ற நேரத்தில் அவற்றை நீக்கிவிடவும். நத்தை வகைகள் குருத்திலைகளை வெட்டும், இலைகளில் ஓட்டைகளை ஏற்படுத்தும். சிவப்புநிற சிலந்திப்பேன்களும் சவாலாகத் தாக்குகின்றன.

### கிழங்குகளைப் பாதுகாத்தல்:

இலையுதிர் காலத்தில் செடியானது மடியும் போது கிழங்குகளை வேறாக்கி, துப்பரவு செய்து இருட்டறையில் பாதுகாப்பாக சேமித்து வைக்கலாம். குளிரில்லாத இடங்களில் பயிரிடும்போது கிழங்குகள் வெளியெடுக்கத் தேவையில்லை. இருந்தும், குளிர் நாட்களைச் சமாளிப்பதற்கு செடியைச் சுற்றி மரத்தூவிகள் வருடாவருடம் போடுவது பாதுகாப்பாக இருக்கும்.

### பயன்கள்:

கிழங்குகள் கூடுதலான மாச்சத்தைக் கொண்டவை. விவசாயத்தில் பயன்படுபவை. மனிதன், மேலாக வீட்டுமிருகங்களுக்கு உணவாகவும் பயன்படுபவை. தண்டு, இலைகள் உணவாகின்றன. இளம் குருத்துக்கள் சமையலில் உபயோகிக்கப்படும். இலைகளிலிருந்து ஒருவித நார் எடுக்கப்படுகின்றது. இது கடதாசி செய்வதற்குப் பயன்படும். வித்திலிருந்து ஊதாநிற மை பெறப்படும். இலைகள் எரிக்கும்போது புகை ஒரு பூச்சிக் கொல்லியாக இருக்கும். தாய்லாந்து தேசத் தில் தந்தையர் தின அன்பளிப்பாக மணி வாழைப்பூவை வழங்குவர். பெண்கள் அலங்கார மணிகளாக வித்துக்களைக் கோர்த்து அணிவார்கள்.

sekari.s@thaiveedu.com

■ ■ ■

Family Palmae:

## கமுகு மரம்

**(Botanical Name : Areca catechu - Eng.Name : Areca Palm)**



கமுகு மரம், பாமே (Family Palmae) குடும்பத்தைச் சேர்ந்தது. இது ஆசியாவின் வெப்ப மண்டலங்களாகிய இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, மலேசியா. வியற்னாம், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் வித்துக்காக பெருமளவில் வளர்க்கப்படுகின்றன. இதன் வளர்ச்சிக்கு போதிய நீர் அவசியம். இதன் தண்டு வைரமாகவும் மெல்லீதாகவும் நுனியில் தொகுதியான நீளமான இலைகளைக் கொண்டும் காணப்படும். இது ஏறக்குறைய 40-50 அடி உயரமாக வளரும்.

இதனைச் சிலர் வீடுகளிலும் அலங்கார மரமாக வளர்க்கின்றனர். பாக்கு மரத்தின் வித்தினை வெற்றிலை சுண்ணாம்புடன் சேர்த்து மெல்லுவதைத் தாம்பூலம் தரித்தல் என்று சொல்வார்கள். மரத்தின் பிசின், வித்து ஆகியவை மருந்தாகவும் பயன்படுகின்றன. முற்றாத பாக்கை மென்று சிறிது நேரம் வாயில் அடக்கி வைத்து, துப்பி விட்டால் வாய் நாற்றம், வாய்ப்புண் போன்றவை குணமடையும். முற்றாத பாக்கைச் சிறிது ஜாதிக்காய், கராம்பு போன்றவற்றோடு சேர்த்து மென்றி விழுங்கினால் மலச்சிக்கல் நீங்கும், ஜீரணம் ஒழுங்காகவிருக்கும். பழங்குடிமக்கள், பழுத்த இலைகளைச் சேர்த்துக் கட்டி வீடுகளில் விளக்குமாறுகளாக (brooms) உபயோகிப்பார்கள். மரத்தின் சிலாகைகள் பலகைபோன்று பாவிக்கப்படும். முதிர்ந்த பாக்கின் வெளித்தோலில் காணப்படும் தும்புநார்கள் கயிறு திரிப்பதற்கு பயன்படுத்தப்படும்.

# வீடு வாங்க விற்க...



**Kuga Raveendrarajah**
Broker
Direct: **416-843-8585**

**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: **416-625-2870**

**$514.900**



**Keele & Mcnaughton**
3+1 Bedrooms 4 Washroom
Finished Basement W/O






**$325.000**

**McCowan / Denision**
3 Bedrooms 2 Washroom
Finished Basement w/o

"சேமிப்பின்
அடையாளம்
அழகானதோர் வீடு"



**$340.000**

**McCowan / Denision**
4+2 Bedrooms 4 Washroom
Finished Basement w/o

வீடு வாங்க விற்க அல்லது அது சம்பந்தமான விபரங்களுக்கும் குறைந்த வட்டி விகிதத்தில் மோட்கேஜ் செய்யவும் நட்புடன் அழையுங்கள்

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.,** Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
**Bus: 416-298-3200**

*Independently Owned and Operated, Realtor



# LIFE INSURANCE | CRITICAL ILLNESS INSURANCE
# NON MEDICAL INSURANCE | RESP | RRSP



- **ஆயுட்காப்புறுதி**
  10, 15 அல்லது 20 வருடங்களில் செலுத்தி முடிக்கலாம்
- **வயோதிபர்களுக்கான காப்புறுதி**
  மருத்துவ பரிசோதனை எதுவும் இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
  காப்புறுதித் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கட்டிய பணம் முழுவதும் திரும்பப் பெறலாம்.
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்**
  20% அரச மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15% சலுகையும் வழங்கப்படும்.
- **ஈட்டுக்கடன் காப்புறுதி**
  Mortgage Insurance

**வசந்த் விநாயகமூர்த்தி**
காப்புறுதி முகவர்
**647-885-3012**



LiLand INSURANCE INC.
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Assumption Life

**www.vvinsurence.ca**
**www.kaappuruthy.com**

759 Warden Ave. Toronto, ON. M1L 4B5 Tel : 416-759-5453 ext. 362

Apex Creations - 416-297-0707

# பத்து நாட்கள்



அ.முத்துலிங்கம்
muththu@thaiveedu.com

இஸ்லாமபாத் நகரம் எட்டுப் பிரிவுகளாக அமைக்கப்பட்டது. அதில் எஃப் பகுதியிலும் வீடு பிடிப்பது மிகக் கஷ்டம். அரசாங்க உத்தியோகத்தர்களும், ராணுவ அதிகாரிகளும், அரசியல் செல்வாக்குள்ளவர்களும் அங்கே வீடு கட்டி வாழ்ந்தார்கள். எப்போதாவது அந்தப் பகுதியில் வீடு வாடகைக்கு வரும். யாராவது பெரிய அரசாங்க அதிகாரியை பிடித்து ஆறுமாதம் காத்திருக்க முடியுமானால் ஒரு வீடு சில வேளை கிடைக்கலாம். அப்படித்தான் எனக்கு அந்த வீடு கிடைத்தது.

சுற்றிலும் மரங்கள் சூழ்ந்திருக்கும் வீடு. மாடியில் நின்று பார்த்தால் ஒரு நல்ல நாளில் மர்கலா மலைச் சிகரம் தெரியும். வீதிகள் ஒன்றையொன்று செங்குத்தாக குறுக்கறுத்து ஓடுவதால் குடியிருப்புகள் உயரத்தில் நின்று பார்க்கும்போது நீள்சதுரங்களாகத் தோற்றமளிக்கும். எங்கள் வீதி நெடுகலும் நாவல் மரங்களை நட்டு வைத்திருந்ததால் அந்தப் பிராந்தியம் குளிர்மையாகவே இருக்கும். சுற்றுச்சூழல் மாசு கிடையாது. சுத்தமான வீதிகள். ஆனால் சந்தைகளும் கடைகளும் நகரின் மையப் பகுதியில் தூரத்தில் இருந்ததால் சில சங்கடங்களும் இருந்தன. ஒரு நல்ல வீட்டை தேடிக் கண்டுபிடிக்கும்போது ஒன்றிருந்தால் ஒன்று கிடைக்காது என்பது எதிர்பார்த்ததுதான்.

சரியாக மாலை ஆறுமணியானதும் சோக்கிதார்கள் என்று அழைக்கப்படும் வாயிலோன்கள் ஒவ்வொரு வீடாக வந்து சேருவார்கள். அவர்கள் கைகளில் உருண்டையான கம்பும், போர்வையும், இரவு உணவுப் பொதியும், சுட்டு விளக்கும் இருக்கும். ஒருவருக்கு ஒருவர் முகமன் கூறி விசாரிப்புகள் நடந்த பிறகு கூட்டமாக தொழுவார்கள். பின்னர் தனித்தனியாகவோ கும்பலாகவோ உட்கார்ந்து சாப்பிடுவார்கள். நிமிர்த்தி வைத்திருக்கும் கயிற்றுக் கட்டில்களை சாய்த்துப்போட்டு புகைபிடிப்பார்கள். வீட்டு எசமானர்கள் தூங்கப்போய் சரியாக ஐந்து நிமிடம் கழித்து அவர்களும் தூங்கிவிடுவார்கள். அடுத்தநாள் காலை வீட்டுக்காரர்கள் எழும்ப ஐந்து நிமிடம் முன்பாக எழும்பி தங்கள் வீட்டுக்கு புறப்பட்டு போய்விடுவார்கள்.

எங்கள் வீதியில் ஒரு பெட்டிக்கடை இருந்தது. எனக்கு அந்த வீதியில் கிடைத்த முதல் நண்பன் பெட்டிக்கடைக்காரன்தான். பெயர் நவாஸ். காலை ஆறுமணிக்கு கடையை திறந்தான் என்றால் இரவு எட்டு மணிக்குத்தான் பூட்டுவான். வாரத்தில் ஏழு நாட்களும் வியாபாரம் நடக்கும். அவன் இல்லாமல் அந்த வீதி இயங்க முடியாது. காலை நேரத்தில் அவனிடம் புதினப்பத்திரிகை, பால், பாண், சிகரெட், பிளேட் என்று வாங்குவதற்காக வீட்டுக்காரர்கள் அவன் கடையை நோக்கி வந்தபடி இருப்பார்கள். நவாஸ் சிரித்தபடி வியாபாரத்தை சுறுசுறுப்புடன் கவனிப்பான்.

1960ல் அயூப்கான் இஸ்லாமபாத் நகரத்தை நிர்மாணித்தபோது பாகிஸ்தானின் தலைநகரத்தை இஸ்லாமபாத்துக்கு மாற்றினார். திட்டமிட்டு நேர்த்தியாகக் கட்டிய நகரம் என்றபடியால் பச்சைப்பசேல் என்ற நெடிய மரங்களும் சுற்றியிருக்கும் மலைகளும் இதன் அடையாளமாயின. நகரத்தின் தொடக்க காலங்களிலேயே நாவாஸின் தகப்பன் அந்த பெட்டிகடையை அங்கே ஸ்தாபித்துக்கொண்டார். அவர் நோய்வாய்ப்பட்டபோது கடையை ஏற்று அன்றிலிருந்து நடத்திக்கொண்டிருப்பதாக நவாஸ் ஒருநாள் என்னிடம் கூறினான்.

'எத்தனை வருடங்கள்?' என்றேன். 'எனக்கு 18 வயது நடக்கும்போது கடையை எடுத்தேன். இப்பொழுது முப்பத்தெட்டு நடக்கிறது. 20 வருடங்கள், வருடத்துக்கு 365 நாட்களும் வேலை. இங்கே குடியிருக்கும் அத்தனை பேரையும் எனக்கு தெரியும். அவர்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் எல்லோரும் இங்கேதான் பிறந்தார்கள்.'

> “ பத்தடி தூரத்திலேயே மேஜரைக் கண்ட நவாஸ் ஓர் எலும்பில்லாத பிராணிபோல மாற்றமடைந்தான். தவழ்வதுபோல அவரை நோக்கி ஓடினான். தையல்காரர் ஊசியை வாயிலே வைத்துக்கொண்டு பேசுவதுபோல பல்லினால் மேஜர் எதையோ சொல்ல நவாஸ் வயிற்றை இரண்டாக மடித்து விழுந்து சிரித்தான். ”

நவாசுடைய கிராமம் லைலாப்பூர். அது இஸ்லாமபாத்தில் இருந்து 160மைல் தூரத்தில் இருந்தது. அவனுடைய வயதான பெற்றோர்களை அவன் பார்க்கப் போவதில்லை அவர்கள்தான் வந்து அவனை பார்த்துவிட்டு திரும்புவார்கள். வருடம் முழுக்க வேலை செய்யும் ஒருவன் எப்படி போகமுடியும் என்று என்னிடம் கேட்பான். 'நவாஸ், நீ ஏன் மணமுடிக்கவில்லை?' என்று ஒருநாள் கேட்டேன். 'ஏழைகள் எடுத்தவுடன் மணமுடிக்க முடியாது. பெண்ணுக்கு பஃரி கொடுப்பதற்கு பணம் சேர்க்கவேண்டுமே' என்றான். அப்படிச் சொல்லும்போதே அவன் கண்கள் பெட்டிக்கடை மரப்பலகைகளில் ஒட்டி வைத்திருந்த பல ஹிந்தி நடிகைகளின் படங்களை ஒரு விநாடி பார்த்து மீண்டன. டிம்பிள் கப்பாடியா, நீத்து சிங், பர்வீன் பாபி, பூஜா பாட், சிறீதேவி, நீலம் என்று அப்போது பாகிஸ்தானில் பிரபலமாயிருந்த அத்தனை நடிகைகளும் அங்கே வரிசையாக அவனுக்காக காத்திருந்தனர்.

'உன்னை பெற்றோர் பள்ளிக்கு அனுப்பவில்லையா?' என்றேன். 'ஏதோ அனுப்பினார்கள்? கொஞ்சம் உருது எழுத வாசிக்கத் தெரியும். கணக்கில் கூட்டல் கழித்தல் மட்டும் செய்வேன். பெருக்கல் வராது. என் பெற்றோருக்கு வசதி கிடையாது. சிறுவனாயிருந்தபோது எங்கள் வீட்டில் கோழிக்கறி சாப்பிட வேண்டுமென்றால் நான் நோயில் விழவேண்டும் அல்லது கோழி நோயில் விழவேண்டும்.'

நாவல் பழ பருவத்தில் வீதியில் நாவல் பழங்கள் கொட்டும் ஆனால் அதை பொறுக்குவதற்கு சிறுவர்கள்தான் இல்லை. அந்தக் வீதிக் குழந்தைகள் நாகரிகமானவர்கள், வீதியில் விழுந்தவற்றை பொறுக்குவற்கு அவர்களுக்கு அனுமதி கிடையாது. வெளியே நின்று வியாபாரத்தை கவனிக்கும் நவாஸின் தலை மேலே நாளுக்கு நூறு பழங்கள் விழும். அவனுடைய வெள்ளை நிற சல்வார் கமிஸ் ஊதா நிறமாக மாறிவிடும். அந்தச் சமயங்களில் சூரிய ஒளியில் ஒரு பஞ்சாபி நடிகனைப்போல சிவந்த உடம்புடன், பின்னுக்கு வாரி இழுத்த நீண்ட தலைமுடியுடன் பார்ப்பதற்கு அவன் அழகாகவே தோற்றமளிப்பான்.

இப்படியான நாவல்பழ பருவத்தின் போதுதான் ஒருநாள் நான் என் அலுவலகத்திலிருந்து திரும்பியபோது என் வீட்டைக் காணவில்லை. வீதியின் பெயர்ப்பலகையை பார்த்தேன். பெயர் சரியாக இருந்தது. அது என் வீதியேதான், ஆனால் வீதியை மூடி பந்தல் போட்டுவிட்டார்கள். நான் காரை வெளியே நிறுத்திவிட்டு என்ன செய்யலாம் என்று யோசித்தபோது என்னுடைய முன் வீட்டுக்காரர், ஓய்வுபெற்ற ராணுவ மேஜர், வேலைப்பாடுகள் செய்து முன்னுக்கு வளைந்த செருப்பை அணிந்துகொண்டு, கைத்தடியையும் சுழற்றியவாறு என்னிடம் வந்தார். எனக்கு நடுக்கம் பிடித்தது.

ஆரம்பத்தில் நான் அடிக்கடி மேஜருடன் பேசியதுண்டு. என்ன ஒரு கருத்தை நான் சொன்னாலும் உடனே ஓர் எதிர் கருத்தை அவர் முன்வைப்பார். அப்படியே விவாதம் நீளும். மறந்துபோயும் பங்களதேஷ் பாகிஸ்தான் போரை பற்றி விவாதிக்கக்கூடாது. அப்படியே உணர்ச்சி பொங்கி நிலத்திலிருந்து ஓர் அடி எழும்பிவிடுவார். நான் அவர் சொன்ன கருத்துக்களை எல்லாம் முழுமையாக ஒப்புக்கொண்ட பின்னர்கூட அவர் விவாதத்தை அரை மணிநேரம் தொடருவார்.

அவர் ராணுவத்தில் வேலை செய்தவர் என்பது பார்த்தவுடனேயே தெரிந்துவிடும். உயரமாக, எக்கிய வயிற்றுடன் தோற்றமளிப்பார். முகம் மட்டும் அப்பொழுதுதான் யாரையோ கடித்துவிட்டு வந்ததுபோல இருக்கும். ஆனால் அன்று எப்படியோ ஒரு புன்னகையை வரவழைத்தபடி தன்னுடைய மகனின் திருமணத்துக்குத் தான் அந்த ஏற்பாடுகள் என்று கூறி சிரமத்துக்கு மன்னிப்பு கேட்டார். காரை வீதி முனையிலே விட்டு விட்டு வீட்டுக்கு நடந்து போகும்படி வேண்டிக்கொண்டார். அப்பொழுது பார்த்தால் என்னைப்போல அந்த வீதியில் குடியிருந்த மற்றவர்களின் கார்களும் அங்கே நிறுத்தப்பட்டிருந்தன. கார்களைப் பாதுகாப்பதற்கு பிரத்தியேகமாக ஒரு காவலனையும் அவர் ஏற்பாடு செய்திருந்தார்.

அடுத்தநாள் காலை இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது. பெட்டிக்கடையை காணவில்லை. அது நின்ற இடமும் வெறுமையாக இருந்தது. நவாஸ் எங்கே என்றால் பதில் சொல்லத் தயங்கினார்கள். அந்த வீதி குடியிருப்பாளர்களுக்கு அன்று பேப்பர், பாண், பால், சிகரெட் ஒன்றுமே கிடைக்கவில்லை. நகர மையத்துக்குத்தான் அவர்கள் போய் வாங்கி வரவேண்டும். பந்தல் போடுவதற்கு பெட்டிக்கடை இடைஞ்சலாக இருந்ததால் அதை அகற்றச் சொல்லி உத்தரவு போட்டார்கள். நவாஸ் இரண்டு நாள் அவகாசம் கேட்டான். அவர்கள் கொடுக்காமல் கடையையும் உடைத்து அவனை துரத்திவிட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். பாகிஸ்தானில் உரையாடும்போது சாதாரணமாக உருதுவில்தான் பேசுவார்கள். யாரையாவது திட்ட வேண்டும்போல தோன்றினால் பஞ்சாபியில் மாறிவிடுவது வழக்கம். ஏனென்றால் பஞ்சாபி திட்டுவதற்காக உண்டாக்கப்பட்ட மொழி. அன்று மேஜர் பஞ்சாபியில் திட்டினார் என்பதுதான் பெரிசாகப் பேசப்பட்டது.

மணவீட்டு அலங்காரங்கள் பிரம்மாண்டமாக இருந்தன. விதம்விதமான சாமியானாக்களும், வண்ண விளக்குகளும், சரிகை சோடனைகளும் கண்களைக் கூசவைத்தன. லாகூரிலிருந்து சிவப்பு வெள்ளை மஞ்சள் வண்ண ரோசாமலர்கள் வந்து குவிந்தன. நாலு நாள் கொண்டாட்டம் என்று அறிவித்திருந்தார்கள். என்னுடைய வீட்டு மீட்டரில் இருந்து மின்சாரம் கடன்வாங்கி தூண்களிலும் மரங்களிலும் குழாய்கள் கட்டி சினிமா பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. பாடல்கள் அலறத்தொடங்கியதும் வீடுகளில் ஒருவரொடொருவர் பேசுவது கூட தடைபட்டது. 24 மணிநேரமும் அவை ஒலித்தன. அப்பொழுதுதான் மாதுரி தீட்சித், சஞ்சய்தத் நடித்து வெளியான கல்நாயக் படம் வெற்றிகரமாக இஸ்லாமபாத் திரை அரங்குகளில் ஓடிக்கொண்டிருந்தது. 'சோளிகே பீச்சே க்யா ஹை' என்ற பிரபலமான ஹிந்தி பாடலை 200 தடவை வைத்துவிட்டார்கள். யாராவது வந்து சோளியை திறந்து காட்டினால் ஒழிய நிறுத்தமாட்டார்கள் போலத் தோன்றியது. என்னிடமிருந்து கடன் வாங்கிய மின்சாரத்தில்தான் இந்தப் பாடல் ஒலிக்கிறது, இதை எந்த நிமிடத்திலும் நிற்பாட்டும் சக்தி என்னிடமிருக்கிறது என்று நினைத்தபோது எனக்கு சிரிப்புத்தான் வந்தது.

ஆனால் இவ்வளவு சங்கடங்களுக்கு மத்தியிலும் ஓர் ஆறுதல் இருந்தது. மாலையானதும் பெரிய பெரிய வெண்கல தாம்பாளங்களில் பலவிதமான உணவு வகைகள் பரிமாறப்பட்டு அவை அலங்காரமான வெள்ளிப் பேப்பரினால் மூடப்பட்டு அந்த வீதியில் உள்ள அத்தனை வீடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. திருமணத்துக்காக வீதியை மூடிய நாலு நாட்களும் விதவிதமான தேர்ந்த

38ம் பக்கம் பார்க்க...

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும்
உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

# கனடாவில் புதியவர்...

22ம் பக்கத் தொடர்ச்சி...

## கடைகட்குச் சென்று பொருட் களை வாங்குதல்:

கடைகள் நுகர்வோரைக் (Consumers) கவருவதற்காக ஒன்றுடன் ஒன்று போட்டியிடுகின்றன. எனவே நீங்கள் பொருட்களை வாங்குவதற்கு முன்பு விலைகளை ஒப்பிட்டு சரிபார்த்தல் முக்கியமானதாகும். பொருட்களில் ஒட்டியிருக்கும் விலைச் சிட்டையானது பொதுவில் வரிகளை உள்ளடக்குவதில்லை. இவ் வரிகள் 5% -13% வரையினதாக நீங்கள் வாழும் மாகாணத்தைப் பொறுத்து பொருட்களின் விலையுடன் சேர்க்கப்படும்.

## சில கனடிய சட்டங்கள்

சாரதி அனுமதிப்பத்திரம், பதிவு, காப்புறுதி இல்லாது வாகனமோட்டுதல் சட்டரீதியற்றவை யாகும்.

மதுபானம் அருந்தியிருந்தால் வாகனமோட்டுதல் சட்டரீதியற்றதாகும்.

கனடாவில் வாகனம் ஓடும் போது சாரதியும் எல்லா பிரயாணிகளும் இருக்கை பட்டிகளை (seat belts) அணிந்து கொள்ள வேண்டும்.

இருக்கைப் பட்டி அணிந்து கொள்ள முடியாத குழந்தைகளும் சிறுவர்களும் அவர்களின் வயதிற்கும் நிறைக்கும் பொருத்தமான சிறுவர் அல்லது குழந்தைகளுக்குரிய கார் இருக்கைகளில் அமர்த்தப்பட வேண்டும்.

12 வயதிற்குக் குறைந்த பிள்ளைகள் வீட்டில் தனியே விடப்படக் கூடாது. அல்லது அவர்களை விட வயதில் குறைந்தவர்களைப் பராமரிக்கும்படி விடப்படக் கூடாது.

6 வயதில் இருந்து 16 வயது வரையான எல்லாப் பிள்ளைகளும் பாடசாலைக்குச் செல்ல வேண்டும்.

அரசாங்க கட்டிடங்கள், உயரேற்றிகளில் (Elevators), கனடிய விமானங்களில், பேருந்து மற்றும் ஏனைய பொது போக்குவரத்து, அநேக வங்கிகள், கடைகள், உணவு விடுதிகள் போன்றவற்றில் புகைத்தல் அனுமதிக்கப்பட மாட்டாது. அத்துடன் 16 வயதிற்குக் குறைந்த சிறுவர்கள் பயணம் செய்யும் கார்களினூடாக புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

கனடாவின் எந்தப் பகுதியில் வாழ்கின்றனர் என்பதைப் பொறுத்து மதுபானம் வாங்குவதற்கோ அருந்துவதற்கோ நீங்கள் 18 வயது அல்லது 19வயதாக இருக்க வேண்டும்.

உங்கள் துணைவரையோ அல்லது பிள்ளைகளையோ வீட்டிலோ அல்லது பொது இடத்திலோ அடித்து துன்புறுத்தல் சட்டத்திற்கு எதிரானது.

போதை வஸ்துக்களை வாங்குவதோ, விற்பதோ பயன்படுத்துவதோ சட்டரீதியற்றதாகும்.

மற்றவர் விரும்பாவிடில் எந்தவிதமான பாலியல் ரீதியான கருத்துக்களைத் தெரிவிப்பதோ அல்லது பாலியல் ரீதியில் அணுகுவதோ சட்டரீதியற்றதாகும்.

## அதிகாரத்தில் உள்ளவர்கள்:

கனடாவில் ஒரு நபரின் அதிகாரமானது அவரது தொழிலில் அவர் கொண்டுள்ள பொறுப்புக்களுடன் தொடர்புபட்டது. பெண்களும் ஆண்களைப் போலவே அதே வகையான உயர்பதவிகளை வகிப்பதுடன் அதே அதிகாரங்களைக் கொண்டிருப்பர். அவர்களது பெயர், அந்தஸ்து, சமூகவகுப்பு அல்லது பால் என்பவற்றின் காரணமாக அவர்களது அதிகாரங்கள் வேறுபடுவதில்லை.

## பொது அலுவலகம்

பொது உத்தியோகத்தர் உங்களுடன் மரியாதையாக ஆனால் நெருக்கமற்ற முறையில் பழகுவர். இவர்கள் சட்டங்களை உருவாக்குவதில்லை. ஏற்கனவே உள்ள நடைமுறைகளை இவர்கள் பின்பற்றுவர். உங்களுடன் தனிப்பட்ட விதமாக இவர்கள் ஈடுபட விரும்ப மாட்டார்கள். அத்துடன் அவ்வாறு ஈடுபடவும் முடியாது. எத்தகைய சந்தர்ப்பத்திலும் அவர்களுடன் உணர்ச்சி வசப்பட்டு நடந்து கொள்ள வேண்டாம். ஓர் பொது உத்தியோகத்தருக்கு இலஞ்சம் கொடுக்க ஒரு போதும் முயல வேண்டாம். இலஞ்சம் கொடுத்தல், ஏனைய வழிகளிலான ஊழல் போன்றன சட்டத்திற்கு புறம்பான குற்றமாகக் கருதப்படும்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சமூகத்தில் ஒரு பகுதியினராக உள்ளதுடன் கடுமையான சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஏற்கனவே தாபிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றுவர். அநேக நகரங்களிலும் பட்டினங்களிலும் பொலிஸ் உத்தியோகத்தரை அழைப்பதற்கு அவசர இலக்கம் உள்ளது. நீங்களோ அல்லது யாராயினுமொருவரோ ஆபத்தில் இருந்தால் அல்லது ஓர் குற்றம் நடைபெறுவதாக கண்டால் இந்த இலக்கத்தை அழைக்கவும். கனடாவின் அநேகமான பகுதிகளில் அவசர இலக்கம் 911ஆக உள்ளது.

## ஒரு பொலிஸ் உத்தியோகத்தரால் (Police officer) நீங்கள் விசாரணை செய்யப்பட்டால்:

பொலிஸ் உத்தியோகத்தரை ‘Officer’ என்றே அழையுங்கள்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் அதிகாரமுடையவர்கள் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். அவர்களுடன் தேவையற்ற வாதம் புரிய முயல வேண்டாம்.

பொலிஸ் உத்தியோகத்தர் உங்கள் அடையாளத்தைக் கேட்கும்போது நிரூபிக்க தயாராக இருங்கள். நீங்கள் வாகனமோட்டிச் சென்றால் உங்கள் லைசென்ஸ், காப்புறுதிக்கான நிரூபணம், கார் பதிவைக் கேட்பார்.

என்ன நடந்தது என்பதை மட்டும் சொல்லுங்கள். உங்கள் அபிப்பிராயங்களைக் கூற வேண்டாம்.

பொலிஸ் உத்தியோகத்தருக்கு ஒரு போதும் பணம் கொடுக்க முயற்சிக்க வேண்டாம். கனடாவில் பொலிஸ் உத்தியோகத்தருக்கு இலஞ்சம் கொடுத்தல் பாரதூரமான குற்றமாகும்.

## ஒரு பொலிஸ் உத்தியோகத்தரால் கைது செய்யப்பட்டால் உங்களுக்கு என்ன நடக்கும்?

பொலிஸ் உத்தியோகத்தர் தாம் யாரென்று கூறுவதுடன் தமது அடையாள இலக்கத்தையும் காட்டுவர்.

உங்களை ஏன் கைது செய்கின்றார்கள் எனவும் உங்கள் உரிமைகள் என்ன என்றும் கூறுவார்கள்.

ஓர் சட்டத்தரணியை உடனடியாக நீங்கள் அழைப்பதற்கு உங்களை அனுமதிக்க வேண்டும். உங்களுக்கு சட்டத்தரணி இல்லாவிடினும் கூட உங்களுக்கு உதவியாக தொலைபேசி இலக்கத்தைத் தந்து உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ள செய்ய வேண்டும்.

உங்கள் சட்டத்தரணியுடன் பேசும் வரை உங்களின் பெயர், விலாசம் தவிர வேறு எந்த தகவலையும் கொடுக்க வேண்டியதில்லை.

தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் இருந்தால் காலநிலை மற்றும் ஏனைய கட்டுப்பாடுகளை தாண்டி புதியவர்கள் நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

உசாத்துணை:

http://www.ssrp.ualberta.ca/linked_files_not_pdf/MMSS_Fact_5_Summary.doc

http://www.cic.gc.ca/ENGLISH/newcomers/after-help.asp

http://www.statcan.gc.ca/pub/89-614-x/2005001/findings-resultats/4079122-eng.htm

jeevathisairajah@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*



I'm here to get your mortgage smarter and faster.

உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages**

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**

- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

**மாற்றமடைந்திருக்கும் இன்றைய மோட்கேஜ் தேவைகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்**

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

When it comes to finding the Right Mortgage Solution to meet your needs, Please call **ME** befor making any **Decision!!!**

**Our interest rates starts from 0%**

- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**After Approval**

# Joy is yours
# Pride is ours





## அகிலா செந்தில்
## Akila Senthil, AMP

*Lic: M08002166*

*Senior Mortgage Consultant,*
*Team Leader, Platinum Award Winner*
*A Challenging Prosperity Long Term Experienced Team Leader*

**Cell: 416.895.4321**

104-5770 Hurontario St., Mississauga, ON L5R 3G5
Fax: 905-283-3339, Web: www.mortgageprincess.ca, E-mail: akilasenthil@invis.ca
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2




**Middlefield and Finch**

5 Years New, Largest 3 Bedroom All Brick End Unit in The Complex, Avon Model with 1728 Sq.ft. plus Unspoiled Basement, Close to all Amenities plus 24 Hour TTC, Separate Shower Room in the Master Bedroom, R/I For Central Vac, 5 Appliances, CAC

Price $ 319,000




**Staines Road and Finch**

5 Years New 5 Bedrooms Detach Home, Pie Size Lot, Hardwood Floor in Main Floor, 2 car Garage, Separate entrance to Basement, 4 Appliances

Price $ 379,000




**Ninth Line & 16th Ave**

Excellent 3 Bedroom Mattamy Built Semi In Cornell Village, Premium Lot, Brick Built, 9' Ceiling, Oak Stairs, Double Detached Garage & Extra Double Parking, Sprinkler System, Interlocking Patio & Walkway, Main Floor Laundry, Finished Basement with Wet Bar, Newer Paint, Easy Access to Hwy 407, Cornell Public School, Park & Hospital; Extras: Fridge, Flat Top Stove, B/I Dishwasher, Washer, Dryer, All Electrical Light Fixtures, Central Air Conditioning, Central Vacuum and all accessories, Humidifier, All Window Coverings (Except Main Floor). Lot Size: 22' x 148' feet, Taxes: $3,181.13 (2008)

Price $ 369,000




**Brimley and Denison**

Lowest in the Market! Fabulous and Bright 3-Bdrm Home in a Great Neighbourhood. Close to School, TTC, Pacific Mall, Shopping and all other Amenities. Excellent Move-In Condition. No Sidewalk - 4 cars can be parked in the Driveway. Motivated Vendor! 4 Appliances, CAC

Price $ 289,000




**McCowan and Sheppard**

Approx. 1600 Sq. Ft. Spacious Suite, Well Managed Condo With Many Facilities. Close to 401, TTC, School. 24 Hour Security. Split Bedrooms. Separate Shower Stall and Tub Ensuite for Master Bedroom. 5 Appliances, CAC

Price $ 189,000

# விற்பனைக்கு...

**விற்பனைக்கான உங்களது வீட்டினை இங்கே காட்சிப்படுத்தி அதற்கான அதி கூடிய விலையினை பெற்றுக் கொள்ளுங்கள்.**



COLDWELL BANKER
*Exceptional Real Estate Services, Brokerage*
*3107 Sheppard Ave East*
*Toronto, ON. M1T 3J7*
*Office: 416-497-9794*

தொடர்புகளுக்கு

**V. Logan,** Broker
*Direct Line:*
**416-410-1620 (24hrs)**
vlogan599@yahoo.com


Thinking of Buying or Selling Real Estate
அனுபவம்! அறிவு! திறமை! பொறுமை!
21 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்.........
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
Real Estate Service
Web: redcarpetcanada.com
Multi Award Winner
Karu Kandiah FRI, CRES,
Real Estate Broker / President
Dir: 416.284.5698 Bus: 416.284.5555 (24 Hrs.)
Midland / Danforth
$270,000
2+1 Bedrooms, 2 Washrooms Renovator's Dream, All Brick Bungalow, Located Quiet End Street. Hardwood Floor Underneath Carpet
Kipling/Steeles
$154,900
2+1 Bedrooms, 2 Washrooms Excellent Price For Corner Unit With 2 Car Parkings, Luxury Building, One Of The Nicest Units
Morningside/Mclevin
$219,000
3 Bedrooms, 3 Washrooms Affordable Price To Live In A Detached Like House, Close To Schools, Shopping, Ttc
Birchmount/Sheppard
$312,000
4 Bedrooms, 2 Washrooms Lovely & Bright Home, In High Demand Area, Walking Distance To Sir John A. Macdonald C.I
Mississauga
$384,900
3+1 Bedrooms, 3 Washrooms A Beautiful Home,Well Kept.Suitable For A Large Family Or With In-Laws. Close To Everything Shopping
Morningside/Sheppard
$319,000
3 Bedrooms, 3 Washrooms Well Kept Home.Very Spacious Layout With Eat In Kitchen & W/O To Large Back Yard
Steeles / Martin Grove
$319,900
3 Bedrooms, 3 Washrooms Beautiful 3 Bed Room Family Home In 'Cul-De-Sac'**Many Upgrades**Pride Of Ownership
Hillcrest/Confederation
$499,000
3+3 Bedrooms, 3 Washrooms Bright Spacious Bunglow On Huge Lot, Massive 3 Bedrooms Bsmt Apartment W/Sep Entrance
Morningside/Warnsworth
$309,000
4 Bedrooms, 3 Washrooms High Demand West Hills Area. Freshly Painted,Renovated Kitchen, New Furnace (2007), New Ac (2007)
9th Line/Hooverpark
Photo Not Available
$444,900
4 Bedrooms, 3 Washrooms Gorgeous, Unique & Popular Mattamy Built [Town Gate]Home On Premium Lot With Panoramic View
Creditview/Eglinton
$499,000
5+1 Bedrooms, 4 Washrooms Wow! Big And Beautiful! Perfect For The Growing Family And A True Entertainer's Delight. 3300 Square Feet
Birchmount/Danforth
$309,900
3+2 Bedrooms, 3 Washrooms Beautiful And Well-Maintained Home. Move-In Condition.
Islington/Rexdale
$294,500
3 Bedrooms, 2 Washrooms Excellent Location, The House Need Several Tlc, Upgraded Kitchen And Windows
Markham/Mclevin
$259,900
3 Bedrooms, 2 Washrooms Well Maintained House With New Kitchen, Backyard Facing School, Good Location. New Windows
Bellamy/Lawrence
$345,000
3+3 Bedrooms, 3 Washrooms Bright And Spacious!! Buyer Will Not Be Disappointed! Located In A Highly Demanding Area
Brampton
$1,200 For Rent
3 Bedrooms, 1 Washroom Convenient And Quiet Location. Walking Distance To Schools,Mall,Park And Other Amenities
Mississauga
$1,450 For Rent
2+1 Bedrooms, 2 Washrooms Clean, Brightened,Spacious, Beautiful East (City) View, 2+1 Den, 2 Washroom, Close To All Amenities
Mccowan/Steeles
$ 600 For Rent
1 Bedroom, 1 Washroom Finished Basemen with Sep Entrance call for more info.
Markham/Bur Oak
$1,650 For Rent
3 Bedrooms, 3 Washrooms 1830 Sq Ft Detached Home. 9' Ceilings And Hardwood Floor. Oak Stairs, Ceramic Foyer
Victoria Park/Danforth
$875 For Rent
2 Bedrooms, 1 Washroom Sun Filled Two Bedroom Apartment. Looks Like New With Deck For Bbq
Looking for a New Real Estate Career
Join the Winning Real Estate Team
• Free Real Estate Classes
• Commission up to 100%
• Help & Guidance for newly licensed Agents
• Regular Sales Training from Experts

# வணக்கம்! உங்கள் பெயர் என்ன?



மாமூலன்
maamulan@thaiveedu.com

தமிழர் நாம் என்று சொல்லிக் கொண்டால்... எனது பெயர் என்ன? அது தமிழைக் காட்டு கிறதா? என்று பார்க்கவேண்டிய தேவை இருக்கிறது. முன்னெப்போதையும் விட அது இப்போது அதிகமாகத் தேவையாக இருக்கிறது.

எவ்வாறு 1983 யூலைக் கலவரத்தில் கொல் லப்பட்ட தமிழ் மக்களின் உயிர்களின் வலி, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வலி எம் அனைவரிலும் புகுந்ததோ! அதே போல அதற்காக பல இயக்கங்களிலும் பல தமிழர்கள் புகுந்தார்களோ!

அதே போல இப்போது 2009இல் பத்து... நூறு மடங்கு தமிழ் மக்கள் இறந்து... சிதைந்து கிடக்கிறார்கள். எமது பிறவிகள் ஆங்காங்கே கடும் வதைமுகாம்களில் நொந்து மடிகிறார்கள்.

தமிழர் அனைவரின் உள்ளத்திலும் வலி... இல்லையென்று சொல்ல யாராவது தமிழர் இருக்கிறார்களா?

வலியில்லாமல் இன்று இருக்கும் தமிழர்?... அவர் தமிழரே அல்ல!

“மகிந்தவும் உதவி செய்வார்தானே” என்று கதைக்கும் மாடுகளும் நம்மிடையே உள்ளன தான்! அவை ஒரு புறம் இருக்கட்டும். இன்று நாம் தமிழர் என்று சொல்லும் ஒவ்வொருவருக்கும் பல கட்டாயக் கடமைகள் உள்ளன. அவற்றை சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழிக்க முடியாது.

இனிமேலும் சாத்திரத்தின் பெயரால் அய்யர் என்ற பெயரில் தமிழரிடையே பூந்திருக்கும் பார்ப்பனரால் அவர்களது தந்திரமான நடை முறைகளால் எமது தமிழ் தலைமுறை தலை முறையாக அழிக்கப்பட்டு வருவது நிறுத்தப் படவேண்டும்.

அப்படியில்லாவிட்டாலும் கூட மொழி மற்றும் இனம் என்ற வகையில் நாம் தமிழர் தொடர்ந்து தளைத்திருக்கத் தேவையானவை சில உள்ளன.

எம்மால் அவற்றைக் கடைப்பிடிக்க முடியா-விட்டால் முதலைக்கண்ணீர் - நீலிக்கண்ணீர் தற்போது வடிப்பதில் பயனில்லை. ஏனென்றால் நாங்கள் முறையாக தமிழருக்கான கடமை-களைச் செய்திருப்போமானால் இன்றைய நிலை வந்திருக்காது!

அவை...

## தமிழில் வழிபாடு:

எமது மொழியாகிய தமிழ் மொழியில் எமது கடவுளை வணங்குதல் - வழிபடுதல். இதற்கு என்ன தடை எம்முன் உள்ளது?

இதுவரை செத்திருக்கும் 3 லட்சம் தமிழரின் உயிரை முனவைத்துக் கேட்கிறேன்! முதிர்ச்சி-யடையாத மொழியாக ‘சமசுக்கிருதத்தில்’ பிராமண அய்யரைக் கொண்டு கடவுளை வணங்கியபடியால்தான் அந்தக் கடவுள் வட இந்திய சமசுக்கிருதத்திற்கு இணையான இந்தி மொழியைப்பேசும் சோனியாவின் குடும்பத்-துக்கு இரக்கம் காட்டி எம் தமிழரை அழித்-தாரா?

பதில் சொல்லவேண்டியது சமசுக்கிருதத்தில் பூசை செய்யும் அய்யரிடம் போய் வழிந்து நிற்கும் தமிழர்கள்தான்... தன்மானத்துடன் தமிழில் வழிபடும் தமிழரல்ல. அல்லது சமசுக் கிருதத்தில் வழிபட்டதால் தமிழக்கடவுளுக்கு விளங்கவில்லையா.

எமது தமிழர்கள் சாகிறார்கள். அநியாய-மாய், அநீதியாய்க் கொல்லப்படுகிறர்ர்கள் என்ற எமது கூக்குரல் சமசுக்கிருததத்தில் இந்தப் பார்ப்பன அய்யர்கள் செய்த பூசை யால் தமிழ்க் கடவுளுக்கு கேட்கவில்லையா?

கடந்த 30 ஆண்டுகளில் கொல்லப்பட்ட 3 லட்சம் தமிழர்கள் பெயரால் கேட்கிறேன். தமிழில் வழிபடுங்கள். அய்யரை தமிழில் பூசை செய்யச் சொல்லுங்கள்.

## வீட்டில் தமிழில் பேசுங்கள்:

வீட்டில் தமிழில் பேசுவதை நாங்கள் வைகோ விடம் பார்த்துக் கற்றுக் கொள்ளவேண்டும்.

வைகோ ஓர் தெலுங்கு மூலத்தின் வம்சாவளி. அவருடைய வீட்டிலும் உறவினரிடையேயும் எப்போதும் தெலுங்கில்தான் பேசுவார்கள். ஆனால் அவர்களுக்கு தெலுங்கு மொழியைக் கொண்ட மாநிலமான ஆந்திராவில் உறவு தொடர்பு கிடையாது. வீட்டு மொழியாக தெலுங்கைப் பேசுவதனால் அவர்கள் இன்றும் 5 – 6 நூற்றாண்டுகள் தமது மொழியைக் காப்பாற்றி வருகிறார்கள். அதனோடு அவர்-களின் பண்பாடும் காப்பாற்றப்பட்டு வருகிறது. (ஆனாலும் அவர் வந்திருக்கும் - வாழும் தமிழகத்திற்காக தமிழீழ விடுதலைப்புலி-களையே ஆதரிக்கவில்லையா?)

அடிப்படை என்னவென்றால் தாய்மொழியை வீட்டில் பேசவேண்டும்.

அது மட்டுமல்ல. அரசாங்கம் போன்றவை கருத்துக்கணிப்பு மக்கள் தொகைக் கணிப்பு நடத்துகையில் வீட்டு மொழி அப்பா அம்மா வோடு பேசும் மொழி தமிழ் என்று கொடுக்க வேண்டும்.

வீட்டில் நாங்கள் ஆங்கிலம் பேசுகிறோம் என்றால்மட்டும் அடுத்த தலைமுறையில் நீங்கள் வெள்ளைக்காரராக ஆகிவிடமுடியாது. தொடரும் சந்ததிக்கும் நீங்கள் தமிழர்தான். கனடியத் தமிழர்தான். ஆனால் சொந்த மொழிதெரியாத ஈனத் தமிழர் என்றே மற்ற மொழியினர் எம்மைப்பற்றி நினைப்பார்கள்.

ஒன்று நினைவில் வைக்கவேண்டும். பிள்ளை-களுக்கு தமிழ் படிப்பிக்க ‘தமிழ் ரியூசன்’ சொல்லிக்கொடுக்கும் ‘ரீச்சரிடம்’ விடால் தமிழ் வளராது. ஆனால் வீட்டில் அனைவரும் தமிழ் பேசினால் பின்னாளில் பிள்ளை தமிழில் தானாய் படித்து முன்னேறும். காசையும் நேரத்தையும் ‘தமிழ் ரியூசன்’ ‘ரீச்சர்’மாரிடம் வீணாக்காமல் தமிழை வளர்க்க உண்மை எண்ணமிருந்தால் வீட்டில் தமிழில் பேசுங்கள். தமிழரிடம் தமிழில் பேசுங்கள்.

கொல்லப்பட்ட 3 லட்சம் தமிழ் மக்களின் பெயரால் கேட்கிறேன்.

## தமிழில் பெயரிடுங்கள்:

தமிழில் பெயரிடுதலை நாம் விரும்புகிறோம். ஆனால் என்ன செய்ய இளவெடுத்த சாத்திர-மும், நம்பரும், சமயமும் வந்து குறுக்கே நிற்கிறது.

சாத்திரி சொல்வான்.. ‘ஹ..ஸ..ஜ..பி..பீ.. ஏதாவ-தில் பெயர் வை என்று. நாங்களும் தேடிக் கொண்டு திரிவோம். தமிராய்ப் பிறந்த எம் குழந்தை “தரங்கெட்ட” தமிழ்ப் பெயர்களை காவிக்கொண்டு திரியும்.

திரிக்ஸ், முறுக்ஸ், கஜிந், ஹஷித், புழுக், நளுக் என்று தமிழ் உச்சரிப்பில் வராத பெயர்களை பலபேர் சேர்ந்து தேடிக் கண்டு பிடிப்போம். எமது குழந்தைகளுக்கு சூட்டி மகிழ்வோம்.

நாளை வளர்ந்த பின்பு குழந்தை பெற்றோ-ராகிய உங்களை வாழ்த்தாது. வரலாறு அப்படிச் சொல்லவில்லை. “எனது தாய்மொழி யில் பெயரே வைக்கத் தெரியாத பயலுகளா என் அப்பன் ஆத்தா” என்றுதான் அந்தப் பிள்ளைகள் நினைக்கவேண்டியிருக்கும்.

பெயரை வைக்கும் போது தவறு நடந்தி-ருந்தாலும் திருத்துவதற்கு கனடாவில் வாய்ப்பு இருக்கிறதே! அதைப் பயன்படுத்தி யாவது உணர்வுள்ள தமிழராய் எம் பிள்ளை-களுக்கு ஓர் இடைப்பெயரையாவது தமிழ்ப் பெயராய் சேருங்களேன்.

வளர்ந்தபின்பு தமிழ்ப் பெயரை வைத்துத் தானே எமது தமிழ் அடையாளத்தை இந்தப் பிள்ளைகள் தேடுவார்கள்.

இதை எழுதும் நான் பிறக்கையில் எனது தாய் தந்தையர் தமிழ்ப் பெயரை எனக்கு இட-வில்லை. எனது கல்லூரி வயதில் எனக்கு தமிழ்ப் பெயர் இல்லை என்ற குறை தொடங்கி விட்டது. ஆனால் எனது பெற்றோரை நான் குறை சொல்லவில்லை. எனது பெற்றோர் கல்வி அறிவு இல்லாதவர்கள். அவர்களுக்கு பிள்ளைகளுக்கு தமிழ்ப் பெயர்தான் இடவேண்-டும் என்ற அறிவை எனது சமூகம் ஊட்ட-வில்லை.

அவர்கள் தமது மத்தின் சார்பில் பெயரை வைத்தார்கள். நான் அகதியாக நிலையற்று அலைந்த 17 ஆண்டுகளில் எனக்கான பெயரைச் சூட்டிக்கொள்ள முடியாத நிலை. கனடாவில் ஓர் இடைப்பெயராக மாமூலன் என்ற பெயரை நானே எனக்கு வைத்துக் கொண்டேன்.

கனடா தந்திருக்கும் வாய்ப்பு அது. பெரிய செலவு ஒன்றுமில்லை. உங்கள் பெயருடன் ஓர் இடைப்பெயராகவாவது தமிழப்பெயரை வைத்துக் கொள்ளலாமே.

பிள்ளைகளுக்கு தமிழ்ப் பெயர் வைக்க தவறியிருந்தால் பிள்ளைகளின் பெயருடன் ஓர் தமிழ்ப் பெயரைச் சேர்த்துவிடலாமே. உங்கள் பிள்ளைகளுக்கும் எமது தமிழ்ச் சமூகத்துக்கும் செய்யும் உதவியாகப்போகும்.

செத்துமடிந்த 3 லட்சம் தமிழ் மக்களின் பெயரால் கேட்கிறேன்...

உங்கள் பிள்ளைகளுக்கு தமிழ்ப் பெயரி-டுங்கள். அல்லது ஓர் தமிழ்ப் பெயரை இடையில் சேர்த்து விடுங்கள். உங்கள் பெயர்களிலும் அப்படி ஓர் இடைப் பெயரைச் சேர்த்து விடுங்கள்.

சரியான தமிழ்ப் பெயரை சரியான தமிழரிடம் கேட்டு அறியுங்கள்.

இங்கு தமிழ் படிப்பிக்கும் ‘ரீச்சர்’மார் சிலருக்-கோ எது தமிழ்ப் பெயர் எண்டு தெரியாமல் இருக்கின்றது.

நீங்கள் தமிழரா?
உங்கள் பெயர் என்ன?
தமிழில் கடவுளை வணங்குவோம்.
தமிழில் வீட்டில் பேசுவோம்.
தமிழல் பிள்ளைகளுக்கு பெயரிடுவோம்.

இறந்துபோன எம் தமிழ் மக்கள் - எமது பிறவிகள் பெயரால் கேட்கிறேன்.

தமிழை வாழ வையுங்கள்.

mamoolan@thaiveedu.com

■ ■ ■



Tel: 416-836-1946, 416-423-5057
40 Crockford Blvd., Scarborough, ON, M1R 3C3
24 hrs Service
SAM Mobile Mechanic
K.S.TRUCK & CAR TRAILER REPAIR
All Automotive Repairs
Specializing in Mechanical, Body, Electrical Repairs & Wheel Spring

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்
ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

## ஓய்வூதியம் பற்றி...

# உங்களுக்குப் பின் உங்கள் ஓய்வூதிய சேமிப்பிற்கு நடப்பதென்ன?



கல்யாணி நாதன்
நிதி திட்டமிடல் ஆலோசகர்

'ஆற்றில் கொட்டுவதானாலும் அளந்து கொட்டு' என்பார்கள். 'பாத்திரம் அறிந்து பிச்சை போடு' என்பார்கள். எனவே ஓய்வூதிய சேமிப்பிற்கு இறுதியில் நடப்பது என்று பார்ப்பது அவசியமல்லவா? ஓய்வூதியத்திற்காக சேமித்தது நீங்கள் ஓய்வுக்காலத்தில் பாவிப்பதற்காகத்தானே! இதிலென்ன சந்தேகம் என்று கேட்டுவிடாதீர்கள். நாம் போடும் கணக்கு ஒன்று. அவன் போடும் கணக்கு மற்றொன்று. இதற்கிடையில் எத்தனை கேள்விகள். நீங்கள் ஓய்வூதியம் பெற்றவுடன் அல்லது ஓய்வூதியம் பெறுமுன் இறந்து விட்டால் நடப்பது என்ன?

பலருக்கும் RRSP தான் பெரும் சேமிப்பாக உள்ளது. எனவே இந்த பெருந்தொகைக்கு என்ன நடக்கும் என்பதில் ஆர்வமாய் இருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. அதுபற்றி முக்கிய சில விடயங்களைக் கவனிப்போம்.

### வரிகள் கட்டப்பட வேண்டும்

RRSPயில் வைப்புச் செய்துள்ள ஒருவர் இறக்க நேர்ந்தால் அவர் கட்டாமல் பிற்போடப்பட்ட வரிகளை மீள்பெற அரசாங்கத்திற்கு உரிமையுடையதாகும். ஆனால், அப்பணம் கணவனுக்கோ, அல்லது மனைவிக்கோ மாற்றப்படும் வேளையில் ஒரு வித வரியும் இல்லாமல் மாற்றப்படும். எனவே கணவர் மனைவியாக இருந்தால், RRSPயும் உயிருடன் இருப்பவருக்கு வரி ஏதுமில்லாமல் செல்லும்.

எனவே, ஒருவர் இறக்கும் தருவாயில் அவருடைய சகல RRSPயும் கடைசி வரிப்படிவத்தில் காட்டப்படும். இங்கு ஒரு சுவையான பாட்டு ஞாபகம் வருகின்றது.

வீடு வரை உறவு
வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை
கடைசி வரை வரி

என்று பாடலாம். இத்தகைய விதத்தில் RRSPயில் இருக்கும் தொகையை காட்டுகையில் பெருமளவு வரிகட்டவேண்டிவரலாம். இவ் வேளையில் கட்டப்படும் வரி இறந்தவருடைய ஆகக்கூடிய வருவாய் கால வரி விகிதத்தில் கணிக்கப்படும். இந்த வரியைக் கட்டிய பின்பு தான் அப்பணத்தில் கை வைக்க முடியும்.

### வாரிசுகளைக் குறிப்பிடுவது

நீங்கள் வாரிசுகளைக் குறிப்பிடாமல் இருந்தால் உங்கள் செல்வம் அனைத்தும் Estate என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அதற்கு அத்தாட்சிப்படுத்தும் கட்டணம் (Probate fees) கழிக்கப்படும். இங்கு ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய முக்கிய விடயம், நீங்கள் கவனமாக திட்டமிட்டால் ஒருவித செலவுமில்லாமல் உங்கள் கணவருக்கு அல்லது மனைவிக்கு மாற்றப்படலாம். உங்கள் சோடியை உரிமையாளராக்குவது, RRSPயிலுள்ள அனைத்துத் தொகையும் உங்கள் சோடிக்கு மாற்ற முடியும். இப்படிச் செய்வதால் உடனடியாக ஒரு வரியும் செலுத்தத் தேவையில்லை. இங்கு சோடி என்பது கணவன், மனைவி அல்லது கடந்த ஒருவருடத்திற்கு ஒன்றாகக் குடித்தனம் நடத்தியவரை குறிப்பிடும். இப்படிச் சோடிக்கு மாற்றப்படுவதை கனடா வரித் திணைக்களம் Refund of Premium எனக் குறிப்பிடுவர். அப்படி கொண்டுவரப்படும் பணத்திற்கு ஈடாக வரிச்சான்றிதழ் கொடுக்கப்பட்டு வரிவிலக்கு தரப்படும். இப்படிச் செய்வதால் இருப்பவரின் RRSPயில் வைப்புச் செய்யப்பட்டு வரிவிலக்குடன் பணம் வளர்வதற்கு அனுசரணையாக வரும். இதனால் வரி விகிதத்தில் பணம் அறவிடப்படும். வயது குறைந்த பராமரிப்பிலுள்ள பிள்ளை எவ்வயதினராக இருப்பினும் RRSP கட்டியவர் பராமரிப்பில் இருப்பவராயின் குழந்தையின் RRSPக்கு வரிக் கட்டணம் இல்லாமல் மாற்ற முடியும். இங்கு எவ்வகை விதங்களில் வரி விலக்குகள் பெறலாம் என்பதில் மிகக் கவனமாக இருப்பது அவசியம். சரியான திட்டம் இல்லாவிடில் வீணாக வரிப்பணம் செலுத்த வேண்டி வரும். மற்றவர்கள் வாரிசாக நியமிக்கும் வேளைகளில் யார் வரி கட்டுவது என்பது முக்கியமான விடயமாகும். உதாரணத்திற்கு உங்கள் RRSPயினை உங்கள்

> " உங்கள் RRSPயினை பெறுவதற்கு
> உங்கள் பெற்றோரை உரியவராக்கிய பின்
> எஞ்சுவது பிள்ளைகளுக்கு என விட்டால்
> முழு RRSPயும் பெற்றோருக்குச் செல்வதுடன்
> அதற்கான வரிப்பணத்தை
> பிள்ளைகள் பெறும் பணத்திலிருந்து
> அறவிடப்படும். "

பின்னவர் இடும் RRSPயில் எதுவிதத் தாக்கமும் இல்லாமல் இட்டு வரலாம்.

### சார்ந்துள்ள (Depender) பிள்ளை அல்லது பேரப்பிள்ளையை வாரிசாக நியமிப்பது.

சார்ந்துள்ள என்பதன் அர்த்தம், அவர் அதற்கு முந்திய வருடத்தில் வரி விலக்கு விடப்படும் தொகைக்கு குறைவான வருவாய் உடையவரால் இருத்தல் அவசியம். அப்படி பயன் பெறுபவர் பிள்ளையாக இருப்பின் அப்பணம் வருட வருவாயாக பிள்ளைக்கு 18 வயது வரும் வரை தருவதாயிருக்க வேண்டும். இன்னுமொரு விடயம் கவனிக்க வேண்டும். அதாவது கொடுப்பவர் பேரனாக இருப்பின், குழந்தை ஏற்கனவே பராமரிக்கப்பட்டுள்ள காரணத்தால் மேற்கூறியவாறு கவனிக்கப்பட மாட்டாது. முக்கியமாக பிள்ளை பெற்றோருடனோ அல்லது வேறு ஒருவர் அனுசரிப்பில் இருப்பின் ஒருவித வரிவிலக்கும் கிடையாது.

ஆனால், RRSP இருப்பு வைப்பவர் பராமரிப்பில் உள்ள குழந்தைக்கு அந்தப் பணம் கணவன் மனைவிக்கிடையில் மாற்றப்படுவது போல் மாற்றப்பட்டு பிள்ளையின் வருமான

பெற்றோரை உரியவராக்கிய பின் எஞ்சுவது பிள்ளைகளுக்கு என விட்டால் முழு RRSPயும் பெற்றோருக்குச் செல்வதுடன் அதற்கான வரிப்பணத்தை பிள்ளைகள் பெறும் பணத்திலிருந்து அறவிடப்படும். நிச்சயமாக அது உங்கள் எண்ணமாக இருக்க முடியாது. எனவே வாரிசு நியமிப்பதுடன் கட்டப்படும் வரி கட்டணம் பற்றியும் நல்ல முறையில் திட்டமிடல் மிக அவசியம்.

### RRSP மூலம் வீடு வாங்கும் திட்டத்திற்கு மரணத்தால் ஏற்படும் விளைவு.

RRSP மூலம் வீடு வாங்குவதற்கு முதலீடு செய்திருப்பின் உங்களுக்கு மரணம் ஏற்படும் வேளையில் அதிலுள்ள தொகை உங்கள் கடைசி வரி படிவத்தில் வருவாயாகக் கணிக்கப்படும். எனினும் உங்கள் மனைவியை வாரிசாக நியமித்திருப்பின் அவர் ஒரு RRSP திட்டத்தை வைத்து அதில் இத்தொகையை இடுவதன் மூலம் வரிச்சுமையில் இருந்து தப்பலாம்.

இன்னுமொரு சிக்கல் ஏற்பட இடமுண்டு. அதாவது, வீடு வாங்கும் RRSP திட்டத்திற்கு மீள் கட்டவேண்டிய தொகை இருப்பின் இரு விதமாக அணுக முடியும்.

அந்த கட்ட வேண்டிய தொகையை வரிப்படிவத்தில் காட்டி வரித்தொகையை கணித்துக் கட்டலாம். அல்லது முழு RRSPயையும் உயிருடன் இருக்கும் கணவன் அல்லது மனைவிக்கு முன்பு கூறியது போல் மாற்றி வரி விலக்கைப் பெறலாம். எப்படிச் செய்வதானாலும் எப்படி வரிச்சுமையை குறைக்கலாம் என்பதை அவதானிப்பதவசியம்.

### RRIF

இளைப்பூதிய வருவாய் தரும் RRSIFகள் தமது சோடியை முன்பே பயனடைவதற்கு அறிவித்திருந்தால் அவர்கள் அந்தத் தொகையை தொடர்ந்து பெறலாம். அல்லது தங்கள் RRIFக்கு தொகையை மாற்றிக்கொண்டு பயனடையலாம். உயிருடன் இருப்பவர் 71 வயதிற்கு குறைவாக இருப்பின் தமது RRSP யில் இந்தப் பணத்தை வரியில்லாமல் இருப்பு வைக்க முடியும்.

நீங்கள் எப்படிச் செய்வதானாலும் முறையான திட்டமிடல் தான் வெற்றிக்கு வழி. குருடன் பெண்டிலுக்கு அடித்த மாதிரி செயல்படுவது மடமையாகும். உங்கள் குறி, வரிச் சுமையை குறைப்பதாயிருக்க வேண்டும். பாடுபட்டுத் தேடிய பணத்தை வீணாக வரி கட்டுவதில் இறந்தும் செலவு செய்யாமல் நல்ல திட்டமிட்டு செயல்படுத்துங்கள்.

kalinathan@thaiveedu.com,

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail:thaiveedu@gmail.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422



# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க

**Home Life**
GTA Realty Inc., brokerage
206-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3YS
Bus: 416-321-6969 Fax: 416-321-6963

**Baskaran Sinnadurai**
Commercial & Residential Sales Representative
**416-880-8585**





Space for banquet hall
liqurar licence for 1000 people ,
very good location , plenty of parking ,
lease for up to 25 years




Weekly Sales $11,000-$13,000
Very Low Rent ($1200/Over 2000 Sq. Ft)
Canada Post, Purolator, Greyhound Bus Depot,
Lotto 639, Nevada Tickets



Dollar store
Only for 39,900
Good locatiion



INDUSTRIAL BUINDING WITH
40,000SQ
$3595000.00



BANQUET HALL WITH 250SEATS
$190,000




10 ACRE LAND WITH
INDUSTRIAL ZONING
$1100,000.00





# Higher Standards Agents... Higher Results!

Warden / Lawrence




Sold for 102% of asking Price

**I Need More Listings!!!!**

**Power of Sale-Brampton**



**$334,900**
Chinguousy/Bovaird
3 Bdrm, 4 Wrm
Basement Fin.

**For Sale - Markham**



**$374,800**
Middlefield/Dennison
3+2 Bdrm, 4 Wrm,
Basement Fin.,
Sep. Entrance.

**For Sale - Brampton**



**$378,963**
Mayfield Rd & Hwy 10
2 bdrm., 4 Bdrm, 3
Wrm, Basement part. Fin.

**For Sale - Brampton**



**$399,000**
Sandalwood/Sunny
Meadow, 5+2 Bdrm,
4 Wrm, Basement Part.
Fin.


**For Sale - Vaughan**



**$419, 900**
Weston/Major Mack
4+2 Bdrm, 4 Wrm, Base-
ment Fin.

**Great Deals For Buyers**

**Power of Sale - Brampton**



**$429,000**
Airport /Mayfield,
4 Bdrm, 3 Wrm, Base-
ment Fin

**For Sale - Markham**



**$539,900**
14th/Highglen,
4+2 Bdrm, 5 Wrm,
Basement Fin., Sep.
Entrance

**Power of Sale - Brampton**




**$309,900**
Chinguacousy/Wanless,
4+1 Bdrm, 4 Wrm,
Basement Fin.

**Power of Sale - Milton**



**$386,000**
Clark S/Ferguson
E/Robson, 4 Bdrm, 3
Wrm

**Sale of Business - Brampton**



**$59,000**+ Stock
Sandalwood / Vankirk
Price Reduced!!!!
3 Years New

**LOW Commission**

**Call before you list, See the Difference!!!**



# HomeLife/Future

**Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

# Ruby Thambiah

Sales Representative
Dir: **416-999-5337**
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
rubysri@hotmail.com, www.buyandsellwithruby.com

digi







# Shan Thayaparan
Sales Representative

**Thinking of .....**
Selling
Buying or
Renting....
**For all your Real Estate needs**
**Please Call me First.**

***Dir: 416-567-7675***
***Web:shan123.com, Email: shan123@rogers.com***
***Bus: 416-321-2228***

Flexible Commission
Reliable Service & Full Time Agent
Free Market Evaluation

RE/MAX®
Above the Crowd!® Vision Realty Inc. 2210 Markham Road. TorontoM1B 5V6

My Team will help you to find Lawyers, Home Inspectors, Mortgages
Also We do Refinances and find Tenants for your Rental properties


*Not Intended to solicit properties currently listed or Buyers under buyers under agreement*

அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# அமெரிக்காவுக்குமட்டும் சென்று வர அனுமதிக்கும் புதிய சாரதி அனுமதிப்பத்திரம்

## (Enhanced Driver's License)

தகவல் தொடர் - 30


சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

கனடாவில் இருந்து எந்த ஒரு நாட்டுக்கும் விமான மூலமோ அல்லது தரைமார்க்கமாகவோ செல்ல வேண்டுமானால் பாஸ்போர்ட் நிச்சயம் தேவை என்பது சகலரும் அறிந்த விடயம்.

ஆனால் இதுவரை காலமும் தரை மார்க்கமாக கனடாவில் இருந்து அமெரிக்கா செல்லும் ஒருவர் கனடாவின் பிரஜா உரிமை அந்தஸ்து உள்ளவராக இவ் பிரஜாஉரிமை அடையாள அட்டையுடன் சென்று வரக் கூடியதாக இருந்து வந்தது (ஆனால் விமானத்தில் பிரயாணம் செய்யும் போது எப்போதும் கடவுச் சீட்டு தேவை).

இவ் வருடம் யூன் 1ஆம் திகதி 2009இல் இருந்து தரைவழி பிரயாணமாக அமெரிக்கா செல்லும் சகல கனடாவின் பிரஜையும் கனடிய பாஸ்போர்ட் இருந்தால் மட்டுமே பிரயாணம் செய்யலாம் என்ற சட்டமூலம் அமுலில் வந்துள்ளது. இப் பாஸ்போர்ட்டினை எந்நேரமும் வாகனத்தில் கொண்டு திரிதல் என்பது அடிக்கடி சென்று வருபவர்களுக்கு சிரமமாக இருக்கும் என்பதால் மேலதிகமாக ஒரு புதிய சாரதி அனுமதி பத்திரத்தினை (Enhanced Driver's License) தாங்கள் விரும்பினால் விண்ணப்பித்து பெற்று வைத்திருந்தால் கனடியப் பாஸ்போட்டிற்குப் பதிலாக இதனைக் காட்டி, இலகுவாக இம் மேலதிக சாரதி அனுமதி பத்திரத்துடன் அமெரிக்கா சென்று வரலாம் என்பதனை அறிந்து கொண்டீர்களா?

ஒன்ராறியோ மாகாணத்திலிருந்து வருடம் ஒன்றுக்கு ஒரு மில்லியன் வாகனங்கள் எல்லையினை கடந்து அமெரிக்காவினுள் சென்றுவருவதால், அடிக்கடி பிரயாணம் செய்பவர்களுக்கு என உருவாக்கப்பட்டு இம் மாதத்தில் இருந்து அமுலில் கொண்டு வரப்படுவதே இப் புதிய செயல்முறை திட்டம் ஆகும்.

### இம் மேலதிக சாரதி அனுமதி பத்திரத்திற்கு (Enhanced Driver's License) விண்ணப்பம் செய்து பெற தகுதியானவர்கள் யார்?

- கனடாவின் பிரஜையாக இருத்தல் வேண்டும்
- கனடாவில் ஒன்ராறியோ மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்
- ஒன்ராறியோவின் வலிமையான சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும். (G1 அல்லது G2 சாரதி அனுமதிப் பத்திரமாகவும் இருக்கலாம்).
- பிரயாணம் செய்ய சட்ட ரீதியான தடை இல்லாதவராக இருத்தல் வேண்டும்.

### எப்படி இப் பத்திரம் இருக்கும்? எப்போது தொடக்கம் இப் பத்திரம் அமல்படுத்தப்படுகின்றது? எப்படி இதனைப் பெறுவது? தகவல்களை எப்படிப் பெறுவது?

ஒன்ராறியோ மாகாணத்தில் புதிதாக வழங்கி வரும் சாதாரண சாரதி அனுமதி பத்திரம் போலவே எதுவிதமான வித்தியாசமும் இல்லாது தங்களின் படத்துடன் இருக்கும்.

"Enhanced Driver's License" என ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் எழுதப்பட்டு இருக்கும். சாரதி அனுமதிப் பத்திரம் மாதிரி எந்நேரமும் இலகுவாக கொண்டு திரியலாம்.

கடந்த மே 19, 2009இலிருந்து விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு யூன் மாதத்திலிருந்து இதனை அமெரிக்க எல்லை கடப்பதற்கு பாஸ்போர்ட்டுக்கு பதிலாக பயன்படுத்தலாம்.

ஒன்ராறியோ மாகாண அரசு தங்கள் மாகாணத்தின் இவ் மேலதிக லைசன்சினை பயன்படுத்தி அமெரிக்காவுக்கு சென்று வர கனடிய, அமெரிக்க மத்திய அரசுடன் ஒப்பந்தங்கள் செய்து சட்டரீதியாக இரு மத்திய அரசுகளின் அங்கீகாரத்தினையும் பெற்றுள்ளது.

இதனை பெறவேண்டுமாயின் ரொறன்ரோவில் பின்வரும் இரு மாகாண அரசின் அலுவலகங்களிலும் மட்டும் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். சாதாரணமாக சாரதி அனுமதிப் பத்திரம் பெறும் இடங்களில் பெற முடியாது.

**Service Ontario**
**77 Bay St**
**Suite M212, Market Level**
**Toronto, Ontario M5G 2C8**

**Service Ontario**
**47, Sheppard Ave, East**
**4th Floor**
**Toronto, Ontario M2N 7E7**

மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின் **416 235 2999** அல்லது **1 800 387 3445** என்ற தொலைபேசிக்கு அழைக்கலாம். இதே போல் **www.serviceontario.ca** என்னும் இணையதளத்தினுள் சென்றும் தகவல்களைப் பெறலாம்.

$40 கட்டணமாக செலுத்துதல் வேண்டும். அத்துடன் மேலதிகமாக குறிப்பிட்ட காலத்திற்கு புதுப்பிக்கும் கட்டணமாக $75 செலுத்த வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்தினையும் பரிசீலனை செய்யும் போது சுமார் பதினைந்து நிமிடங்கள் நேர்முக பரீட்சை நடத்தப்படும். இங்கு விண்ணப்பத்தில் தகவல்கள் வழங்குவதுடன் மேலதிகமாக

- சட்டரீதியான பிரஜா உரிமை பற்றிய நிரூபணம்
- சட்டரீதியான, வலிமையான மாகாண அரசின் சாரதி அனுமதி பத்திரம் தொடர்பான நிரூபணம்
- மேலதிக அடையாள அட்டையினூடாக உறுதிப்படுத்தல் (கனடிய பாஸ்ப்போட், மருத்துவ சுகாதார அட்டை, மாணவர் அட்டை, திருமண அத்தாட்சி பத்திரம் போன்றவை)

ஆகிய மூன்று நிலைகளிலும் நிருபணம் செய்த பின்னர் ஏதாவது கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டவரா? என்பதனை உறுதிப்படுத்துமுகமாக பின்வரும் மூன்று கேள்விகளுக்கு பதில் வழங்கி கைச்சாத்திடல் வேண்டும். அவையாவன பின்வருமாறு:



- Are there outstanding criminal charges against you for an Indictable Offence in Canada? (தங்களுக்கு எதிராக கனடாவில் ஏதாவது கிரிமினல் குற்றச்சாட்டுகள் உள்ளதா?)
- Are you forbidden to leave Canada based on conditions imposed by a Canadian court or a parole board in Canada or by law? (கனடாவினை விட்டு வெளியேற கூடாது என சட்டத்தினால் அல்லது நீதிமன்றத்தினால் கனடாவில் தடை செய்யப்பட்டவரா?)
- Are you currently subject to a sentence of imprisonment in Canada? (கனடாவில் சிறையில் இருக்க வேண்டிய தீர்ப்பு வழங்கப்பட்டவரா?)

மேற்குறிப்பிட்ட தகவல்கள் யாவும் சாதகமாக உள்ளது என்ப꞉ு நேர்முக பரீட்சையில் உறுதிப்படுத்தப்பட்ட பின்பு தற்காலிகமான பத்திரம் 90 நாட்களுக்கு வழங்குவார்கள் (தற்காலிகமான பத்திரத்துடன் எல்லை கடக்க முடியாது). பின்னர் நிரந்தரமான சாரதி அனுமதிப் பத்திரம் அனுப்பி வைப்பார்கள்.

இதனை வைத்து அமெரிக்க எல்லையில் குடிவரவாளர்களின் மின் கணனியில் பரிசோதனை செய்து பார்க்கும்போது எல்லையினை கடப்பவர் பற்றிய சகல விபரங்களையும் தெளிவாக பார்த்து அறிந்து கொள்வார்கள்.

இப் பத்திரம் கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கும் தரைமார்க்கமாக பிரயாணம் செய்பவர்கள் எல்லையினை கடப்பதற்கு மட்டும் பிரயோசனப்படுத்தலாமே தவிர சாரதி அனுமதி பத்திர இலக்கம் அதில் குறிப்பிட்டு இருந்தாலும், சாரதி அனுமதி பத்திரத்துக்கு பதிலாக உபயோகிக்க முடியாது.

சில நேரங்களில் ஏதாவது வழியில் சாரதி அனுமதி பத்திரம் ரத்து செய்யப்பட்டால், இப் பத்திரமும் ரத்து செய்யப்பட்டு விடும்.

sivapanchalingam@thaiveedu.com

■ ■ ■

உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும்
விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call
Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)
Office: 905-479-3400 Ext. 132
Home: 416-321-0999, Cell: 416-990-4908
800, Denison Ave., Suite 201, Markham, ON


# மருத்துவ கேள்வி பதில்



**இராஜசேகர் ஆத்தியப்பன்**

**எனக்கு வயது 25, என் உடலில் இதயம் உள்ளிட்ட முக்கிய உறுப்பு கள் இடம் மாறி உள்ளனவாம் (situs inversus) இரண்டாண்டுகள் முன்புதான் இது தெரிய வந்தது. நான் திருமணம் செய்து கொள்ளலாமா? குழந்தை பிறப்பில் பிரச்சினை ஏற்படுமா? குழந்தை குறைகளுடன் பிறக்க வாய்ப்புண்டா? என் உடல் மெலிந்திருப்பதற்கு என் குறைபாடுதான் காரணமா?**

பொதுவாக எல்லோரது உடலமைப்பிலும் இதயம், மண்ணீரல், மலக்குடல் போன்றவை இடப்புறமும் கல்லீரல், குடலில் சில பகுதி போன்றவை வலப்புறமும் இருக்கும். அதே போல, நுரையீரலின் ஒரு பாகம் வலப்புறமும் ஒரு பாகம் இடப்புறமும் இருக்கும். வலது சிறுநீரகம் உயரத்திலும், இடது இறங்கியும் இருக்கும். இது அப்படியே மாறியிருந்தால் அதுதான் Situs inverses. இது உடலமைப்பின் மாற்றம்தானே ஒழிய நோயல்ல. கரு உண்டாகி 20 முதல் 25 நாட்களில் கரு அப்படியே 360 டிகிரிக்கு சுற்றும். சிலருக்கு 80 டிகிரி சுழலும்போதே அரெஸ்ட் ஆகி அப்படியே நின்று விடும். இதுதான் உங்களுக்கு நேர்ந்திருக்கிறது. ஐம்பதாயிரத்தில் ஒருவருக்கு இதுபோல் ஆவதுண்டு.

இவர்களுக்கு உடலில் அணுக்களின் இயக்கம் குறைவாக இருக்கும். இதனால் சில பிரச்சினைகள் வரும். மூக்கு, நுரையீரல், கர்ப்பப்பை போன்ற பகுதிகளில் இந்த இயக்கம் குறைந்தால் சைனஸ், சளித்தொல்லை, கர்ப்பப்பை பிரச்சினை வரலாம்.

நீங்கள், மாதவிலக்கு நாட்களில் கர்ப்பப் பைக்குள் முட்டை வந்து சேருகிறதா என்று மருத்துவரின் உதவியுடன் சோதித்துப் பார்க்கலாம். முட்டை வந்து விட்டால் ஒரு பிரச்சினையுமில்லை. தாராளமாகக் கரு உருவாகும். உங்களுக்கு இருக்கிற எந்தக் குறைபாட்டுடனும் பிறக்க வாய்ப்பே இல்லை. உங்கள் உடலமைப்புக்கும் இதற்கும் எந்த சம்பந்தமுமில்லை.

வயிற்றுப் போக்கினாலும் சில உணவு வகைகள் உடலுக்கு ஒத்துக்கொள்ளாமலும் இருந்தால் கணையத்திலிருந்து வரும் ஜீரண சுரப்பி திருப்திகரமாக இருக்காது. இதனால் உடல் மெலியலாம். உங்களுக்கு இவை எதுவும் இல்லையெனில், மரபு ரீதியாகக் கூட நீங்கள் ஒல்லியாக இருக்கலாம். உடல் மெலிவதற்கும் இதற்கும் எந்தத் தொடர்புமில்லை.

**எனக்கு அரிசி, பாக்கு, விபூதி போன்றவற்றை மென்று கொண்டே இருக்க வேண்டும் போல உணர்வு இருக்கிறது. தலை முடி கொத்து கொத்தாய் உதிர்கிறது. இது ஏன்?**

உங்கள் கர்ப்பப்பையில் உள்ளது மயோமா, அதாவது யூட்ரைன் ஃபைப்ராய்டாகத்தான் இருக்க வேண்டும். இது புற்று அல்லாத கட்டி, இந்தக் கட்டியுடனேயே நிறையப் பெண்களுக்கு கர்ப்பம் தரித்து சிசேரியன் மூலமாகக் குழந்தை பிறந்துள்ளது. (நோமல் டெலிவரி அவ்வளவாக சாத்தியமில்லை) சிலருக்கு இந்த கட்டியாலேயே கர்ப்பம் தரிக்காமல் போகவும் வாய்ப்புண்டு.

கர்ப்பப்பையில் உங்கள் கட்டியின் அளவு, அது இருக்கிற இடம் போன்றவற்றை ஸ்கேன் செய்து பார்க்க வேண்டும். கட்டி சிறியதாக இருந்தால் மயோமெக்டமி ஆபரேஷன் மூல மாகவும், பெரிதாக இருந்தால் லேபராடமி மூலமும் நீக்க வேண்டும். இதனை செய்த பின் குழந்தை பிறக்க வாய்ப்பு நிறைய உள்ளது. ஆனால், கட்டியின் நிலை தீவிரமாக இருக்கும் பட்சத்தில் வேறு வழியே இல்லை. கர்ப்பப்பையை நீக்கத்தான் வேண்டும்.

துவர்ப்பான பொருள்களை மெல்ல வேண்டும் என்கிற உணர்வு ஏற்படுவது ரத்த சோகையால். ரத்தப் போக்கு அதிகம் உள்ளதால் ரத்த சோகை நேரலாம். தவிர வயிற்றில் புழுக்கள் இருக்கிறதா என்று மோஷன் டெஸ்ட் செய்து மருந்து உட்கொள்வதும் அவசியம்.

**எனக்கு 38 வயது. நான்கு குழந்தைகள். என் அறியாமையால் 6 முறை கருக்கலைப்பு செய்துள்ளேன். பின்னர் குடும்பக்கட்டுப்பாடு ஆபரேஷனும் செய்து கொண்டேன். எனக்கு சிறுநீர் போகும் இடத்தில் குண்டாக என்ன மோ தெரிந்தது. மருத்துவர் கருப்பை நன்றாக உள்ளதென்றும் அதைச் சுற்றியுள்ள பகுதி லூசாக இருப்ப தாகவும் தெரிவித்தார். இதனால், என் தாம்பத்தியம் பாதிக்கப்பட்டுள்ளது. கணவரின் புறக்கணிப்பால் மனம் நொந்திருக்கிறேன். இதற்கு 'யோகா' உபயோகமாக இருக்குமா?**

இதற்கு அடி இறங்குதல் என்று பெயர்.



அதாவது உள்ளே இருக்கவேண்டிய கர்ப்பப் பையின் வாய் வெளியே தெரியும். கர்ப்பப்பை வாயை கருவிபோட்டு இழுத்துத்தான் கருக் கலைப்பு செய்திருப்பார்கள். அதனால் நேர்ந்தது இது. கஷ்டமான டெலிவரியாக இருந்தாலும் இப்படி நேரலாம். இருமினால் கூட கீழே வந்துவிடும் சிலருக்கு.

பொதுவாக ஒரு ரிங்போட்டு உள்ளே தள்ளுவோம். இந்த ரிங்கை அடிக்கடி எடுத்து சுத்தப்படுத்த வேண்டும். உள்ளேயே வைத்தும் தைத்துவிடலாம்.

இதைச் சரி செய்ய ஒரு நல்ல பயிற்சியுண்டு. நீங்கள் யூரின் போகும் போது அடக்கி அடக்கிப் போங்கள். ஒரு நாளைக்கு குறைந்தது பத்துமுறை இப்படி ரெகுலராக செய்தால் மீண்டும் அப்பகுதி சுருங்கி விரியும் தன்மை யை அடைய அதிகம் வாய்ப்புண்டு.

இதற்கு யோகா உபயோகப்படுமோ என்று தெரியவில்லை. ஒரு வேளை அந்த பெல்விக் ஏரியாவின் தொய்வை சரிசெய்கிற பயிற்சி யோகாவில் இருந்தால் நிச்சயம் பலன் தரும்.

தாம்பத்யம் பாதிக்கப்பட்டதால் கணவர் புறக்கணிப்பதாக நீங்கள் சொல்லியிருப்பது வேதனை தருகிறது. துக்கம். சந்தோசம் இரண்டிலும் துணை இருப்பதுதான் துணைவருக்கு அழகு.

**டாக்டர், எனது வயது 43 சமீப காலமாக என்னுடைய லிங்கம் (ஆணுறுப்பு) வளைந்து போய் காணப்படுகின்றது, உறவு கொள்வது சிரமமாக இருக் கின்றது, இது இயல்பானதா அல்லது நோயா? தீர்வு காண, விளக்கம்பெற இந்த கேள்வியை எழுதுகின்றேன்.**

-மாலன் வையாபுரி, மொன்றியல்

மாலனின் துணிவான கேள்விக்கு வாழ்த்துகள். இதற்கான விரிவான விளக்கத்தைத் தர முயல்கின்றேன்.

ஆணின் பாலுறுப்பான லிங்கத்தில் ஏற்படும் வளைவை 1743ல் பிரெஞ்ச் நாட்டின் பிரான்சுவா தெலா பைரோலி என்பவர் கண்டுபிடித்துக் கூறிய காரணத்தினால் இந்த வியாதியின் பெயரும் அவருடைய பெயரும் அவருடைய பெயரோடு ஒட்டி பைரோலி வியாதி என்று அழைக்கப்படுகிறது.

**வயது வரம்பு:** பொதுவாக இந்த லிங்கவளைவு என்னும் சிரமமான வியாதி முப்பத்தைந்திற்குப் பிறகும் எழுபது வயதிற்கிடையிலும் உள்ள ஆண்களின் பாலியல் உறுப்பை வளைத்து சிக்கலாக்குகின்ற முறை உலக அளவில் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். பொதுவாக ஓர் ஆண் மகனின் ஐம்பது வயதிற்குப் பிறகும் வயதாகிய முதுமை நிலைக்கு முன்பாகவும் உள்ள ஆண்களையே அதிகம் பாதிக்கின்றது.

**பரம்பரையும் வியாதியும்:** பொதுவாக இது பரம்பரை வழியாக வருகின்ற வியாதியாக இல்லாவிட்டாலும் சில நேரங்களில் அடுத்தடுத்து சகோதரர்களைத் தாக்குகின்ற நிலைமை ஏற்பட்டதை மருத்துவ உலகம் கண்டுபிடித்துள்ளது.

**காயம் இணைந்த வளைவுத்தன்மை:** லிங்கத்தின் விரைப்புத்தன்மைக்குக் காரண மான இருபக்கமும் அமைந்துள்ள சதைப்பகுதி காயம் அடைவதாலும், விரல் விடுவதாலும் இப்படிப்பட்ட ஒரு நிலை உண்டாவதைத் தடுக்க முடியாது. ஆனால் சில நேரங்களில் தூக்கத்திலோ அல்லது உடலுறவு கொள்கின்ற நேரங்களிலோ இப்படி ஏற்படுகின்ற சதை வீரல் அல்லது காயம் நாளடைவில் இந்த வியாதிக்கு அடிப்படையாக அமைவதுண்டு. சில நேரங்களில் இந்த அவல நிலை ஏற்படாமல் சீரடைவதும் உண்டு.

**சிறுநீர்த் தாரை அழற்சி, பாலியல் வியாதிகள் மற்றும் லிங்க வளைவு:** செஸ்னியம், பர்காடும் தங்களுடைய ஆய்வில் வாழ்க்கையின் ஒழுக்க முறையில் துவறுகின்ற ஆண்களை ஆய்வுசெய்து பாலியல் நோய்கள் மற்றும் கிருமிகளின் அழற்சிகள் இப்படிப்பட்ட நிலையை உருவாக்குவதை கணித்துள்ளார்கள்.

**லிங்க இரத்த குழாய் அடைப்பும் அதன் வளைவும்:** ஆணின் பாலுறுப்பான லிங்கத்தை இரத்தக்குழல்களான தமனியும், சிறையும் மிக அளவு கடந்து இருப்பதோடு, சில நேரங்களில் இரத்த உறைவு ஏற்பட்டு அந்த உறை, சிறைகளில் அடைப்பை ஏற்படுத்துவதுண்டு. இந்த அடைப்பால் ஏற்படும் தடையும் தடிப்பும் நாளடைவில் ஒரு சுருக்கத்தையும் வளைவையும் லிங்கத்தில் ஏற்படுத்துவதுண்டு. இதுவே இணைந்துள்ள விறைப்பில் சதைப் பகுதியைத் தாக்கி அதற்குரிய செயலை சீர்கெடவைத்து இப்படிப் பட்ட லிங்க வளைவை ஏற்படுத்துவதுண்டு.

**மற்ற காரணங்களும், லிங்க வளைவும்:** நீண்ட ஆராய்ச்சியில் இதைப்போன்ற சதை மாற்றங்கள் எப்படி லிங்க வளைவை ஏற்படுத்துகின்றதோ அதைப்போன்று உடம்பில் வேறு பகுதிகளில் இப்படிப்பட்ட மாற்றங்கள் உண்டாகுவதைக் கண்டுபிடித்துள்ளார்கள். கைகளில் நம்முடைய ஐந்து விரல்கள் இணைந்துள்ள உள்ளங்கையோடு தொடர்கின்ற மணிக்கட்டுப் பகுதியில் இப்படிப்பட்ட சதைச் சிதைவும் சதைச் சுருக்கமும் சதை நெருக்கமும் ஏற்பட்டு கைகளில் மணிக்கட்டிற்குரிய நீட்டி மடக்கும் தன்மை பாதிக்கப்பட்டு ஒருவித ஊன நிலை ஏற்படுவதுண்டு. இதனால் மணிக்கட்டு கீழ்ப்புறமாக வளைந்து மேல்நோக்கி நீட்ட முடியாத ஒரு நிலையில் பாதிக்கப்பட்டவர் சிரமப்படுவது உண்டு. இந்த நிலையில் துன்பப்படும் சிலருக்கு லிங்கத்தில் ஏற்படும் வளைவை பைரோனி வியாதி என்று கூறுவது போன்று இந்த மணிக்கட்டில் ஏற்படும் வளைவை டெட்பூரியன் என்பவரின் பெயரோடு இணைந்து டெப்பூட்டிரியன் வளைவு என்று கூறுகின்றோம். இதே போன்ற மாற்றங்கள் சிறுநீரகத்திலிருந்து கீழ்நோக்கி வருகின்ற சிறுநீர்க் குழாய் களை சுற்றியுள்ள சதைகளில் ஏற்பட்டு அங்கே சிறுநீர்த் தேக்கத்தை ஏற்படுத்துவ துண்டு. அதேபோன்று சிலருடைய தோலில் ஏற்படுகின்ற சிறிய காயங்கள் பெரிய வடுக் களாக மாறி அழகைக் கெடுப்பதும் உண்டு. இப்படிப்பட்ட வியாதிகள் பலநேரங்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பல சகோதர சகோதரிகளைப் பாதிப்பதும் உண்டு.

**நோயின் தன்மை:** பொதுவாக ஆணினுடைய பால் உறுப்பில், அதுவும் மேல்பகுதியில் உள்ளே கட்டி போன்றும், மேலே அதை இணைக்கின்ற தோல் உருமாறியும், வடு போன்றும் காட்சியளிக்கும். அதைத் தொட்டுப் பார்க்கின்ற பொழுது அந்த இடத்தில் உள்ள சதையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை மிக நன்றாக உணரலாம். முன்பு கூறியதைப் போன்றே விரைப்புத்தன்மைக்குரிய இரண்டு பகுதிகளாக உள்ள நீண்ட சதை நார்கள், அதற்குரிய தன்மை இழந்து, நார் போன்ற செல்களின் கூட்டத்தினால் இந்தப் பாதிப்பை ஏற்படுத்தி மஞ்சை போன்று சதைகள் உரு மாறி, வறண்டு சுருங்கி அந்த சதைக்குரிய இயற்கையான தன்மையை அழித்து இவ் விதமான பாதிப்பை ஏற்படுத்தி இறுதியில் லிங்கம் வளைகின்ற ஒரு நிலையை உண் டாக்கிவிடுவதே கண்கூடாகும். இதற்கு உரிய காரணம்தான் என்ன? ஆய்வு செய்த மருத்துவ உலக நிபுணர்கள் அவர்களுக்கு உரிய நிலையில் சில காரணங்களை காட்டினார்கள் என்றாலும் இன்னும் ஒரு முடிவான காரணத் தை கூற இயலவில்லை. ஒரு சில மருத்துவர்கள் ஆய்வு செய்து கூறுகின்றபொழுது சிறுநீர்த் தாரையில் ஏற்படும் நுண்கிருமிகளின்

49ம் பக்கம் பார்க்க...

நேரடி மருத்துவ ஆலோசனைகள்
கேரள ஆயுர்வேத மருத்துகள்
பெற்றுக்கொள்ள
416 995 0416

# TIM HERBALS

TIM, A-4, Birmingham Business Center,
80, Birmingham Road, Toronto,
Birmingham/Islington South.

நல்வருனேந்திரன், ஓட்டுனர் (சாரதி)



நான் இடுப்பு வலியினால் மிகவும் அவஸ்தைப்பட்ட வேளையில் டாக்டர் அவர்களின் சிகிச்சையால் புதுவாழ்வு பெற்றேன். இப்பொழுது உற்சாகத்துடன் செயலாற்ற முடிகின்றது. நன்றி.

இராகவன், தொழில்அதிபர்



திடீரென்று ஏற்பட்ட L-4 பிரச்னைக்கு, டாக்டர் அவர்களின் கேரள ஆயுர்வேத சிகிச்சை அதிசயத் தீர்வைத்தந்தது. இது எனக்கு மறுவாழ்வு என்று தான் சொல்வேன்.

யமுனா, (Sales Co-ordinater)



எனக்கு நீண்ட நாட்களாக முடி உதிர்தல் மற்றும் ஒற்றைத் தலைவலி இருந்து கொண்டே இருந்தது. கேரளா ஆயுர்வேத சிகிச்சையில் கடந்த நான்கு மாதங்களாக சிகிச்சை பெற்றேன். இப்போழுது 95 % குணம் பெற்றுவிட்டேன்.

அருள், சார்ன்யா




எனது உடம்பு முழுவதும் ஏற்பட்ட சொரியாஸிஸ் என்ற தோல் நோய் 15 வருடங்களாக என்னை வாட்டி வதைத்தது. இப்போழுது சுகம் பெற்று மகிழ்ச்சியாக இருக்கின்றேன்.

## கேரளா ஆயுர்வேத சிகிச்சை

பாரம்பரிய இந்திய மருத்துவத்தில்
15 வருடங்கள் அனுபவம் பெற்ற
Dr. இராஜசேகர் ஆத்தியப்பன்
ayurvetha@gmail.com

416 995 0416

## INM - Institute of Natural Medicine



இயற்கை வைத்ய பயிற்சி
(தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டும்)

- Certificate Course in Traditional Medicine - 1 Year
- Diploma in Herbal Medicine - 2 Years
- Certificate course in Acupuncture - 6 months
- Diplima in Yoga, Varma & Panchakarma - 2 Years

For Registration, Course fee & Other details
Contant Dr. ராஜ்
பதிவு செய்ய பயிற்சி கட்டணம் பற்றி அறிய
அழையுங்கள் 416-995-0416
Email:ayurvetha@gmail.com

குறிப்பு: அக்யுபங்க்சர் மேற்படிப்புக்கு Mc Master பல்கலை கழகத்தில் சேர்வதற்கும் நல்ல வாய்ப்பு
வயது வரம்பு இல்லை

ச ரி க ம ப த நி

குரல் வளப் பயிற்சி



VOICE TRAINING
VOICE REPAIR

நீங்கள் வளரும் பாடகரா ?
காந்த குரலால் கவர்ந்திட
உங்கள் குரலை வளப்படுத்த விருப்பமா ?

பயிற்சி காலம் 21 நாட்கள்
20 மாணவ / மாணவியர் மட்டும்

தடுமாற்றமான குரல், தடைபட்ட குரல், பிசிறும் குரல் எதுவானாலும் மூலிகை உதவியுடன் சரி செய்யலாம்.

இந்தியாவின் பிரசித்தி பெற்ற பயிற்சியாளரை
சந்தியுங்கள்
வாய்ப்பு ஒரு முறைதான் வரும்
ஆலோசனை மற்றும் பயிற்சி பெற
முன்பதிவு செய்யுவும்

647 2588 647

உங்கள் ஆரோக்கியம் மற்றும் அழகு சாதனப் பொருட்கள் பற்றி அறிந்துகொள்ள
www.rathiappan.qhealthbeauty.com
இணைய தளத்தை பார்வை இடுங்கள்.

ஆயுர்வேத மருத்துவ ஆலோசனை பெற
டாக்டர். ராஜ்



அவர்களை தொடர்பு கொள்க
416-9950-416

ஆண்மைக்கும், வீரிய சக்திக்கும்



ஆயுர்வேத மூலிகை மருந்துகள்
416-9950-416




# பத்து நாட்கள்...

27ம் பக்கத் தொடர்ச்சி...

ருசியான பதார்த்தங்கள் மேஜரின் சமையலறையிலிருந்து எங்கள் வீடுகளை தேடி வந்தன. வீட்டுக்காரர்கள் சமைப்பதை நிறுத்திவிட்டார்கள். சோக்கிதார்கள் தங்கள் உணவுப் பொதிகளை மறந்தார்கள். நந்திக்கோட்டில் இருந்து தருவிக்கப்பட்ட சிறப்பு சமையல்காரர்களின் சமையல் வாழ்நாளுக்கும் மறக்க முடியாதது என்பதில் எங்களிடையே கருத்து வேற்றுமை கிடையாது.

மணமகளை வீட்டுக்கு அழைத்துவந்த அடுத்தநாள் இரவு பிரபல கஜல் பாடகர் நுஸ்ரத் ப.்.டே அலிகான் தன் பரிவாரங்களுடன் வந்தார். அவர் பாடுவதற்குவரவில்லை மேஜருக்கு வேண்டியவர் என்று சொன்னார்கள். ஆனாலும் செய்தி பரவிவிட்டது. சனங்கள் ஒவ்வொருவராக வீதியில் சேரத்தொடங்கினார்கள். மேஜர் அவரை ஒரேயொரு பாடல் பாடச் சொல்லி வேண்டிக்கொண்டார். நுஸ்ரத் மணவிழாக்களில் பாடமாட்டார் என்பது எல்லோருக்கும் தெரியும். விதிவிலக்காக நண்பரின் வேண்டுகோளை ஏற்று ஒலி பெருக்கிகளை அணைத்துவிட்டு ஒரேயொரு கஜல் பாடல் பாடினார். அவருடைய கண்டத்தில் இருந்து புறப்பட்ட கர்ஜனை போன்ற குரல் அந்த வீதியை ஒரு பனிமூட்டம்போல மூடியது. பாடல் முடிந்த பிறகு எழும்பிய கைதட்டல் வெகுநேரம் நீடித்தது. எங்கள் வீதியை தாண்டி பந்தலுக்கு வெளியேயும் ஆட்கள் நிரம்பி வழிந்தார்கள். 'இன்னும் வேண்டும்' என்று அவர்கள் கத்தினார்கள். எனக்கு தில்லானா மோகனாம்பாள் படத்தில் மதன்பூர் மகாராஜாவின் அரண்மனைக்கு வெளியே சண்முகசுந்தரம் என்ற சிவாஜி கணேசன் சனங்களுக்கு நாதஸ்வரம் வாசித்த காட்சி நினைவுக்கு வந்தது.

ஐந்தாறு நாட்கள் கழித்து பந்தலைப் பிரித்தபோது எங்கள் வீதி திடீரென்று வேறு வீதிபோல ஆகிவிட்டது. உடனேயே எங்களால் இயல்பு நிலைக்கு திரும்ப முடியவில்லை. என்னிடம் மின்சாரம் கடன் வாங்கி ஒலித்த இசை நின்றுவிட்டது. இரைச்சலுக்கு பழகிய செவிகளால் அமைதியை எதிர்கொள்வது சிரமமாகவிருந்தது. வெண்கலத் தாம்பாளங்களில் சுவையான உணவு பரப்பி வருவதும் நின்று போனது. காலை வேளைகளில் ஒவ்வொரு வீட்டுக்காரரும் வெளியே வந்து பெட்டிக்கடை நவாஸ் வந்துவிட்டானா என்று எட்டிப் பார்த்தார்கள். பத்து நாட்களாக அவன் இல்லை. சரியாக 11வது நாள் நான் மேல் மாடியில் நின்று பார்த்தபோது புதிய பெட்டிக்கடை ஒன்று திறந்திருந்தது. நவாஸ் ஒன்றுமே நடக்காததுபோல ஊதா நிறமாகிவிட்ட அவனுடைய சல்வார் கமிசை அணிந்து கொண்டு, வாரிய நீண்ட தலைமுடியுடன், ஒரு கிளையினால் பல்லை தீட்டியபடி நின்றான். நான்தான் அன்று அவனிடம் சென்ற முதல் ஆள். தினசரிப் பேப்பரும், பாணும் வாங்கினேன். அவன் இவ்வளவு நாளும் எங்கே போனான், ஏன் போனான் என்ற விவரங்கள் பற்றி என்னிடம் வாய் திறக்கவில்லை. ஆனால் அவன் கேட்ட முதல் கேள்வி விசித்திரமானது. 'சேர், பா.்.டே அலிகான் பாடினாராமே, உண்மையா?'

'அருமையான இசை. அரைமணி நேரம் நிறுத்தாமல் பாடினார்' என்றேன். அவன் கண்கள் ஏக்கமாக மாறின. 'அப்படியா. அவர் என்னுடைய ஊர்க்காரர். அவர் குடித்த தண்ணீரை நான் குடித்தேன். அவர் சுவாசித்த காற்றை நான் சுவாசித்தேன். அவர் நடந்த மண்ணில் நான் நடந்தேன். ஆனால் அவருடைய பாடலை இன்றுவரை நான் நேரிலே கேட்டதில்லை.' அவனுடைய குரலில் பெருத்த சோகமும் ஏமாற்றமும் தொனித்தன.

நவாஸ் முகம் கொடுத்து பேசுவதாக தெரியவில்லை. கேட்ட கேள்விகளுக்கு கையிலே பிடித்திருந்த கிளையை பார்த்தபடி பதில் சொன்னான். மணமுடித்த மேஜர் வீட்டு பையனை அவன் தோளிலே தூக்கிவைத்து விளையாடியதை என்னிடம் சொல்லியிருந்தான். சரியாக அந்த நேரம் பார்த்து மேஜரின் மகன் நித்திரை கலையாத நிலையில் அசைந்து அசைந்து வந்தான். நவாஸ் பரபரப்பானான். 'சிகரெட்' என்ற ஒரு வார்த்தை மட்டுமே இளைஞன் வாயிலிருந்து வந்தது. ஒட்டகம் படம் போட்ட சிகரெட் பெட்டியை எடுத்து அந்த ஒட்டகம் போலவே வளைந்து கொண்டு நவாஸ் நீட்டினான். இளைஞன் கண்ணாடித்தாளை ஒரு சுழட்டில் கிழித்து சிகரெட் ஒன்றை எடுத்து வாயில் வைத்தான். லைட்டரினால் நவாஸ் அதை பற்ற வைத்த போது இளைஞன் ஏதோ முணுமுணுத்தான். எனக்கு அப்போது அமெரிக்காவை தோற்றுவித்த பிதாமகர்களில் ஒருவரான பெஞ்சமின் பிராங்க்ளின் கூறியது நினைவுக்கு வந்தது. 'தன்மானம் வெளியேறிவிடுவதால் ஏழைகள் எப்பொழுதும் வளைந்துதான் காணப்படுவார்கள். எங்கேயாவது வெறும் சாக்குப்பை நிமிர்ந்து நிற்கமுடியுமா?'

பாணையும் பத்திரிகையையும் தூக்கிக்கொண்டு நான் வீட்டை நோக்கி நாவல் பழங்களின்மேல் நடந்து சென்றேன். அன்றிரவு படுக்கமுன் தொலைக்காட்சியில் டிஸ்கவரி பார்த்தேன். குளிர்காலம் தொடங்குவதற்கு முன்னர் கரிபோ மான்கள் வடதுருவப் பகுதியிலிருந்து தெற்காக இடம் பெயர்வதை காட்டினார்கள். நிலம் தெரியாதபடி அவை கூட்டம் கூட்டமாக நகர்ந்தன. அப்பொழுது தூரத்தில் ஒரு பாறையில் ஒரேயொரு ஓநாய் தன் பாட்டுக்கு உட்கார்ந்திருந்தது. உடனே 30 லட்சம் மான்களும் ஒரு திசையை நோக்கி தலைதெறிக்க ஓடத்துவங்கின. நிருபர் 'ஏன் இவை இப்படி பாய்ந்து பாய்ந்து ஓடுகின்றன?' என்று கேட்டார். அதற்கு விஞ்ஞானி சொன்னார் 'அவற்றின் மரபணுக்களில் 'பயப்படு' என்ற தகவல் எழுதியிருக்கிறது' என்று. மனிதர்கள் சிலரிலும் இப்படியான தகவல்கள் மரபணுக்களில் பதிந்து கிடக்கும் போலும் என்று யோசித்தபடி நான் அன்று தூங்கிப் போனேன்.

வருடம் தவறாமல் 365 நாட்கள் வேலை செய்த நவாஸ் அந்த வருடம் 355 நாட்கள் மட்டுமே வேலைசெய்தான். நாவல் பழ பருவம் போய் குளிர்காலம் தொடங்கிய போது நவாஸ் கடைக்கு காலையில் வரும் கூட்டம் குளிராடை அணிந்து வந்தது. மாலை நேரங்களில் வீதியில் நடை பயின்றார்கள். புதுமணத் தம்பதிகளையும் சில வேளைகளில் காணக்கூடியதாக இருந்தது. மணநாள் அன்று அந்தப் பெண்ணை நான் நல்லாய் பார்க்கவில்லை. அவள் மயில் தோகை விரிப்பது போல தோள்களை விரித்து கவர்ச்சியாக காட்சியளித்தாள். கராச்சியில் இருந்து வருவிக்கப்பட்ட நாகரிகமான பெண். அவள் நெஞ்சை முன்னேவிட்டு பின்னால் நடந்தாள். அவளுக்கு பின்னால் அவன் நடந்தான்.

நீண்ட இடைவெளிக்கு பின்னர் ஒரு நாள் காலை அதிசயமாக மேஜரும் வீதியில் தோன்றினார். தொளதொளத்த மேலாடையை பல்லினால் கவ்விப்பிடித்தபடி சல்வாரின் கயிற்றை இறுக்கி கட்டியவாறு அவர் நாவாஸ் கடையை நோக்கி நடந்தார். பிரசவக்கோடு போல ஒரு கறுப்பு தழும்பு அவர் வெள்ளை உடலில் விழுந்திருந்தது. அவருடைய தேகம் ஓய்வு பெற்றாலும் வயிறு முப்பதை தாண்டவில்லை. பங்களதேஷ் போரில் அவர் பெரும் சாகசம் செய்தார் என்று கேள்விப்பட்டிருந்தேன். அவருடைய உச்சகட்ட வீரப்பிரதாபம் வேறு ஒன்றும் இல்லை. சிறைபிடிக்கப்பட்ட 91,000 பாகிஸ்தானியர்களின் பட்டியலில் அவருடைய பெயர் இல்லை என்பது தான்.

பத்தடி தூரத்திலேயே மேஜரைக் கண்ட நவாஸ் ஓர் எலும்பில்லாத பிராணிபோல மாற்றமடைந்தான். தவழ்வதுபோல அவரை நோக்கி ஓடினான். தையல்காரர் ஊசியை வாயிலே வைத்துக்கொண்டு பேசுவதுபோல பல்லினால் மேஜர் எதையோ சொல்ல நவாஸ் வயிற்றை இரண்டாக மடித்து விழுந்து சிரித்தான். போப்பாண்டவர் கிரிகோரி 1582ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பத்து நாட்களை உலக காலண்டரில் இருந்து கிழித்தது போல இங்கேயும் யாரோ அந்த வருடம் பத்து நாட்களை அழித்துவிட்டார்கள் என்று நினைத்துக்கொண்டேன்.

muththulingam.a@thaiveedu.com

■ ■ ■

# புது மதம்

- குமார் புனிதவேல் -

எங்கே ஏற்கனவே உள்ள மங்களுடன் இன்னொரு மதத்தை கொண்டுவந்து குழப்பப் போகிறான் என்று முனுமுனுப்பது எனக்கு புரிகிறது. தயவு செய்து அவசரப்பட வேண்டாம். இது ஒரு புதுமையான மதம். சரி சரி எல்லா மதமும் தங்களது மதம் தான் புதுமையானது என்று தான் சொல்கிறார்கள் என்று முனுமுனுப்பை மாற்றி விட்டீர்களா. ஏன் தானோ நீங்கள் முந்திரிக் கொட்டை மாதிரி முந்திக்கொண்டிருக்கிறீர்கள். சற்று பொறுமையாகத்தான் இருங்களேன். இவனுக்கு ஏன் இந்த விசர் யோசனை என்று யோசித்தால் இந்த யோசனை வந்த கதையே பெரிய கதை. முதலில் எனக்கு ஞானம் வந்த கதையை சொல்கிறேன்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இடத்தில் ஞானம் வரும். உதாரணத்திற்கு புத்தருக்கு போதி மரத்தடியில் ஞானம் வந்தது. மாணிக்க வாசகருக்கு குருந்தை மரத்தடியில் ஞானம் வந்தது. முகமது நபி நாயகத்திற்கு குகைக்குள் ஞானம் வந்தது. ஞான சம்பந்தருக்கு குளத்தங்கரையில் வந்தது. இவர்கள் எல்லோருக்கும் பார்க்க ஆக்கிமிடீஸிற்கு குளிக்கும் தொட்டியில் ஞானம் வந்தது போல் எனக்கு குளிக்கும் பொழுது ஞானம் வந்தது. ஏன் நாம் எல்லா மதத்தையும் இணைக்கும் ஒரு மதத்தை ஆரம்பிக்கக் கூடாது? என்று.

எந்தமதமாக இருந்தாலும் எல்லாருமே குளிக்கத்தான் செய்கிறார்கள். எனவே எல்லாரையும் இனைக்கும் ஒரு மதமாக குளியலை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது?

குளியல் ஒரு சர்வசாதாரணமானவிடயம். அதற்கு ஒரு தனி மதம் அவசியமா என்று கேட்டுவிடாதீர்கள். காரணம் தனி மதம் அல்ல எல்லா மதத்தையும் இணைக்கும் பெரு மதமாக இருக்கும்.

ஏன் குளியல் அவசியம் என்று கேக்கின்றீர்களா? கிறிஸ்தவ மதத்தில் ஞானஸ்நானம் என்று குளித்தபின் ஏற்றுக்கொள்ளவில்லையா? இந்து மதத்தில் ஒரு பெண் வயதுக்கு வந்தால் தோயவாக்க வில்லையா? மனிதன் இறந்தால் கூட குளிப்பாட்டித்தான் அடக்கம் செய்வர். அல்லது எரிப்பர். பின் முழுகிவிட்டு தனது Turn வரும் வரை காத்திருப்பர். இப்படி எல்லா மதத்திற்கும் பொதுவான சடங்கல்லவா இந்த குளியல்.

இலங்கையில் யாழ்தேவி ஓடும் காலங்களில் கொழும்பில் வேலை பார்த்த யாழ்ப்பாணத்தவர்களுக்கு தெரியும். வெள்ளிக்கிழமை கள்ளமாக யாழ்தேவியில் யாழ்ப்பாணத்துக்கு வந்தால் அது 10.30 இரவில் வந்துசேரும். வீட்டுக்கு எப்போ வருவார் என்று காத்திருக்கும் மனைவி வந்தவுடன் நில்லுங்கள் பிள்ளை உங்களைப் பார்க்க இவ்வளவு நேரமும் விழித்திருந்து இப்பத்தான் படுக்கப்போனது. எழுப்புகிறேன் என்றால் வேண்டாம் படுக்கட்டும் காலை கதைக்கலாம் என தட்டிக்கழித்து விடுவார். சாப்பிடுங்கோவன் என்று மனைவி சொல்ல Trainஇல் சாப்பிட்டதாக கூறி தட்டிக் கழித்துவிடுவார்கள். ஆனால், கொஞ்சம் பொறு இரண்டு வாளி தண்ணீர் கிணத்தடியில் தலையில் ஊற்றிவிட்டு வருகிறேன் என்பார். பார்த்தீர்களா பிள்ளையிலும் பார்க்க மனைவி சமைத்த உணவிலும் பார்க்க ஏன் மனைவியிலும் பார்க்க குளிப்பு முக்கியமாகிவிட்டது. இதனால் தான் குளியல் என்னும் ஒரு பெரிய மதத்தை எல்லாரும் ஒன்றாக கழுவி மகிழ்வோம் என்கிறேன்.

மதத்திற்கு ஒரு வழிபடும் இடம் வேண்டும். மனம் சஞ்சலப்பட்டு இருக்கையில் கோயிலுக்கு, அல்லது சர்ச்சிற்கு அல்லது பள்ளிவாசலுக்கு ஏன் விகாரைக்கு போய் சிலநேரம் இருந்து விட்டு வந்தால் அமைதியேற்படும் என்பார்கள் அல்லவா, அதேபோல் எங்கள் மதத்தில் மன அமைதி நாடும் இடம் குளியலறையாய் இருக்கும், நீச்சல் தடாகமாய் இருக்கும் அல்லது கிணற்றடியாய் இருக்கும், ஏன் குளக்கட்டாய் அல்லது கடல் கரையாய் கூட இருக்கலாம். அதுவும் இந்த டொரன்டோ நகரில் ஔவை பாட்டி சொன்ன மாதிரி இனிது இனிது ஏகாந்தம் இனிது என்றால் ஒருவருக்கு ஏகாந்தம் கிடைக்கும் ஒரே இடம் குளியலறை தானே. ஒரு வீட்டில் எந்த அறையில் இருந்தாலும் தனிமை கிடையாது. குளியலறை தவிர. பார்த்தீர்களா எல்லா மதத்தவர் வழி-



படும் இடத்திலும் இனிமையானது. குளியல் மதத்தவர் தமது சடங்கை செய்யும் குளியலறை தானே. இப்போவாகிலும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் இந்த குளியல் மதத்திற்கு கட்டாயம் அவசியம் உண்டு.

ஒரு மதம் என்றால் பல கிளைகள் அதில் இருந்தால் தான் உயர்த்தியாக கணிக்கப் படும். உதாரணத்திற்கு நான்கு வேதங்களை அடிப்படையாக உதித்த இந்து மதத்திலிருந்து சைவம், சமணம், சாக்தம், கௌமாரம், கணபதியம், சௌரம் என்று பல கிளைகள் பரப்பி இந்து மதம் பெரும் ஆலமரமாக விரிந்து பரப்பதில்லையா? அதேபோல் யேசு கிறிஸ்துநாதர் உபதேசத்திலிருந்து உதித்த கிறிஸ்தவ மதத்தில் ரோமன் கத்தோலிக்கர், கிழக்கு பாரம்பரிய சர்ச், புரட்டஸ்தாந்து, பென்டிகொஸ்ட் இப்படி பல கிளைகளுடன் கிறிஸ்தவ மதம் விரிந்து பரந்து இருக்கவில்லையா, அல்லது முகமது நபியின் போதனையிலிருந்து தோன்றிய ஸ்லாமிய மதத்திலிருந்து சுணி முஸ்லிம், சியாக் முஸ்லிம் என பல கிளைகள் தோன்றவில்லையா? நாஸ்திக மதமான புத்தமதத்தில் கூட தேவார புத்தமதம், நயினாயன புத்தமதம், மகாயன புத்தமதம், திபெத் புத்தமதம் என பல கிளைகள் இல்லையா. எனவே ஒரு தரமான மதமாக இருப்பதானால் அதில் பல கிளைகள், உப கிளைகள் என்று இருக்கவேண்டுமல்லவா.

இதுபற்றி சிந்திக்கையில், சற்று நிறுத்தி (ஞானதிருஷ்டியை அல்ல பைப்பை நிறுத்தி) சவற்காரத்தை பூசினேன். அடுத்த ரவுன்ட் பைப்பை திறந்தபோது நாங்கள் சவர்குளியல் மதம், டப்குளியல் மதம், சங்கசி குளியல் மதம், கிணற்றுக்குளியல் மதம், கடல் குளியல் மதம்... லிஸ்ட் கூடிக்கொண்டே போகிறது. எனது ஞான திருஷ்டியில் தோன்றிய காட்சி குருஷேஷ்ரத்தில் அருச்சுனனுக்கு தோன்றிய காட்சியிலும் விரிந்து பரந்து காணப்பட்டது.

முன்னைய மதங்கள் நான் பெரிசு, என்னுடைய பெரிசு, சிறந்தது என்று தம்பட்டம் அடிப்பது போல் இங்கு ஒருவருமில்லாதது ஒரு பெரும் குறை. ஏனென்றால் இங்கு ஒரு அர்ச்சகர் போதகர், முல்லா, தேரோ எவருமில்லையல்லவா. இப்படி யாராவது சண்டை பிடிக்க இல்லை என்ற ஒரு குறையைத் தவிர எங்கள் எந்தக் குறையும் இல்லை. எனவே இந்த Modern மதத்தில் இணைந்து பேரின்ப நிலையில் லயிப்பதற்கு விரும்புபவர்கள் என்னைத் தொடர்புகொள்வதிலும் தாய்வீட்டு இணையத்தளத்துடன் தொடர்புகொண்டு பயனடையுங்கள்.

‘குளியல் மதம் தொடங்கிய ..... போற்றி’
‘விளங்குக குளியல் மதம் உலகெலாம்’

*kumarpunithavel@thaiveedu.com*

■ ■ ■


MORTGAGE

1st & 2nd Mortgages
New Immigrants / Self Employed
Refinance
Equity Line of Credit
Renewal
All other Financial Arrangement

Kethes Sivasubramaniyam
Mortgage Agent - (Lic # M08006105)
Cell : 416.873.5780



Via Financial Services Inc.
(Lic # 10669)

My Office :
5200 Finch Ave. E,
Suite 304,
Scarborough, ON.
M1S 4Z5
Tel : 416-548-8005

Head Office :
120 Traders Blvd.
Suite 206,
Mississauga, ON.
L4Z 2H7



வருமானவரிச்சேவையில்
பலவருடம் அனுபவம்
வாய்ந்தவர்களினால்
நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice

EFILE

Tax Problems?
Penalties?
Haven't Filed?
We can help you...

KETVAR
TAX & ACCOUNTING
304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)
Toronto. ON M1S 4Z5
Tel : 416-873-5780 / 416-548-8005
Email : ketvar@gmail.com

# காப்புறுதியில் குழப்பமா?

சென்ற இதழில் குறிப்பிட்ட திட்டங்கள் அனைத்தையும் தனிப்பட்ட நபரின் (SINGLE LIFE) பெயரில் விண்ணப்பதாராகவோ, ஒருங்கினைந்த திட்டமாகவோ (JOINT LIFE) விண்ணப்பிக்கலாம். இந்த ஒருங்கினைந்த திட்டத்தில் தனிப்பட்ட நபர் உரிமையாளராகவும் (OWNER) விண்ணப்பதாரர் ஒருவருக்கு மேற்பட்டவராகவும் இருக்கலாம். இந்த இரண்டாவது வகையில் இருவரும் உரிமையாளராகவும், விண்ணப்பதாரராகவும் மனுச் செய்யலாம். இந்த மாதிரியான ஒழுங்கினை ஏற்படுத்தும் போது உரிமையாளருக்கு மட்டுமே காப்புறுதி திட்டத்தை கட்டுப்படுத்தும் அல்லது மாற்றங்கள் ஏற்படுத்தும் முழு அதிகாரமும் இருக்கும் என்பதை கருத்தில் கொள்ளவேண்டும். அத்துடன், இந்த வகையான திட்டத்தில் இருவர் மனுச்செய்தால் அதில் இருவரில் யாருக்கு முதலில் மரணம் ஏற்படுகிறதோ, ஆரம்பத்தில் நியமிக்கும் வாரிசுதாரரை வருமானவரியின்றி மரண இழப்பிட்டு பணம் (DEATH CLAIM) கொடுத்தவுடன் உயிரோடு இருக்கும் மற்றவரது காப்புறுதி ரத்து செய்யப்படும். இதனையே JOINT FIRST TO DIE என ஆங்கிலத்தில் அழைப்போம். இது அந்த நேரத்தில் போதிய மனவேதனையை கொடுக்கும் திட்டமாக செயல்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஒருங்கினைத்த திட்டத்தில் இருவரும் விண்ணப்பதாரராகவும், உரிமையாளராகவும் இருப்பதற்கு மனுச்செய்தால் எந்த விதமான மாற்றங்களை செய்தாலும் இருவரும் ஒத்துழைத்து கையெழுத்திட்ட விண்ணப்பப்பத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். அத்துடன் இந்த ஒருங்கினைத்த திட்டத்தை பொறுத்தமட்டில் இருவரது வயதின் சராசரி வயதை கருத்தில் கொள்ளாது வயது மூத்தவரின் வயதைவிட சற்று கூடியவயதே சராசரி வயதாக கருதப்படும். இதன் காரணமாக இந்த வகையான திட்டத்திற்கும் தனித்தனியே மனுச்செய்யும் திட்டத்திற்குமான மாதாந்த அல்லது வருட கட்டும் பணத்தில் அதிகளவு வித்தியாசமிருக்காது. காரணம், கனடா புள்ளியீட்டு விவரப்படி சராசரி ஆணின் ஆயுள் காலம் “76” என்றும் பெண்ணின் ஆயுள்காலம் “82” என்னும் கணித்திருக்கிறார்கள்.

ஆகையினால் ஆரம்பத்தில் மனுச்செய்யும் போதே நீங்கள் கட்டுப்பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களா அல்லது வருமான வரியின்றி கிடைக்கும் காப்புறுதி இழப்பீட்டு தொகைக்கு முக்கியத்துவம் கொடுக்க விரும்புகிறீர்களா என்பதை நிர்ணயிக்க வேண்டும். இரண்டாவது வகை ஒருங்கிணைத்த காப்புறுதியில் இன்னோர் வகை இரண்டாவது நபரும் மரணமடைந்ததின் பின் தான் இழப்பீட்டு தொகை வாரிசுதாரையடையும், இதுவே JOINT LAST TO DIE என ஆங்கிலத்தில் அழைப்பார்கள். இந்த வயான திட்டங்களை மனுச்செய்பவர்கள் பெரும்பாலும் பணவசதி படைத்த செல்வந்தர்கள் தமது வாரிசுதாரருக்கு தமது மரணத்தின் பின் சென்றடையும் சேமிப்பு தொகையில் கணிசமான தொகை வருமான வரி இலாகா எடுப்பதை நிவிர்த்தி செய்யும் நோக்கத்தில் எடுக்கும் திட்டமாகும் என்பதும் இந்த வகையான திட்டங்களில் கட்டும் பணமும் குறைவாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதை முற்றிலும் உணராமல் “மலிவான திட்டம்” என்ற போர்வையில் காப்புறுதி திட்டங்கள் கொடுக்கப்பட்டது அவதானிக்கத் தக்கதாக உள்ளது. இதை எழுதிக்கொண்டு இருக்கும்போது ஏறத்தாழ 20 வருடங்களிற்கு முன்னர் எனக்கு ஏற்பட்ட உண்மைச் சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. புதிதாக மணம்முடித்த தம்பதிகள் காப்புறுதித் திட்டம் ஒன்று எடுப்பதற்கு என்னை அணுகியிருந்தார்கள். வழமைபோல காப்புறுதி பற்றிய முழுவிளக்கத்தையும் கொடுத்து தனித்தனியே காப்புறுதித் திட்டத்திற்கு மனுச் செய்யுங்கள் என்று அறிவுரை கூறியும் “இல்லை எமக்கு தேவை ஒருங்கினைத்த காப்புறுதி திட்டம் என்று கணவர் சொன்னார். மனைவியாரும் அதற்கு உடன்பட்டார். திரும்பவும் நான் வற்புறுத்தியும் அவர் உடன்படவில்லை, பதிலாக “ஏன் தனித்தனியே செய்தால் உங்களுக்கு கூடிய கமிஷன் கிடைக்குமா?” என்ற கேள்வியை எழுப்பியதும் மேற்கொண்டு

## தொடர்: 3

இதை வாதாடவிரும்பாமல் அவர்கள் கேட்ட படியே ஒருங்கிணைத்த ஆயுள்காப்புறுதி திட்டம், இருவரும் சம உரிமையுள்ள உரிமையாளராக காப்புறுதி திட்டம் மனுப் பத்திரம் நிரப்பப்பட்டு காப்புறுதி ஒப்பந்தமும் அளிக்கப்பட்டது. மனுச்செய்து ஏறத்தாழ 7



வருடங்களிற்கு பின்னர் அவர் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு “மனைவியாரின் பெயரை முற்றாக எடுத்துவிடுங்கள். அத்துடன் எனக்கு மரணம் ஏற்பட்டால் அவரின் கையில் பணம் கிடைப்பதையும் தவிர்க்க ஓழுங்குகள் செய்யுங்கள்” என்றார், “அது முடியாத காரியம். ஏனெனில் அவரிற்கும் சமஉரிமை உள்ளபடியால் அவரும் கையெழுத்திட வேண்டும்” என்றேன். நான் தானே கட்டுப்பணம் செலுத்துகிறேன், அந்தமுறையில் எனக்கு ஏன் முழு அதிகாரமும் கிடையாது. அத்துடன் குடும்பபிரச்சனை காரணமாக போலிஸ் விவகாரத்தில் முடிந்து தற்போது பிரிந்துவாழ்கிறோம் என்றார். ஆனால் மனைவியோ கையெழுத்திட மறுத்துவிட்டார். இவர் காப்புறுதி திட்டத்தையே ரத்து செய்யப் போகிறேன் என்றார். அதற்கும் “முடியாது மனைவியாரும் கையெழுத்திட்டால் தான் ரத்து செய்யலாம்” என்று தயவாக பதில் கொடுத்தேன். வேறு வழியில்லையா? என்று கேட்டபோது தொடர்ந்தும் பணம் எடுக்காமல் இருப்பதற்கு உங்கள் வங்கியில் சென்று இதை நிறுத்த (STOP PAYMENT) ஒழுங்குகள் செய்யலாம். ஆனால் சேமிப்பை முற்றாகவோ அல்லது பகுதியாகவோ எடுக்க முடியாது என்றேன். அதற்கு இணங்கி அவரும் வங்கிக்குச் சென்று பணம் தொடர்ந்து எடுப்பதை நிறுத்தினார். அப்போது தான் ஆரம்பத்தில் அவர் எனக்கு கொடுத்த கடைசி பதிலை நினைவூட்டினேன். “யாருக்கு தெரியும் இந்த மாதிரியான விடயம் நடக்கப்போகிறது என்று, நானும் உங்கள் அறிவுரைப்படி செய்திருக்க வேண்டும் என்றார். ஏறத்தாழ $6,000 சேமிப்பில் இருந்தபடியால் இவர்கள் பிரிந்து ஏறத்தாழ 5வருடங்களிற்கு பின்னர் தான் காப்புறுதி திட்டம் ரத்து செய்யப்பட்டது.

மூன்றவது வகையான திட்டம் பல உறுப்பினரை அடக்கும் காப்புறுதி திட்டம். இதில் அதிகப்படியாக, நிறுவனத்தை பொறுத்து 5 அல்லது 6 அல்லது அதிகபட்சம் 15 குடும்ப உறுப்பினரை அல்லது வியாபார பங்குதாரரை உள்ளடக்கும் காப்புறுதி திட்டமாகும். இதையே ஆங்கிலத்தில் MULTI LIFE UNIVERSAL LIFE என அழைப்போம். அதில் குடும்பதாரரை பொறுத்தமட்டில் ஒருவர் மட்டுமோ அல்லது 18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் உரிமையாளர்களாக மனுச்செய்யலாம். ஏற்கெனவே குறிப்பிட்டது போல எந்த சூழ்நிலையிலும், எந்த விதமான மாற்றங்களை செய்யும்போதும் அனைவரும் ஒத்துழைத்து கையெழுத்திட்ட மனுப்பத்திரமே அந்தந்த காப்புறுதி நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இனி மேற்பட்ட திட்டங்களுடன் கொடுக்கப்படும் மேலதிக சலுகைகள் பற்றி ஆராய்வோம்.

### AUTOMATIC PAYMENT BENEFIT / PAYOR'S DISABILITY WAIVER

மேற்கண்ட சலுகை பொதுவாக 16 வயதிலிருந்து 60 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு கொடுக்கப்படும் சலுகை திட்டமாகும். இதன்படி, இந்த சலுகைக்கு மனுச்செய்து இச்சலுகையை காப்புறுதி ஒப்பந்தத்துடன் வழங்க காப்புறுதி நிறுவனம் ‘மருத்துவ ரீதியாக’ வழங்கியபின் ஏதாவது சுகயீனம் காரணமாக அல்லது பலத்த காயங்கள் காரணமாக 6 மாதத்திற்கு மேல் தொடர்ச்சியாக அன்றாட அத்தியாவசிய வேலைகளை செய்ய முடியாத பட்சத்து நிறுவனத்தை பொறுத்து 6வது மாதத்திலிருந்து இச்சலுகை மனுச்செய்தவரின் வயது 60 அல்லது 65 வயது வரை, அல்லது எவ்வளவு காலம் இவரால் அன்றட அத்தியாவசிய வேலை செய்யமுடியாமல் இருக்கிறதோ அவ்வளவு காலம் வரை காப்புறுதி நிறுவனம் இவருக்கான மாதாந்த கட்டுப் பணத்தை அறவிடமாட்டாது. அதே சமயம் காப்புறுதி செய்யப்பட்ட நபர் வயோதிபராகவும் மனுச்செய்யும்போது 85 வயதுக்குட்பட்டவராகவும் மாதாந்த கட்டுப் பணம் செலுத்துபவர் அவரது பிள்ளையாக அல்லது பேரப்பிள்ளையாக 18 வயதுக்கு மேற்பட்டவராக, வேலை பார்ப்பவராக இருப்பின் பணம் கட்டுபவர் இந்த சலுகைக்கு ஆரம்பத்திலேயே மனுச் செய்யலாம். இதன் மூலம் பணம் செலுத்துபவருக்கு நிரந்தர ஊனம் அல்லது தீடீர் மரணம் ஏற்படும் தறுவாயில் பணம் செலுத்துபவரின் வயது 60 அல்லது 65 வரை நிறுவனத்தை பொறுத்து அல்லது எவ்வளவு காலம் அவர் ஊனமுற்று இருக்கிறரே அது வரை காப்புறுதி நிறுவனம் இந்தக் கட்டுப் பணத்தை அறவிடமாட்டது. இந்த விசேட சலுகை எல்லா நிறுவனங்களும் கொடுப்பதில்லை என்ற காரணத்தால் இதை தீர விசாரித்து தகுந்த காப்புறுதி திட்டத்தை



சக்திவேல்
- ஆயுட் காப்புறுதி முகவர் -

ஆரம்பத்திலேயே தேர்ந்தெடுப்பது நிச்சயம் உங்களுக்கு எதர்காலத்தில் மன ஆறுதல் திட்டத்தை கொடுக்கும். அத்துடன் அண்மைக்காலமாக நாம் அவதானித்துப் பார்த்தோமேயானால் வயது முதிர்ந்தவர்களை விட வயது குறைந்தவர்கள் (முக்கியமாக 40இற்கும் 50 இற்கும் இடைப்பட்டவர்கள்) அதிகஅளவில் மரணத்தை தழுவுகிறார்கள் அல்லது ஊனப்படுகிறார்கள்.

### LOSS OF EMPLOYMENT RIDER

இந்த சலுகையை எனது அறிவுக்கு எட்டிய வரை ஒரே ஒரு நிறுவனம் மட்டுமே கொடுக்கிறது. இந்த நிறுவனத்தின் நிபந்தனைப்படி இந்த சலுகை சம்பள உத்தியோகத்தில் இருப்பவருக்கும், வேலை பார்க்கும் கர்ப்பிணி பெண்களுக்கும் உகந்த திட்டம். இந்த நிபந்தனைப்படி மேற்கண்ட இருதாரரும் மனுச்செய்து ஒரு வருடத்தின் பின் வேலையிழந்தால் அல்லது கர்ப்பமுற்று அரசாங்கத்தால் MATERNITY BENEFITஇல் இருந்தால் அந்த முழுக்காலவரை அல்லது வேலை கிடைக்கும் வரை (அதிகப்பட்சம் 1 வருடம்) இவர்களுக்கு கட்டும் பணம் அறவிடப்பட மாட்டாது.

இந்த சலுகை ஒவ்வொரு 5 வருடத்துக்கு ஒரு முறை (அதிகப்பட்சம் 1 வருடம் வரை அளிக்கப்படும்).

தொடரும்...

saththivel@thaiveedu.com

■ ■ ■

சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

“சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி”

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275,000 வரை காப்புறுதி

- சக்திவேல் -

தொலைபேசி: 416.706.3530, 905.428.9299, 905.763.8912
Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

மன்னிக்கவும்!
வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!

# TWO FULL TIME REALTORS ONLY ONE COMMISSION



முகவரி காட்டும் முகவர்களாய் நாங்கள்,
வீடு வாங்க விற்க அழையுங்கள்

HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Dr, Suit 205, Markham On. L3S 4N8
Bus.: 905-201-9977 Fax : 905-201-9229
www.realhouse.ca
*Independently Owned and Operated, REALTOR



தமிழ் சுப்பிரமணியம் (செல்வன்)

**Thamil Suberamaniam (Selvan)**
Sales Representative
**Direct : 416.358.6200**
Email : thamilrealtor@gmail.com

முகுந்தன் நடராஜா

**Mugunthan Nadarajah**
Sales Representative
**Direct : 416.276.8025**
Email : homelifemugunthan@gmail.com

**Eglinton & Kingsbridge**

**$495,000**
4 Bedrooms, 4 Washroom

**Hwy 10 & Bristol**

**$182,500**
2 Bedrooms, 2 Washroom

**Weston & Jane**

**$315,000**
3 Bedrooms, 2 Washroom

**Jane & Steeles**

**$319,100**
3+1 Bedrooms 2 Washroom

**Huontario & Hwy 403**

**$299,900**
3 Bedrooms, 2 Washroom

**14th & 9th Line**

**$329,900**
3 Bedrooms, 3 Washroom

**Markham & 16th**

**$459,999**
3 Bedrooms, 2 Washroom

**14th & Boxgrove**

**$466,900**
4 Bedrooms, 3 Washroom

**Rutherford & Jane**

**$399,900**
4 Bedrooms, 3 Washroom

**Markham & Steeles**

**$529,900**
4+2 Bedrooms, 5 Washroom

**Birchmount & Eglinton**

**$295,000**
3+1 Bedrooms, 2 Washroom

**McCowan & Sheppard**

**$159,900**
2 Bedrooms,13 Washroom

**Ortonpark & Brimorton**

**$329,900**
3+2 Bedrooms, 2 Washroom

**McCowan & 401**

**$218,000**
2 Bedrooms, 2 Washroom

**McCowan & Hwy 401**

**$214,900**
2 Bedrooms, 2 Washroom

**Morningside & Old Finch**

**$299,900**
3 Bedrooms, 3 Washroom

**Markham & Mclevin**

**$315,000**
3+1 Bedrooms, 3 Washroom

**Tounton & Harmony**

**$449,000**
4 Bedrooms, 4 Washroom

**உங்களுடையது**
அழையுங்கள்

**Markham & Nashdene**

**$219,900**
Commercial Unite
1440 Sq Ft

Not Intended to Solicit Currently Listed Properties or Buyers Under Contract.

## கீரை உணவு வகைகள்

# கருவேப்பிலை

உணவில் வாசனையை ஊட்டுவதற்காக மட்டும்தான் கருவேப்பிலையைப் பயன்படுத்து-கிறோம் என்று எங்களில் பலர் நினைத்துக்-கொண்டு இருக்கிறோம். அதனால் சாப்பிடும் போது கவனமாகக் கருவேப்பிலையை எடுத்து ஓர் ஓரத்தில் வைத்துவிட்டுச் சாப்பிடுகிறோம். தப்பித் தவறி ஒரு சிறிய இலை உணவோடு சேர்ந்து வாய்க்குள் போய்விட்டால், அதனை நுனி நாக்கால் துளாவித் துளாவி வெளியே எடுத்து வைத்து விடுகிறோம். அதாவது உனது வாசனை உணவில் சேர்ந்துவிட்டது. இனி உன்னைத் தேவையில்லை என்ற ஒரு நன்றி-யில்லாத 'பண்பாடு'. ஏன் இந்த நிலை என்றால் உணவோடு அவிந்த கருவேப்பிலையை மென்று சாப்பிடும்பொழுது அதன் சுவைஎதுவும் தெரிவதில்லை. அத்துடன் அது ஒரு காய்ந்த இலையைப் போல அல்லது சருகு போன்ற உணர்வே நாக்குக்குக் கிடைக்கின்றது.

எங்களுக்கு ஓர் உறவினர் இருந்தார் இப்பவும் எங்கேயாவது நலமாக இருப்பார் என்று நம்புகிறேன். அவர் எங்கள் பிள்ளைகளுக்கு மாமா முறை. திடீரென்று ஒரு நாள் வீட்டுக்கு வருவார். பிள்ளைகளுக்கு ஏதாவது நிறைய வாங்கிக் கொண்டு வருவார். நாள் முழுக்க வீட்டில் இருந்து பிள்ளைகளுடன் விளையாடு-வார். மாலையில் நான் வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும், தான் வந்த நோக்கத்தை சொல்லுவார். அவர் நாடிவந்த வேலையை நான் முடித்துக் கொடுத்ததும் புறப்பட்டுப் போய்விடுவார் அப்படியே சில காலத்துக்குக் காணாமலும் போய்விடுவார். எந்தவிதமான தொடர்பும் இருக்காது. பின்னர் எப்பொழுதாவது எங்களால் ஏதாவது ஆகவேண்டும் என்றால்-தான் அவரைக் காணலாம். எங்களைக் கருவேப்பிலையாகப் பயன்படுத்திய அந்த மாமாவை எங்கள் பிள்ளைகள் 'கருவப்பிலை மாமா' என்று 'செல்லமாக' அழைப்பார்கள். உங்களிலும் சிலருக்கு ஒரு 'கருவப்பிலை மாமா' இருப்பாரே!

கருவேப்பிலை ஒரு வெப்ப மண்டலப் பயிராகும். இது வெப்ப மண்டலமான ஆசியாவில் நன்கு வளரக்கூடியது. அதிலும் தமிழீழம், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில், காடுகளிலும் மலைகளிலும் வீட்டுத் தோட்டங்களிலும் நன்றாக வளரும். இது ஒரு பெரும் செடி வகையைச் சார்ந்தது. ஆனாலும் நாங்கள் இதனை ஒரு சிறு மரம் என்றே குறிப்பிட்டு வருகிறோம். இந்த மரத்திற்கு வடமொழியில் காலசாகம் என்று பெயர். இந்த மரம் செம்பு நிறச் சாயல் உள்ளது. இந்த இலை வேப்பிலை போலவே இருக்கும். ஆனால் வேப்பிலை பச்சை நிறமாக இருக்கும். கருவேப்பிலை கரும் பச்சை நிறமாக இருக்கும். வேப்பிலை-யைப் போலவே ஒரே நரம்பில் பல இலைகள் இணைந்திருக்கும். ஆனால் வேப்பிலையைப் போல ஓரத்தில் வாள் போன்ற பற்கள் இருக்காது. கருவேப்பிலை மரத்தின் பட்டை யும் கொஞ்சம் கருமையாகவே இருக்கும். அதனால் இதற்குக் கருவேம்பு என்றும் ஒரு பெயர் உண்டு. இதில் இருந்து கருவேப்பிலை என்ற பெயர் வந்தது.

கருவேப்பிலை மரம் 4 – 5 மீட்டர் வரை சில கிளைகளுடன் உயர்ந்து வளரும். கருவேப்-பிலை மரத்தில் வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் கொத்துக் கொத்தாக மொட்டுகள் வந்து வெண்ணிறமான சிறிய அழகான பூக்கள் மலரும். இதன் காய்கள் நீள் உருண்டை வடிவில் சதைப் பற்று உள்ளதாக இருக்கும். இந்தப் பச்சை நிறக் காய்கள் முற்றிச் சிவப் பாகிப் பின்னர் கனிந்து கறுப்பாகி நாவல் பழத்தின் நிறத்தில் பழுக்கும். பழங்களில் தடித்த தோலுள்ள விதைகள் இருக்கும். கருவேப்பிலை மரத்தின் இலை, ஈர்க்கு, பட்டை, வேர் அனைத்துமே மருந்துக்குப் பயன்படு-கின்றன.

கருவேப்பிலையில் ஒரு சிறப்பான மணம் இருப்பதால் இதனைப் பெரிதும் மணத்துக் காகவே சமையல் வகைக்குப் பயன் படுத்து

**கீரை உணவு - 7**

உதயணன்







கிறோம். காய்கறி, அசைவ உணவுகளில் மட்டும் அல்லாமல் குழம்பு, மிளகுரசம், நீர் மோர் போன்ற திரவ உணவுகளிலும் நேரடி யாக அல்லது தாளிதம் செய்து சேர்ப்பார்கள். அனேகமாக எல்லாக் 'கறி'களுக்கும் கரு-வேப்பிலை பயன்படுத்தப்படுவதாலும் இலை யின் வடிவம் வேப்பிலையின் அமைப்பில் இருப்பதாலும் இதனைப் பலர் கறிவேப்பிலை என்று அழைக்கிறார்கள். கறிவேப்பிலை என்ற பதம்தான் பல நூல்களிலும் கட்டுரைகளிலும் கையாளப்பட்டிருக்கிறது. இதனை ஆங்கி-லத்தில் Curry leaves என்று அழைப்பதால், கறிவேப்பிலை என்ற பெயர் நிலைக்க இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். தமிழீழத்தில் பேச்சு மொழியில் 'கருவப்பிலை' என்று சொல்கிறோம்.

கருவேப்பிலையில் நாட்டுக் கருவேப்பிலை காட்டுக் கருவேப்பிலை என்று இரண்டு வகை-கள் இருக்கின்றன. நாட்டுக் கருவேப்பிலை சிறிதாகவும் நல்ல மணம் உள்ளதாகவும் இனிப்பும் துவர்ப்பும் சிறிது கசப்பும் கலந்த சுவை உள்ளதாகவும் இருக்கும். இதைத்-தான் உணவாகப் பயன்படுத்துகிறோம். காட்டுக் கருவேப்பிலை சற்றுப் பெரிதாகவும் கசப்புச் சுவை உள்ளதாகவும் இருக்கும். இதனை மருந்துகளுக்குப் பயன்படுத்து-கிறார்கள்.

ஒரு மனிதன் ஒவ்வொரு நாளும் 170 கிராம் காய்கறிகளைச் சாப்பிட வேண்டும் என்று இந்தியன் மருத்துவக் கவுன்சில் பரிந்துரை செய்கிறது. அதில் 75 – 125 கிராம் கீரை வகைகளாக இருக்க வேண்டுமாம். இந்த 170 கிராம் காய்கறிகளில் 10 காய்கறிகள் முக்கிய-மாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லுகிறார்கள். அந்தப் பத்தில் ஒன்று கருவேப்பிலையாகும்.

கருவேப்பிலை ஒரு சத்து நிறைந்த கீரை-யாகும். கருவேப்பிலையில் வைட்டமின் ஏ, பீ, சீ சத்துக்களும் இரும்பு, தாமிரம், கந்தகம், கால்சியமும் இருக்கின்றன. கருவேப்பிலையில் அமினோ போன்ற பல அமிலங்கள் நிறைய இருக்கின்றன. இந்த அமிலங்கள்தான் இலைக்கு இத்தகைய சிறப்பான நறுமணத்-தைத் தருகின்றன. கோகினின் எனப்படும் ஒரு வகை மரப் பிசினும் உண்டு. காம்பு-களிலும் இலைகளிலும் சிறிது சாம்பல் உப்பு இருக்கும். நூறு கிராம் கருவேப்பிலையில் பின்வருவன அடங்கியிருப்பதாக அறிவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அவையாவன

| | | |
|---|---|---|
| சக்தி | 108 | கலோரிகள், |
| ஈரப்பதம் | 63.8 | கிராம், |
| புரதம் | 6.1 | கிராம், |
| கொழுப்பு | 1 | கிராம், |
| தாதுக்கள் | 4 | கிராம், |
| நார்ச்சத்து | 6.4 | கிராம், |
| கார்போஹைட்ரேட்கள் | 18.7 | கிராம், |
| கால்சியம் | 830 | மி.கி., |
| பாஸ்பரஸ் | 57 | மி.கி., |
| இரும்பு | 0.93 | மி.கி., |
| மெக்னீஸியம் | 44 | மி.கி., |
| செம்பு | 0.10 | மி.கி., |
| மாங்கனீசு | 0.15 | மி.கி., |
| நாகம் | 0.20 | மி.கி., |
| குரோமியம் | 0.006 | மி.கி., |
| கந்தகம் | 81 | மி.கி., |
| குளோரின் | 198 | மி.கி., |
| தையாமின் | 0.08 | மி.கி., |
| ரைப்போஏப்ளேவின் | 0.21 | மி.கி., |
| வைட்டமின் சீ | 4 | மி.கி., |
| நியாசின் | 2.3 | மி.கி., |
| போலிக் அமிலம் | 93.9 | மை.கி., |
| கரோட்டீன் | 7560 | மை.கி., |

(தகவல்: National Institute of Nutrition, Hyderabad)

சில ஆய்வாளர்களின் அறிக்கைகளின் படி கருவேப்பிலை புற்றுநோயைத் தடுக்கும் அல்லது குறைக்கும். கருவேப்பிலையையும் கடுகையும் தாளிக்கப் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் நன்மையா தீமை-யா என்று கேரளா பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்யப்பட்டது. அதில் கருவேப்பிலை-யும் கடுகும் சேர்ந்து நமது திசுக்களை அழிவிலிருந்து பாதுகாக்கிறது என்று கண்ட றிந்தார்கள். மேலும், பிரிரேடிக்கல்ஸ் உருவா-வதைத் தடுக்கிறது என்றும் பிரிரேடிக்கல்ஸ் உருவாவதால்தான் டி.என்.ஏ. பாதிக்கப்படு கிறது என்றும் செல்களிலுள்ள புரோட்டின் அழிகிறது என்றும் அதன் விளைவாகவே புற்றுநோய், வாதநோய்கள் தோன்றுகின்றன என்றும் மேற்படி ஆய்வில் பங்குபற்றிய மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

கருவேப்பிலைச் செடியின் இலைகள், பட்டை, வேர் முதலிய பகுதிகள் பசியைத் தூண்டவும் உடல் சூட்டைப் பேணவும் பயன்படுகிறது. பசும் இலைகளிலிருந்து வடித்து எடுக்கப்படு கின்ற எண்ணெய் அழகு சாதனப் பொருட்க ளும் வாசனைச் சவர்க்காரமும் தயாரிக்க உதவுகின்றது. இந்தப் பொருட்களில் வாசனையை நிலைக்கச் செய்வது இந்த எண்ணெயின் கைங்கரியம்தான். கருவேப்பிலை மரத்தின் பழங்களில் இருந்தும் எண்ணெய் வடிக்கப்படுகிறது. கருவேப்பிலைக் கீரை உடலுக்குப் பலம் தரும். இலையில் இருக்கும் நார்ச்சத்து மலச் சிக்கலை நீக்கிப் பசியைத் தூண்டிச் சீரணத்தைச் சீராக்கும். வாயுத் தொல்லை நீங்கும். கண்களில் ஏற்படும் அரிப்பு, கண்களில் நீர் வடிதல் காணாமல் போகும் என்பதோடு கண் பார்வையும் சீராகும். உடல் சூட்டைச் சமன்படுத்தும். மனச் சுறு-சுறுப்பை ஏற்படுத்தும். குமட்டல், சீதபேதியால் வரக்கூடிய வயிற்றுழைவு நாட்பட்ட காய்ச்சல் ஆகியனவும் கருவேப்பிலையால் நீங்கும். இந்தக் கீரை இதய நோய்களைக் குறைக்கும் ஆற்றல் உடையது. வல்லாரைக் கீரையைப் போலவே கருவேப்பிலையும் ஞாபக சக்தி-

52ம் பக்கம் பார்க்க...

**FOR ALL MORTGAGE NEEDS**

**Rajmogan Selliah**
Mortgage Consultant

TD Canada Trust Scotiabank™

2929 Lawrence Ave. East, Suite 203,
Scarborough, ON M1P 2S8
Head Office: 701 Evans Ave., Suite 600, Toronto, ON M9C 1A3
rajmoganselliah@invis.ca

**Dir: 416.569.3200**
Bus: 416.430.0111, Fax: 416.430.0222



digi

# எண்ணித்துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு.

## உங்கள் கடன் பிரச்சினைகளை தீர்க்கும் போது அதனால் உருவாகும் நன்மை தீமைகளை சரியாக அறிந்துள்ளீர்களா?

## நீங்கள் எடுக்கும் நடவடிக்கையால்

- எதிர்காலத்தில் உங்கள் பிள்ளைகளின் கல்விக்கோ, அவர்களின் தொழில்துறைக்கோ பாதிப்புக்கள் வருமென எண்ணுகிறீர்களா?
- நீங்கள் ஒரு புதிய வேலைக்கு செல்லும்போதோ அல்லது வேறு வேலைக்கு மாறும்போதோ பிரச்சினைகள் வருமென்று எண்ணுகிறீர்களா?
- எதிர்காலத்தில் ஸ்பொன்சர் செய்யும் போது ஏதாவது பிரச்சினைகள் வருமென எண்ணுகிறீர்களா?
- உங்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமென எண்ணுகிறீர்களா?

இவைபோன்ற பல கேள்விகளுக்கு சரியான பதில்களை அற்ந்துகொள்ள
இத்துறையில் பலவருட கால அனுபவமுள்ள
பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களின் கடன் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த

Having Difficulty Repaying Your Student Loan? New Rule Changes Can Help

CRCanada
**அழையுங்கள்**
**சங்கர் அல்லது கிறிஸ்**

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் கட்டவேண்டிய கடன் தொகையிலிருந்து 15%-20%த்தை மட்டும் தவணை முறையில் கட்டிமுடிக்கலாம்.



T.SHANKAR
Director

# CRCanada
## Credit Reform Canada
*Judgement in your favour!*

885 Progress Ave, Unit - 202, Scarborough.

CRCanada **416-264-1010**

# Your life.
# Your career.
# *Your call.*

If you're looking for a career that offers the potential for financial success and have the drive, discipline, energy, and self-confidence to run your own business, then consider becoming a Sun Life Financial advisor. Contact us to learn more about this rewarding career opportunity.



**Chandran Rasalingam**
Sales Manager
Bus 416-412-0401 ext 305
Cell 416-909-0400
Fax 416-412-1438
gnanachandran.rasalingam@sunlife.com

2075 Kennedy Road, Suite 1300
Scarborough ON M1T 3V3

Sun Life Financial

Sun Life Financial advisors are contracted with Sun Life Financial Distributors (Canada) Inc., registered in Quebec as a financial services firm.
© Sun Life Assurance Company of Canada, 2008.

# பாதுகாப்பான மற்றும் சௌகரியமான உறக்கம்



## பாதுகாப்பு

Solutions of Home Security Inc.

Authorized Dealer ADT Security Services

### How do Burglars Get into your home?

Statistics show that burglars enter homes using the following entrances,

- 2% from the 2nd floor
- 4% from the basement
- 6% using unlocked entrances
- 9% from the garage
- 22% from the back door
- 23% from the 1st floor windows
- 34% from the front door

உங்கள் இல்லங்களைப் பாதுகாத்துக்கொள்ள இன்றே அழையுங்கள்

E-mail: info@quickhomesecurity.com
Web: www.quickhomesecurity.com

## சுத்தம்

### For all kind of Vacuums

- Central Vacuum Systems
- Commercial Vacuums
- Comfortable & easy to use Vacuums
- Clean hard-to-reach areas
- Great for pets and allergens
- Environmentally friendly products
- Less Energy and Resources
- Whole house cleaning convenience
- Central Vacuum Power Units
- Central Vacuum Yellow Jacket

**Contact Raman Appliances for all your Cleaning needs and enjoy the comfort of your home.**

EUREKA® Invented for the way you clean
Authorized Dealers



## இதமான காலநிலை



### For all your Heating Needs

**Gas Furnaces:**
Every model in our Freedom® Furnaces family is designed to provide maximum heat for minimum fuel usage. The ultimate models even reduce temperature swings and short cycling.

**Oil Furnaces:**
Our oil furnaces are durably constructed with only the finest materials and components. So you can rest easily and warmly. Freedom® 80 oil furnaces heat your home quickly and efficiently, even during the toughest winters.



### For all your Cooling Needs

Stay cool and save a comfortable amount of money with American Standard Air Conditioning's line of Allegiance® air conditioners. Our air conditioners range in efficiency from 13 to 18+ SEER - among the highest efficiency ratings in the industry.

Our Allegiance® family offers a wide range of comfort choices, plus exclusive state-of-the-art technology the quietly, meticulously and efficiently conditions your air. Get ready for a level of comfort you and your family may never have experienced before.

American Standard Heating & Air Conditioning
Authorized Dealers

Heating & Air-conditioning Contractors.
Raman Appliances Inc.
www.raheatingcooling.com

## Raman Appliances

## Raman Chelliah



3021 Markham Rd. Unit 51, Scarborough ON. M1X 1L8
**Tel: 416.332.1989**
**Cel: 647.893.4414**
Fax: 416.332.4967
E-mail: info@raheatingcooling.com

# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant



### We Will

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ….
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

**Best Rates**

We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "**Yes**" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

invis




**Siva Ratnasingam**
*Lic: M08002133*
Mortgage Consultant
***2005,2006,2007,2008 Diamond Award Winner***
**416.430.0111 ext:1**
Head Office: Invis Inc., 100-480 University Ave., Toronto, ON M5G 1V2



## பேரழிவினைக் கொண்டுவரும் நீரழிவு நோயினை இரண்டே இரண்டு மாதங்களில் முற்றும் முழுதாக கட்டுப்படுத்த முடியும்!

## ஊளைச் சதை பெருகுவதை தடுக்கிறது! வாத வலியை நீக்குகிறது! உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!







**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் கனுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

**க்லூட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊளைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

Amazon Health Care
www.amazonhealthcare.com

BBB

SABONA

**Tel: 416 264 8787**
**www.amazonhealthcare.ca**
**2602, Eglinton Ave East. (Midland/Eglinton)**

# கலாபன் கதை



தேவகாந்தன்

## குருவிக்கு ஒரு கூடு வேண்டும்

அது ஒரு 1974இன் ஆடி மாதத்து இரவு. செறிந்து விழுந்து கிடந்தது இருள். ஆனாலும் தலைநகரின் மின்வெளிச்சம் வானத்தை ஓர் ஒளிப்பரவலில் கிடத்தியிருந்தது.

படுக்கையில் படுத்திருந்த கலாபன் உறக்கம் வராமல் புரண்டுகொண்டிருந்தான். பின் உறக்கம் வராதென்று உறுதியாக, எதையாவது அமைதியாகக் கிடந்து யோசிப்போம் என்ற முடிவோடு நிமிர்ந்து கிடந்தபடி தலையுயரத்தில் இருந்த வட்ட இரு கண்ணாடி ஜன்னல்களினூடு பார்வையை வெளியே எறிந்தான். வானம் தெரிந்தது. நிலா இல்லாத, நட்சத்திரங்களும் இல்லாத வானம். அவ்வப்போது ஒன்றிரண்டு நரைத்த முகில்கள் மிதந்தோடின அதில். பிறகு ஒரே வெளிர் நீலம். அதைப் பார்ப்பதுகூட அவனுக்கு வெகு நேரமாக அலுக்கவில்லை. பார்வை பரவெளியில் பதிந்திருந்தாலும் சிந்தனை அவ் வெளியினூடு சிறகடித்து வீடுநோக்கிப் பறந்துகொண்டிருந்தது.

அவன் தனது இளமனைவியையும், குழந்தையையும் ஊரில் தனியே விட்டு வந்திருக்கின்றான். கொழும்பு வந்து பதினான்கு நாட்கள். உடலில் விளைந்திருந்த தாபம் அவனது மனைவியின் அருகை இச்சித்தது. அது ஒரு தகன மண்டபத் தகிப்பை அனுபவிக்கச் செய்துகொண்டிருந்தது. ஆனாலும் உள்ளம் உணர்ந்த காதலின் பிரிவுத் துயரும் அதற்குச் சற்றும் குறைவில்லாததாய்.

இனி அவன் அவளைக் காண மிகக் குறைந்த பட்சம் ஓராண்டுக்கு மேலேயாவது ஆகும். அவள், காணும்போதெல்லாம் மனக்கிளர்ச்சி தரும் அழகியாகத்தான் இருந்துகொண்டிருந்தாள் அவனுக்கு. குழந்தையும் அவளே போல. அவளை இனிச் சேர எத்தனை காலமாகுமோ? அவன் இரண்டு கிழமைக்கு முன்னர் கொழும்பு புறப்பட்ட நாளின் முந்திய இரவில், வாத்சாயனக் கதைகள் சொல்லும் எத்தனை தரிசனங்களை அடைந்திருந்தது அவர்களது தும்புமெத்தைக் கட்டில். சிங்களத் தொழிலாளி வன்னியில் செய்து, தோளில் சுமந்துவந்து விற்ற கனதியற்ற கட்டிலே நிலமதிரக் கிளர்ந்த கலைநிகழ்வுகளால் களைத்ததே.

மனோ ஒரு பிரிவை ஆழமாக உணர்ந்துதான் அந்த இரவை அர்த்தமுள்ளதாக்கியிருந்தாள் அவனுக்கு. இன்னும் ஒரு வருஷத்துக்கு உடல் தவனம் தணிக்க வழியே இல்லையென்ற ஆவலாதியில் அடைந்த, அடைய வைத்த இன்பங்கள் அவை. மறுநாள் காலை தூக்கமற்றதால் சிவந்த விழிகளுடனும் அவள் குளித்துவந்து சந்தோஷமாகத்தான் வீட்டுக் காரியங்களைக் கவனித்தாள், பிறகு சமைத்தாள். ஆனால் மாலையாக ஆக அவள் முகம் இருளத் தொடங்கிவிட்டது. வானம் இருள முன்னம் இருண்ட அவளது முகம் கண்டு அவனுக்கும் கவலையின் அதிகரிப்பு. அவன் கொழும்புக்கு புகையிரதமேறச் செல்வதற்கான கார் வீட்டு வாசலில் வந்துநின்ற சத்தம் கேட்ட கணத்திலிருந்து அவள் அவளாக இல்லையென்பதை அவன் கண்டான். உற்றார் உறவினர் ஊராட்கள் சிலர் கூடியிருந்த நிலையில், எல்லாப் பிரிவாற்றுகையும் நேற்றைய இரவில் முடிந்ததுதானே என்று அவன் பார்வையால் விடைபெற்று வர, அவள் தாங்காமல் அழுததாய் ஓர விழிகளில் பட்டது அவனுக்கு.

அத்தனை காலத்துக்கு ஒரு பிரிவை விரும்பித்தான் ஏற்று அங்கே அவன் வந்திருக்கிறான். அந்தப் பிரிவை அவளைவிட தாங்க தான் தயார் என்பதுபோலவே வீட்டிலே அந்த முன்னாளிரவில் அவன் நடந்திருந்தான். ஆனால் இங்கேதான் தெரிந்தது, அவளாவது குழந்தையின் அருகிருப்பால் உடலையும் மனத்தையும் ஆற்றிக்கொள்வாளென்றும், தானே அவர்களிருவரில் ஒருவர்கூட அருகிருக்காத காரணத்தால் அவதியுறப்போவதென்றும்.

அந்த அழகின் தரிசனம், அந்த உடலின் சுகம் யாவற்றையும் ஓராண்டுக்கு மேலாகத் துறந்துவிடும் மனவலிமையை எது அவனுக்குத் தந்தது? அவனது வாழ்க்கையா? அந்த வாழ்க்கையையே சுழல் காற்றில் சருகாகப் பறக்கவிடும் விதியா? அவனுக்கு மட்டுமா அவ்வாறான விதி? விதியே அலைத்தும் உலைத்தும் வீழ்த்தியும் எழுப்பியும் வளமளித்தும் ஒருவன் வாழ்க்கையை நிர்ணயிக்கிறதெனில், அந்தப் பிரிவும் துயரும் அவனுக்குமட்டுமானதாக ஆனதெங்ஙனம்? அவன் எல்லாவற்றையும் யோசிக்க முனைந்தான்.

ஒவ்வொருக்கும் குடியிருக்க ஒரு துண்டு நிலம் வேண்டும். அதில் பத்துப் பன்னிரண்டு தென்னைமரங்கள் இல்லாமல்கூட இருக்கலாம். ஏதாவது ஒரு நிலம் வேண்டும். அதிலே ஒரு வீடு வேண்டும். அது மாளிகைக் கணக்காய் கலைவேலைப்பாடுகளுடன் கூடிய தூண்களுடன் இல்லாவிட்டாலும் பனிக்கும், மழைக்கும், வெய்யிலுக்கும், காற்றுக்கும் அடைக்கலமாவதற்கும், காதலிருவரின் கூடலுக்குமாய் ஒரு குடிசையாவது வேண்டும். கைப்பொருள் இல்லாவிட்டாலும் உழைத்துப் பிழைத்துவிடலாம். ஆனால் 'காணக் கண் கூசுதே, கையெடுக்க நாணுதே, மாணிக்க வாய் திறக்க மாட்டாதே' என்று கடன் காரனைக் கண்டு தவிக்கும்படியான நிலை ஏற்பட்டிருக்கக்கூடாது. கலாபனுக்கு முன்னவை இரண்டும் இல்லாதிருந்தன. பின்னது இருந்தது. அதனால்தான் மிகுந்த பிரயாசையில் நீண்ட பிரிவைச் செய்யும் அந்த வேலைக்காக அவன் வீட்டைவிட்டுப் புறப்பட்டான்.

கூடு இல்லாவிட்டால் வாழ்ந்துவிடலாம். கூடலில்லாமல் வாழ்வது எப்படி? அவன் நினைக்கத்தான் செய்தான். குருவிக்குக் கூடு ஒன்று வேண்டும் என்ற ஓர் உண்மை இருக்கிறதுதான். அதேவேளை வளர்ந்த குருவியொன்று கூட்டைவிட்டு தானே பறந்து போய்விடுகிறது என்ற நிஜமும் இருக்கிறதல்லவா? பறத்தலின் சுதந்திரத்தை வீட்டினுள் பயில்வுசெய்தல் எப்படி? இவ்வாறு அவன் சொன்னபோது, மனோ, அவனது மனைவி சொன்ன பதில், 'பறந்து சென்ற குருவிக்கும் உடனடியாக இல்லாவிட்டாலும் பின்னராவது ஒரு வீடு வேண்டியிருக்கும்' என்பதுதான். அந்தக் கோணத்தில் அவன் விழுந்தான். ஆம், வாழ்வதற்கு ஒரு கூடு தேவைதான்.

திடீரென ஓர் உலுப்பல். கலாபனின் சிந்தனை கலைந்தது. அப்போதைக்கு மட்டுமாகத்தான். அதுவொன்றும் மேலெழுந்தவாரியானதல்ல. உயிரில் வலியெழுப்பக்கூடியதாய் மனத்தின் ஆழத்தில் பதிந்திருப்பது. பிறகு, நாளை, அடுத்த கிழமை, அடுத்த மாதம், அடுத்த வருஷம் என்று அவளையும் குழந்தையையும் மீண்டும் காணும்வரை தொடரப்போகின்ற சிந்தனையே அது.

கடந்த ஒரு கிழமையாக கலாபன் அங்கே தான் வேலைசெய்கிறான், கொடுக்கப்பட்டிருந்த அறையிலே, அதைக் கபின் என்கிறார்கள், படுக்கிறான். ஆனால் அப்படி உலுப்பி அதிர்வெழும்படியாய் என்றும் இருந்ததில்லை. அன்றைக்குமட்டும் ஏன் அப்படி?

பின்னர் அவனுக்குப் புரிந்தது. முதல் நாள் வரை கப்பல் திருத்த வேலைகளுக்காக ட்றை டொக்கில் நின்றிருந்தது. அதன் திருத்த வேலைகளெல்லாம் முடிந்து அன்றுதான்



துறைமுகக் கரையில் கொண்டுவந்து கட்டியிருந்தார்கள். கப்பல் மறுநாள் காலை அங்கிருந்து புறப்படவிருந்தது.

அந்தப் புறப்படுகை சுகமான நினைவுகளையும் கிளர்த்தாமலில்லை கலாபனிடத்தில். ஆயிரமாயிரமான உழைப்பு. அவர்களுக்கான ஒரு காணி, ஒரு வீடு. அவனது மனைவி குழந்தைக்கு அழகழகான உடுப்புக்கள். அவன் மனைவி குழந்தைக்கு நகைநட்டுக்களும், ஊரில் வசதியானவர்கள் குடும்பத்து பெண்கள் குழந்தைகளுக்குப்போல. எல்லாம் சுகமான நினைவுகளையே செய்துகொண்டிருந்தன அன்றுவரை. ஆனால் திடீரென அப்படி ஒரு விசாரம் அவன் மனத்தில். ஒருவேளை கப்பல் மறுநாள் புறப்படப்போகின்றது என்ற காரணத்தால் ஏற்பட்டதாய் இருக்கலாம் அது. ஆனாலும் அந்தச் சிந்தனை இடையறுகிறது, கப்பலின் உலுப்பலில்.

துறைமுகத்தில் கட்டப்படும் கப்பல் கரைச் சுவரோடு வந்து மோதிவிடாது சங்கிலியில் பிணைத்த பெரும்பெரும் ரயர்களைத் தொங்க விட்டிருப்பார்கள். கடலின் பாரிய அலைகள் வந்து மோதும்போது கப்பல் சிமெந்துக் கட்டினோடு மோதிச் சேதமாகாமல் இந்த ஏற்பாடு. அதேவேளை அலைகள் உள்ளே வேகவேகமாய் நுழையாதபடியும் பிறேக் வாட்டர் எனப்படும் கடலணைகள் எழுப்பப்பட்டிருக்கும். இவ்வளவற்றையும் மீறி ஒரு கப்பலையே உலுப்பிவிடுமளவுக்கு அலை பாய்ந்து வருகிறதெனில், அதன் வேகம் எப்படியானதாய் இருக்கும் என நினைக்க ஒரு மலைப்பு வந்தது கலாபன் மனத்தில். ஆனாலும் அதுபற்றிய எண்ணம் அவனது மனத்தில் நீண்டநேரம் நிலைக்கவில்லை. உழைத்துக் களைத்திருந்த உடலானதால், வெகுநேரம் சென்றேனும் உறக்கம் வந்தது.

பெரும்பாலும் கவிழ்ந்த ஸ்திதியில் படுத்திருந்த கபிலனுக்கு, அலைகளின் உலுப்பலில் கப்பலின் அசைவு புணர்ச்சிச் சுகத்தைக் கொடுத்தது. றெஜிபோம் மெத்தை அவன் மனைவி மனோவாக உருவெடுத்தது. அவன் சிறிதுநேரத்தில் ஸ்கலிதமானான்.

மறுநாள் அதிகாலையிலேயே கப்பலின் அசைவைக் கூடுதலாக உணர்ந்ததில்தான் கலாபனுக்கு தூக்கம் கலைந்தது. கப்பல் புறப்படுகிறது என்பதை அனுமானிக்க வெகு நேரம் ஆகவில்லை அவனுக்கு. அவசர அவசரமாக முகம் கழுவி, உடுப்பை மாற்றிக்கொண்டு அவன் மேற்தளத்துக்கு வந்தபோது எம்.வி.ஜோய்18 என்ற பெயருடைய அந்தக் கப்பல் துறைமுகத்தைவிட்டு நகர்ந்து வெகு தூரம் வந்திருந்தது. கல்லணைக்கு வெளியில் கப்பல் சென்றுகொண்டிருக்க அதன் சமாந்தரத்தில் ஓர் இழுவைப் படகு வந்துகொண்டிருந்தது. கப்பலை வெளியே செல்லவைத்துக்கொண்டிருக்கும் பைலட், இறங்கிச் செல்வதற்கான படகு அது.

கலாபன் கரைப் பக்கமாய் பார்வையை எறிந்தான். துறைமுகம் விலகிக்கொண்டிருந்தது. வினாடி வினாடியான நேர நகர்வில், அந்த இடைத்தூரம் அதிகரித்துக்கொண்டிருந்தது. மண்ணைவிட்டு விலகிய தூரமும் அதுதான். உறவுகளைவிட்டு விலகிய தூரம்கூட.

தொடரும்...

## கூடு எதன் குறியீடு

கப்பல் பயணம் அவனுக்குப் புதிது. அந்தப் புதிது மனத்தில் சொல்லொணா கிளர்ச்சிகளை ஏற்படுத்தியது. ஆனாலும் அந்தக் கிளர்ச்சிகளுக்கூடாகவும் ஓர் இடைஞ்சல். தலை லேசாகக் கிறுகிறுத்தது. மேல்ல மெல்லவாய் அதிகரித்தது அந்த சுகமின்மை. சிறிதுநேரத்தில் கலாபன் ஓக்...கென்று வாந்தியெடுத்தான்.

பதின்நான்கு நாட்கள் வாந்தி. சாப்பாடில்லாமல், வேலையில்லாமல், தூக்கமில்லாமல் ஒரே வாந்தி. எப்போதும் படுத்தே கிடந்தான் போறபோற இடங்களில். படுத்திருக்காதே... படுத்திருக்காதே...ஏதாவது வேலைசெய்துகொண்டிரு என்று கப்பல் தளவேலைக்குப் பொறுப்பான போசன் மாஹ்மத் அடிக்கடி வந்து சொல்லியும் அவன் எழும்ப மறுத்துக்கிடந்தான். 'கப்பல் ஈரானில் பந்தர்அபாஸ் என்ற துறைமுகத்துக்குப் போகிறது, இன்னும் இரண்டு மூன்று நாட்களில் அங்கே நாங்கள் போய்ச் சேர்ந்துவிடுவோம், கப்பலில் அனுபவமில்லாவிட்டால் எல்லோருக்கும் இப்படித்தான், அதற்காக இப்படியே படுத்துக்கிடந்தாயானால் பந்தர்அபாஸ் போனதும் உன்னை திரும்ப இலங்கைக்கு அனுப்பிவிடுவார்கள், கவனம்' என்று பார்வையில் அறிமுகமாகியிருந்த ஒரு சிங்கள கப்பல்கார இளைஞன் வந்து சொல்லிப்போனான். கலாபன் அப்போதும்

54ம் பக்கம் பார்க்க...

**Driving School**

ஒட்டனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை,
நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
G1, G2 தேர்வுப் பயிற்சிகள்,
போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள்,
வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி

General Driving School
Ministry of Transportation Approved Instructor
பேரின்பநாதன் வேந்தன்
416-731-2829



# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

- கடன் 80% குறைய நடவடிக்கை
  **Reduce your debts upto 80%**
- கடனுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
  **Stop all interest on your debts**
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புக்கள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்
  **Stop collection calls, legal action & garnishments**
- உங்கள் சொத்துக்கள் பாதுகாக்கப்படும்
  **Protect all your assets**
- மாதாந்த ரீதியில் எலங்லாக்கடனையும் தீர்க்க வசதி செய்தல்
  **Make one monthly payment to all of your creditors**
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
  **Give you solutions with out bankruptcy**

digi Media

வங்குரோத்துக்கு சட்டங்களில் மாற்றங்கள் வரவிருக்கின்றன. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
**New Changes are coming from Bankruptcy Act. Call me for Details.**

## Suren Sornalingam

Certified Insolvency Counsellor

Tel: **416.264.1272**

Fax: 416.332.0914

web: www.creditrecoverycanada.com



crc

**CREDIT RECOVERY CANADA**

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON
M1P 4X4

## காதல் வாழ்க்கை - 6

# உடன்போக்கு



வி. கந்தவனம்

தலைவனும் தலைவியும் இரகசியமாகச் சந்தித்து வந்தனர். அவர்களது களவொழுக்கத்தை எப்படியோ அறிந்துகொண்ட ஊரார் கிசுகிசுக்கத் தொடங்கினர். அலர் எழுந்ததைத் தலைவியின் தோழி தலைவனுக்குத் தெரிவித்தாள். அதனால் அலர் அடங்கும்வரை தலைவியை வந்து சந்திப்பதை அவன் நிறுத்திக் கொண்டான்.

தலைவனைக் காணாது தலைவி தவித்தாள். தலைவியின் தவிப்பு அவளது தோழியையும் கலங்க வைத்தது. அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்? அன்புக்கு உரியவளின் துயரைக் களைவதன்றோ உண்மையான நட்பு. தலைவியின் கவலையைத் தலைவனுக்கு எப்படியும் தெரிவித்துவிட வேண்டும் என்று துடித்தாள். தலைவன் சிலவேளை தலைவியைத் தேடி வரக்கூடும் என்று நினைத்து அவன் முன்பு அவளைச் சந்திக்கும் இடத்துக்குச் சென்றுவரத் தொடங்கினாள் தோழி.

தலைவனும் தலைவியின் நினைவால் வருந்தினான். காதல் வியாதி பொல்லாதது. இந்தப் பொல்லாத வியாதிக்கு மருந்து ஒரு சந்திப்புத்தான். அவன் துணிந்து விட்டான். இராப் பொழுதில் தலைவியைக் காணப் புறப்பட்டான். தலைவியை நேரடியாகக் காண முடியாது. காண்பதற்கு அவளின் தோழியின் உதவி வேண்டும். நல்ல காலமாகத் தோழியும் எதிர்ப்பட்டாள்.

தலைவன்: என்னுயிர்க் காதலியைக் காண வேண்டும்.

தோழி: எவ்விதம் காண்பீர்? உங்கள் இருவரது தொடர்பும் உண்மையாகவே தேவையற்ற புறங்கூறலை (அலரை) எழுப்பியுள்ளது. இந்நிலையில் தலைவி உம்மைக் காணா அஞ்சுகின்றாள்.

தலைவன்: இதற்கு என்ன செய்யலாம்?

தோழி: நீர் ஏற்கனவே முறையாக அவளை மணம் முடித்திருக்க வேண்டும். அதனைச் செய்யாது களவொழுக்கத்தில் காலத்தைக் கழித்ததாலன்றோ இந்நிலை ஏற்பட்டது.

தலைவன்: திருமணம் செய்ய நான் தயார்.

தோழி: அலர் எழுந்ததால் அவளது பெற்றோர் மனம் உடைந்துள்ளனர். நீர் ஒரு பொறுப்பற்ற மனிதர் என்பது அவர்களது கருத்தாகவுள்ளது. அவர்களைத் திருமணத்துக்குச் சம்மதிக்க வைக்கக் காலம் எடுக்கும். அதுவரை உம்மைக் காணாது தலைவி தரித்திராள். இப்பொழுதே உமது நினைவால் அவள் மிகவும் மெலிந்து விட்டாள்.

தலைவன்: அப்படியென்றால்...?

தோழி: அப்படியென்றால்?

தலைவன்: அவளை என்னோடு அழைத்துக் கொண்டு செல்வதைவிட வேறு வழியில்லை.

தோழி: அதனை உடனே செய்க.

தலைவன்: அதற்கு அவள் சம்மதிக்க வேண்டுமே?

தோழி: உமது பிரிவால் அவள் உயிரையே விட்டுவிடுவாள் போலத் தெரிகின்றது. அத்த கையவள் உம்முடன் வர மறுப்பாளா என்ன.

தலைவன்: தயவு செய்து எனது முடிவை அவளுக்கு எடுத்துக் கூறி ஆவண செய்யவும்.

தோழி: என்னால் முடிந்த அளவுக்குச் செய்வேன்.

தோழி விரைந்து சென்று விடயத்தைத் தலைவிக்குக் கூறினாள். 'தோழி, உன் தலைவரைச் சந்தித்தேன், அவர் உன்னைப் பிரிந்து இருக்கமாட்டாத கவலையால் மிகவும் வாடிப் போய் இருக்கின்றார். உன்னைத் தமது ஊருக்குக் கொண்டுசெல்ல விரும்புகின்றார். உனது கருத்து என்ன' என்றாள்.

அது கேட்ட தலைவி, 'தோழி, நாணம் நம்மோடு மிக நெடுங்காலம் உடன் இருந்து வருந்தியது. இனிமேல் வெள்ளைநிறப் பூவினையுடைய கரும்பைத் தாங்கி நிற்கும் உயர்ந்த மணலையுடைய சிறிய கரை, இனிய நீர் நெருங்கி அடித்தலால் அழிந்து வீழ்ந்தாற்போல எனது நாணமும் தடுக்கும்வரையில் தடுத்து, காமம் மேன்மேலும் நெருக்க என்பால் நில்லாது போய்விடும். அவ்விதமான இரங்கத்தக்க நிலையில் நான் இருக்கின்றேன்.' எனப் பதில் அளித்தான்.

அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே இனியே
வான்பூங் கரும்பின் ஓங்குமணற் சிறுசிறை
தீம்புனல் நெரிதர வீய்ந்துக் காஅங்குத்
தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைந்நில் லாவே.
குறுந்தொகை 149

அளிது - இரங்கத்தக்கது: உழந்தன்று – வருந்தியது: வான் - வெண்மை நிறம்: சிறை – கரை: நெரிதர – நெருங்கி அடித்தலால்: வீய்ந்து – அழிந்து: உக்காங்கு – வீழ்ந்தாற்போல: கைநில்லாது – என்பால் நில்லாது: அளிது–அது இரங்கத் தக்கது.

தலைவி தலைவனுடன் செல்லுதலால் தனது நாணம் அகலும் என்ற கவலையைத் தோழிக்குத் தெரிவிக்கின்றாள்.

இதுவரை அவளிடத்தில் காமமும் நாணமும் ஒத்த அளவினதாக இருந்தன. இனிமேல் காமத்துக்கு (அவர்களுடைய காதலுக்கு) நாணம் தோற்றுவிடும். நன்னீர்ப் பெருக்கத்தால் அழியும் மணற்கரையைப் போல.

பெண் ஒருத்தி திருமணம் ஆவதற்கு முன்னதாக ஒருவனுடன் ஓடிப்போவது நாணம் இல்லாத செயல். ஊரார் பழிச் சொல்லும் அவள் ஒரு நாணம் இல்லாதவள் எனப் பறைசாற்றும். இது குறித்து இந்தத் தலைவிக்குக் கவலைதான். எனினும், 'பரவாயில்லை. எனக்கு என் காதலரின் அன்பே முக்கியம். அதனால் நான் அவருடன் செல்லத் தயார்' என்னும் பொருள் அவளின் பதிலில் பொதிந்திருப்பதைக் காண்கின்றோம்.

இவ்விதம் தோழியின் உதவியுடன் பெற்றோருக்குத் தெரியாமல் தலைவனுடன் தலைவி 'ஓடிப்போகும்' வழக்கமும் பழந்தமிழர் மத்தியில் இருந்தது. இதனை 'உடன்போக்கு' என அகப்பொருள் ஆசிரியர் வழங்குவர்.

kandavanam.v@thaiveedu.com

■ ■ ■

# மருத்துவ கேள்வி...

36ம் பக்கத் தொடர்ச்சி...

தாக்கத்தால் அழற்சியுறும் சிறுநீர்த்தாரையில் மற்றும் அதனுடைய சுற்றுப்புறமுமே இதற்குக் காரணம் என்று கூறுகின்றார்கள். மேலும் இந்த நுண்கிருமிகள் கூட பாலியல் வியாதியில் சம்பந்தப்பட்ட நுண்கிருமிகளின் தாக்கமே அதிகளவில் இப்படிப்பட்ட மாற்றத்தை உண்டாக்குகிறது என்பது இவர்களுடைய வாதம். ஆனால், இந்தக் கருத்துக்கு எதிர்மறையானவர்களும் உள்ளனர். அவர்கள் கூறுவது என்னவென்றால் சிறுநீர்த்தாரையில் ஏற்படும் நுண்கிருமிகளின் தாக்கம் அதைச் சுற்றியுள்ள சதையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் சில தடையான சதைகளைத் தாண்டிவில் இப்படிப்பட்ட மாற்றத்தை உண்டாக்குகிறது என்பது இவர்களுடைய வாதம். ஆனால், இந்தக் கருத்துக்கு எதிர்மறையானவர்களும் உள்ளனர். அவர்கள் கூறுவது என்னவென்றால் சிறுநீர்த்தாரையில் ஏற்படும் நுண்கிருமிகளின் தாக்கம் அதைச் சுற்றியுள்ள சதையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் சில தடையான சதைகளைத் தாண்டியிருக்கின்ற உணர்ச்சியூட்டும் சதையை எப்படிப் பாதிக்கும்?

இது ஒரு நல்ல வாதமே, எப்படியிருந்தாலும், இந்த மாற்றத்தினால் அந்த சதையில் உள்ள இரத்த நாளங்கள் பாதிக்கப்பட்டு வேறு நார் போன்ற சதைகளால் நல்ல சதைகள் மாற்றப்பட்டு நாளடைவில் ஒரு எலும்பிற்குரிய குணத்தை உண்டாக்கக்கூடிய சதை மாற்றம் உண்டாவது கண்கூடு. இதேபோன்ற நிலை தான் கையின் மணிக்கட்டுப் பகுதியில் ஏற்படும் வளைவு நிலைக்கும் காரணமாகும். ஒரு முக்கியமான ஆய்வு என்னவென்றால் இந்த சதை மாற்றம் லிங்கத்தின் மற்ற பகுதிகளைவிட மேல்புறப்பகுதியையே அதிகம் பாதிக்கிறது.

**நோய் வெளிப்பாடு:**

லிங்கத்தில் ஏற்படும் ஊனம் மற்றும் வளைவு.

- கட்டி போன்ற உணர்வு.
- வலி. குறிப்பாக விறைப்பு ஏற்படும் பொழுதும், உடல் உறவு கொள்ள நினைக்கும் பொழுதும்.
- பேடித்தன்மை.

இந்தக் கடைசி நிலை ஏற்படுவதற்குக் காரணம் லிங்கத்தில் ஏற்படும் வலியும் அந்த வளைவும் நாளடைவில் பெண் பாலியல் உறுப்போடு இணைய முடியாத அவல நிலை ஏற்படுவதால் தான் லிங்கம் கல்போன்றும், எலும்பு போன்றும் மாறி லிங்கம் வளைந்து விடுவதால் இந்த நிலை ஏற்பட்டு ஒரு ஆண் பேடிமைக்கு ஆளாகின்றான்.

### சிகிச்சையில்லாத நிலையில் ஏற்படும் இயற்கையான மாற்றங்கள்:

உலகின் சில மருத்துவ நிபுணர்கள் இந்த வியாதி எந்த வித சிகிச்சை முறையும் இல்லாமலேயே நாளடைவில் மறைந்து விடுவதாகக் கூறியுள்ளார்கள். ஆனால், எங்கோ ஒரு சில விதிவிலக்கான நிகழ்ச்சியல்ல. இவர்களுடைய கூற்றுப்படி முதலில் வலி மறைந்துவிடுகிறது. அடுத்து கட்டி போன்றும் உள்ள வடு மறைகின்றது. அதற்கடுத்து லிங்கத்திற்கு உரிய நீளும் தன்மை திரும்பி வரப்பெற்று வளைவு மறைகின்றது. இறுதியில் லிங்கம் தன்னுடைய முழுமையான இயற்கை உருவை திரும்பப் பெறுகின்றது என்று கூறுகின்றார்கள். ஆனால், இது மிக மிக அதிசயமான ஒன்றாகும்.

rajasekar.a@thaiveedu.com

■ ■ ■




VIN KITCHEN & BATH
Design & Install

Custom & Refacing kitchens
Bath Vanities & Bars
Countertops

15 years experience
100% satisfaction guaranteed

For
free estimates and design

Call: Jey Kumar
647 388 3225
vinkitchen@gmail.com

இல்லறத்திற்கு அழகு அன்பான மனைவி & குழந்தைகள்
இல்லத்திற்கு அழகு அழகிய சமையலறை & குளியலறை


தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail:thaiveedu@gmail.com
Fax: 416-849-0594
Tel: 416-646-3422


Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Zoning Changes • Building Permits • Plan Review • Public Relations • Team Leadership • Expert Testimony • Municipal Planning • Project Management • Development Planning • Specifications Review • Contract Administration • Construction Technology • Industrial Reuse Strategies
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com

# பறவையைக் கண்டான் விமானம் படைத்தான்..!

காலத்தின் கோலம் மனிதனை எப்படியோ எல்லாம் மாற்றிவிட்டது. நண்டு கொழுத்தால் வளையில் இருக்காது என்பார்கள். அதுபோல, புவியில் ஏற்பட்ட தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக மனிதனும் பல துறைகளிலும் முன்நோக்கிச் செல்லத் தொடங்கிவிட்டான். இருப்புக் கொள்ளாமல், பூமியை விட்டு வெளிக்கிட்டு எங்கோ எல்லாம் பறக்கத் தொடங்கி விட்டான் என்றே சொல்ல வேண்டும். பறவை பறப்பதைப் பார்த்து எப்படி விமானத்தைப் படைத்தானோ, அதே போல தும்பி பறப்பதைப் பார்த்து ஹெலிகொப்ரர்களைத் (Helicopters) தயாரிக்கத் தொடங்கினான். இந்த விரைவான வளர்ச்சி காரணமாக சந்திரன் நோக்கியும், செவ்வாய் நோக்கியும் ஏன் வேறு கிரகங்களை நோக்கியும் அவனது பார்வை திரும்பி விட்டது. சமீபத்தில் ஒகாயோ மாநிலத்தில் உள்ள விமானக் காட்சிச் சாலைக்குச் (U.S. Air Force Museum) சென்றிருந்தேன். சந்திர மண்டலத்தில் காலடி எடுத்து வைத்த முதல் மனிதனான நீல் ஆம்ஸ்ரோங் (Neil Armstrong) இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவரது பெயரையே அந்த விமானக்காட்சி சாலைக்கும் சூட்டியிருந்தார்கள்.

வானத்தில் மனிதன் பறப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாவற்றையும் சரித்திர பூர்வமான முடிந்த அளவு தேவையான விளக்கங்களோடு அங்கே அமைத்திருந்தார்கள். பலூன் பறக்கத் தொடங்கிய காலத்தில் இருந்து இன்றைய விண்வெளிப் பயணம் வரை, தங்களால் முடிந்தவரை ஆவணப் படுத்தி வைத்திருக்கின்றார்கள். 1640ல் எவான்கெலிஸ்டா (Evangelista) என்பவர் காற்றுக்கும் பாரம் (Air has weight) இருக்கிறது என்பதைக் கண்டறிந்தார். 1783ம் ஆண்டு யூன் மாதம் பிரான்சில் முதன் முதலாகப் பறக்கவிடப்பட்ட சூட்டுக் காற்றில் பறக்கும் பலூனைப்பற்றிய விளக்கமும், தொடர்ந்து 1783ம் ஆண்டு அக்டோபர் மாதம் பறக்க விடப்பட்ட பலூனில் முதற் பயணிகளாக ஒரு செம்மறியாடும், ஒரு சேவலும், ஒரு வாத்தும் சுமார் எட்டு நிமிடங்கள் வரை வானத்தில் பறந்து சாதனை படைத்ததையும் இங்கே ஆவணப் படுத்தியிருக்கிறார்கள். 'செம்மறி' என்று சில பெற்றோர்கள் ஆத்திரத்தில் தங்கள் குழந்தைகளைத் திட்டினாலும், வானத்தில் முதற் பறந்த பெருமையைச் செம்மறியாடு தட்டிக் கொண்டதால் அப்படியான பெற்றோருக்கு அதனால் செம்மறி மீது ஒருவித மதிப்பு ஏற்படத் தொடங்கி இருந்தது. அதனால் தானோ என்னவோ எடுத்ததற்கெல்லாம் 'செம்மறி' என்று பிள்ளைகளைத் திட்டிக் கொண்டிருந்த அனேக பெற்றோர்கள் அதன்பின் அப்படித் திட்டுவதை நிறுத்திக் கொண்டனர். 1784ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் திகதி ஏழு மனிதர்கள் ஒன்றாகச் சேர்ந்து சுமார் 3000 அடி உயரம் வரை பலூனில் வானத்தில் பறந்து சாதனை படைத்துக் காட்டினார்கள்.

பலூனில் பறந்து அனுபவம் பெற்றவர்கள் ஒரு படி மேலேசென்று இயந்திரத்தின் துணையுடன் பறப்பதற்கு முயற்சி செய்தனர். அந்தக் காலத்தில் பறப்பதில் ஆர்வம் காட்டிய ரைட் சகோதரர்கள் இங்கே உள்ள டேற்றன் (Dayton) நகரத்தில் சைக்கிள் கடை ஒன்று வைத்திருந்தார்களாம். அப்போதுதான் அவர்களுக்கு வானத்தில் பறந்து பார்க்கும் ஆசை ஏற்பட்டதாம். அங்கே அவர்கள் பறப்பதற்கு முயற்சி செய்து பார்த்த பறக்கும் யந்திரத்தை இந்தப் பொருட்காட்சி சாலையில் மக்களின் பார்வைக்காக வைத்திருந்தார்கள். ஒலிவர் ரைட் (Orville wright- 1871-1948) என்பவரும் அவரது சகோதரரான வில்பர் ரைட் (Wilbur wright – 1867 - 1912) என்பவருமே முதன் முதலாக (17-12-1903) வானத்தில் பறப்பதற்கு 'கிற்றி காவக' (Kitty Hwak) என்ற பறக்கும் இயந்திரத்தில் முயற்சி மேற்கொண்டதாக இங்கேஉள்ள ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. சுமார் பத்தடி உயரத்தில் 120 அடிகள் தூரம் வரை அவர்கள் பறந்தார்கள். பன்னிரண்டு வினாடிகள் வரை அந்த முதற்பறப்பில் பறந்ததாகத் தெரிய வருகின்றது.

யப்பான் நாகசாகி (Nagasaki – The Boeing B-27) மீது அணுக்குண்டு வீசிய போயிங்-பி-29 விமானமும் இங்கே மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தொழில் நுட்பம் காரணமாக தண்ணீரில் இறங்கும் விமானம் தொடக்கம் ஜெட்விமானம், விண்வெளிக் கலம் வரை வளர்ச்சி அடைந்து விட்டன. அந்த வளர்ச்சிகள் பற்றி எல்லாம் இங்கே படிப்படியாகப் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் பறக்கும் சாதனங்களில் இருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. அதிக இருக்கைகளைக் கொண்ட பயணிகள் விமானங்கள் அதிக அளவில் இன்று உலகம் எல்லாம் பாவனையில் இருக்கின்றன. அனேகமான நாடுகள் தங்களுக்கென்று விமான நிறுவனங்களை வைத்திருக்கின்றன. விண்வெளியைத் தாண்டிச் சென்று வரும் கொலம்பியா விண்வெளிக் கலத்தைப் பற்றியும் இங்கே குறிப்பிடலாம். இனி வருங்காலத்தில் பயணிகள் விமானங்களும் அப்படியே பயணிக்கப் போவதாத் தெரிகின்றது. நேரே உயரச் சென்று விண்வெளியைத் தாண்டிச் சென்று மீண்டும் இறங்க வேண்டிய இடத்திக்குத் திரும்பி வருவதன் மூலம் நேரத்தை மிச்சம் பிடிக்கலாம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். விமானத் தளங்களும் அதற்கு ஏற்றது போல மாற்றி அமைக்கப்படுமாம். இத்திட்டம் சரி வந்தால், குறுகிய நேரத்தில் இன்னும் விரைவாகப் பயணம் செய்வதற்கு வாய்ப்புண்டு. இதன் மூலம் உலகம் இன்னும் சுருங்கி விடும் என்கிறார்கள். விமான விபத்துக்கள் அவ்வப்போது நடந்தாலும், விமானங்களைத் தகுந்த முறையில் பராமரித்தால் அனேகமான விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். பறக்கும் சாதனங்கள் எப்படி மனிதனின் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்தனவோ, அதேபோல மனித குலத்தின் அழிவிற்கும் காரணமாயின.

வான் பயணம் பற்றிக் குறிப்பிடும் போது, இலங்கையில் தொடக்க காலங்களில் 40 பயணிகள் பயணிக்கக்கூடிய அவ்ரோ விமானங்கள் இரண்டு பாவனையில் இருந்தது நினைவில் வருகின்றது. கொழும்பில் இருந்து காங்கேயந்துறை விமானத் தளம் வழியாக இந்த விமானங்கள் இந்தியாவில் உள்ள திருச்சிக்கும், சென்னைக்கும் தினமும் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. இவற்றில் ஒரு விமானம் பழுதடைந்ததாலும், மற்றைய விமானம் போராளிகளைல் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாலும் பாவனையில் இருந்து முற்றாக அகற்றப்பட்டன. அதன் பின்பு பல பெரிய விமானங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு கொழும்பில் இருந்து நேரடியாக சென்னைக்கும் திருச்சிக்கும், பல்வேறு நாடுகளுக்கும் சென்று வந்தன. மீண்டும் கட்டுநாயக்க சர்வதேசவிமானத் தளம் விடுதலைப் போராளிகளால் தாக்குதலுக்கு உள்ளான போது பல பயணிகள் விமானங்கள் எரிந்து சாம்பலாகி விட்டன. இத்தாக்குதலில் 13 விமானங்கள் போராளிகளால் தகர்க்கப்பட்டிருந்தன. சிறுபான்மை இனத்தவரான தமிழர்களின் எழுச்சியை எப்படியாவது அடக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பெரும்பான்மை இனத்தைக் கொண்ட அரசாங்கம் யுத்த விமானங்களை வாங்கிக் குவிப்பதில் தனது கவனத்தைச் செலுத்தியது. இந்த காலகட்டத்தில்தான் கிபீர் (KIFR) என்று சொல்லப் படுகின்ற இஸ்ரேல் தயாரிப்பான தாக்குதல் விமானங்கள் பல கோடிக்கணக்கான செலவில் வாங்கப்பட்டன. மேலும் ரஸ்சியத் தயாரிப்பான மிக்–27 ரக விமானங்களும் (MikoyanMIG–27) ஹெலிகொப்ரர்களும் (MI-24P) வாங்கப்பட்டன. இதைவிட சீனத்தயாரிப்பான (FT-7, F7BS, F7G) யுத்த விமானங்களும் வாங்கப்பட்டன. உள்நாட்டு யுத்தத்தில் சிறுபான்மை இனமான தமிழ் இனத்தை அழித்து ஒழிப்பதற்கு இத்தகைய விமானங்களே அதிகமாகப் பாவிக்கப்பட்டன. செஞ்சோலைச் சிறார்களைக் கொன்று குவிப்பதற்குக் காரணமாக இருந்த விமானங்களை அழித்தொழிக்கும் நோக்கத்தோடு மீண்டும் ஒருமுறை போராளிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது. இம்முறை அனுராதபுரம் சாலியபுரத்தில் உள்ள விமானப்படைத்தளம் தாக்கி அழிக்கப்பட்டது. இதில் எட்டு விமானங்கள் தாக்கி அழிக்கப்பட்டன. உலகிலேயே தங்களுக்கு என்று ஒரு விமானப்படையை வைத்திருந்த விடுதலை இயக்கத்தின் விமானம் ஒன்றும் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத் தக்கது. இதைவிட விமான ஓட்டி இல்லாமல் பறக்கும் வேவு பார்க்கும் அமெரிக்க, இஸ்ரேலிய தயாரிப்பான (RQ-2 Pioneer) விமானங்கள் இலங்கை விமானப் படையிடம் இருந்தன. இவற்றில் சில சுட்டு வீழ்த்தப்பட்டும், விபத்தில் அகப்பட்டும் அழிந்து போயின. ஆக மொத்தமாக ஒரு இன ஒழிப்புக்கு இப்படியான விமானங்களும் காரணமாக இருந்ததை மனித நேயம் மிக்கவர்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.



குரு அரவிந்தன்

ஆண்டவன் மீது நம்பிக்கை கொண்டவர்கள் அநியாயம் நடக்கும் போதெல்லாம் மேலே கையைக் காட்டி 'எல்லாம் அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான்' என்பார்கள். இறைவன் தண்டிப்பான் என்று தங்கள் இயலாமையின் வெளிப்பாட்டைத்தான் அப்படிக் காட்டுவார்கள். சமீபத்தில்கூட வன்னியில் ஒரு தமிழ் மூதாட்டி இப்படிச் சொன்னபோது விரக்தியில் இருந்த யாருமே அதைப் பெரிது படுத்தவில்லை. 'எங்கே இருக்கிறான், இருந்தால் இப்படிக் கைவிடுவானா?' என்று ஏளனம் செய்தார்களாம். 'தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்' என்று பதில் அளித்தாராம் அந்த மூதாட்டி. கனரக ஆயுதங்கள் பாவித்ததற்கான ஆதாரங்கள் எல்லாம் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில், திடீரென கனரக ஆயதங்கள் பாவித்தற்கான சாட்சியங்கள் இருக்கின்றன என்று ஐ.நாவின் செய்தி வெளிவந்தபோது உலக நாடுகளே அதிசயத்துப் போயின. ஆமாம், மேலே பறப்பில் இருந்த விண் வெளிக்கலம் ஒன்று அங்கே நடந்த எல்லா வற்றையும் துல்லியமாகப் படம் எடுத்திருந்தது. தங்கள் செய்த தமிழ் இன ஒழிப்பிற்கு ஆதாரமே இல்லை என்று நம்பிக்கொண்டு இருந்தவர்களுக்கு இந்தச் செய்தி பெரும் அதிர்ச்சியாக இருந்தது. இதை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் ஏதோ ஒரு விதத்தில் என்றோ ஒருநாள் உண்மை வெளிவரத்தான் செய்யும், தர்மம் என்றும் வெல்லத்தான் செய்யும். நேற்றிருந்தார் இன்றில்லை என்று மனம் சோர்ந்து போகாமல், எமது லட்சியத்தை முன்னெடுத்து தகுந்த நேரத்தில் தகுந்த ஆதாரங்களை உலகிற்கு நிரூபிப்பது எமது இனத்தின் இன்றைய தலையாய கடமையாகும்.

kuruaravindan@thaiveedu.com

■ ■ ■


Hercules


Mig -27


MI-24P


Kfir


MIG - 27

# கருவேப்பிலை...

42ம் பக்கத் தொடர்ச்சி...

யைப் பன்மடங்காக்கும். கருவேப்பிலையை அரைத்துச் சாப்பிட்டால் இருதயம், நுரையீரல், இரத்தம் தொடர்பான நோய்கள் வரும் வாய்ப்புக் குறைவு என்று சில சமூக அமைப்புகளின் ஆய்வறிக்கைகளில் இருந்து அறியக் கூடியதாக இருக்கின்றது. சிவப்பு அணுக்களை அதிகரிக்கச் செய்யும். பித்தத்தைத் தணிக்கும். பித்தம் அதிகரிப்பதால் வரக்கூடிய மனக் குழப்பம் அல்லது மனப்பிரமை போன்ற நோய்களைக் கருவேப்பிலை கட்டுப்படுத்தும் என்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன. தொற்று நோய்களை எதிர்க்கும் சக்தியும் கருவேப்பிலைக்கு உண்டு. கருவேப்பிலை புண்களைக் குணப்படுத்தும் பல் ஈறுகளை வலுப்படுத்தும்; இரத்த சோகையைக் குணப்படுத்தும். காலையில் பத்துக் கருவேப்பிலைகளையும் மாலையில் பத்துக் கருவேப்பிலைகளையும் மரத்திலிருந்து பறித்தவுடனே பச்சையாக மென்று சாற்றை விழுங்கி வந்தால் நீரிழிவு மாத்திரைகளைப் பாதியாகக் குறைக்கலாம் என்று அனுபவசாலிகள் கூறுகின்றனர். கரு வேப்பிலை, உணவுடன் சேர்ந்து நன்றாக அவிந்து அதன் மருத்துவக் குணங்கள் நிறைந்த சாறு உணவுடன் சேர்வதால் உணவில் மணமும் சுவையும் மட்டும் உண்டாவதில்லை; செமிக்கும் சக்தியையும் ஏற்படுத்திப் பித்தம், வாயு, கபம் போன்றவற்றையும் நீக்குகின்றது. கருவேப்பிலையையும் கொத்தமல்லிக் கீரையையும் சேர்த்து அரைத்துப் பச்சடி செய்தும் சாப்பிடலாம். இந்த இரண்டு கீரைகளும் செமிபாட்டுச் சக்தியை அதிகரிக்கச் செய்யும் பணியில் முதலிடத்தில் இருக்கின்றன.

நூறு கிராம் கருவேப்பிலையை அரைத்து எடுத்த சாற்றுடன் நூறு கிராம் தேங்காய் எண்ணெய்யில் கலந்து இதமான சூட்டில் ஈரப்பதம் நீங்கும்வரை காய்ச்சி, அதனை ஒவ்வொரு நாளும் தலைக்குத் தேய்த்து வந்தால் உடல் சூடு நீங்கும் என்றும் பரம்பரை நரை வராது என்றும் கண் பார்வை மங்காது என்றும் இங்கிலாந்தில் ஒரு விவசாய ஆய்வு நிலையம் கூறுகின்றது.

கருவேப்பிலையில் துவையல் செய்து உண்ணலாம். இதில் காரப்பொடி செய்து நெய்யுடன் சேர்த்து உணவுடன் சாப்பிடலாம். வளரும் குழந்தைகளுக்கும் வலுக் குறைந்த முதியோருக்கும் இரும்புச் சத்தை இழக்கும் பெண்களுக்கும் கருவேப்பிலை ஒரு சிறந்த சத்துணவாகும். மூன்று மாதங்களுக்குத் தினசரி மூன்று கருவேப்பிலையை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால், நீரிழிவால் உடல் கனமாவது குறைக்கப்படும். சிறுநீரில் சர்க்கரை வெளியேறுவதும் நிறுத்தப்படும். இரத்தத்தில் இருக்கும் கொழுப்புக் கரையும். கருவேப்பிலையைப் பச்சையாக மென்று தின்பதால் குரல் இனிமையாகும், சளி குறையும் என்கிறது மருத்துவம். கருவேப்பிலைகளைக் கசக்கியோ அரைத்தோ தோல் வீக்கங்களுக்குப் பற்றுப் போடக் குணமாகும்.



நரை முடியை, குறிப்பாக இளம் வயதிலும் நடுத்தர வயதிலும் வரக்கூடிய நரையைத் தவிர்ப்பதறகு கருவேப்பிலையைப் பயன் படுத்தும்படி மருத்துவ நூல்கள் கூறுகின்றன. அரை கிலோ நல்லெண்ணையைக் காய்ச்சி இறக்கியதும் அதில் 50 கிராம் பச்சைக் கரு வேப்பிலையைப் போட்டு மூடிவிட வேண்டும். மறுநாள் இதனை லேசாகச் சூடாக்கித் தலையில் தேய்த்துச் சீயக்காய் வைத்து அலச வேண்டும். வாரம் இரு முறை இவ்விதம் குளித்துவர நரைமுடி கருமையாகும் என்று சொல்லப்படுகின்றது.

ஒரு பிடி கருவேப்பிலையை அரைத்துச் சாறெடுத்து, அதில் மூன்று தேக்கரண்டி வெந்தயப் பவுடரைக் கலந்து பிசைந்து தலையில் அப்பிக் காய்ந்த பிறகு அலச வேண்டும். இப்படி வாரம் ஒரு முறை செய்து வந்தால் இளநரை இல்லாமல் போகும்.

கருவேப்பிலை, மருதாணியிலை, கரிசலாங் கண்ணி இலைத் தண்டு, வேப்பிலைக் கொழுந்து ஆகியவற்றை அரைத்துத் தலைக்குப் பூசி வந்தால் நரை மறையும்.

கருவேப்பிலையை அரைத்துக் காயவைத்த பின் தேங்காய் எண்ணெய்யில் அல்லது தலைக்கு வழக்கமாக உப யோகிக்கும் எண்ணெய்யில் போட்டுச் சில நாட்கள் ஊற வைத்த பின்னர், அதை நாளாந்தம் தலையில் தேய்த்துவர நரையைத் தவிர்ப்பதோடு முடி உதிர் வதையும் தடுக்கலாம்.

கருவேப்பிலையை அரைத்து மோரில் கலந்து கூந்தலில் பிரட்டி, இருபது நிமிடங்களுக்குப் பின்னர் கழுவ வேண்டும். இவ்விதம் வாரத்தில் மூன்று நாட்களுக்குச் செய்து வந்தால், இளம் பெண்களுக்கும் நடுத்தர வயதுப் பெண்களுக்கும் வரக்கூடிய அகாலநரை அகலும்.

கருவேப்பிலையைப் பச்சையாக மென்று தின்பதாலும் நரைமுடி படிப்படியாக மாறிக் கருமையாகும் என்றும் சொல்லப்படுகிறது.

முன்னொரு காலத்தில் ‘செண்பகப் பாண்டியன்’, ‘செண்பகப் பாண்டியன்’ என்றொரு அரசன் இருந்தான். அந்த அரசன் ஒரு நாள் பூங்காவில் அரசியுடன் சிரித்துப் பேசிக் கொஞ்சிக் குலாவிச், சந்தோஷமாக இருந்தபோது, அவளுடைய கூந்தலிலிருந்து ஏதோவொரு சிறப்பான நல்ல நறுமணம் வருவதை உணர்ந்து, அதனை முகர்ந்து, மிகவும் மகிழ்ந்து, மனம் நிறைந்து, ஆஹா என்று ஆச்சரியப்பட்டு, அடடா என்று அதிசயப்பட்டு, “யாரங்கே?” என்று பக்கத்திலேயே நின்ற சேவகனைப் பலமாகக் கைதட்டிக் கூப்பிட்டு, “அமைச்சரை அவசர அவசரமாய் அழைத்துவா” என்று ஆணையிட்டு, அரச சபையை உடனடியாகக் கூட்டும்படி அமைச்சருக்கு உத்தரவிட்டு, “பெண்களின் கூந்தலில் உள்ள நறுமணம் இயற்கையாக உள்ளதா அல்லது வாசனைப் பொருட்களைப் பயன் படுத்துவதாலும், வாசனையுள்ள மலர்களைச் சூடுவதாலும் செயற்கையாக ஏற்பட்டதா?” என்ற தனது மனைவியின் கூந்தலால் ஏற்பட்ட சந்தேகத்தை ஊரெல்லாம் பறையடித்து, அனைத்து புலவர்களுக்கும் அறிவித்து, அதற்குச் சரியான விடையைக் கூறுபவர்களுக்கு ஆயிரம் பொற் காசுகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தான், அல்லவா? வாரம் ஒருமுறை, கருவேப்பிலை ஒரு பிடி, மருதாணி ஒரு பிடி, செம்பருத்தியிலை ஒரு பிடி, விதை நீக்கிய பூந்திக் கொட்டை நான்கு ஆகியவற்றை ஒரு நாள் முழுவதும் ஊற வைத்து, அடுத்த நாள் அவற்றை அரைத்துத் தலையில் தேய்த்துக் கூந்தல் முழுவதிலும் பிரட்டிக் கொஞ்ச நேரம் ஊறியபின் கழுவி வந்தால் தலை(முடி) சுத்தமாகும் கூந்தலின் கமகம என்னும் நறுமணம் உள்ளத்தை உலுக்கும்; உணர்வுகளை கிளர்ந்தெழச் செய்யும் செண்பகப் பாண்டிய மன்னனின் கேள்விக்கும் விடை கிடைக்கும்! ஆனால், sorry, பொற்காசுகள் கிடைக்காது, too late!.

கருவேப்பிலையைப் பற்றிச் சாதாரணமாக எமக்குத் தெரிந்த ‘வித்தை’ என்னவென்றால் கறிக்குள் கருவேப்பிலையைப் போட்டுச் சமைப்பதும், சாப்பிடும்போது அதனைப் பத்திரமாகத் தூக்கித் தூரத்தில் வைப்பதும்தான். கருவேப்பிலையை எப்படியெப்படி உணவாக உட்கொண்டால் என்னென்ன பயன்கள் கிட்டும் என்பதையும் வேறென்ன விதமாகக் கருவேப்பிலையைப் பயன்படுத்தலாம் என்பதையும் இனிப் பார்க்கலாம்.

- கருவேப்பிலையை வறுத்துச் சாப்பிட்டால் வாந்தி நிற்கும்.
- விஷக் கடிகளுக்கும் கொப்புளங்களுக்கும் மேல் பூச்சாகப் பூசலாம்.
- சீதபேதிக்கு மருந்தாக இளம் தளிரைத் தயிருடன் உட்கொள்ளலாம்.
- பெண்கள் கருவேப்பிலையையும் மஞ்சளையும் அரைத்து முட்டையின் வெள்ளைக் கருவுடன் கலந்து முகத்தில் பூசி, இருபது நிமிடங்கள் கழித்து பச்சைப் பயற்றம் தூள் கலந்து கழுவ வேண்டும். இவ்விதம் அடிக்கடி செய்து வந்தால் முகம் ‘பளிச்’சென்று கவர்ச்சியாக மாறும். (கணவரின் கவனமும் கூடும்!)
- கருவேப்பிலையுடன் கொஞ்சம் உழுந்தையும் வெந்தயத்தையும் வறுத்து மிக்ஸியில் அரைத்து, மிளகாய் மற்றும் உப்புப் போன்ற தேவையானவற்றைச் சேர்த்துச் சட்னி செய்து இட்லி தோசையுடன் சாப்பிடச் சுவையாக இருக்கும். இப்படி அடிக்கடி சாப்பிட்டு வந்தால் உடல் நிறை சம நிலையில் இருக்கும்.
- கருவேப்பிலை 2 பிடியுடன் கசகசா 9 கிராம், கஸ்தூரி மஞ்சள் 4 கிராம் சேர்த்து மை போல அரைத்துத் தடிப்பமாக முகத்தில் பூசி 15 நிமிடங்களின் பின்னர் வெந்நீரில் கழுவ வேண்டும். இவ்விதம் சில நாட்களுக்கு காலை மாலை இரு வேளையும் பூசிவர, அம்மைத் தழும்புகள் படிப்படியாக மறையும்.

தொடரும் ...!

uthayanan@thaiveedu.com

**TYPE SETTING**

தமிழிலும் ஆங்கிலத்திலும் தட்டெழுத்து செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகொள்ளவும்.

**416 551 3972**

**www.inayam.net**

- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

**முற்றிலும் இலவசம்**

inayam

416•400•6406

digi

# 85 வயதுவரை ஆயுட்காப்புறுதி...

எண்பது வயதைத் தாண்டி விட்டோம் இனி நமக்கு Insurance எடுக்கமுடியாமல் போய்விட்டதே என எண்ணி ஏங்குபவர்கள்அந்த மனக்கவலையை விடுங்கள். வைத்திய பரிசோதனை அற்ற காப்புறுதி 85 வயதுவரைக்கும் எடுக்கலாம்.

## அதுவும் மிகக் குறைந்த விலையில்.



**Life**
Universal Life
Whole Life
Term Life

**RRSP**
Loan Aproved
Even SIN Number 9

**RESP**
+
20% Government Grant
15% Company Bonus

**Critical Illness**
Upto 25
Illness

digi Media



Insurance Broker

## Guna Selliah

**416.371.7776**

Assumption Life IA RBC

759 Warden Ave., Toronto, Ontario, M1L 4B5, Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220, E-mail: guna@lilandinsurance.com

# கலாபன் கதை...

47ம் பக்கத் தொடர்ச்சி...

எழும்பவோ, வேலைசெய்யவோ முயலவில்லை. முடியாது கிடந்திருந்தான்.

அவனுக்குள் ஒரு கூடும், வீடும் என்ற கனவு தகர்ந்துகொண்டிருந்தது. இருபது நாட்களுக்கு மேலே கப்பலில் இருந்திருக்கிறான். குறைந்தபட்சம் அரை மாதச் சம்பளமாவது கிடைக்கும். அப்போதைய ஓர் அமெரிக்க டொலரின் இலங்கை ரூபா மதிப்பு ஏழு ரூபா இருபத்தைந்து சதம். எப்படியும் கொழும்பில் குழந்தைக்கு ஒன்றிரண்டு சட்டையும், மனைவிக்கு ‘ரேசிங்கவு’னும் வாங்கிக்கொண்டு வீடு செல்லவும், அந்தப் பிரிவின் வதையோடு உழைத்த உழைப்பென்று இரண்டாயிரம் ரூபாவையாவது மனேவின் கையில் கொடுக்கவும் போதுமானதாயிருக்கும் என தன்னைச் சாந்தி செய்துகொண்டிருந்தான் அவன்.

மூவாயிரம் தொன் நிறையுள்ள பாரமேற்றக் கூடிய கப்பல் அது. கொழும்பிலிருந்து வெறுமையாகச் சென்றுகொண்டிருந்தது. தென் மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காலமாதலால் காற்று உக்கிரம்கொண்டு வீசியது. தரையிலேயே அதன் தாக்கம் பயங்கரமாய் இருக்கும். மரங்களை முறித்து, தோட்டங்களை நாசமாக்கி அந்த ஆடி, ஆவணி மாத காலங்களில் அது செய்யும் அட்டூழியம் கொஞ்ச நஞ்சமில்லை. தடுப்புகளற்ற கடல் வெளியிலோ பெரும் அட்டகாசம் போட்டது. கப்பல் முன்னே பத்தடி நகர்ந்தால், ஒரு வலிய அலை வந்து அதை ஐந்து அடி பின்னகர்த்தி வைத்துவிடும். முன்னேறுவதும், பின்னேறுவதும். கப்பல் கடலின் அலைகளுடன் போராடிக்கொண்டிருந்தது. கடலும் மலையென உயர்ந்து, பாதாளமெனத் தாழ்ந்து கப்பலை ஒரு பந்துபோல் விளையாடியது. எந்த விநாடியிலும் அந்தப் பந்தை கடல் தன் வயிற்றினுள் வாயைக் கிழித்துக்கொண்டு விழுங்கிவிடும்போல தோன்றிக்கொண்டிருந்தது கலாபனுக்கு.

ஒருபோது தன் ஒரேயொரு கப்பல் சிநேகிதனான அந்தச் சிங்கள வாலிபன் கிட்ட வந்தபோது, ‘நாங்கள் கரை போய்ச் சேருவோமா?’ என்றுகூடக் கேட்டுவிட்டான். அதற்கு அந்த வாலிபன் சொன்னான்: ‘பயப்படாதே. கப்பல் இரும்பினாலெனினும் மிதப்பதற்காகவே கட்டப்பட்டது. அது தாழுவது அபூர்வம். ஒரு பக்கத்துக்குச் சாய்ந்தால், மற்றப் பக்கம் தானாகவே நிமிரும்படியான அமைப்பு இதற்கு உண்டு. முன்னே சாய்ந்தால், அது பின்னே சாய்ந்து மறுபடி சமநிலையெடுக்கும்.’ பிள்ளையாரே கப்பலை எப்படியாவது காப்பாற்றிக் கரைசேர்த்துவிடு என்று கலாபனின் உள்ளம் மானசீகக் குரலெடுத்தது. அந்த உயிர்ப் பயத்தில் கப்பலேறி வந்து பாதி மாதத்தில் திரும்பப்போகிறோமே என்ற வெட்கம், இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோனது.

பிறகொருமுறை அந்த இளைஞன் வந்து, ‘சரி, மிகவும் முடியாதென்றால் கடல் தண்ணீர் அள்ளிக் குடித்துப் பார், அது மருந்தாக இல்லாவிட்டாலும் நாணமாகச் செயலபட்டு கடல்நோய் எனப்படும் உன் தலைச்சுற்று நிற்கக்கூடும்’ என்று கூறிப்போனான். சரி,



செய்துதான் பார்க்கலாமே என்று கடல் தண்ணீரை கயிற்றில் பேணிகட்டி இறக்கி அள்ளியெடுத்துக் குடித்தான். மீண்டுமொரு முறை வாந்திதான் வந்தது. வெறுவயிற்றை விறாண்டிக்கொண்டு குடலோடு வந்தது போலிருந்தது. சிங்கள இளைஞனை மனத்துக்குள்ளாய் ‘பேய்ப்பூனாமோன்...’ என்று வைதுவிட்டு கலாபன் படுத்துவிட்டான்.

அன்று காலை கண்விழித்தவன் கண்டது ஒரு புதிய உலகத்தை. தலைச் சுற்று போன இடம் தெரியாமலிருந்தது. பக்கக் கம்பிகளில் பிடிக்காமல் நடக்க முடியாதிருந்தவன் கம்பிகளைப் பிடிக்காமல் கப்பலின் நடைபாதையில் மிக இலகுவாக நடந்தான். அவன் அன்று மெஸ்ஸில் மிக நிதானமாக இருந்து காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வேலைக்குத் தயாராக மேற்றளத்துக்கு வந்த போது யாருமே அங்கில்லாதிருந்தது ஆச்சரியமாக இருந்தது. மெல்ல அது திகைப்பாக மாறியது. உள்ளே சென்று விசாரிக்கத்தான் தெரிந்தது, அன்று ஞாயிற்றுக்கிழமையென்பது. ஞாயிறுகளில் அத்தியாவசிய வேலைகள் தவிர எதுவுமே கப்பலில் நடைபெறுவதில்லை.

அன்று சுகமான நாளாகக் கழிந்தது கலாபனுக்கு. இப்போது வேலைசெய்ய முடிந்திருந்தாலும், அத்தனை நாட்கள் வேலை செய்யாது இருந்ததற்காக வேலையைவிட்டு நிறுத்தி நாட்டுக்குத் திருப்பி அனுப்பிவிடுவார்களோ என்ற பயமும் உள்ளே இருந்து கொண்டிருந்தது. அது கரைநெருங்குகிறது என்ற அறிகையால் இன்னுமின்னும் வளர்வதாயிருந்தது.

மறுநாள் கப்பல் ஈரானை அடைகிறது என்று அறிந்தான் அவன். இப்போது கடல் கொஞ்சம் மூர்க்கம் அடங்கியிருந்தது. கண்ணில் பந்தர்அபாஸ் துறைமுகத்துக்கோ வேறு அண்மையில் இருக்கக் கூடிய துறைமுகத்துக்கோ செல்லக்கூடிய கப்பல்களின் தூரத்திலான தோற்றங்கள்வேறு சற்று மனத்தைத் தேறப் பண்ணின.

அன்று இருளத் துவங்க தூரத்திலாய் ஒளிப் புள்ளிகள் சில தெரிந்தன. பத்து மணிவரையில் ஒளிப்புள்ளிக் கோடு ஒன்று தூரத்தே உருவாகியிருந்தது. மேலும் ஓரிரு மணித்தியாலங்களில் நிலைத்த புள்ளிகளிடையே ஓடும் புள்ளிகள் தோன்றி வாகன அசைவுகளைத் தெரிவித்தன. ஆடும் கடலில் ஆடாத நிலத்தின் காட்சி அற்புதமாக இருந்தது அவனுக்கு. அந்த அழகையெல்லாம் அனுபவிக்கக் கூடிய நிலையை ஏற்படுத்திய கடல்தண்ணீரையும், உபாயம் சொன்ன அத்தவையும் நன்றியோடு நினைத்தான். ஏனோ, அப்போது பிள்ளையாரின் நினைவு அவனுக்கு வரவில்லை.

விடிந்த சிறிதுநேரத்தில் பைலட் வந்ததும் அதுவரை நங்கூரம் பாய்ச்சி துறைமுகத்துக்கு வெளியில் நின்றிருந்த கப்பல் உள்ளே சென்றது. கப்பல்காரர் எல்லோரும் ஏஜன்ற் வந்துவிட்டதை அறியக் காட்டிய ஆவலாதி கலாபனுக்கு ஆச்சரியமாகப் பட்டது. கப்பல் கரையை அடைந்ததும் அவர்கள் எதிர்பார்க்கிற முதல்வேலை அதுதான் என்பதை அவனது சிங்கள நண்பன் சொன்னான். மெய்தான். ஒரு உயிர்ப் பயமிக்க பயணத்தின் பின் அவர்கள் முதலில் அடைய நினைப்பது ஊரிலுள்ள சொந்தங்களின் சேமநலம்கூறும் கடிதங்களை. அடுத்து அவர்களின் உடல் தவனத்தைத் தீர்ப்பதற்கான பணத்தைத்தானாம்.

பத்து மணியளவில் தேநீரின் பின் வெளியே வந்து சிகரெட் புகைத்துக்கொண்டு விரக்தியாய் கப்பலில் சாமான்கள் ஏற்ற படும் ஆயத்தங்களைப் பார்த்தபடி வெளி மேல் தளத்தின் கப்பல் கட்டும் இரும்புக் குற்றியில் அமர்ந்திருந்தான் கலாபன்.

அந்தக் கப்பல் பனாமாவில் பதிவுசெய்யப்பெற்றது. நீல, வெள்ளை, சிவப்பு நிற பனாமாக் கொடி கப்பலின் பின் அணியத்தில் கட்டப்பட்டிருக்கும். அவன் முதல்முறை கப்பல் புறப்பட்டபோது பார்த்தவேளையில் அது புத்தம் புதிதாக படபடத்துக்கொண்டிருந்தது அங்கே. அப்போது பார்த்தபோது தும்புபட்டுக் கிடந்தது. தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று கப்பலைச் சின்னாபின்னப் படுத்த முடியாத காரணத்தால் கொடியை நார் நாராகக் கிழித்துப் போட்டிருந்தது. தன் மனம்போல அதுவும் சிதைவுபட்டிருப்பதாய் எண்ணினான் கலாபன்.

மதியமளவில் ஏஜன்ற் வந்து எல்லோரும் சென்று கடிதமும் பணமும் பெற்றார்கள். நண்பன் அத்த, அவனுக்கு கடிதம் வந்திருக்காவிட்டால் என்ன, பணம் எடுக்கலாம் தானே என வற்புறுத்தி அழைக்க, வீடு போவதானாலும் ஏதாவது ஒன்றிரண்டு பொருட்களையேனும் ஒரு ஞாபகத்துக்காக அங்கே வாங்கிச் செல்லலாமேயெனச் சென்றான்.

சீ.ஃப் ஒ.ஃபீசர் அறையில் போசன் மாஹ்மத் நின்றிருந்தான். முப்பது டொலர் பணமெடுத்தான் அவன். மாஹ்மத் சிரித்தபடி இப்போது எல்லாம் சரிதானே என்றான். ஊருக்குத் திருப்பி அனுப்பப்படபோகிற பிரச்சினை இனி இல்லை. ஓர் அழுத்தத்துள்ளிலிருந்து விடுபட்டதாய் உணர்ந்தான் கலாபன். அந்த விடுதலைதான் அவனை சாக்கோவுக்கு அத்தவுடன் செல்லவைத்தது.

சாக்கோ, ஈரான் விலைமாதரின் குடியிருப்பு. நகருக்கு சுமார் இருபத்தைந்து மைல் தூரத்தில் தனிக் கிராமம்போல் அமைக்கப் பெற்றிருந்தது. ஈரானிய, பாகிஸ்தானிய, சில ஈரானிய அமெரிக்க கலப்பின விலைமாதர்கள் வெள்ளை வெள்ளையாக. இன்னும் கறுப்பான ஆபிரிக்க முஸ்லீம் பெண்கள். தவிட்டு நிற இந்தியப் பெண்களும். இலங்கைப் பெண்களும்கூட அங்கே இருந்திருக்கலாம். அந்தப் பல வர்ணப் பெண்களுக்கிடையே பல வர்ண ஆண்கள். கப்பலில் வந்த உயர்பதவி வெள்ளைக்காரர் முதல், கடின வேலை செய்யும் ஆசிய, ஆபிரிக்க ஆண்கள்வரை. இடம் ஒரு களியாட்ட விழாத் திடலாகத் தென்பட்டது. வெள்ளைக் கூடாரங்களுள் போகம். விரிந்த வெள்ளை மணல்வெளியில் பேரம். அந்த மண்வெளியில் பறந்துகொண்டிருந்த கிளினெக்ஸ் துண்டுகள் அங்கு நிகழ்ந்த உடலுறவுகளின் எண்ணிக்கைக்காதாரமாக விளங்கின. ஓர் அருவருப்பை அது விளைத்திருந்தாலும், அலைந்துகொண்டிருந்த வெண்தோல் மாதர் கலாபனில் கிளர்ச்சியைக் கிளர்த்தினர். அவன் ஒரு வெண்தோலும், கனத்த முலைகளுமுடைய ஓர் எகிப்துக்காரியை நாடினான்.

ஷா மன்னர் காலத்து புரட்சிக்கு முற்பட்ட ஈரான் அது. அச்சொட்டாக அமெரிக்க நிர்வாகமும், நடைமுறைகளும். நகரத்திலிருந்து அந்த இடத்துக்குச் செல்ல தனியாக ராக்ஸிகள் இருந்தன. அவை நகருக்குள்ளோ, பிற இடங்களுக்கோ செல்லா. பிற ராக்ஸிகள் அந்த இடத்துக்குச் செல்லா. நான்கு பேர் ஒரே முறையில் செல்ல முடியும். செல்லவேண்டிய இடம் எதுவும் சொல்லத் தேவையில்லை, ராக்ஸிக்குள் ஏறியிருக்க வேண்டியதுதான், நான்காவது நபர் ஏறியதும் ராக்ஸி நேரே சாக்கோவில் போய் நிற்கும். அத்தவோடு சென்றிருந்ததனால் இடங்கள் குறித்துக் கஸ்டப்படவேண்டியிருக்கவில்லை கலாபனுக்கு.

மாலையில் கப்பலுக்கு வந்தபோது கலாபனின் மனத்தில் ஒரேயொரு கேள்விதான் விடைத்து நின்றது. கூடு என்பதென்ன, இணை என்பது என்ன, குடும்பம் என்பது என்ன என்ற அத்தனை கேள்விகளுக்கும் அடிப்படையான ஒற்றைக் கேள்வி அது.
வாழ்க்கையின் மய்யம் எது?

காமம் என்ற மய்யத்தைச் சுற்றி எழும் நீரோட்டமே வாழ்வு என்றுதான் கலாபனுக்குப் பட்டது. வாழ்வின், உலகத்தின் இயக்கம் காமத்தில் கட்டிப்போடப்பட்டிருக்கிறது. அதை இழுத்துக்கொண்டில்லாமல் பிரபஞ்ச இயக்கம் இல்லை.

இது நடந்து எவ்வளவோ காலமாகிவிட்டது. “யோசப் கொன்ராட்” போன்றவர்களைப்போல் தன் கடல் அனுபவங்களையெல்லாம் எழுத கலாபன் ஆசைப்பட்டிருந்தான். அவனால் முடியாது போய்விட்டது. அவனும் இல்லையாகிப் போனான். அவன் இல்லையென்று ஆகிப்போனான் என்பதைவிட, என்னுள் சமாதியாகிப்போனான் என்பதே பொருத்த மாகத் தோன்றுகிறது. கச்சாய் மணல்வெளிகளில் நிலவும், மதுவும் உடனிருக்க அவன் சொன்ன கதைகள் எவ்வளவோ. இன்றுவரை எனக்குள்ளிருந்து தம் விடுதலைக்காய் என்னை நச்சரித்துக்கொண்டிருக்கும் அந்தக் கதைகளை, அவனின் ஆன்ம சாந்தி வேண்டியேனும் வெளிப்படுத்த என்னுள் இருக்கிறது ஓர் உத்தேசம். அதன் முதல் கட்டமாக இந்தப் பகுதியை எழுதியிருக்கிறேன்.

devakanthan@thaiveedu.com

■ ■ ■



**Thanks to all my clients for their continuous support & a special thanks to all of my first time buyers**


## Sellers

**Recession is over, sell your house for Top $$$$$**
**Sellers Market is back, Call today.....**

* Complimentary Evaluation of Your Home
* Free Market Evaluation
* Competitive commission rates
* Written cancellation guarantee
* Guarantee advertising

IS THIS WHAT YOU'RE LOOKING FOR?
FOR SALE
IT'S WHAT I DO!
"Let me show you how my strategic marketing plan gets results"

*It's is the great time to Sell a Home with seller's benefit*





## Buyers

*IT IS A GREAT TIME TO PURCHASE A HOME/CONDO*
*IT'S A BUYER'S MARKET FOR THE FIRST TIME IN YEARS....*
*INTERS RATES ARE AT NEW LOWS....*
*AND YOU MAY QUALIFY TO GET $ BACK FROM THE CANADIAN GOVERNMENT*

**Lowest Mortgage Rate | No Down Payment?? Credit Issues?? | No Income Qualifying Self Employed - No Problem | You Can Still Own a Home Call Today and Take Advantage of Low Rates!!!**




**Negotiating the Right Price for your home can be tricky**
**Call Raja for professional advice.**



**HomeLife/Future Realty Inc., Brokerage***
205-7 Eastvale Drive, Markham Road, Ontario L3S 4N8
**Bus.: 905.201.9977 | Fax : 905.201.9229**
*Independently Owned and Operated, REALTOR

**Raja V.S. Rajagopal**
Sales Representative
**Dir : 416.727.8647**
Email : sinnahrajagopal@gmail.com
**www.sinnarajagopal.com**

Design : Apex 416 297 0707



**ROGERS**

For the best deals available, in-home consultations and to move or change your services, call or email me today!
As your Local Rogers Advisor, I will take the time to answer
Your questions and give you the best deal.

* **Rogers Digital Cable**
* **Rogers Hi-Speed Internet**
* **Rogers Home Phone**
* **Tvi, Sun TV, Jaya TV, Tamil One**

**சகலவிதமான தமிழ் தொலைக்காட்சி மற்றும் இன்ரநெற் சேவைகளையும்**
**நீங்கள் இப்போது தமிழிலும் உரையாடிப் பெற்றுக்கொள்ளலாம்**

**Norbert Benedict**
Local Rogers Advisor
**(416)446-7043 (Office)**
**(416)823-7036 (mobile)**
norbert.benedict@rci.rogers.com

ROGERS ROGERS ROGERS

# பூச்சிகள் களைகொல்லிகள்



சிவவதனி
பிரபாகரன்

அறிவியல் வளர்ச்சியால் உலகில் பல கோடிக்கணக்கான விடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை இயற்கையை செயற்கைத்தனமாக மாற்றி வருவதால் இயற்கையின் சமநிலையில் பல குழப்பங்கள் உருவாகின்றன. விஞ்ஞான வளர்ச்சியால் வாழ்வியல் மிகவும் இலகுவாகிய நிலையில் நமது அன்றாட வாழ்வில் எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் இராசயன பதார்த்தங்களின் தாக்கம் இருக்கின்றது. குடிக்கின்ற நீரில் குளோரீன், வீசுகின்ற காற்றில் காபனீரொட்சைட்டு போன்ற கரி-வாயுக் கழிவுகள், வாகனப்புகை, தொழிற்சாலைப் புகை போன்றவற்றால் உருவாகும் விண்ணின் ஓசோன் ஓட்டைகள் UV கதிரின் தாக்கத்தால் மண்ணில் மாந்தர் பாதிப்புறுகின்றனர். மண்ணில் மட்டுமென்ன பூச்சி கொல்லிகள், களைகொல்லிகள், கிருமி



நாசினிகள், உர வகைகள் என்று பலதரப்பட்ட இராசயன சேர்வைகள் சூழலை அசுத்தப்படுத்துகின்றன. இவற்றின் மத்தியில் இயற்கையிலிருந்து அன்னியப்பட்ட செயற்கைத்தனமான மனிதர்களின் வாழ்வு.... இதனால் பல உடல், மன நோய்கள்... செயற்கைத்தனத்தை அடியோடு ஒழித்துவிட்டு இயற்கையை நம்பி வாழும் வாழ்விலிருந்து நாம் நெடுந்தூரம் அன்னியப்பட்டுவிட்ட நிலையில் இதையே எண்ணிக் கலங்குவதை விடுத்து வாழ்க்கையை அதன் போக்கில் எதிர்கொண்டால்தான் என்ன? அறிவியல் வளர்ச்சியில் உலகம் விழித்துக் கொண்டிருக்கின்றபோது நாமும் விழிக்க வேண்டாமா?

விஞ்ஞானம் வாழ்வை வழப்படுத்துகிறதா? சிதைக்கிறதா? என்பது ஆரம்ப காலத்திலிருந்தே சர்ச்சைக்குரிய விவாதமாகவிருந்து வருகிறது. எனவே இந்தக் கேள்விகளுக்கு ஒரு சார்பாக ஒருபோதுமே தீர்வு சொல்ல முடியாது என்பதே உண்மை. எனவே அதை ஒரு புறமாக விட்டு விட்டு இன்று எடுத்துக் கொண்ட விடயத்துள் நுழைவோம்.

சில மக்கள் களைகொல்லிகளை, பூச்சி கொல்லிகளை வீடுகளில் பாவிப்பதனால் தமக்கு சுவாச நோய்கள், புற்று நோய்கள் வருவதாகவும் இதற்கு அரசு உடனடியாக தடைவிதிக்க வேண்டும் என்றும் ஒரு கண்டனப் போராட்டத்தை நிகழ்த்தியிருந்தனர். இதற்குக் காரணம் கனடாவில் மலிந்து கிடக்கும் இரசயான பதார்த்தங்கள்தான். வளர்ந்துவிட்ட நாடுகள் எதிர்நோக்கும்

சுவாச நோய்கள், புற்று நோய்கள், மலட்டுத்தன்மை போன்றவற்றின் காரணிகள் இவ் வகையான இராசயன பதார்த்தங்கள் என்பது நிருபணமாகாத தகவல்கள். ஆனால் நிரூபிக்கப்பட்ட நிலையில் அவற்றை நிச்சயம் பாவனையிலிருந்து அகற்றுமளவுக்கு சட்டம் மிகவும் விழிப்பாகவே இருக்கிறது.

கனடிய அரசு 2002இல் இது குறித்து மற்றுமொரு புதிய சட்டத்தையும் அமல்ப்படுத்தியிருந்தது. இதன்படி குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் முதியோர் ஆகியோரின் பாதுகாப்பை எந்த நிலையிலும் உறுதி செய்ய வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது.

பொருட்களிலுள்ள மூலப்பொருட்களாலான பாதிப்புக்களின் அளவை அளவிடவென ஒரு அலகு உண்டு. பண்ட உருவாக்கப் பாதுகாக்குக் காரணி (Product Formulation Safety Factor) என்பதே அது. மேற்குறிப்பிட்ட புதிய சட்டத்தின் மூலம் இவ்வலகானது 100 மடங்கிலிருந்து 1000 மடங்குகளாக அதிகரிக்கப்பட்டடு வலியுறுத்தப்பட்டு வருகிறது.

Health Canadaவின் பூச்சிக் கட்டுப்பாட்டு மீளாய்வு வாரியம் (Pest Management Review Agency) எத்தகைய பூச்சி கொல்லிகளாலும் மனிதர்கள், வீட்டுப் பிராணிகள், சூழல் சுகாதாரம் பாதிப்புறுவதை ஆராயும் பணியை மேற்கொண்டு வருகிறது. இவ்வாரியம், குறுகிய கால பாதிப்புகளை மட்டுமன்றி, மிக நீண்ட காலத்துக்கும் தொடரக்கூடிய அல்து பின் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய பக்க விளைவுகளையும் ஆராய்ந்து வருகின்றது.

அந்த வகையில் மிகச் சிறிய அளவிலேனும் பாதிப்பை ஏற்படுத்துமென சந்தேகிக்கும் பட்சத்தில் அப்பொருள் சந்தைப்படுத்துவதில் தடைகள் உண்டாகும். இத்தகைய ஆய்வுகள் ஆய்வு நிறுவனங்களாலும் சட்ட அமுலாக்க நிறுவனங்களாலும் சாதக பாதக நோக்கின் அடிப்படையில் தொடர்ச்சியாக ஆராயப்பட்டு வருகின்றது.

சுவாச நோய்களின் திட்டவட்டமான காரணி என்னவென்பதை மருத்துவ உலகம் தெளிவாகக் கூறாதமையால் உலகிலுள்ள அனைத்து இரசாயனப் பதார்த்தங்களும் உயிரழிவிற்கான ஆபத்தைக் கொண்டிருக்கின்றதாக அச்சப்படுவதேயாகும். எந்த இரசாயனப் பதார்த்தத்திற்கும் தாக்கு திறனும் பக்க விளைவுகளுமுண்டு. ஆயினும் மனிதர்களே இயற்கையை மாசுபடுத்தி ஊறு விளைவிக்கும் இராசாயனப் பதார்த்தங்களைப் பாவிக்கிறார்கள். உலகளாவிய ரீதியில் இதற்கான எதிர்ப்புகளும் அரசுகளின் சட்ட வரையறைகளும் உருவாகி வருகின்றன.

இரசாயனம் இல்லாது எமது அன்றாட வாழ்வே இருக்க முடியாது. குழாய் நீரில் உடலுக்கு ஊறு விளைவிக்கும் பக்டீரியங்களை அழித்து சுத்தமான நீரைத் தருவதற்காய் குளோரீன் கலக்கப்படுகிறது. சவர்க்காராம், சிகை கழுவும் பதார்த்தங்கள், முக அலங்காரப் பசைகள் போன்ற எதை எடுத்துக் கொண்டாலும் இவற்றில் இரசாயனப் பதார்த்தங்கள் இல்லாமலில்லை. உண்கின்ற உணவு, குடிக்கின்ற பானம் என அனைத்துமே இரசாயனப் பொருட்களைக் கொண்டவையே.

வீட்டைச் சுற்றியுள்ள புல் வெளிகள், தோட்டப் பயிர்ச்செய்கை, விவசாயம் யாவற்றிலுமே களை கொல்லிகளும் பூச்சி நாசினிகளும் பயன்படுத்தப்படவே செய்கின்றன. உணவைப் பதப்படுத்த, நீண்டகாலம் பேண, சுவையூட்ட என பல தரப்பட்ட வழிகளிலும் இரசாயனப் பதார்த்தங்கள் பாவிக்கப்படுகின்றன.

எனவே இவை குறித்து வீணே மனங்கலங்குவதைத் தவிர்ப்பது நன்று. உண்மையைச் சொன்னால் இவற்றின் பக்க விளைவுகள் குறித்த கவலையைவிட இவற்றின் உதவியில்லாத நிலையில் ஆபத்துக்கள் பாதிப்புக்களை அதிகம் எதிர்நோக்குவோம்.

பூச்சி கொல்லிகள் மனிதர்க்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் படையெடுப்பைத் தடை செய்கின்றன. உதாரணமாக West Nile Virus எனப்படும் நோய்க் கிருமிகளைக் காவும் நுளம்புகளை அழித்தொழிக்க அவை பயன் படுகின்றன. இது செய்யப்படவேண்டியதொன்று. எனவே தேவையுணர்ந்து அவ்வப்போது உகந்த பூச்சி கொல்லிகளை பிரயோகித்தே யாக வேண்டும். எம் வீடுகளில் சமையல் மணத்தினால் வந்து சேரும் கரப்பான் பூச்சிகள் பல நோயுண்டாக்கும் கிருமிகளைக் காவி வருவதனால் அவற்றை ஒழித்தேயாக வேண்டும்.

சிலவகை இரசாயனப் பதார்த்தங்களின் மணம் பலரை ஒவ்வாமைக்குள்ளாக்குவதாக குறிப்பிடப் படுகிறது. ஆயினும் அத்தகைய மருந்துகளை அடித்த பின்னர் அவர்கள் அறிவுறுத்துவதற்கேற்ப சில மணி நேரங்களுக்கு அவ்விடத்தை விட்டு அகன்றிருப்பது நன்று. எப்பொழுதும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஒழுகுவது நல்லது.

அடுத்து, களை கொல்லிகள் இங்கு சில பருவ காலங்களில் பாவிக்கப்படுகிறது. புற்கள் வளர்வதைவிட இங்கு களைகள் இலகுவில் முளைத்து ஆக்கிரமித்து விடுவதைக் கட்டுப்படுத்தவே இம் முயற்சி நடைபெறுகிறது. இக்களைகள் சில ஒவ்வாமையையும், சுவாச நோய்களையும் உருவாக்குகின்றன. சிலருக்கு பொருமளவு பாதிப்பு ஏற்படுவதாக அறியப் படுகிறது. கனடாவில் 15 - 20 வீதத்தினர் இவ் வொவ்வாமையினால் அவதியுறுகின்றனர். சில களைகளிலிருந்தும் உருவாகும் மகரந்தங்கள், விதைகள் காற்றில் பரம்பலடைந்து வந்து சுவாசத்தில் கலப்பதுவே இதற்குக் காரணம். இப்படியான களைகளை அழிப்பது அவசியம்.

பூமி வெப்பமடைகிறது. வளியும் மாறுகிறது. நன்றாகப் பராமரிக்கப்பட்ட களைகளற்ற புல்வெளி வளியிலுள்ள மாசுக்களிலிருந்து காபனீரொட்சைட்டு, கந்தகவீரொட்சைட்டு போன்றவற்றை உறிஞ்சி சுவாசத்திற்குத் தேவையான ஒட்சிசனை வெளிப்படுத்துகிறது.

50சதுர அடி பரப்புள்ள புல் வெளியிலிருந்து பெறப்படும் சுத்தமான காற்றானது அந்த நிலத்திற்கருகில் வாழும் நான்கு பேருக்கு அன்றாடம் தேவையான ஒட்சிசனை வழங்கக்கூடியதாகவுள்ளது. எனவே வளமான புல் வெளிகள் வீட்டில் சூழலில் இருப்பது மிகவும் ஆரோக்கியமானது.

நன்கு பராமரிக்கப்பட்ட புல் வெளிகள் மண்ணரிப்பைத் தடுத்து மழை நீரைத் தேக்கி சூழலுக்கும் குளிர்மையைத் தருகின்றது. களைகள் நிரம்பிய புல் வெளிக்கும் களைகளற்ற புல் வெளிக்கும் இடையே தரை வெப்பநிலை 18 - 24 பாகை செல்சியஸ் வேறுபடுகிறது என்கிறார்கள்.

இவை தவிர, பயிர்ச்செய்கை, தோட்டச் செய்கை போன்றனவும் வளி வெப்பநிலையைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகின்றன. இப்படியாக வைத்திருப்பதற்கும் பராமரிப்பதற்கும் களை கொல்லிகள் அவசியம். அத்துடன், கறையான் போன்ற கட்டிடங்களை அழிக்கவல்ல பூச்சிகளை ஒழிக்கவும் பூச்சி கொல்லிகள் உதவுகின்றன.

இறுதியாக, ஏற்ற இரசாயனப் பதார்த்தங்களை சிபார்சு செய்யுமளவுக்குப் பாவிக்கும்போது சகலருமே பயன் பெறுகிறார்கள் என்பதே உண்மை. இவற்றை முற்றாகப் புறக்கணிப்பதைவிட இவற்றின் பக்க விளைவுகளிலிருந்து பாதுகாக்கும் திறனை விஞ்ஞான வளர்ச்சியால் உருவாக்குவோம் பலன் பெறுவோம் என்பதே நாம் கருத்துக்கு எடுக்கவேண்டியது.

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■

www.inayam.net

● கலை விழாக்கள்
● எழுச்சி நிகழ்வுகள்
● ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
● திருவிழாக்கள்
● கொண்டாட்டங்கள்
● நடன, நாடக, இசை விழாக்கள்
● குடும்ப நிகழ்வுகள்
● மரணச் சடங்கு நிகழ்வுகள்
எதுவானாலும்.

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம். காலம். நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net

முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam
416•400•6406

digi

51 51 51 51 அகவை 51 51 51 51 அகவை 51 51 51 51

# அன்று ஒருநாள் இப்படியும் நடந்தது இனியும் நடக்கலாம்



அதிபர் மு. காசிப்பிள்ளை அவர்கள் முதலாம் பரிசு ஒரு பவுண் தங்கத்தினை நர்மதாவுக்கு வழங்குவதையும், இரண்டாம் பரிசு அரைப் பவுண் தங்கத்தினை செல்வி கார்த்திகாவுக்கு உப. அதிபர் கா. திருக்குமார் வழங்குவதையும், மூன்றாம் பரிசு அரைப் பவுண் தங்கத்தினை செயலதிபர் கா. ஹரிகரன் செல்வி ரூபாவுக்கு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## இரு இடங்களில்

## துரித பணமாற்றுச் சேவை

# பொன்விழா கண்ட ஸ்தாபனம்

## இதில் 18 வருடங்கள் கனடாவில்

## கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?

**தமிழ் மக்கள் இதயங்களில் பணமாற்றுச் சேவையில் இடம் பிடித்தவர்கள்**

# மு. காசிப்பிள்ளை சகபுத்திரர்கள்

**3228 EGLINTON AVE.EAST, SUITE #3**
**SCARBOROUGH, ON. M1J 2H6**
**தொலைபேசி எண்: 416-267-8221**

**3351 MARKHAM ROAD, SUITE #109**
**SCARBOROUGH, ON. M1X 0A6 (Markham & Steeles)**
**தொலைபேசி எண்: 416-321-8221**

# தேவையற்ற பொருட்களும் அவற்றை அகற்றுதலும்

## (Clutter Busting)

அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



வீட்டினுள் இருக்கும் தேவையற்ற பொருட்களை அகற்றுவதை Clutter Busting என அழைப்பார்கள். அதாவது எம்மிடமுள்ள புதிய அல்லது பழைய பொருட்கள் தேவையில்லை என அறியும்போது அவற்றை உடனடியாக எறிந்துவிடுதல் நல்லது. சில வேளைகளில் நாம் வீதியால்செல்லும் போது garage sale எனப் போட்டிருப்பார்கள். இச்செயலும் ஒரு வகையில் Clutter Busting எனக்கூறலாம்.

பொருளில் முக்கியமாகப் பாவனையில் இல்லாத உடுப்புகள் பழைய Papers, பழைய Files தேவையற்ற Electronics சம்பந்தமான பொருட்கள், Kitchen drawersஇனுள் அடபட்டிருக்கும் பழைய plastic பைகள், பழைய CDக்கள் இதுபோன்ற பல பொருட்களை நாம் எறியாது வைத்திருப்பது வழக்கம். ஆனால் இவற்றை எறியாது வைத்திருப்பது எமது வீட்டினுள் வசதிக்குறைவாக இருப்பது மட்டும் அல்லாமல் எமக்கு மனரீதியாகவும் ஒரு இடைஞ்சலான உணர்வை ஏற்படுத்துகின்றது எனக் குறிப்பிடுகிறார்கள்.

நாம் பொதுவாக கடைக்குச் செல்லும்போது அனேகமான பொருட்கள் எமக்குத் தேவையான பொருட்களாகத் தான் காட்சி அளிக்கும். காரணம் எல்லாப் பொருட்களுமே விற்பனைக்குத் தயாராகப்பட்டுள்ள பொருட்களாகும். ஆகவே நாம் அப் பொருட்களை வாங்கும்போது பெரிய உற்சாகத்துடன் வாங்கிவருவது வழக்கம். வீட்டிற்கு வந்த பின்பு அது ஒரு முக்கியமான பொருளாக இருக்காத இடத்தில், அதைத் தேவையற்ற பொருட்களுடன் போட்டுவிடுவோம். இதனால் வீட்டினுள் மேலும் தேவையற்ற பொருட்கள் அதிகமாகிக் கொண்டே இருக்கும்.

ஆகவே தேவையற்ற பொருட்கள் வீட்டினுள் நாம் அடைத்து வைத்திருப்பது மட்டும் அல்லாது தேவையற்ற பொருட்களை நாம் மீண்டும் மீண்டும் வாங்குவதையும் நிறுத்துதல் வேண்டும். பொதுவாக Clutter Bustingல் இருக்கும் முக்கியமான இரகசியம் என்னவென்றால் தேவையற்ற அல்லது பாவனையில் இல்லாத பொருட்களை கண்டறிந்து அவற்றை முற்றாக வீட்டைவிட்டு அகற்றுவதுதான். சிலவேளைகளில் சில பொருட்களை எம்மால் எறிவதற்கு மனம் இடம் கொடாது விட்டால், நாம் மீண்டும் மீண்டும் இந்தப் பொருள் எமக்குத்தேவையில்லை என எமக்கே கூறிவந்தால், ஒரு சந்தர்ப்பத்தில் நாம் அதை எறிவதற்கு தயாராகி விடுவோம் என நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

ஆகவே எமக்குத் தேவையற்ற பொருட்கள் இருக்கும்போது இது எமக்குத் தேவையா? கடைசியாக எப்போ நான் இப்பொருளைப் பாவித்தேன் எனக் கேள்விகளை எமக்குள் கேட்கும்போது பல பொருட்களை நாம் எறி-



வதற்கு தயாராகி விடலாம். நாம் தேவையற்ற பொருட்களை வீட்டில் வைத்திருக்கும் போது, தேவையான பொருட்களைத் தேடி எடுக்க முடியாத நிலையும் ஏற்படுவதுண்டு.

பொதுவாக நாம் ஒரு Fridgeஜ எடுத்துக்கொண்டால், அதனுள் இருக்கும் பொருட்கள் வாங்கும்போது நல்ல பச்சையாக, அழகாக இருக்கும். நாளடைவில் அது பழுதாகிவிடும் போது அதை நாம் எறியாது வைத்திருந்தால் Fridgeஇனுள் இருக்கும் புதிய பொருட்களையும், தேவையற்றதாக்கிவிடும். அது போலவே வீட்டினுள்ளும் நாம் தேவையற்ற பொருட்களை வைத்திருக்கும்போது, தேவையான பொருட்களின் தேவைகளையும் பாவிக்கமுடியாத நிலை ஏற்ப்படலாம். அத்துடன் நாம் வீட்டைச் சுத்தப்படுத்தும் போது பல இரட்டைப் பொருட்கள் வீட்டினுள் இருப்பதை அறியலாம். அவற்றை இனங்கண்டு அகற்றிவிடுதல் வேண்டும்.

சில வேளைகளில் பெறுமதிகூடிய பொருட்களும் நமது பாவனையில் இல்லாது இருந்தால் அதை expensive clutter எனக்கூறுவோம். சில Sporting equipment, Camping equipment, exercise machine, badminton set இவை போன்ற பல பொருட்களை அகற்றுவதன் மூலம் பெரிய Clutter பிரச்சினையில் இருந்து விடுபடமுடியும்.

அடுத்ததாக, நாம் பல வருடங்களுக்கு முன் படித்த புத்தகங்கள் பல பாவனையில் இல்லாது எமது வீட்டினுள் அடைந்து கிடக்கின்றன. அவற்றை நாம் தேவையான சில இடங்களுக்கு கொடுத்து உதவுவதன் மூலம் நாம் எமது Clutter பிரச்சினையில் இருந்து விடுபடுவது மட்டும் அல்லாது, தேவையானவர்களுக்கு அது போய்ச்சேர்வதற்கு உதவியாகவும் இருக்கும்.

Clutter எமது வதிவிடத்தை, வசதிக் குறைவாக வைத்திருப்பது மட்டும் அல்லாது அந்தப் பொருட்கள், எமது கூடாத நினைவுகளையும் எம்மிடம் தொடர்ந்து இருப்பதற்குக் காரணிக்காகவும் இருக்கலாம். அவற்றினால் எமக்கு emotional, psychological போன்ற பிரச்சினைகள் வந்து எமது சுக வாழ்க்கையையும் பாதிப்பதற்கும் நிறைய சந்தர்ப்பங்கள் உண்டு. ஆகவே இந்தப் பழைய கூடாத நினைவுகளைக் கொண்டு வரும் பொருட்களை அகற்றுவதன் மூலம் நாம் நிம்மதியான வாழ்க்கையைத் தேடிக்கொள்ள முடியும்.

ஆகவே எமது வாழ்க்கையில் ஒரு நிரந்திர சுகம் தேவையாயின் Clutter Bustingம் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது.

நன்றி. வணக்கம்.

alen.sivasambu@thaiveedu.com

■ ■ ■

ஒரே நாளில்

Saree Blouse

உங்கள் சகலவிதமான சாறி புளவுஸ் (Saree Blouse)

தைப்பதற்கும் அழையுங்கள்.

416 264 6400

INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers

**Convenience store in Mississauga for sale-**
8 years in business. $140,000 plus inventory. Sales on lottery plus ATM-$10-11k/month.

**Carole's Café Kitchen. Franchises now available for sale in Toronto, North York and Oakville.**
Offering the famous Carole's cheesecake and unique fresh and healthy homemade foods in an urban café atmosphere.

**Art & framing business for sale in Oakville-**
Net Operating Income over $80,000/yr. 20 yrs. in business. Sale price $180,000 (includes inventory of Approx. $50,000).

**Pharmacy, Variety store and Doctor's office space with Property for sale in London, ON.**
Both Buisnesses, vacant furnished Doctor's office and property. Price $800,000 plus inventory.

**Please call**
**Alan Sivasambu**
**647-504- 2536**



இயற்கை மூலிகையின் உதவியுடன் உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!
The ERVAMATIN™ HAIR LOTION
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஔடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.
Ervamatin POWER
Dreamron HENNA
Treated Natural Henna
The Ervamatin Hair Lotion
Provides effective and fast therapy for hair loss
And its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for
Hair loss, hair regeneration, dandruff, alopecia,
Thin hair, baldness, fragile and dry hair.
இயற்கை மூலிகையிலான தலை முடி மை
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.
Amazon Health Care
BBB
SABONA
Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)




S.P.IMPORTERS
Furniture
SP
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR 416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
S.P. IMPORTERS
Sealy Posturepedic
Special Sealy Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)


SUPER SUMMER SEAT SALES
READY FOR A SUMMER VACATION?
SUMMER SPECIALS TO CHENNAI
JET AIRWAYS
$984.00 +taxes *
Toronto - Brussels - Chennai
Travel Period: June 19th - Sept 5th
ETIHAD AIRWAYS
$940.00 +taxes *
Toronto - Abu Dahbi - Chennai
Travel Period: June 15th - July 20th
Emirates
$1450.00 +taxes *
Toronto - Dubai - Chennai
Travel Period: June 18th - Aug 24th
* Above fares are Seat Sale Fares. Taxes range from $48 - $395. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of seats.
EARLY BIRD SPECIALS TO CHENNAI
Emirates
$1200.00 +taxes *
Toronto - Dubai - Chennai
Travel Period: Up to June 17th
JET AIRWAYS
$839.00 +taxes *
Toronto - Brussels - Chennai
Travel Period: Up to June 18th
Lufthansa
$740.00 +taxes *
Toronto - Frankfurt - Chennai
Travel Period: Up to June 18th
ETIHAD AIRWAYS
$840.00 +taxes *
Toronto - Abu Dahbi - Chennai
Travel Period: Up to June 14th
* Above fares are Seat Sale Fares. Taxes range from $48 - $395. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of seats.
GO DOWNUNDER THIS SUMMER!
GREAT AIR FARES TO AUSTRALIA AND NEW ZEALAND.
AIR CANADA
starting from
$1428.00 + taxes *
Travel Period:
June 10th - Sept 30th
Toronto - Vancouver :
Sydney
Brisbane
Melbourne
QANTAS
THE SPIRIT OF AUSTRALIA
starting from
$1418.00 + taxes *
Travel Period:
June 10th - Sept 30th
Toronto - Los Angeles :
Sydney, Brisbane
Melbourne, Perth
Cairns
AIR NEW ZEALAND
starting from
$1428.00 + taxes *
Travel Period:
Up to Sept 21st
Toronto - Vancouver :
Auckland
*These fares are Seat Sale Fares. Taxes range from $350 - $400. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of seats.
We Do
• Sun-Fun Destinations • Sight Seeing Tours • Via Rail / Euro Rail • Hotels
• Vacation Packages • Pilgrimage Packages • Travel Insurance • Cruises
Your Satisfaction is Our Success.
Serandib travel.com
Toll Free: 1.888.207.0902
Toronto: 416.750.0009
2075 Lawrence Ave East Suite 202
Mississauga: 905.564.7564
Calgary: 403.770.9647
Montreal: 514.448.1389
Vancouver: 604.625.0495

# மனவளக் கலை

எங்கே தொடங்குவது என்று மனதில் கலக்கம் எங்கு பார்த்தாலும் ஏக்கப் பெருமூச்சுக்களுடன் வலம் வரும் நண்பர்கள் மற்றவர் மனதைப் புண்படுத்துவதால் யாருக்கு என்ன லாபம்? எழுதுவதா இல்லை இம்முறை தவிர்த்து அடுத்த தடவை தொடர்வதா என்று ஒரு மனப்போராட்டம்.

அமைதி தேடும் நேரத்தில், நிம்மதி நாடும் நேரத்தில் எழுத்தால் எதையும் சாதித்துவிட முடியாது என்பதை ஆணித்தரமாக உணர்ந் தவன் நான். இருந்தும் எழுதும் வர்த்தைகள் குத்தூசிகள் போலன்றி மனதை இதமாக வருடிக் கொடுக்குமாயின் யாரும் கண்டிக்க வோ வேதனைப்படவோ மாட்டார்கள்.

மன அமைதி தேடி ஆலயம் செல்பவர்கள் ஒரு கூட்டம், ஆன்மீகக் கூட்டங்கள் என்று இன்னொரு பகுதியினர். இதனைப் பயன்படுத்தி மனஅமைதி "என்னால் தரமுடியும்" என்று எங்கள் பணத்தை தங்கள் பொக்கற்றினுள் மாற்றி வயிறு வளர்க்கும் போலிச் சாமியார் கோஷ்டிகள் ஒரு புறமும் என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

இன்றைய நேரத்தில் நமக்குத் தேவை ஆழ்ந்த மன அமைதி. ஆழ்நிலைத் தியானம் அருமை யான வழி. ஏதோ ஒரு வழியில் மனம் அமைதியாகி ஆறுதல் அடையாவிட்டால் நோயில் விழுந்து வேண்டாத விபரீதங்கள் எல்லாம் வினையில் கொண்டு போய் முடிந்து விடும், கால ஓட்டத்தில் நாம் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்த்தால் எவ்வளவு பெரிய விபத்திலிருந்து தப்பி நாம் இங்கே எவ்வளவு பாதுகாப்பாக இருந்திருக்கின்றேம் என்பதை எண்ணி சற்று மனம் ஆறுதலடை கின்றது.

மனதினுள் அமைதி, ஆறுதல் என்பது பணம், காசு கொடுத்து வாங்குவது அல்ல. காசு கொடுத்தே எதையும் சாதித்துப் பழகிய சமூகம் அல்லவா நமது சமூகம். போகின்ற போது விட்டுப்போவது தானே இந்தப் பணம். பணத்தால் எதையும் சாதித்துவிட முடியும் என்று வீணாக முட்டாளாகிவிடாதீர்கள். மனம் அமைதியாக இருந்தால், தூய்மையாக இருந்தால், போதுமென்ற மனமே அமைதிக்கு வழி. ஆவாவென்று கிடைத்ததை எல்லாம் நமக்குத்தான் என்று மடியில் கட்டிக் கொள்ள நினப்போமாயின் கிடைப்பது என்ன.

கைகளை, கால்களை இழந்து ஒரு வேளை சோற்றுக்காக இன்று அகதி முகாம்களிலே துடித்துக் கொண்டிருக்கின்ற நம் உறவுகள் படும் துயரத்தை விட நீங்கள் எவ்வளவு மேலே இருக்கின்றீர்களே, இனியும் நமக் குள்ளேயே காழ்ப்புணர்ச்சியை வளர்த்து மன அமைதியை கெடுக்க வேண்டுமா? மற்றவர் கள் பட்ட துன்பங்கள் எல்லாம் இன்று நமக்கு நல்ல தொரு பாடத்தை கற்றுத் தந்திருக் கின்றது. அது இன்று நம்மிடத்தில் இருப்பது நாளை நமக்குரியதாக இல்லாமல் போகலாம். இருப்பதை வைத்து வாழப்பழகுவதோடு இல்லாதவர்களுக்கும் கொடுத்து வாழப் பழகுவோம்.

ஆன்மீக அறிவு, தெளிந்த சிந்தனை, இவை யெல்லாம் இன்று நிச்சயம் நமக்குத் தேவை யான ஒன்றாக மாறிவிட்டது. கண் மூடி நமக்காக மட்டுமல்ல மற்றவர்களுக்காகவும். நாம் பிராத்திக்கின்ற நேரம். துன்பதில் நாமும் பங்கு போட்டுக் கொள்ள வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. துயரத்தை துடைப்பதில் நம் கைகள் நீளவேண்டிய நேரமிது. செல்வத்தை ஈட்டலாம், பொருட் களை ஈட்டலாம், உலகியல் வாழ்க்கை நடத்தலாம், ஆனால் மனம் அதில் எல்லாம் ஒட்டிக் கொள்ளாத நிலைவேண்டும். "நான் யார்" என்ற நிலை மறவா மனநிலையில் எமும் துன்பங்களைக் பேக்கிக்கொள்ள வேண்டும். இன்பங்களைக் கெடுத்துக் கொள்ளாதிருக்க வேண்டும். இயன்றவரை பிறருக்குச் சேவை செய்து கொண்டே இருக்க வேண்டும். இதே மனநிலையில் இதே நோக்கத்தோடு வாழ்வை நடாத்தவேண்டும்.

அந்த நிலையில் ஆசைவரத்தான் செய்யும். அந்த ஆசைகளை நிறைவு செய்து கொள் ளத்தான் வேண்டும். தேவைப்படும் போது தேவையான அளவில் மட்டும் பொருட்கள் மேல் எழும் ஆசையை ஏற்று நிறைவு செய்ய வேண்டியது தான். உறங்கும் போது தலை யனை வேண்டும். அதற்காக எல்லா நேரமும் தலையனையை தலையில் கட்டிக் கொண்டு திரிவது இல்லையே "கொதிக்கும் பால் இறக் கத் துடிக்கும் நாம் பிடித்துணியை மறவாதது போல" விழிப்பு நிலையில் பொருட்களோடு அளவோடும் முறையோடும் வைத்திருக்க கையாளப் பழகினால் பிரச்சினைக்கே இட மில்லை.

> "ஒவ்வொருவரும் தம்மைச் சமூதாயத்தின் ஒருத்தாரவே கருதவேண்டும். அந்நிலையில் நின்று செயல்பட்டு, நமது உயர்வுக்கும் சமுதாய உயர்வுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளை சரிவர ஆற்றவேண்டும். இதற்கு எல்லையே இல்லை."

உலக வாழ்வில், பொருள், மக்கள், பால், புகழ், செல்வாக்கு என்ற ஐந்து வகை பற்று ஏற்படுவது இயற்கையே. கடமை உணர் வோடும், அளவு, முறை அறிந்தும் விழிப் போடு இப்பற்றுக்களை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். நீரில் குளிப்பது தேவைதான் ஆனால் நீரில் முழ்கிவிடாமல் இருக்க வேண்டும், நெருப்பு வாழ்க்கைக்கு தேவையான ஒன்றுதான், ஆனால் நெருப்பில் வீழ்ந்து நாம் எரிந்து விடலாமா? எந்த இடத்தில் நாம் மேலே சொல்லப்பட்ட ஐந்து வகைப் பற்றுக்களால் அறிவு குறுகி, மயங்கி, நம் பிறவி நோக்கத்தையும் வாழ்வின் நெறி முறைகளையும் மறக்கின்றோமோ அன்றே வாழ்க்கை துன்பமாகி எல்லாமே ரணகள மாகின்றது. பற்றுக்களால் ஏற்படும் சிக்கல் களும் துன்பங்களும் பிறவியின் நோக்கத்திற்கு முரன்பட்ட செயல்களின் விதைகளே. இயற் கையின் ஒழுங்கமைப்பை உணர்ந்து அதனால் விளைந்த மாற்றங்களை ஏற்றுக் கொண்டு திருத்தம் பெற நாம் முயன்றால் உயர்வு நிச்சயம்.

ஒவ்வொருவரும் தம்மைச் சமூதாயத்தின் ஒருத்தாரவே கருதவேண்டும். அந்நிலையில் நின்று செயல்பட்டு நமது உயர்வுக்கும் சமு தாய உயர்வுக்கும் ஆற்ற வேண்டிய கடமை களை ஆற்றவேண்டும். இதற்கு எல்லையே இல்லை. உச்சவரம்பே கிடையாது, எவ்வளவு இயலுமோ அவ்வளவு சேவைகளையும் புரிந்துதான் ஆகவேண்டும். ஆசையில்லை யானால் இதுவெல்லாம் இயலுமா?, ஒவ்வொ ருவருக்கும் முக்கியமான சில ஆசைகள் இருக்காலம், அவ்வப்போது வந்து போகும் சின்னச்சின்ன ஆசைகள் நிறையாவே இருக் கலாம். அவையெல்லாம் ஆராயப்பட வேண்டியவை. முதலில் அவை தேவைதானா? என்று பார்க்கவேண்டும் அடுத்தாக அதை நிறைவு செய்து கொள்ள வசதி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இரண்டும் சரியாக அமையுமனால் பின் விளைவு எவ்வளவு என்று கவனித்து எல்லாம் சரியானால் திட்டமிட்டு வெற்றி பெறவேண்டும்.

தேவையில்லாத ஆசை என்றால் அமைதி யாக சிந்திப்பது நல்லது. "இந்த ஆசை எழுந்ததே தவறு, இதை என்னால் நிறைவு செய்ய முடியாது" என்று தெளிவாக சிந்தித்து அந்த சிந்தனையின் விளைவாக துன்பமா, இன்பமா என்பதை கண்டு செயல்படவேண்டும். நிறைவும் செய்யாமல், மாற்றமும் செய்யாமல் ஆசைகளை மனதில் சுமந்து கொண்டிருந் தால் மன அமைதிகெடும். உடல் பலமிழக்கும், நோய்கள் தலைதூக்கும், ஒரு ஆசை மனதில் வைத்திருக்கும் காலத்தில் எடுத்த காரியங் களில் செயல், வேகம், திறமை எல்லாம் மழுங்கி தோல்வி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும் ஆசை, திட்டமிடல், செயல் (DESIRE, APPROACH, ACHIVEMENT), இம் மூன்றும் சரியாக இருந்தால் வெற்றி நிச்சயம்.

ஒரு நாள் ஓய்வாக இருக்கும் போது ஒரு பேப்பரும், பென்சிலும் எடுத்துக் கொண்டு மனதில் இருக்கின்ற ஆசைகளை தொகுத்து ஒரு பட்டியல் போடுவோம். மிகவும் அழமான ஆசைகளையும், சின்ன சின்ன ஆசைகளை யும் சேர்த்தால் கூட யாருக்கும் இருபதுக்கு மேல் இருக்காது. மிகவும் முக்கியமானது என முதலில் எழுதிய ஆசையை பார்ப்போம். முக்கியமான ஆசையோ முக்கியம் இல்லத தோ முதல் கேள்வி என்னவாக இருக்க வேண்டும் என்றால். இந்த ஆசையை நிறை வேற்றாமல் என்னால் வாழவே முடியாதா? என்று நல்ல நிதானமாக, ஆராய்வோம் இந்த ஆசையை நிறைவு செய்யாமலும் வாழ முடியும் என்றால் உங்கள் பட்டியலிருந்து அதை அழிந்துவிடுங்கள்.

இப்படியே பட்டியல் முற்றும் அழிக்கப்படலாம். இந்த ஆசையும் இது போன்ற தேவையற்ற ஆசைகளும் இனி மனதில் வராது என்று சத்தியமாக மனதில் நினைத்துக் கொள் ளுங்கள். இப்போது எமது மனம் எவ்வளவு லேசாக இருக்கின்றது. ஒர் ஆசையை வென்றாகிவிட்டது. இந்த வெற்றியால் மனம் எவ்வளவு பலமாகிவிட்டது. அந்தப் பலத்தோடு அடுத்த ஆசையை எதிர் கொள்வோம். சில விருப்பங்கள் தேவை எனவும் முடிந்தால் நிறைவு செய்துவிடவும் வசதி இருக்கும் ஒருவர் பின்விளைவு தனக்கோ பிறருக்கோ துன்பம் தருவதாக இருக்குமாயின் அதனையும் நீக்கிவிடவேண்டும்.

நம் பட்டியலில் தேவையானவையும், நிறைவு செய்ய வசதி வாய்ப்பு உள்ளவையும், பின் விளைவு தீங்கு இல்லாததுமானா ஆசைகள் ஒரு நான்கு அல்ல ஐந்து இருக்கும். அவற் றை ஒவ்வொருவரும் எடுத்துச் செயலாக்கத் திட்டமிட வேண்டும். முதலில் எதைச் செய்வது என ஆராய்ந்து நிதானமாக அதற்கு மட்டும் திட்டம் வகுத்துச் செயல்பட்டால் (FOCUSSINE ATTENTION ON ONE THING AT A TIME) வெற்றி நிச்சயம். வாழ்வும் வளமாகும். மனம் தூய்மையாகும்.



திரு மகேசன்

நிறைவு செய்ய முடியாத நூறு ஆசைக் குப்பைகளை மனதில் சேர்த்து வைத்துக் கொண்டு திணறுவதில் யாருக்கு என்ன லாபம், மனஅமைதி முதலில் போயிற்று. மனதில் பலம் பேய்விடும். செயல்திறன் பறந்துவிடும். உடல் நலன் கெடும் நற்பெயர்கள் போய் விடும். எரிச்சலும் கோபமும் அடிக்கடி வரும். முகத்தில் தெளிவு போய் சோகம் படியும் ஆனால் இந்த தற்சோதனை வெற்றியடைந்த பின் பார்த்தால் மனம் கலகலப்பாகி இருக் கிறது நெஞ்சில் தைரியம் வந்துவிட்டது. எதையும் சாதித்துவிடலாம் என்ற வெறி வந்து விடும். பொறுமை, அளவோடு எடுத்த காரி யங்களில் வெற்றி கிட்டும். கடமை உணர்ந்து, பொறுப்புணர்ந்து, எண்ணத்தில் தூய்மையோடு காரியமாற்றம் வேண்டும். எண்ணத்தில் துறவாக இருக்க வேண்டும்.

அறிவு நிலை இயங்கு முறை விளைவு எல்லாம்<br>
அறியாமல் ஆசைதனை அடக்கிவிட்டால்<br>
அறிவிலெழும் விரைவு திசை மாற்றம் பெற்று<br>
அதன் விளைவால் அமைதின்மை உடல்-<br>
நோயுண்டாம்<br>
அறிவது தன்தேவை பழக்கம் சந்தர்ப்பம்<br>
அமைப்புகள் தக்க ஆறுகுணங்களாகும்<br>
அறிவின் நிலைமாற்றம் உணர்ந்தவ்போது<br>
அவற்றை நற்குணமாக்கும் பயிற்சி வேண்டும்.

ஆசையை அடக்கினால் அது பொங்கி பிரா வாகித்து பிதுங்கி வேறு துன்பங்கள் உண் டாகும். ஆராய்ந்தால், பிறந்த இடத்திலேயே அது ஒடுங்கும். ஆசை நிறைவேறுமானால் மற்ற எல்லா நலன்களையும் பெறுவது எளிதாகி, சாத்தியமாகி வாழ்வின் இலட்சியமே நிறைவேறிய உணர்வு உன்டாகும்.

ஆசையின் மறுமலர்ச்சியே ஆறுகுணங்கள். ஆசை தடைப்படும் போது அந்தத்தடையை நீக்க எழுவது சினம். ஆசையுள்ள பொருட் களை தனக்கு வேண்டுமெனவும், பிறர் கவராமலும் பார்த்துக் கொள்ளும் செய்கையே கடும்பற்று. ஆசை பிற பாலை நாடி எழுந்தால் அதுவே மோகம். ஆசையானது பொருள், செல்வாக்கு புகழ் இவற்றின் மீது அழுத்தி அதைக் கொண்டு மக்களை உயர்வாக அல்லது தாழ்வாக கருதும் போது எழுவது மதம். சினத்தை முடிக்க வறுமையும் வாய்ப் பையும் நாடி நிற்கும் ஆசையே வஞ்சம். ஆசையின் இயல்பறிந்து அதை நலவே விளைவிக்கத்தக்க வகையில் பயன்படுத்தி ஒழுங்குபடுத்திவிட்டால் அதுவே ஞானமாகவும் மலரும்

வாழும் போது மகிழ்வோடு வாழ்வோம். மற்றவர்களையும் மகிழ்வித்து வாழ்வோம். வாழ்க வளமுடன் என்று வாழ்த்துவோம். வாழ்த்துக்கள் வானளாவக் கேட்கட்டும் மனம் நிறையட்டும் உளம் களிக்கட்டும்.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■


## மனவளக் கலைப் பயிற்சி

Classes are conducted every Saturday of the week at 4 - 6 pm.

**The SKY Yoga Canada**

80 Nashdene Road, Unit 130<br>
Scarborough, Ontario M1V 5E4<br>
(Located at Markham & Nashdene intersection)

# கணினிக்கு அடிமையானவர்கள்



மஞ்சுளா
ராஜலிங்கம்

இது வளர்ந்து வரும் ஒருவித நோய். கண் முன்னால் நடக்கும், தினச் செயல்களைவிட, கணனியில் காணும் விடயங்கள், பாவிப்பாளர்களை மிகவும் ஈர்த்து அவற்றின் மீது ஒரு பிரிக்க முடியாத உறவை ஏற்படுத்தி விடுகின்றன.

வேலைத் தளங்களில், வீட்டில் கணனியே கதியென்று இருப்போரின் மனநிலையில் மற்றும் பழக்க வழக்கங்களில் ஒரு வித்தியாசத்தை உணரக் கூடியதாக உள்ளது. கணனியை விட்டுவிலகி இருக்கும்போது, அவர்களின் மனதில் சந்தோஷம் இல்லை. சிலபேர் கணனிப் பக்கம் போவதைத் தவிர்க்க முயன்றும் வெற்றிகரமாகவே தோல்வியைத் தழுவிக் கொண்டார்கள். நிறையப் பேர், பணத்தையும் நேரத்தையும் கணனிப் பொழுதுகளுக்கு எக்கச்சக்கமாகச் செலவிப்பதும் இன்றி, தம் வேலை, குடும்பம் போன்றவற்றிலும் இதனால் அக்கறைச் செலுத்தத் தவறி விடுகிறார்கள். பின்னர் தம் மறுப்பின் மூலம் தம் தவறுகளை நியாயப் படுத்துகின்றனர்.

இது எவ்வளவு பெரிய ஆபத்தாக உருவெடுத்திருக்கிறதென்று யாருக்கும் இன்னும் அறிய வாய்ப்பில்லை, ஆனால் கடந்த சில ஆண்டுகளில் இந்தப் பிரச்சினையின் தாக்கம் எல்லா வயதினருக்கிடையேயும் தலைதூக்கி ஆட்டுவிக்கும், ஒரு சூனியமான வாழ்க்கையாக உருவாகிக் கொண்டு வருகின்றது.

கணினியில் நீண்ட நேரம் செலவு செய்யும் ஒருவர் தன் மனதை அதிலிருந்து தற்காலிகமாக ஒதுக்கி வைக்க, தான் solitaire விளையாட்டில் மனதை அடிக்கடிச் செலுத்தியதாக ஒத்துக்கொள்கின்றார் அவர். "அந்த விளையாட்டை நான் மிகவும் விரும்பத் தொடங்கியதோடு, என் நேரத்தை அதிகமாக அதில் செலவழிக்கத் தொடங்கி விட்டேன்" என்று நினைவு கூர்கிறார் அவர். அத்துடன் நிற்க வில்லை அவர், தான் என்ன காரியத்திற்காக இந்தக் கணினியுடன் தன்னைத் தொடர்பு படுத்திக் கொள்ள வந்தாரோ, அதை மறந்து விட்டு, விளையாட்டை இரவில் அதிக நேரம் தாண்டி விளையாடுவதோடு, வேலையிலும் சிறிதளவு நேரத்தையே செலவிட்டார். "நான் இதனால் சூதாட்டத்தில் நாட்டம் கொண்டதுடன், சாப்பிடும் நேரங்களிலும் ஒரு குழப்ப விளைவை உணர்ந்தேன்". என ஒத்துக் கொள்ளும் அவர், சிறிது சிறிதாக தனக்குள்ளாகவே, கணினியில் செலவிடும் நேரத்தை, முக்கியமாக ஒரு விளையாட்டு முடிந்ததும் தான் எழும்புவேன் என்கிற பழக்கத்தைத் தவிர்த்து, தோல்வியில் முடியும் விளையாட்டு முடிவு வந்தாலும், அத்துடன் அன்றைய ஆட்டத்தை முடிக்கப் பழகிக் கொண்டார். "இதை என்போன்ற நோயாளிகளுடனும் நான் பகிர்ந்து கொள்கின்றேன்" என்றார் அவர். ஆம் அவர் பெயர் ஓர்சாக். இவர் ஒரு புகழ்பெற்ற மனநோய் மருத்துவ நிபுணர்.



மக்கள் கணினியைத் தகவல்களைப் பெற மட்டும் பாவிப்பதுடன் நின்றுவிடாமல், பொழுது போக்கிற்காகவும், சிற்றின்பங்களுக்காகவும் கூட கணினியைத் துஷ்பிரயோகிக்கின்றார்கள் என்று சாடுகிறார் ஓர்சாக். இது சிறுபிள்ளைகள் கணினியில் விளையாடுவது முதல், பெரியவர்கள், முகம் தெரியாதவர்களுடன் உரையாடுவது வரை இந்தக் கணினி மோகம் வரையற்ற வயதில் மக்களைச் சீரழிக்கின்றது என்கிறார்.

கணினியில் பல்லாயிரம் நல்ல விடையங்கள் உள்ளன. வேலைக்காக கணினியைப் பாவிக்கும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் எல்லோருடனும் உலகளாவிய அளவில் உரையாடல்களை வைத்துக் கொள்ளலாம், நண்பர்களை உருவாக்கிக் கொள்ளலாம், செய்திகள் படிக்கலாம், நகைச்சுவைகளைப் பறிமாறிக் கொள்ளலாம், படங்கள் அனுப்பிக் கொள்ளலாம், நண்பர்களுடன் நட்பை ஏற்படுத்திக் கொள்ளலாம், இன்னும் என்னென்னவோ செய்யலாம். இவ்வளவு ஏன், தற்போது கைத்தொலைபேசியைக் கொண்டே கணினியை 24 மணித்தியாலமும் நம் கைப்பிடிக்குள் கொண்டு வந்து விடலாம்.

கணினியில் எவ்வளவோ நல்ல விடயங்கள் உண்டு. அன்றி, கணினி இல்லாமல் உலகமே இயங்காது என்றது வரை வந்துவிட்டது. அதில் எந்தத் தப்பும் இல்லை. இதனால் எவ்வளவோ நன்மைகள், படிப்பினைகள், கண்டுபிடிப்புக்கள், தேவைகள், தேடல்கள், தீர்மானங்கள், தொடர்புகள் போன்றவை உள்வாங்கப் பட்டுள்ளன.

S.P ELECTRONICS
அனைத்துத் தமிழ் வானொலிகளும் புதிதாக
வாங்குவதற்கும், திருத்திக் கொள்வதற்கும்.
416 264 6400
2641 Eglinton Ave. Scarborough
(Brimley & Eglinton)

## கணினிக்கு அடிமையாதலைக் கோடிட்டுக் காட்டும் பொதுவான அறிகுறிகளும், குணங்களும்:

- கணினியை அதிகநேரம் பாவித்து விட்டோம் என்று தெரிந்தும், அந்தச் சிந்தனையை அசட்டை செய்தல்.
- கணினியைச் சிற்றின்ப நேரம், பிரச்சினைகளிலிருந்து தாற்காலிக விடுதலை, மன அழுத்தத்தின் குறைப்பு கருதி பாவித்தல்.
- கணினியைப் பாவிக்காத நேரத்தில், மன அழுத்தம் ஏற்படல், கோபம் ஏற்படல், தன்னிலை மறந்து செயற்படல்.
- குடும்பப் பொறுப்புக்கள், பள்ளிக்கூடங்கள், வேலைகள் ஆகியவற்றைப் புறக்கணித்தல்.
- கணினியில் செலவழித்த நேரத்தைப் பற்றிப் பொய் சொல்லல்.
- கணினியில் ஈடுபட்டுத் தகாத செயல்களில் ஈடுபட்டு வாழ்க்கையைச் சிறுமைப்படுத்தல்.
- படிப்பு, பொருளாதாரம், வேலை வாய்ப்பு, நல்ல உறவுகள் ஆகியவற்றை இந்த மாதிரி மேம்போக்குத் தனத்தால் இழத்தல்.
- கணினியைப் பாவிக்கும் நேரத்தைக் கட்டுப் படுத்த வேண்டும் என்று எடுத்த முடிவிலிருந்து மீளமுடியாமல், மீண்டும் பழைய பழக்கவழக்கத்திற்கே தள்ளப் படுதல்.

மொத்தத்தில் முறையும், நேரமும் தவறிக் கணினியைப் பாவிப்பதால் என்பன மனதுக்கு மட்டுமல்ல, உடலுக்கும் தீராத, தவிர்க்க முடியாத கேடுகள் விளைகின்றன.

## கணினிக்கு அடிமையானவர்கள்

- ஒரு கணவர் அல்லது ஒரு மனைவி தன் மனைவி அல்லது தனது கணவரை மற்றும் குழந்தைகளைப் புறக்கணித்துவிட்டு, கணினியிலே பொழுதைச் செலுத்துவது, குடும்ப ஒன்றுகூடல்களில் ஆர்வம் காட்டாமை,
- கணினியை ஒருதரம் பாவிக்கிறேன் என்றவர் விடிந்தும் கணினியிலேயே ஆழ்ந்திருப்பதைக் காணல்.
- சின்னச் சின்ன வீட்டு வேலைகளைக் கூட ஒரு பிள்ளைகள் செய்யாமல், பள்ளிவிட்டு வந்ததும் கணினியிலேயே விளையாடுவதில் மனதைச் செலுத்தல்.
- ஒரு பள்ளிப் பிள்ளையின் பாடத் தராதரங்கள் வழமையை விடக் குறைவான புள்ளிகளுடன் இருத்தல்.
- கல்லூரிப் படிப்பில் முதல் வருடம் அடி எடுத்து வைத்திருக்கும் மாணவன் அல்லது மாணவி தங்கள் ஆசிரியரால் பாடங்களின் புள்ளிகள் குறைந்து அதைக் கவனத்தில் கொண்டுவருமாறு எச்சரிக்கப் படுதல்.
- பாடங்களைப் படிக்கவும், ஆராயவும் கணினியைப் பயன்படுத்தாமல், அதில் தம் நண்பர்கள், உறவினர்கள் போன்றவர்களுடன் உரையாடல், தகாத இணையத் தளங்களில் மனதைச் செலுத்தல்

## இதிலிருந்து மீள வழி என்ன?

இதிலிருந்து மீள வழி என்ன? எல்லாம் நமது மனக் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. இதற்கு முதலில் நம்மை நாமே முதலில் பரீட்சித்துப் பார்க்க வேண்டும். அது நீண்டகால வாழ்வில் வேலை செய்யவில்லை என்றால் மட்டுமே அவசியம் கருதி, மருத்துவர், மனநோய் மருத்துவர் ஆலோசனையின் பேரில் பின்னர் மருந்துகளைப் பயன்படுத்திப் பார்க்கலாம்.

66ம் பக்கம் பார்க்க...

www.inayam.net
- கலை விழாக்கள்
- எழுச்சி நிகழ்வுகள்
- ஊர்ச்சங்க ஒன்றுகூடல்கள்
- திருவிழாக்கள்
- கொண்டாட்டங்கள்
- நடன, நாடக, இசை விழாக்கள்
- குடும்ப நிகழ்வுகள்
- மரணச் சடங்கு நிகழ்வுகள்

எதுவானாலும்,

இணையம் .net மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

உங்களுக்கு அனுகூலமான இடம், காலம், நேரங்களில் ஏனைய நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பதை முன்கூட்டியே அறிந்துகொண்டு உங்கள் நிகழ்வுகளை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

முன்கூட்டியே inayam.net இல் பதிவு செய்துகொள்வதன் மூலம் ஏனைய நிகழ்வுகளோடு போட்டிகள் உருவாகுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் நிகழ்வுகள் திருப்திகரமாக நடந்தேறுவதற்கு பங்குபெறும் மக்களின் அனுகூலம் முக்கியமானது.

இதைக் கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் தளமே inayam.net முயற்சி செய்யுங்கள்!

முற்றிலும் இலவசம்

inayam
416•400•6406

digi

# CREDIT SOLUTION CENTRE

## Trustee in Bankruptcy

இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும்
ஒரு தமிழர் நிறுவனம்

கடன் பிரச்சனைகளால் நிம்மதியற்ற வாழ்க்கையா?

நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?

வீடு கார் பறிமுதல் ஆகிவிடும் என்ற ஏக்கமா?

**Collection Agency**யின் தொலைபேசி மிரட்டலா?

உங்கள் சம்பளம் **(Salary)** கடன் தந்தோரினால் பறிமுதல் ஆகிவிடும் என்ற ஏக்கமா?

உங்கள் அனைத்து பிரச்சனைகளுக்கும் இலவச ஆலோசனைபெற அழையுங்கள்!

**For Free Consultation Please Call:**

**Sri**





## CREDIT SOLUTION CENTRE

**80 Corporate Drive # 309**
**Scarborough, ON M1H 3G5**
**Tel: 416 439 0224 Fax: 416 439 0226**
**creditsolutioncentre@gmail.com**

# A1 TOP QUALITY FLORIST



உங்களின் மங்களகரமான வைபவங்களுக்கு


தேவையான பொருட்களுக்கும் நாடுங்கள்

**பிள்ளை 416-269-5522**

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

# A1 TOP QUALITY FLORIST

## Funeral Services




Floral Arrangement for Funeral Needs

**பிள்ளை 416-269-5522**

2871 Lawrence Ave. East, Scarborough. Ontario M1P 2S8

# வரியில்லாத கணக்குகளின் அடிப்படை



ராகுலன்
balar@thaiveedu.com

ஒவ்வொரு வருடமும் வருட ஆரம்பத்தில் கனடியர்களின் சிந்தனையில் ஒரு கேள்வி தவறாமல் எழுவதுண்டு. வீட்டு அடமானக் கடனை கட்டுவதால் அல்லது RRSPக்கு பணம் கட்டுவதா என்று. இந்த ஆண்டு அந்தக் கேள்வியுடன் புதியதொரு கேள்வியும் சேர்ந்து கொண்டது. வரியில்லாத சேமிப்புக் கணக்கு. அதாவது TFSA என்றழைக்கப்படுகின்றது.

2009 Jan 1ம் திகதியிலிருந்து 18 வயதுக்கு மேற்பட்டோர் ஒரு ஆண்டுக்கு $5,000 இந்தக் கணக்கில் வைப்பிலிட முடியும். அந்தக் கணக்கில் வரும் வருமானம் எதுவாக இருந்தாலும் வரியிறுக்கத் தேவையில்லை. இந்த கணக்கு திட்டத்தையிட்டு பலரும் பாராட்டுகளை வெளியிட்டு உள்ளார்கள். சிலர் ஏன் இந்தப் பாராட்டு என அதிசயத்து இருக்கின்றார்கள். அவர்கள் சொல்லுவது $5,000 சிறிய எண் என்பதாகும். ஆனால் எப்படியும் வரியிறுத்தலை தவிர்க்க எவ்வளவு சிறியது என்றாலும் ஒருமுறை சிந்தித்துக் கொள்வது நல்லது.

## இந்த சேமிப்பு கணக்குக்குள் அடங்கும் முதலீடுகள்

அதிகமான RRSPக்குப் பொருத்தமான முதலீடுகள் இதற்குள் வைப்பில் இடலாம். பணம், GIC, Term Deposit, Mutual Funds, Income Trust Units, Retinols, Stock, Bonds, ஆனால் Stoke, Bonds Mutual Funds வெளியே வைத்திருப்பது நல்லது. எனென்றால் முதலீடு இழத்தல் (Capital Loss) வரிப்பத்ரிரம் நிரப்பும் போது அரசுக்கு காட்ட முடியாது.

## பங்களிக்கக்கூடிய அளவு:

வயது வித்தியாசமின்றி $5,000 ஒருவர் ஆண்டுக்கு வைப்பிலிடலாம். இரு குடும்பத்திற்கு $10,000 ஆகும். இது RRSPயுடன் ஒப்பிக்கும்போது மிகக்குறைவாகும். RRSP யானது முன்னைய ஆண்டு உழைத்த வருவாயில் 18% 20,000 வரையாகும். அரசாங்கம் இந்த TFSA கணக்கு நீங்கள் வருமானவரி பத்திரங்களை நிரப்பும்போது தரும் தகவல்களை வைத்துக்கொண்டு கணித்து வரும் இந்தக் கணக்கிற்கு, ஒரு ஆண்டு பணம் வைப்பிலிடாவிட்டால் அந்த $5,000 அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு கொண்டு செல்லப்படலாம். கூடுதலாக இந்தக் கணக்கில் வைப்பிலிட்டால் மாதாந்த 1%த்தை அரசாங்கம் அளவிட்டுக் கொள்ளும்.

## கணக்கில் உள்ள பணத்தை எப்படி பயன்படுத்தலாம்?

இந்தக் கணக்கில் உள்ள பணத்தை எதற்கும் பயன்படுத்தலாம். வீடு, கார் வாங்க, வியாபாரத்தை ஆரம்பிக்க, ஒரு உல்லாசப் பயணத்திற்குக்கூட பயன்படுத்தலாம். கணக்கில் இருந்து எடுக்கப்படும் பணத்தை அடுத்த வருடத்திற்கு கணக்கிடுவதற்கு செலுத்தக்கூடிய அளவை அதிகரிக்கும்.

## வரியிறுத்தல் சட்டங்கள்:

இந்த TFSA கணக்கில் இடும் பணத்தை RRSP போல் வரிக்காக கழிக்கமுடியாது ஆகவே வரிப்பத்திரம் நிரப்பும்போது வழமையாக எதிர்பார்க்கும் ஆதாயம் இல்லை. உண்மையில் இந்த கணக்குள் வரக்கூடிய முதலீடு ஆதாயங்களுக்கு அரசாங்கம் வரி விலக்குத் தந்துள்ளது.

> “ இந்தக் கணக்கில் உள்ள பணத்தை எதற்கும் பயன்படுத்தலாம். வீடு, கார் வாங்க, வியாபாரத்தை ஆரம்பிக்க, ஒரு உல்லாசப் பயணத்திற்குக்கூட பயன்படுத்தலாம். கணக்கில் இருந்து எடுக்கப்படும் பணத்தை அடுத்த வருடத்திற்கு கணக்கிடுவதற்கு, செலுத்தக்கூடிய அளவை அதிகரிக்கும். ”

## ஓய்வூதீயம் பெறுவோர்களுக்கான ஆதாயம்:

RRSP கணக்குகளுக்கு இருப்பதுபோல வயது எல்லை இந்த TFSA கணக்குகளுக்கு இல்லை.

TFSA கணக்குகள் சாதாரணமான சேமிப்புகளை வைத்திருப்போரில் அரசாங்க வெகுமதிகளை Old Age Supplement, Guaranteed Income supplement என்பவைக்கு எதிராக கணிக்கப்பட்டு அவற்றின் கொடுப்பனவு குறைக்கப்படுவதில்லை. குறைந்த வருமானம் கொண்ட கனடியர்கள் RRSPக்குள் முதலிடு வதில்லை.. ஏனென்றால் அவற்றை மீளப் பெறும்போது இருக்கும் அரச வரி கொடுப்பனவுகள் தாக்கத்தினால் ஆகும். அத்துடன் அவர்களின் அரசாங்க கொடுப்பனவுகளுக்கு எதிராகக் கணக்கிடப்பட்டு அவை குறைக்கப்படும்.

இந்த TFSA கணக்கினுள் பெற்ற வருமானமோ வெளியில் எடுத்த பணமோ உங்களின் வருமானம் என கணக்கிடப்படுவதில்லை ஆதலால் உங்களுக்கு கிடைத்த எந்தவொரு அரசாங்கக் கொடுப்பனவையும் பாதிப்பதில்லை. ஓய்வுபெறுபவர்கள் தமது RRSP, RRIF வைப்புகளை TFSA இருந்து மாற்றுவதன் மூலம் வரிகளை சேமிக்க முடியும். RRIF, RRSF இருந்து பணம் வெளியில் எடுக்கும் போது வரிகட்ட வேண்டும். ஆனால் TFSAக்கு மாற்றப்பட்டபின் அந்த கணக்கிற்கு வரி கட்டத் தேவையில்லை.

## வருமான பிரிவு (Income Spiliting)

TFSA சேமிப்பு கணக்கு கணவன் மனைவிக்கிடையே வருமானத்தை வரிசேமிப்பு ஆதாயத்துடன் பிரிக்க உதவும். கூடிய வருமானம் உடையவர் குறைந்த வருமானம் கொண்டவரின் பெயரில் கணக்குகளுக்கு கொடுப்பனவு செய்யமுடியும். ஒருவருடைய இறப்பின்போது இந்த கணக்கு மற்றவருக்கு மாற்றப்படக்கூடும்.

## கடன் வாங்கி முதலீடு செய்தல்:

கடன் வாங்கி முதலீடும் பொழுது அந்த கடனுக்கு கட்டும் வட்டி இந்தக் கணக்கிற்கு எதிராக கழிக்க முடியாது. RRSPயைப் போலல்லாது இந்தக் கணக்கில் உள்ள சொத்துக்கள் கடனுக்கு பாதுகாப்புக்கு வங்கிக்கு காட்டலாம். நிதி ஆலோசகர் RRSP செலுத்துவதால் கிடைக்கும் திரும்பப்பெறும் வரியை TFSAயில் சேமிக்கும்படி ஆலோசனைகளைக் கூறுகிறார்கள்.

## எங்கு இந்தக் கணக்குகளை ஆரம்பிக்கலாம்?

வங்கிகள், Trust Companies, Credit Unions, Investment dealers. சில நிறுவனங்கள் $1,000 உடன் சேவைக் கொடுப்பினை இல்லாமல் செய்து விடுகிறார்கள்.

## எவ்வளவு நீங்கள் சேமிக்கலாம்?

அதிகமான நிறுவனங்கள் 2% வட்டியை இந்த TFSA கணக்கிற்குத் தருகின்றன. $5,000த்திற்கு உங்களுக்கு $100 கிடைக்கும். வரி மூலம் நீங்கள் சேமிப்பது எவ்வளவு என்றால் $46 ஆகும். சில நிதி நிறுவனங்கள் இந்த கணக்கை நிர்வகிக்க ஒரு சேவைக்கட்டணத்தை அறவிடுவது உண்டு. அதையும் கணக்கிட்டால் கையும் கணக்கும் சரியாக இருக்கும்.

## இந்தக் கணக்கின் உண்மையான பிரயோசனம் என்ன?

TFSA கணக்குகள் RRSPயை விட மீளப் பெறும்போது பிரயோசனமானவை. ஏனென்றால் வெளியில் எடுக்கும் போது TFSAக்கு வரி அறவிடப்படுவது இல்லை. RRSPயை விட இருண்ட காலத்தை பொறுத்திருக்கக்கூடிய இளம் தலைமுறையினருக்கு பிரயோசனமாக விருக்கும். 2%த்தை விட கூடியளவு பலனைத் தரக்கூடிய முதலீடுகளால் கூடிய பிரயோசனம் இருக்கும்.

ragulan@thaiveedu.com

■ ■ ■

**Driving School**

ஒட்டனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை,
நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி
G1, G2 தேர்வுப் பயிற்சிகள்,
போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள்,
வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள்,
வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி

General Driving School
Ministry of Transportation Approved Instructor
பேரின்பநாதன் வேந்தன்
416-731-2829

EXPERT
BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

www.expertinspector.com

- Tough and Thorough Inspections by University of Toronto educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of ASHI and CAHPI-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER
CAHPI Ontario

# கணினிக்கு அடிமை

62ம் பக்கத் தொடர்ச்சி...

### செய்யவேண்டியவை

- நீங்கள் கணினியைப் பாவிக்கும் நேரத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருங்கள். இந்த நேரத்தில்தான் கணினிக்குப் போவது, இத்தனை மணிக்குள் கணினியை விட்டு விலகுவது என்று உங்களை நீங்களே பயிற்றுவியுங்கள்.
- ஈமெயில் மற்றும் சொந்தப் பாவனைகளின் நேரங்களைக் கட்டுப்படுத்துங்கள். ஒரு வாரத்தில் ஒருநாள் முழுவதும் கம்ப்யூட்டரைத் தொடுவதில்லை என்ற உறுதியுடன் இருங்கள் - ஈமெயில் பார்ப்பது உட்பட. அதை வாரக் கடைசிகளில் மட்டுமே திறந்து பார்ப்பது என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள்.
- வேலை செய்யும் நேரங்களில் - வேலையை மட்டுமே செய்யுங்கள். தேடல்கள் மற்றும் chat போன்றவை வேண்டாம். Surfing என்பது வேலை தொடர்பாக மட்டுமே இருத்தல் வேண்டும்.
- Twitter, facebook, personal emails, texting போன்றவை மதிய உணவு இடைவேளையின் போது மட்டுமே பார்க்க, கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாக்கிக் கொள்ளுங்கள்.
- Pop-ups போன்றவைகளை கணினித் திரையில் வரவிடாமல் திரைபோடுங்கள். நீங்கள் கணினியில் மூழ்கும் நேரத்தில் invisible ஆகப் போனால், எந்த இடையூறுகளும் இருக்காது.
- கணினியில் விளையாடும் சமயங்களை ஒரு நேரக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருங்கள்.
- படுக்கைக்கு நேரத்துடன் அல்லது அதற்கும் முதல் போய் தூங்குவது என்று கங்கணம் கட்டிக் கொள்ளுங்கள்.
- தூக்கம் வரவில்லையா? பாடல்களைக் கேளுங்கள், புத்தகம் ஒன்றை எடுத்துப் படியுங்கள், தொலைக்காட்சியைப் பாருங்கள், ஆனால் கணினியை இந்தப் பட்டியலில் இருந்து எடுத்து விடுங்கள்.
- உற்சாகமான தினச் செயல்களில் உங்களை முழுமையான ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.
- பாதி இராத்திரியில் எழுந்து கழிவறைக்கு அல்லது சமையலறைக்குத் தண்ணீர் குடிக்கப்போகும் வழியில்கூட, கணினிப் பக்கம் மெதுவே வந்து அவற்றைச் சிறிது தட்டிப் பார்ப்பதுண்டு. அந்த மாதிரிப் பழக்கத்தை அறவே தவிருங்கள். கணினியின் மின் இணைப்பை முற்றிலுமாகத் துண்டித்து விட்டால், நித்திரை இடையில் முறியும் போது, இந்தப் பிரச்சினை வராது.



### கணினி மோகத்தில் ஈடுபட்டு மீளமுடியாமல் தவிக்கும் நண்பர், உறவினர்க்கு நம்மால் செய்யக்கூடிய உதவிகள்:

- அவர்களுக்கு ஒரு உதாரணமாகத் திகழுங்கள். நீங்கள் கட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்குள் உங்கள் கணினிப் பாவனையை வைத்திருங்கள்.
- நல்ல விதமாக, தேவை கருதி மட்டுமே கணினியைப் பாவிக்கும் நல்ல நண்பர்கள், உறவினர்களிடம் இவர்களை அறிமுகப் படுத்துங்கள்.
- கம்ப்யூட்டர் சம்பந்தப்படாத விளையாட்டுக்களில் இவர்களையும் இணைத்துக் கொள்ளுங்கள்.
- அவர்களிடம் கணினிப் பாவிப்பின் நன்மை, தீமைகளைப் பற்றி மனந்திறந்து பகிர்ந்து கொள்ளுங்கள்.
- தங்கள் மனதில் பிரச்சினைகள் இருக்கின்றது என்று அவர்கள் நினைத்தால், அவர்களை அன்புடன் அரவணைத்து, அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யுங்கள்.
- அவர்களை personal counseling போன்றவற்றிக்குப் போய் பலன் பெறும்படி ஆறுதல், புத்திமதி கூறுங்கள்.

இது ஒன்றும் திரும்பி வரவே முடியாத பள்ளமல்ல, முயற்சி செய்தால் எல்லாம் நன்மையாகவே முடியும். யாருக்கும் ஏதோ ஒரு விடயத்தில் ஒரு வெறித்தனம் இருக்கத்தான் செய்யும். ஆனால் அது மற்றவர்களையும் ஏதாவதொரு விதத்தில் பாதிக்கச் செய்கிறதென்றால், அந்தப் பிரச்சினையின் தீவிரம் என்னவென்று சொல்லித் தெரியத் தேவையில்லை. அழகாகத் திட்டமிட்டால், எதுவும் நம்மை தமக்குள் அடிமையாக்கி வைத்திருக்காது. கட்டுப்பாடுகளின் எஜமான்கள் எமக்கு நாமே தான்.

உசாத்துணை:http://www.hno.harvard.edu/gazette/1999/01.21/computer.html

manjula.rajalingam@thaiveedu.com

■ ■ ■


## CTR தகவல் பலகை

**ROOMS / BASEMENT RENT**

**MORRISON & ELLESMERE**
2 B/R Basements
Mano: 416-617-4671 – Ruban

**NELSON & MCCLEVIN**
1 Room for rent
Kala: 416-754-8947

**BRIMLEY & LAWRENCE**
2B/R Basement
Ragu: 416-264-5073

**MCLEVIN & NELSON**
1B/R Basement
Kumar: 416-427-2855

**MARKHAM & ELLESMERE**
2 B/R Basements
Ambikai: 647-896-8687

**HOUSE FOR RENT**
3+2 B/Room all facilities
416-878-6008

**BRIMLEY & ELLESMERE**
3B/R Basement
Kumary: 416-560-5562

**BRAMPTON**
4 B/R House
2 years – Fully upgrade
Nitharshan: 416-400-2222

**NELSON & FINCH**
1 room for girls
Daycare 3+
chithra: 647-349-5343

**MCCOWAN & ELSON**
2B/R Basement separate Parking
Maran: 647-205-8502

**MARKHAM & ELSON**
2B/R Basement near all
Ambikai: 647-896-8687

**MARKHAM & ELLESMERE**
3B/R Bungalow house for rent
Kannan:416-433-6344

**NELSON & MCCLEVIN**
Upper level 2 Rooms for rent
Kala: 416-754-8947

**KEELE & MAJOR**
2B/R Walk-out
Magenthiran: 416-624-7104

**BRIMLEY & ELLESMERE**
Separate rooms for rent in basement
Kumary: 416-560-5532

**MCCOWAN & 16TH AVE**
2B/R Basement
Kiruba: 416-414-5562

**TAPSCOTT & CROWTRAIL**
1B/R Basement separate Parking
Balakrishnan: 416-609-9588

**TAPSCOTT & CROWTRAIL**
1B/R Basement
Suba: 416-358-2467

**AUTO FOR SAL**

**2004 CRV – HONDA**
1999 CRV – Honda – 56 km
Thevan: 416-206-6842

**2001 HONDA ACURA**
5 Speed 149km
Raja: 905-949-1075

**1998 HONDA CRV**
Green
4X4 $ 3950
Jeevan: 416-274-5847

**TOYOTA SIANNA**
Mani: 416-737-1989

**2000 DODGE**
grand caravan
Thusy: 647-500-8215
416-519-9215

**1998 TOYOTA CAMRY**
416-716-2975

**1991 ACURA**
Black 2 Door $ 1000
Siva: 416-221-3831

**2006 HONDA CIVIC**
auto, 48km
Rajan: 416-569-1385

**98 TOYOTA SIANNA LE**
green 155km
Sri: 416-430-0455

**OTHERS**

**FREE YOGA MEDICATION**
Vannipushpa: 647 278 8445

**WEDDING SERVICE**

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

Thavamani: 416-439-8892 – 905-696-0543

**TUTION**
mccowan and finch
416 335 1477
Mayuran: Preschool gr 1 and 2

**DAY CARE**
(markham & ellesemere)
Malar: 416 431 2495, 416 844 4026

பலகாரம்
செய்து கொடுக்கப்படும்
Ottonpark & Lawrence
Prema: 416-439-1599, 647-802-1599

**PAINTING & CARPET CLEANING**
3B/R Houseற்கு Paint $450(With Paint)
Babu: 647-836-3647

**TUTION**
Brimley/ Steel. 1-8 Math and English
Tharma: 905-479-3024

உங்கள்
அறிவித்தல்களும்
"தாய்வீட்டில்"
இடம்பெற வேண்டுமா
416 400 6406

# துயர் பகிர்வோம்



### திருமதி. தர்மலிங்கம் நாகரத்தினம்


நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வன்னேரிக்குளம், மல்லாவி முதலாம் யூனிற்றை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் நாகரத்தினம் அவர்கள் 08.05.2009 அன்று முள்ளிவாய்க்காலில் அகாலமரணமானார்.

அன்னார், காலஞ்சென்ற இராமநாதன் தெய்வானை ஆகியோரின் அருமை மகளும், காலஞ்சென்ற தனுக்கோடி பராசக்தி ஆகியோரின் மருமகளும், தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சந்திரன், இந்திரன், கணேஸ், சுகிர்தா, றமேஸ், ராதா, காலஞ்சென்ற சுரேஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராஜா (இலங்கை), கமலாம்பிகை (கமலம்), நித்தியானந்தராஜா (ஆனந்தன் - இந்தியா), காலஞ்சென்ற மகேந்திரராஜா, கனகராஜா(கிளி-கனடா), வன்னியசிங்கம்(குழந்தை), பாலச்சந்திரன் (பாலன்), இந்திராதேவி(ராணி), புவனேஸ்வரி (செல்வா), கேதிஸ்வரநாதன் (ரவி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

கனகராஜா(கிளி)
கனடா 1 705 792 9294

கரன்
இலங்கை 94 24 490 1981

ஆனந்தன்
இந்தியா 91 984 370 3611



### திரு. தனிநாயகம் தசிகரன்

வன்னேரிக்குளம், மல்லாவி முதலாம் யூனிற்றை பிறப்பிடமாகவும் செட்டிக்குளம் இடைத்தங்கல் முகாமை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தனிநாயகம் தசிகரன் (ஆசிரியர்) அவர்கள் 21-05-2009 அன்று அகாலமரணமானார்.

அன்னார், தனிநாயகம் கமலாம்பிகை ஆகியோரின் அருமைமகனும், சண்முகம், பவளம் அகியோரின் அன்பு மருமகனும் சுமோஜினியின் ஆருயிர் கணவரும், கரிதாசனின் அன்புத் தந்தையும், பாஸ்கரன், பகிர்த்திகா ஆகியோரின் சகோதரனும், சசியின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிமரியாதை வவுனியாவில் நடைபெற்றது.

கனகராஜா(கிளி)
கனடா 1 705 792 9294

கரன்
இலங்கை 94 24 490 1981

ஆனந்தன்
இந்தியா 91 984 370 3611



### திரு. ச. சொக்கலிங்கம்

தென்னிந்தியா திருநெல்வேலி மாவட்டம், தென்காசியை பிறப்பிடமாகவும் கொழும்பு-15 மட்டக்குளியை வதிவிடமாகவும் கொண்ட திரு சொக்கலிங்கம் அவர்கள் 15.05.2009 அன்று இயற்கையெய்தினார்.

அன்னார் அமரர் சண்முகதேவியின் அன்புக் கணவரும் சுப்ரமணியம் (சென்னை), சரசா (லண்டன்), சந்தர் (கொழும்பு), சுந்தர் (லண்டன்), மாலா(சென்னை), சீதா(சேலம்), முத்துக்கிருஷ்ணன் (கண்ணா-கொழும்பு), அருள்பிரகாஷ் (லண்டன்), பிரபாகரன் (பாபு-வீடு விற்பனை முகவர்), ஆகியோரின் தந்தையாரும் அமரர் சிவசுப்ரமணியம், சாந் தி, மதிவதனா, யோகேஸ்வரி, முத்தரசு, கணேசன், இரத்தினா, சீதா, சிவவதனி (எழுத்தாளர்-கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சீதா, தினேஸ்குமார், கவிதா, கேமசரண்யா, பிரவீன்ராஜ், சண்முகக்கிருஷாந், விக்னேஷ், லோஷினி, லியோ பவித்திரன், மயூரன், திவ்யா (கனடா), இமேஷன், ∴பியோனா, தமிழினி (கனடா) ஆகியோரின் தாத்தாவும் ∴பியோனா, ஆகாஸ் ஆகியோரின் ஆசைமிகு பூட்டாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிமரியாதை 18.05.2009 அன்று கொழும்பில் இடம்பெற்றது.

சொக்கலிங்கம் பிரபாகரன்- 416-522-3314
சிவவதனி பிரபாகரன்- 905-554-2496



### செல்வி. கவிதா கனகராஜா

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கவிதா கனகராஜா அவர்கள் 06.05.2009 அன்று இரணைப்பாலையில் காலமானார்.

அன்னார், கனகராஜா(மாவட்ட விளையாட்டு அதிகாரி வவுனியா),கமலாநிதி ஆகியோரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சின்னதங்கச்சி(முரசுமோட்டை), தம்பையா கமலாம்பிகை(சரவணை) ஆகியோரின் பேத்தியும், கார்த்திகா(பேராதனைப் பல்கலைக்கழகம்), சஞ்ஜீவன், சயந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற சிவபாதம், அன்னலட்சுமி(செட்டிக்குளம்), கேதாரநாதன் சிவஒளி(யாழ்ப்பாணம்), ஜெகநாதன், புஸ்பவதனி(கனடா), கணபதிப்பிள்ளை கௌரி(கனடா) ஆகியோரின் அன்புமருமகளும், காலஞ்சென்ற மாசிலாமணி, விக்கினேஸ்வரன்(செல்வா) ரஞ்சிதநாயகி (ஹொலண்ட்), கேதீஸ்வரன்(மோகன். கிராம சேவையாளர்-பரந்தன்), நவநிதி ஆகியோரின் அன்புநிறை பெறாமகளும் ஆவார்.

| | | |
|---|---|---|
| கனகராஜா | வவுனியா | 94 60224 2218 |
| செல்வா | ஹொலண்ட் | 31 71401 0443 |
| கௌரி - | | |
| கணபதிப்பிள்ளை | கனடா | 416 282 4331 |
| ஜெகநாதன் | கனடா | 416 792 9159 |
| கேதீஸ்வரன் - | | |
| மோகன் | பிரான்ஸ் | 33 13050 4996 |



### திரு. சுப்பிரமணியம் திருஞானசம்பந்தர்

கொக்குவில் மேற்கு, அப்பையா லேனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் திருஞானசம்பந்தர் அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சோதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னையா பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவானந்தன், சிவநேசன் (கனடா), காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் சிவதாசன், சிவசக்தி, சிவமலர், சிவபாலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஷீலா (கனடா), மா.இளம்பிறையன் (யாழ். பல்கலைக்கழகம்), ம.முருகதாஸ் (அவிசாவளை), ஜெயசுதா (கனடா), தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மாமனாரும், பராசக்தி, காலஞ்சென்ற பசுபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், லெனின், ஒல்கா, பிரியங்கா, ராகுல், பானுஜன் ஆகியேரின் அன்புப் பேரனும், நாகரத்தினம், வில்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாலகுமரன், பாலரஞ்சன், பாலமுரளிதரன், பாலமுகுந்தன் ஆகியோரின் அன்பு பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிமரியாதை 17.05.2009 அன்று நடைபெற்றது.

| | |
|---|---|
| பாலன் | 416 458 5099 |
| நேசன் | 905 459 8338 |
| தெய்வேந்திரம | 905 828 4028 |



### திருமதி. தர்மலிங்கம் மகேஸ்வரி

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் மகேஸ்வரி அவர்கள் 15.05.09 அன்று முள்ளிவாய்க்காலில் அகாலமரணமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் நாகமுத்து தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்புமனைவியும், சந்திரமாலா, ரவிச்சந்திரன்(மாவீரர்), சிதம்பரநாதன்(ஜேர்மனி), கௌரிமலர்(மாவீரர்), யசோதா(பிரான்ஸ்), ஜெயந்தன் (இலங்கை) ஆகியோரின் தாயாரும், அருணாசலம், பரமேஸ்வரன் (பிரான்ஸ்), புவனேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், நாகேஸ்வரி, சரஸ்வதி, ஜெயராணி ஆகியோரின் சகோதரியும், நாகலிங்கம், நவரட்ணம், தில்லைநாதன், நம்புப்பிள்ளை, நாராயணபிள்ளை, ரங்கநாதன், சிவநாதன் ஆகியோரின் மைத்துனியும், குமார், பேபி, ரஞ்சி, ஈசா, ரவி, யோகன், தேவி, துவார், வேல், ரகு, செல்வி, கண்ணா, நந்தா, ஜெகநாதன், ஜெந்தன், ரஜீதா ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

15.05.09 அன்று இறுதிமரியாதை நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| நாதன் | ஜேர்மனி | 49 162 875 6384 |
| வரன் சுதா | பிரான்ஸ் | 33 14 382 9266 |
| துவார் | லண்டன் | 44 796 016 0172 |
| வேல் | லண்டன் | 44 793 270 0381 |
| செல்வி | இலங்கை | 94 77 918 5453 |



### செல்வி சதாசிவம் சூரியகலா

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் வவுனியவைப் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சதாசிவம் சூரியகலா அவர்கள் 15.05.2009 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சதாசிவம் சின்னம்மா தம்பதிகளின் மகளும், எழிலரசி, மங்கையக்கரசி, தேவி, சுதா, சுதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ராசன், சத்தி, துசிதரன், சுரேஸ் ஆகியோரின் மைத்துனியும், யாதவன், கிரிஜா, வனஜா, லக்சிஜா, துலக்ஸனா ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிமரியாதை 17.05.2009 அன்று கொழும்பில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| சுதா சுரேஸ் | கொழும்பு | 94 77987 7370 |
| சுதன் | அவுஸ்திரேலியா | 61 45827 0496 |
| சந்திரன் | அவுஸ்திரேலியா | 61 39799 8493 |
| ராஜன் | ஜேர்மனி | 49 201562 6156 |



### அன்ரன்மரியதாஸ் றோஜினி காமலிற்றா

கிளிநொச்சி இல-71 D8 உருத்திரபுரத்தை பிறப்பிடமாகவும் வலைஞர்மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட றோஜினி காமலிற்றா அவர்கள் 30.04.2009 அன்று அகாலமரணமானார்.

அன்னார், அன்ரன்மரியதாஸ், மேரிபூமணி ஆகியோரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான சவரிமுத்து, விக்ரோறியாபிள்ளை, அந்தோனிப்பிள்ளை, மேரிதிரேசா ஆகியோரின் பேத்தியும், சுதர்சன் கமிலஸ் அவர்களின் அன்புச்சகோதரியும், பிரான்சிஸ் சந்திரா, இம்மானுவேல்(லண்டன்), எமிலியானுஸ் பிள்ளை(லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகளும், யோசபின், பெனிக்னாநவமணி, மேரிகெலன் தங்கராணி (இந்தியா), சகயயெனித்தா கொன்சலினா(ஜெயின்) அவர்களின் பெறாமகளும், அன்ரனிரசபத்திரா, அருணயோசப்(லண்டன்), ஹேமன்றாஜ் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், சத்தியயோதி, காலஞ்சென்ற சர்வநந்தன், தயாநந்தன் (கனடா), நித்தியாநந்தன் (இந்தியா), கிறிஸ்ரியான் (ஜேர்மன்), டானியல் (லண்டன்), றெஜிபார்த்தீபன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இம்மானுவேல்
லண்டன் 44 145 230 2038

எமிலியானுஸ்பிள்ளை
லண்டன் 44 755 154 7185

# Tutoring

**Grade 1- 7 : English, Math, Science & Social Studies**

**Grade 8- 11: English & Math**

## அஞ்ஜலீன் ஜீவா திசைராஜா

**B.A (Hons),M.Sc,Ph.D**

# (647) 291 1357

**(Kennedy & Ellesmere** அருகாமையில்**)**




காலம் சஞ்சிகையின் ஆதரவில்
சுடர் ஏந்திய தொடர் ஓட்டம்

# மகாகவியின் ஆறுகாவியங்கள்

## நூல் வெளியீடு

## யூன் 6

சனிக்கிழமை மாலை3.00

சிறப்புப் பேச்சாளர்கள்
பேராசிரியர் எம்.ஏ. நுகு.ஃமான்
பேராசிரியர் சித்திரலேகா,
பேராசிரியர் மௌனகுரு,

**Scarborough Civic Centre**
**McCowan & Ellesemere**
**150 Borough Drive, Toronto**

வாழும் தமிழ் புத்தகக் கண்காட்சி
காலை 10.00 முதல் மாலை 6.00 வரை நிகழும்.

தொடர்புகளுக்கு: 416-7311752



# மனிதனும் பதவியும்

- பொன் குலேந்திரன் -

சிலவருடங்களுக்கு முன் சிறீலங்கா அரசின் நிர்வாக சேவையில் ஒரு உயர் பதவியிலிருந்தவரை அண்மையில் நான் சந்தித்தேன். பதவியில் இருந்த காலத்தில் அவரைச் சந்திக்க வேண்டும் எனறால் பல மணி நேரம் அவரின் அலுவலகத்தில் காத்திருக்க வேண்டும். மணி அடித்தவுடன் ஓடி வந்து “என்ன சேர் வேண்டும்” என்று கேட்கும் பியூன். பைல்களை ஒரு மேசையிலிருந்து இன்னொரு மேசைக்கு எடுத்துச் செல்ல இன்னொரு பியோன். வேலை முடிந்து வீடு திரும்பும்போது அவரின் பைல்கள் அடங்கிய பையை எடுத்துச்சென்று காருக்குள்வைக்க ஒரு பியூன். அவர் வாயால் சொல்லும் கடிதங்கள், அறிக்கைகள் ஆகியவற்றை டைப்செய்துவர ஒரு பெண்மணி. அவர் யார்யாரை எந்த நேரம் சந்திக்க வேண்டும், எந்த கூட்டத்துக்கு போகவேண்டும் போன்றவற்றை குறிப்பெடுத்து அவருக்கு நினைவுபடுத்த அவருக்கென அந்தரங்க செயலாளர். இப்படியாக பலர் மதிக்கும் உயர்ந்த அந்தஸ்துள்ள வாழ்க்கை வாழ்ந்தார். அவர் அந்த பதவிக்கு வந்ததே அரசியல்வாதிகளின் தயவால்தான். அரசு மாறியவுடன் வற்புறுத்தி ஓய்வு பெறவைக்கப்பட்டார். பதவியால் வந்த அந்தஸ்து இருந்த இடம் தெரியாமல் பறந்தது. கனடாவுக்கு மகனின் உதவியால் புலம் பெயர்ந்த அவருக்கு, அவரின் கீழ் அரச ஊழியராக வேலைபார்த்த ஒரு இளைஞனின் உதவியால் தொழிற்சாலை ஒன்றில் வேலை கிடைத்தது. சில மாதங்கள் வேலை செய்த அவருக்கு அந்த வேலை பிடிக்கவில்லை. தான் இருந்த தராதரத்துக்கு உகந்த வேலை அல்ல என நினைத்தார். “ஏன் ஐயா இப்போ வேலைக்குப் போவதில்லையா?” என கேட்டேன்.

“ஊரிலை எனக்கு கீழே வேலை செய்த ஆட்களுக்கு கீழே நான் இங்கை எப்படி வேலை செய்ய முடியும் சொல்லும் பார்ப்போம். ஏதோ கொஞ்சம் கொம்பியூட்டர் தெரியும் என்றதிற்காக அவனுக்கு சுப்பவைசர் பதவி. நான் அவனுக்கு கீழை வேலை செய்ய என்ன மடையனா?” என்றார் தன் சுய கௌரவத்தை விட்டுக்கொடாமல்.

“ஏன் ஐயா நீங்களும் கொம்பியூட்டர் படித்து அவரைப்போல் சுப்பவைசராக வரவேண்டியது தானே”

“இந்த வயதில் யார் உதையெல்லாம் படிக்கிறது. ஊரிலை அந்த பெரியபதவிக்கு கொம்பியூட்டர் படித்தே வந்தனான். இங்கை வந்தவுடன் அங்கை என்னைப்பார்த்து சேர் போட்டவன் இப்ப என்னடா வென்றால் என்னை மதிக்கிறான் இல்லை. என் பெயரை சுருக்கமாக சொல்லுகிறான்.”

அவரின் பழைய பதவிப்பற்று இன்னும் அவரைவிட்டுப் போகவில்ல. அவர் ஊரில் வைத்திருந்த அந்தஸ்தின் பெருமை இன்னும் அவரில் ஒட்டிக் கொண்டிருக்கிறதை அவதானிக்க முடிந்தது. அவர் அடித்து வைத்திருந்த பிஸ்னஸ் கார்ட்டில் கூட பெயருடன் சேர்த்து BA (Hons) – Retired SLAS எனச் சில வார்த்தைகளை சேர்த்திருந்தார். பாவம் அவருக்கு மட்டும் பச்சோந்தி போல் அரசியலில் நடத்தத் தெரிந்திருந்தால் அவர் இளப்பாற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அதுவுமன்றி கனடா வந்து தொழிற்சாலையொன்றில் வேலை செய்து மனம் வருந்த வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்காது. அவரைப் போல் ஊரில் உயர்பதவியில் இருந்த பலர் புலம் பெயர்ந்த பின்னரும் தமது பழைய பதவிகளைப்பற்றி அடிக்கடி தம்பட்டம் அடித்து பெருமை பாடுவோர்களும் உண்டு.

## பதவியும் அதிகாரமும்

ஒருவனுக்கு பதவி வந்தவுடன் அதிகாரம் அதோடு கூடவே வருகிறது. அதிகாரம் கூடினால் அகங்காரம் கூடும். இவையெல்லாம் அவனின் நடத்தையை முற்றாக மாற்றும். தான் இருந்த பழைய நிலையை சற்றும் சிந்தித்துப் பார்ப்பது கிடையாது.

> “
> **பதவி**
> **மனிதனுக்கு ஒரு**
> **கடமையைச் செய்ய**
> **உதவும்**
> **ஒரு ஸ்தானம்.**
> **கடமையைச் செய்து**
> **முடிந்த பின்னர் அந்த**
> **பதவியைப் பற்றி**
> **பெருமையாக நாமே**
> **பேசுவது அழகல்ல.**
> **பிறர் அதை அறிந்து**
> **பாராட்டுவது**
> **வரவேற்கத்தக்கது.**
> ”

பதவி, அந்தஸ்தை கொடுக்கிறது. பதவி உயர்வால் சம்பளம் கூடினாலும் அதிகாரத்தால் கிடைக்கும் “கிம்பளம்” எனப்படும் ஊழல் பணம் தான் மிக அதிகம். அது தானாகவே தேடி வரும்போது “எனக்கு, நான் வகிக்கும் பதவிக்கு அரசு சம்பளம் தருகிறது உங்கள் கிம்பளம் வேண்டாம்” என்று பதவி வகிப்பவர் சொன்னால், “அப்படிச் சொல்லவேண்டாம். ஒவ்வொரு ஒப்பந்தத்திலேயும் அதன் விலையின் சிறுவிகிதம் கையெழுத்து வைப்பவருக்கு கொடுப்பது சம்பிரதாயம் என்பார்கள் அதனால் பயன் பெற்றவர்கள். பதவி கிடைத்தவுடன் தோற்றத்தில் மாற்றம் ஏற்படுகிறது. நேர்மை கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடுகிறது. தாம் ஒரு காலத்தில் இருந்தோம் என்பதை மறந்துவிடுகிறார்கள். துப்பாக்கி ஏந்தி இயக்கத்தில் இருந்தவர்கள் பதவிக்காக குத்துக்கரணம் அடித்த கதைகள் பல. திடீரென அறிஞர்களாக மாறிவிடுகிறார்கள். பதவி, பணத்தைவிட கவர்ச்சியானது என்பதை இலங்கை அரசியலில் நாம் கண்டுள்ளோம். பதவிக்காக இனத்துக்கு துரோகம் செய்ய தயங்கமாட்டார்கள். பதவி மனிதனின் குணத்தையே மாற்றி விடுகிறது.

## சமயமும் பதவியும்

நான்கு தசாப்தங்களுக்கு முன் சிறீலங்காவில் கத்தோலிக்கச் செயல்பாடு (Catholic action) என்ற சொல் சிறீலங்காவில் பாவிக்கப்பட்டது. உயர் பதவியிலிருந்த கத்தோலிக்க மதத்தை சேர்ந்தவர்கள், தமக்கு கீழ் வேலை செய்வோருக்கு பதவி உயர்வுகளைக் கொடுக்கும்போது கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு தனிச்சலுகைகாட்டி வந்ததாக குற்றம் சாட்டப்பட்டனர். இந்த மத வேறுபாடு பின்னர் மறைந்து பௌத்தமதச் செயற்பாடாக மாறியது. இது போன்றே இந்தியாவிலும் உயர்பதவியில் இருக்கும் பிராமணர்கள் தம் இனத்தவருக்கு சலுகை காட்டுவதாக பலர் குறைபட்டுள்ளனர். பல்கலைக் கழகத்தில் உள்ள பிராமண பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும்கூட தம் இன மாணவர்களுக்கு சலுகைகாட்டுவதை மற்றைய மாணவர்கள் குறைப்பட்டுள்ளார்கள். சில பதவிகள் மத, இன ரீதியில் கொடுக்கப் படுகிறது என்பதையும் மறுக்க முடியாது. மேற்கத்திய நாடுகளில் கூட இது கடைப்பிடிக்கப் படுவதை நாம் அவதானிக்க முடியும்.

## பதவி தரும் சலுகைகள்

நல்ல பதவியிலிருக்கும் போது மகளுக்கு திருமணம் செய்து முடிக்க விரும்புவர்கள் பலர். அதுவும் கலியாணப் பத்திரிகையில் பெருமைக்காக தமது பதவியின் பெயரை கொட்டை எழுத்துகளில் போட தவறமாட்டார்கள். இதற்கு சில காரணங்கள் உண்டு. “இது பெரிய இடத்துக் கலியாணம் என்று” பலர் பேச விரும்புவது ஒன்று. பதவியில் இருப்பவரிடம் சலுகைகள் பெறுவதற்காக கலியாணத்துக்கு தவறாது வந்து விலை- உயர்ந்த பரிசுகளைத் தருவார்கள் என நினைப்பதுமுண்டு. சில சமயம் அப்பதவியில் இருப்பவர்டகளிடம் உதவிபெறுவர்கள் கல்யாணத்துக்கு தேவையயான அரிசி, பொருட்கள், போக்குவரத்து தேவைக்கான வாகனம் ஆகியவற்றை இனாமாகவும் கொடுப்பதுமுண்டு. இதில் பதவி ஒரு மனிதனின் சுயநலச் செயலுக்கு துணைபோகிறது.

## அரசியலும் பதவியும்.

சிறீலங்கா, இந்தியா போன்ற ஆசிய நாடுகளில் அரசாங்கத் திணைக்களங்களில் உயர் பதவிகளில் இருப்பவர் பல வழிகளில் அப் பதவியைப் பெறுவார்கள். அரசியல்வாதிகளின் தயவு இருந்தால், தங்களிலும் விட அனுபவமும் சேவையும் கல்வி தராதரமும் கூடியவர்களையும் தாண்டி பெரிய பதவிக்கு வருவது சகஜம்.

ஒரு அரசியல்வாதி தான் தேர்தலில் நிற்கும் தொகுதியில் வெற்றி பெறவேண்டும் எனபதற்காக சிலருக்கு வேலைவாய்ப்புகள் செய்து கொடுத்திருக்கிறாகள். எம்.பி.யின் துண்டு (Chit) என்ற சிபார்சுக் கடிதம் நல்ல வேலை கிடைப்பதறகு முக்கியம். இதே போன்ற வழக்கம் அமெரிக்காவிலும் நடைமுறையிலிருக்கிறது. அமைச்சின் நிரந்தரச் செயலாளார் பதவிக்குக்கூட தனக்கு விரும்பிய ஒருவரையே நிர்வாகசேவையில் நியமிப்பது வழக்கம். மரபு வழியாக அரசாங்க அதிபர், திணைக்களத்துக்கு அதிகாரி, நிரந்தரச் செயலாளர் போன்ற பதவிகள் நிர்வாக சேவையில் உள்ளவர்களையே நியமிப்பது வழக்கம். ஆனால் இந்த முறையில் இருந்து விலகி வழக்கறிஞராகயிருந்து நீதவானாக நியமிக்கப்பட்ட ஒருவர் அரசியல் காரணத்துக்காக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டதையும் அதன் முடிவையும் பலர் அறிந்ததே.

## பதவியும் அதிகாரத் துர்ப்பிரயோகமும்.

பதவியினால் கிடைக்கும் அதிகாரத்தை பாவித்து சக ஊழியர்களை பயமுறுத்தியோ அல்லது அல்லது கடினவாாத்தைகளால் பேசியோ வேலை வாங்குவதை பலரிடம் காணலாம். பெண் ஊழியர்களுக்கு தொல்லை கொடுத்து மிரட்டி தம் இச்சைக்கு இணங்க வைப்பது உயர்பதவியில் உள்ளோர் கடைப்பிடிக்கும் ஒரு முறையாகும். இதனை மேற்கு தேசங்களில் அனேகமாக காணலாம். சில நாடுகளில் இது சட்டப்படி குற்றமாகும். “மகளிர் மட்டும்” என்ற சினிமாப்படம் இதை அடிப்படையாகக் கொண்டு ஆங்கிலப்படம் ஒன்றை தழுவி எடுத்த படம். ஒரு அலுவலகத்தில் வேலை பார்க்கும் சில ஊழியர்கள் உயர் பதவியிலிருப்பவருக்கு ஒற்று வேலை செய்யும் ஆதரவாளர்களாக இருப்பார்கள். இதனால் மற்றைய ஊழியர்கள் தாம் செய்யும் வேலைகளை திறம்படி செய்யமுடியாது சிரமப்படுவர்.


பதவி மது போன்றது. ஒருமுறை சுவைத்தால் அதன் போதைக்கு அடிமையாகாமல் இருக்கமுடியாது. உயர் பதவி கிடைத்ததும் தாம் வந்த வழியை மறந்துவிடுவார்கள். தாம் சொல்லும் வார்த்தைக்கு மறு வார்த்தை கிடையாது என்பது அவர்கள் எதிர்பார்ப்பு. இறைவனுக்கு கொடுக்கும் மரியாதை போன்று தமக்குக் கீழ் வேலை செய்வோர் தமக்கு கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

உயர்பதவியில் இருப்போரில் வெகு சிலரே எளிமையான, அகங்காரமற்ற, மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் பதவியிலிருந்து இளைப்பாறினாலும் அவர்களைப்பற்றி பெருமையாக பலர் பேசுவதுண்டு. இவர்கள் பெரும்பாலும் அரசியலை விட்டு தூர விலகி நிற்பவர்கள். இலஞ்சம், சலுகை, வேறுபாடு போன்ற வார்த்தைகளுக்கு அவர்களின் அகராதியில் இடமில்லை. இது போன்றவர்களை விரல் விட்டு எண்ணலாம்.

பதவி மனிதனுக்கு ஒரு கடமையைச் செய்ய உதவும் ஒரு ஸ்தானம். கடமையைச் செய்து முடிந்தபின்னர் அந்த பதவியைப் பற்றி பெருமையாக நாமே பேசுவது அழகல்ல. பிறர் அதை அறிந்து பாராட்டுவது வரவேற்கத்தக்கது.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■

TRAFFIC TICKETS!
● SPEEDING
● RED LIGHT
● CARELESS
● STOP SIGN
● ACCIDENT
● TICKETS
TRAFFIC TICKETS $100 மட்டுமே

CALL
PETER JOSEPH
பீற்றர் ஜோசப்
416.757.7707
416.757.7797
2425 Eglinton Ave, E., Unit 1A
(Kennedy & Eglinton)

# கடந்த மாதத்தில்...



நிமிர்வோம் - இலங்கை அரசின் இன அழிப்பில் அகப்பட்டோருக்கு மெழுகுவர்த்தி ஏந்தி வணக்கம் செலுத்தும் நிகழ்வு (22.05.09)



றொரன்ரோவில் நடைபெற்ற கவனயீர்ப்பு மற்றும் வீதி மறியல் நிகழ்வில் (15.05.09)

படங்கள்: www.ninaivukal.com



இலங்கையில் இடம்பெறும் தமிழினப்படுகொலையை நிறுத்தவும், உடனடிப் போர்நிறுத்தம் மேற்கொள்ளவும் 'அடங்காப்பற்று' மாபெரும் மனிதச்சங்கிலிப் பேரணி (13.05.09)



கனடிய தமிழர் பேரவை நடாத்திய "இணையும்" கரங்கள் தகவல் பட்டறை (31.05.09)



நிமிர்வோம் - இலங்கை அரசின் இன அழிப்பில் அகப்பட்டோருக்கு வணக்கம் செலுத்தும் நிகழ்வில்



நிமிர்வோம் - இலங்கை அரசின் இன அழிப்பில் அகப்பட்டோருக்கு வணக்கம் செலுத்தும் நிகழ்வில்




றொரன்ரோவில் நடைபெற்ற கவனயீர்ப்பு நிகழ்வில் (11.05.09)



றொரன்ரோவில் நடைபெற்ற கவனயீர்ப்பு உண்ணாவிரதப் நிகழ்வில் (08.05.09)

# விடுமுறையில் போகின்றவர்கள் கவனிக்க வேண்டிய விடயங்கள்

- நடராஜ் -

“கொஞ்சம் நில்லுங்கப்பா!”

விடுமுறையில் போகப்போகின்றோம் என்று நினைத்தவுடனேயே புதிய உற்சாகம் தொற்றிக் கொள்ளும். வேலைக் களைப்பு, கடன் தொல்லை, குடும்ப நிலைமை எல்லாமே மறந்து விடும். களிப்பான விடயம் அல்லவா? (விடுமுறையில் பிரிம்லி பீச்சுக்கு போவதைப்பற்றி நான் சத்தியமாய்ச் சொல்லவில்லை)

ஆனால் விடுமுறை முடித்து வீட்டுக்குத் திரும்புகின்ற போது பல சிக்கல்களை எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

ஒருத்தருடைய வீட்டுப் பைப்லைன் உடைந்து எக்கச்சக்கமான நட்டம். வெப்பநிலை பூச்சியத்துக்கு கீழ் இருபது பாகைக்கும் குறைந்த நாள் ஒன்றில் இது நடந்து முடிந்திருந்தது. அந்த நேரம் யாழ்ப்பாணத்து வெய்யிலில் நண்பர் “வெய்யில் குளியல்” போட்டுக் கொண்டிருந்தார்.

இன்னொருத்தர் வீட்டு தபால் பெட்டி நிரம்பி வழிந்து, பின்னர் காற்றில் பறந்து தெருத் தெருவாகக் கிடந்தது.

மற்றொருத்தர் வீட்டு வாசலில் ஒரு பத்திரிகைக் கடையே கிடந்தது. முப்பது நாள் பேப்பர் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. வழமையாக அரைக் கிலோ மீற்றருக்கு அப்பால் இருந்து பேப்பரை எறிகின்றவன் இப்படி அழகா அடுக்கிவைப்பான் என்று நம்பமுடியாது.


யார் அடுக்கி வைத்தது என்பதற்கு விடை சில நிமிடங்களில் கிடைத்தது. மலையாக கிடந்த பேப்பரைக் கண்டதும் அந்த வீட்டுக் காரர், நீண்டநாள் வெளியில் போய்விட்டனர் என்பது பாக்தாத் திருடர்களுக்கு தெரிந்து விட்டது. சாரி, ஸ்காபரோ திருடர்களுக்குத் தெரிந்து விட்டடது. குப்பையாக கிடந்த பேப்பர்களை அடுக்கிவைக்கின்ற சாட்டில் வீட்டுக்கு வந்து திருடர்கள் தங்கள் கை வரிசையையும் காட்டிவிட்டுப் போய்விட்டார்கள்.

எனவே விடுமுறையில் போகின்றவர்கள் போவதற்கு முன்பாக பல விடயங்களைக் கவனிக்க வேண்டும்.

- உங்கள் வீட்டுக்கு முன்புறம் போடப்படும் பத்திரிகைகள் மற்றும் தபால் பெட்டியில் போடப்படும் கடிதங்களை, நம்பிக்கைக்குரிய உறவினர் அல்லது நண்பர் மூலமாக இரண்டு தினங்களுக்கு ஒரு தடவையாவது எடுத்து வைப்பதற்கு ஒழுங்கு செய்து விடுங்கள். காசு கொடுத்து வாங்கும் பத்திரிகை தற்காலிகமாக நிறுத்தினாலும், கடிதத்துடன் வரும் குப்பைகளும், இலவசமாக உங்கள் வீட்டுக்கு கொண்டுவந்து போடப்படும் விளம்பரப் பொதிகள், பேப்பர்கள் என்பன உங்கள் வீட்டில் குவிந்து காட்டிக் கொடுத்து விடும்
- வீட்டில் உள்ள எல்லா கதவுகளும், யன்னல்களும் நன்றாக தாளிடப்பட்டுள்ளனவா? என்பதை ஒரு தடவைக்கு இரண்டுதடவையாக சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் வீட்டுத்திறப்பை ஒரு போதும் வீட்டுக்கு வெளியால் மறைத்து வைத்துவிட்டுப் போகவேண்டாம்.
- எல்லா மின் சக்தி உபகரணங்களின் மின் இணைப்புகளையும் (தொலைக்காட்சிப் பெட்டி, மின்கணினி, அடுப்பு….) துண்டித்து விடுங்கள்.







- குளிர்சாதனப் பெட்டியில் இருந்து நீங்கள் வருவதற்குள் பழுதாகிவிடக் கூடிய எல்லா பொருட்களையும் முன் கூட்டியே எறிந்து விடுங்கள்.
- வீட்டுக்குள் உள்ள சில மின் விளக்குகள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒளிர்ந்து பின் மடியுமாறு Timer மூலம் Set பண்ணவும்.
- கோடை காலத்தில் உங்கள் வீட்டுப் புல்லுக்கு தண்ணீர் விட ஒழுங்கு செய்யவும். தண்ணீர் பாச்சுவதை Timer மூலமும் Set பண்ணலாம். குளிர்காலம் என்றால் உங்கள் வீட்டுக்கு முன் விழுகின்ற பனியை (Snow) வழிப்பதற்கு உரிய ஒழுங்கு செய்து விட்டுப் போகவும்.
- நம்பிக்கையான Neighbor இடம், நீங்கள் வீட்டில் இல்லை என்பதையும், எப்போது வருவீர்கள் என்பதையும், அதுவரை உங்கள் வீட்டின் மீது ஒரு கண்வைத்திருக்குமாறும் சொல்லிவைப்பது எப்போதும் சிறந்தது. அவசரத்து உங்களுடன் தொடர்பு கொள்ள அவரிடம் உங்கள் விடுமுறை இடத்து தொலைபேசி இலக்கம், விலாசம், அல்லது மின்னஞ்சல் விலாசத்தையும் கொடுப்பது நல்லது.
- உங்கள் வீட்டுக்கு alarm வசதி உண்டு என்றால், உங்கள் alarm companyக்கு நீங்கள் விடுமுறையில் செல்வதையும், எப்போது திரும்பிவருவீர்கள் என்பதையும் அறிவித்து விட்டுச் செல்லுங்கள்.
- அதேபோல உங்கள் ஏரியா பொலீசிடமும், நீங்கள் இல்லை என்ற விடயத்தை கூறி விடுங்கள். அவர்களும் உங்கள் வீட்டில் ஒரு கண்வைத்திருப்பார்கள்.
- பணம், நகை, முக்கிய பத்திரங்கள், மற்றும் பெறுமதியான பொருட்களை வீட்டினுள் வைக்காதீர்கள். தற்காலிகமாக ஆயினும், வங்கியில் வைத்து விட்டுப் போங்கள். வங்கியில் வைக்க முடியாத பெரிய பொருளானால் அதை நம்பிக்கையான உறவினர் அல்லது நண்பர் வீட்டில் வைக்கவும்.
- உங்கள் வீட்டில் நாய், பூனை, மீன் என்று செல்லப்பிராணிகள் இருந்தால் அவற்றை உரிய முறையில் பராமரிக்க உரிய ஒழுங்கு செய்ய வேண்டும். தினமும் அவற்றைக் கவனிக்க நம்பிக்கையான ஆட்களை ஒழுங்கு செய்ய வேண்டும். அல்லது செல்லப்பிராணிகளின் பராமரிப்பிடங்களில் தற்கலிகமாக விட்டுவிட்டு திரும்பவந்து பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் வீட்டின் வெப்பநிலை குறைந்த பட்சம் 17 பாகையில் செல்சியஸ்சில் இருக்குமாறு Set பண்ணி விட்டுச் செல்ல வேண்டும்.

இவற்றை நீங்கள் சரியான முறையில் செய்வீர்களேயானால் விடுமுறை முடிந்து வீடு வந்ததும் உங்களுக்கு மேலதிக தலையிடிகள் இருக்காது.

■ ■ ■

Dr. முருகர் குணசிங்கம் எழுதிய

“இலங்கையில் தமிழர் ஓர் முழுமையான வரலாறு”

தமிழிலும் ஆங்கிலத்திலும்

தொடர்புகளுக்கு

வேலா: 416 299 0700



வீடு வாங்க விற்க

உங்கள் வருமானத்திற்கேற்ப எவ்வகையான வீடு வாங்குவதென அறிந்து
கொள்ள முதல் முறை வீடு வாங்குபவர்களின் சலுகைகள் பற்றி
அறிந்துகொள்ள இன்றே எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்

Prudential Properties Plus Brokerage

Bus: 416.962.8113

Fax: 416.962.4615, Res: 416 964 5955

552 Parliament Street, Toronto, ON, M4x 1P6



Alfred Soosaipillai

Broker

# செலவு இல்லாத, செலவு குறைவான ஈரப்பதத்தை கட்டுப்படுத்தும் வழிகள்

பூஞ்சைக் காளான் வளர்வதை தடுப்பதற்கு மிகவும் சுலபமான மற்றும் எளிதான வழி எதுவெனில். உங்கள் வீட்டில் ஈரப்பதம் அதிகமான அளவில் ஏற்படுவதை தடுப்பதுதான். செலவு இல்லாத மற்றும் செலவு குறைவான பலவழிகள் இதற்கு உள்ளன.

- உங்கள் வீட்டில் நடந்து செல்லும் பகுதி அழுக்குதரையுடன் இருந்தால், அழுக்கு தரையின் மீது 6 mil polyethylene தரைவிரிப்பை விரியுங்கள்.
- உங்கள் வீட்டின் கூரையிலிருந்து செல்லும் தண்ணீர் அதன் கீழ் உள்ள குழாய்களின் மூலம் கீழே வந்து, அஸ்திவாரத்தை விட்டு தொலைவில் உள்ள இடத்திற்கு செல்ல விடவேண்டும்.
- உங்கள் வீட்டை சுற்றியுள்ள தரை வீட்டை விட்டு விலகி வேறானதிசை நோக்கி சாய்ந்திருக்க வேண்டும்.
- நீங்கள் குளிக்கும் போது, குளியலறை விசிறியை ஓடவிடுங்கள். குளித்து முடித்த பின்பும் அது ஒரு 15 நிமிடங்கள் அல்லது அதற்கும் மேல் ஓடவிடுங்கள்.
- குளியலறை மற்றும் சமையலறை விசிறிகளின் வெளியேற்று வழிகள் வெளிப்புறத்தில் இருக்கவேண்டும்.
- சமையல் செய்யும் போது, ஈரத்தையும் மற்றும் நாற்றங்களையும் வெளியேற்றுவதற்கு சமையலறை விசிறியை பயன் படுத்துங்கள்.
- வழக்கமாக அடித்தளம் மற்றும் நடந்து செல்லும் பகுதி போன்ற இடங்களில் சார்பு ஈரப்பதம் அதிகமாக இருக்கும். உங்கள் வீட்டின் அடித்தளத்தில் இளவேனில் காலம் முதல் இலையுதிர்காலம் வரை, அடித்தளத்தின் ஜன்னல்களை மூடிவைத்துக் கொண்டு. ஒரு ஈரப்பதத்தை அகற்றும் கருவியை ஓடவிடுங்கள் (dehumidifier).
- ஏர்கண்டிஷனர் கருவி உங்களிடம் இருந்தாலும் ஒரு ஈரப்பதத்தை அகற்றும் கருவியை ஓடவிடுங்கள் ஏர்கண்டிஷனர் இயங்கும் போது தான் ஈரப்பதத்தை அகற்றும்.
- தேவையில்லை என்றால் ஈரப்பதத்தை உண்டு பண்ணாதீர்கள் முதலில் ஒரு ஹைக்ரோ மீட்டர் கொண்டு சார்பு ஈரப்பதத்தை அளவிடுங்கள். குளிர்காலத்தில் சார்பு ஈரப்பதம் 25 முதல் 35 சதவிகிதம் வரை இருந்தால் ஏற்றுக்கொள்ள கூடியது தான்.
- இரவு நேரத்தில் உங்களுக்கு ஈரப்பதம் வேண்டுமானால், உங்களுடைய படுக்கை அறையில் கையில் தூக்கிச் செல்லும் ஒரு ஈரப்பதம் அளிக்கும் கருவியை பயன்படுத்துங்கள். சார்பு ஈரப்பதத்தை கண்காணியுங்கள். அதற்தேற்ப கருவுயை சரிப்படுத்துங்கள். பகல் நேரத்தில் அறை உலர்ந்து இருப்பதற்கு காற்றை வெளியேற்றுங்கள். ஒவ்வொரு முறை பயன்படுத்திய பிறகும் ஈரப்பதம் அளிக்கும் கருவியை சுத்தம் செய்யுங்கள்.
- நீங்கள் வேண்டாம் என்று ஒதுக்கிய பொருள்களையம், மேஜை மற்றும் நாற்காலி போன்றவைகளையும் உங்கள் 'பேஸ்மன்றில்' போடாதீர்கள். காகிதம், கார்டுபோர்டு மற்றும் துணிகள் போன்றவைகள் ஈரத்தை நன்கு உறிஞ்ச கூடியவை. அவைகளின் மீது பூஞ்சைக் காளான் வளரும். இந்த மாதிரியான பொருள்களை உங்கள் வீட்டின் அடித்தளத்தில் போடுவதைத் தவிருங்கள். மேலும் தரைகள் மற்றும் சுவர்களிலிருந்தும் அவற்றை அகற்றிவிடுங்கள்.
- வீட்டின் அடித்தளம் அல்லது குளியலறை போன்ற இடங்களில் போடப்பட்டுள்ள தரை விரிப்புக்களில் பூஞ்சைக் காளான் அதிகமாக வளரும். இந்த இடங்களில் தரை விரிப்புகளை போடாது தவிர்ப்பது நல்லது.
- வீட்டின் அடித்தளத்தில் ஆடைகளை உலர வைப்பதற்கு தொங்கவிடாதீர்கள். ஆடைகளை உலரவைக்கும் சாதனத்தை பயன் படுத்துங்கள். மேலும் அதன் வெளியேற்று வழி வெளிப்புறத்தில் இருக்க வேண்டும்.
- வீட்டின் உள்ளே விறகுகளை வைக்காதீர்கள்.
- வீட்டின் சில பகுதிகளை உஷ்ணப்படுத்தாமல் விட்டு விடாதீர்கள். வீட்டில் குளிர்ச்சியான, உஷ்ணப்படுத்தப் படாத அல்லது ஈரமான இடங்கள் இருந்தால், பூஞ்சைக் காளான் வளர்ந்துவிடும்.
- தண்ணீர் கசிவு அல்லது வெள்ளம் ஏற்பட்டால் உடனே விரைந்து நடவடிக்கை எடுங்கள்.
- மிகச் சிறிய அளவில் பூஞ்சைக் காளான் உள்ள பகுதிகளை நீங்களே சுத்தம்செய்ய முடியும். மிக அதிக அளவில் பூஞ்சைக் காளான் வளர்ந்திருந்தால் தொழில் வல்லுனரின் உதவியை நாடுங்கள்.

அழுக்கு தரைகள், நடந்து செல்லும் இடங்கள் மற்றும் நிலவறைகள் போன்ற இடங்களை சுத்தம் செய்வதற்கான மேலும் கூடுதல் விபரங்களுக்கு இத் துறைசார் வல்லுனர்களுடன் கலந்தாலோசியுங்கள்.


■ ■ ■


கோடை

இணைய இலக்கிய இதழ்

www.kodaai.com

Arajen Dress Making



சாறி, பிளவுஸ், சட்டை, சுடிதார், ஸ்கேட் மற்றும் உடை வகைகள் உங்கள் மனதுக்குப் பிடித்த வண்ணத்தில் தைத்துக்கொடுக்கப்படும்

திருத்தவேலைகள்

சிறிய திருத்த வேலைகளைச் செய்து கொள்ள அழையுங்கள்

பயிற்சி வகுப்புக்கள்

2நாள் பயிற்சி வகுப்பில் சாறி, பிளவுஸ் தைக்கலாம்

அரஜன் அழகு நிலையம்

2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2

(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)

Tel: 416.509.7978

Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca

www.arajenbeauty.ca

ARAJEN CAKE HOUSE

Wilton Cake decorating classes



Wilton Cake decorating classes
Basic/Advance courses
Gun paste flowers
Candy Making
Cookie blossoms
Ginger bread houses
And More...

Wedding Cake
Engagement Cake
Birthday Cake
Rich Cake
Cheese Cake
Marble Cake
Eggless Cake and More...

by a Wilton Certified instructor

கேக் அலங்காரப் பொருட்கள் அனைத்தையும் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் அனைத்து கேக் தேவைகளுக்கும் அழையுங்கள்

Sasi Naren

Diploma in Cake Making

Twenty years experience in cake making

Tel: 416-509-7978

2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2, (இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)



# Opportunity
## is knocking on your door...

- First commercial development serving the Morningside Heights Community
- Very limited amount of units available only 21,000 square feet
- The buildings are designed for owner/endusers

## Restaurant/Retail units for sale from $168,750

### Open Invitation

*Date:* **Sunday, June 14, 2009**

*Time:* **11:00 a.m. – 3:00 p.m.**

*Venue:* **Tapps Restaurant Bar & Grill**
5630 Finch Avenue E, Scarborough,
Ontario, M1B 1T1 *(Finch & Tappscott)*



*So hurry, call our knowledgeable agents today to get all the details about this exciting opportunity. There is only a very limited amount of units available. Once they are gone, the doors to this opportunity will also be closed for good!*

THE SHOPPES®
MORNINGSIDE HEIGHTS

DEVELOPER
THE PARALLAX GROUP

*Call Now for Details:*
**416 321 6969**


உங்கள் வீட்டு நீரை சூரிய ஒளியில் வெப்பமாக்குங்கள்... உங்கள் பணத்தை மிச்சமாக்குங்கள்...
இதோ உங்களுக்காக
Solar Domestic Hot Water System
BSI
BRIGHT SOLAR INC.
FINANCE PLANS
TD
Prime Plus 2.75% (Over $10,000)
(Prime 2.5% effective Mar 2009)
Prime Plus 3.25% (Over $5,000)
(Prime 2.5% effective Mar 2009)
NO PAYMENT FOR 6 MONTHS !
உங்களுக்கான எமது விஷேட சலுகைகள்
$ 2500 தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் விலைக்கழிவுகள்
$ 150 வீட்டு மின் உபயோக கணிப்புப் பரிசோதனை கழிவுகள்
HRTC வரியிலிருந்து $ 1350.00 வரையிலான மீள் பெறும் உரிமை
இன்னும் பல...
உங்களது சேமிப்புகள் பாரியளவில் வளர்ச்சி பெற சரியான முதலீடு
நாம் உங்களது வீட்டுமின் உபயோக கணிப்புப் பரிசோதனைக்கு
50% செலுத்துவோம்
* condition apply
எமது பிரதான உற்பத்திகள்
சூரியசக்தி மூலம் வீட்டு நீரை வெப்பமாக்கும் முறை (Domestic)
சூரியசக்தி மூலம் வாயு வெப்பமாக்கும் முறை
Photovoltaic மின்சாரம்
காற்றலைகள்
புவி சார்ந்த வெப்பவியல் (Geothermal) மற்றும் உதிரிப்பாகங்கள்
CSA# 232467
BRIGHT SOLAR INC.
வந்து பாருங்கள், உங்களால் எவ்வளவு சேமிக்க முடியுமென்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்...
5215, GTA Square, Finch Avenue East, Suite 257, Toronto,Ontario, Canada M1S OC2
Tel: 416 754 8327
www.brightsolarinc.com
இயற்கையிலிருந்து இலவச வாழ்வாதார சக்தி

# Renewable Energy - Ecoaction

# ஒளியியல் மின்சாரம்

## Photovoltaic

### ஒளியியல் மின்சாரம் (Photovoltaic) பற்றிய ஒரு கண்ணோட்டம்.

சூரிய தகடுகள் சூரியக் கதிர்களை எப்படி மின்சாரமாக மாற்றுகிறது என்பதை தெரிந்து கொள்வதற்கு இந்த தகவல் உங்களுக்கு உதவும். சூரிய மின்சார சிறு இயந்திரங்கள் (போட்டோ வோல்ட்டாய்க் அல்லது PV என்று அழைக்கப்படும்) பல்வேறு உபயோகங்களுக்காக மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.

கப்பல் மற்றும் ஆகாய விமானங்களுக்கு தேவையான விளக்குகள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் (பம்புகள்). தகவல் தொடர்பு நிலையங்களில் செய்திகளை தானாகவே அனுப்பும் கருவிகள். பெட்ரோலியம் எண்ணெய் மற்றும் வாயு SCADA அமைப்புகள். தொலைவிலுள்ள வீடுகளுக்கு மின்சாரம் வினியோகிக்கும் கம்பிச்சட்டங்கள். விடுதிகளில் மீன் பிடித்தல், வேட்டையாடுதல் மற்றும் உயிரினங்களை ஆராய்ச்சி செய்தல் போன்றவைகளுக்கு மின்சாரம் ஏற்பாடு செய்தல். மின்சார போக்குவரவு அதிகமாக உள்ள நேரங்களில் மின்சுமைகளை குறைப்பதற்கும், மின்கட்டண செலவுகளை மிச்சப்படுத்துவதற்கும், மின்வினியோக கம்பிககளில் அழுத்தத்தை குறைப்பதற்கும், மற்றும் மின் வினியோக கம்பிகளில் கூடுதல் மின்விசை கொடுப்பதற்கும், மின்சாரம் உற்பத்தி செய்தல். சூரிய சக்தியை சேகரிக்கும் கருவிகளை (இவை சூரிய வெளிச்சத்தை உஷ்ணமாக மாற்றும்) ஒப்பிடுகையில் சூரிய வெளிச்சத்தை PV தொழில் நுட்பங்கள் மின்சாரமாக மாற்றுகின்றன.

குளிர்ச்சியான வெப்பநிலைகளில் சூரிய தகடுகளின் திறன் அதிகரிக்கின்றன. அதனால் கனடாவின் காலநிலைக்கு இது மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது. பல எண்ணிக்கையிலான தொழில் நுட்பங்கள் இவற்றில் உள்ளன. சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றும் மாறுபட்ட திறன்கள் மற்றும் விலைகளில் இவை கிடைக்கின்றன.

சூரிய PV சிறு இயந்திரங்கள், சாதாரண வெறும் வாட்கள் (w) முதல் கிலோவாட் (kw) மற்றும் மெகாவாட் (mw) அளவு வரை, எந்த அளவிலான மின்சார தேவைகளை அளிப்பதற்கும் வரிசைப்படுத்தி அமைக்கப்பட்டிருக்கும் மற்றும் இணையானதாக இணைக்கப்பட்டிருக்கும். சூரிய மின்சாரத்தால் இயங்கும் ஒரு சாதாரண வீட்டு உபயோகப் பொருளுக்கு தேவையான சூரிய தகடுகளின் வரிசை அளவு, மின்கல அடுக்குகள் (பேட்டரி) மற்றும் AC மின்சார இன்வெர்ட்டர் ஆகியன பல எண்ணிக்கையிலான அம்சங்களை பொறுத்து அமையும். நீங்கள் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு, உங்கள் இடத்திலுள்ள சூரிய வெளிச்சத்தின் அளவு, தக்கசமயத்தில் உதவி இல்லாமல் உங்களுக்குத் தேவைப்படும் நாள்களின் எண்ணிக்கை, மற்றும் எந்த குறிப்பிட்ட நேரத்திலும் தேவைப்படும்

அதிக அளவு மின்சாரத் தேவை போன்ற விஷயங்களை அது சார்ந்திருக்கும். பட்டரியில் கணிசமான அளவு மின்சாரம் சேமித்து வைக்கப்பட்டிருந்தால். ஒரு சூரிய PV இயந்திரம், ஒரு வீட்டு உபயோகப் பொருள் அல்லது மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர் செட்டுக்கு தக்கசமயத்தில் தேவைப்படும் முழுமையான மின்சாரத்தை தனித்தே வழங்கும். தொழில் நுட்ப ரீதியில், உங்கள் உள்ளூர் மின்சாரம் வழங்கும் நிறுவனத்துடன், உங்கள் PV சூரிய மின்சார அமைப்பை மின்இணைப்பு செய்ய முடியும். தொழில் நுட்ப ரீதியான இடையூறுகள் எதுவும் ஏற்படாது. ஆயினும் நீங்கள் சொந்த மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நீங்கள் உங்கள் உள்ளூர் மின்சார வினியோக நிறுவனத்தின் அனுமதியை பெறவேண்டும். உங்கள் வீட்டு உபயோகத்திற்கு உள்ளூர் மின்சாரத்தையும் நீங்கள் பயன்படுத்த வேண்டும். உங்கள் வீட்டு மின்கம்பிகளில் வரும் உள்ளூர் நிறுவன மின்சாரத்தை நீங்கள் பயன்படுத்தினாலும், அதே மின்கம்பிகளில் நீங்கள் தயாரிக்கும் உங்கள் சொந்த மின்சாரத்தையும் நீங்கள் வரவழைக்க முடியும். கனடாவின் மின்சார விசைச் சட்டம் இதற்கான வசதியை அளிக்கிறது. பாதுகாப்பு நோக்கங்களுக்காக அதிக எண்ணிக்கையிலான சூரிய மின்சார உபகரணங்களை, இந்த சட்டத்தின் விதிமுறைகளை நிறைவு செய்கின்றனவா என்பதற்கு, எளிதாக சோதனை செய்து பார்க்க முடியும்.



சூரிய சிறு இயந்திரங்களை தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு திசைகளுக்கு (நேரான தெற்குதிசை என்றால் மிகவும் சிறந்தது) இடையில் அமைக்கவேண்டும். வருடம் முழுவதும் தடை ஏதுமின்றி சூரிய வெளிச்சம் சூரிய இயந்திரங்கள் மீது விழுந்து கொண்டே இருக்க வேண்டும். உங்கள் குடில் அல்லது கூடாரத்துக்கு தேவைப்படும் 100 சதவீத மின்சாரத்தை அல்லது மரபுப்படியான உங்கள் உள்ளூர் நிறுவன மின்சாரம் அல்லது ஜெனரேட்டர் உற்பத்தி செய்யும் மின்சாரத்துக்கு, பிறசேர்க்கை மின்சாரத்தை அளிப்பதற்குரிய அளவிலான சூரிய இயந்திரங்களை நிறுவ முடியும்.

இன்றைய கால கட்டத்தில் சூரிய மின்சார இயந்திரங்களை நிறுவுவதற்கான தேசிய ஊக்க ஊதியத்திட்டங்கள் எதுவும் இல்லை. உங்கள் தேவைகள் மற்றும் இடம் பற்றிய ஒரு மிகச் சரியான மதிப்பீட்டு செய்வதற்கு, ஒரு தகுதி பெற்ற சூரிய இயந்திர வடிவமைப்பாளர், உங்களுக்கு தேவையான வழிகாட்டுதலை வழங்குவார். ஒரு CanSIA அங்கத்தினரை சார்ந்திருந்து உங்களுடைய பிரத்தியேகமான சூரிய இயந்திரத்தை நிறுவுவதற்கான அனைத்தையும் செய்யுங்கள். அவர் CanSIAயின் நடத்தை நெறிமுறைகளின்படி செயல்பட்டு உங்களுக்காக அனைத்தையும் திருப்திகரமாக செய்து முடிப்பார். RETScreen என்று அழைக்கப்படும் ஒரு இலவச கணினி மென்பொருள் வழி முறைத் தொகுப்பை கனடாவின் இயற்கை வள ஆதாரங்கள் கழகம் அபிவிருத்தி செய்துள்ளது. கனடாவின் எந்த இடத்திலும் சூரிய இயந்திரங்களை அமைக்க கூடிய சாத்தியக் கூறுகளை அது ஆராயும். அது Micro Soft Excel TMல் ஓடுகிறது. RET Screenலிருந்து இன்டர்நெட்டில் கட்டணம் ஏதுமின்றி அதை பதிவிறக்கம் செய்யமுடியும்.

கனடாவிற்காக ஒளியியல் மின்அழுத்த வளஆதாரங்களின் வரைபடங்களை அபிவிருத்தி செய்தல்.

கனடா முழுவதிலும் புதிய, வலைத்தளம் அடிப்படையிலான தனித்த வரைபடங்களையும் மற்றும் ஒளியியல் மின்அழுத்த சக்தியின் சாத்தியக் கூறுகளையும் அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக நாங்கள் விவரிக்கப்போகிறோம். இந்த வரைபடங்களை கனடாவின் இயற்கை வளஆதாரங்கள் வலைதளத்தில் தேடினால் கிடைக்கும். அவைகள் ஐந்து மாறுபட்ட மேற்பரப்பு அமைப்புகள் ரீதியில் ஒவ்வொரு மாதமும் வருடம் முழுவதிலும் காட்டப்படும். சூரியனின் தடத்தை பின்பற்றிச் செல்லும் அமைப்பு, அட்சயரேகையுடன் கூடிய நான்கு நிலையான தெற்கு நோக்கி இருக்கும் அமைப்புகள் மற்றும் செங்குத்தான மற்றும் +15° சாய்வுகள் உள்ள அட்சயரேகை அமைப்பு ஆகியன அந்த அமைப்பு வகைகள் ஆகும். 1974-1993 வருடங்களின் (CERES, கனடாவின் சுற்றுச் சூழல்) மாதந்தோறும் வெளியிடப்பட்ட தினசரி பூமி சம்பந்தமான தனித்த புள்ளி விவரங்களின் அடிப்படையில் வரைபடங்களை உற்பத்தி செய்வதற்கு முன் மாதிரிகள் பயன்படுத்தப்பட்டன. மெல்லிய தகடுகளை இணையாப்புகளாக பயன்படித்தி மின்சாரம் வினியோகிக்கும் கம்பிச் சட்டம் மூலம் (grid) கனடா முழுவதும் ஒழுங்கான முறையில் புள்ளி விவர கணக்குகள் பரப்பப்பட்டன (gridன் அளவு: 300 arc வினாடிகள் 10~கி.மீ. grid). தீர்க்க ரேகை மற்றும் அட்சய ரேகை நிலைகளிலும் மற்றும் வீழ்படிவின் (மேகங்களுக்கு பிரதிநிதியாக பயன்படுத்தப்படும்) அடிப்படையில் முன் மாதிரிகள் பயன்படுத்தப்பட்டன. மின்வினியோக கம்பிச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள ஒளியியல் மின் அழுத்த அமைப்புகளின் செயல்திறன் விகித அளவை கணக்கிடுவதற்கு உலகளாவிய தரநிர்ணய அளவுகளின் படி, அனைத்து நிலையான மேற்பரப்பு அமைப்புகளுக்கு ஒளி கதிர் வீச்சு முன் மாதிரிகளிடமிருந்து ஒளியியல் மின்சாரம் உற்பத்தி திறன் கணக்கிடப்படும். மின் வினியோக கம்பிசட்டங்களின் மின்அழுத்ததிறனும் மதிப்பிடப்படும். வரை படங்களுக்கு அப்பால் முன் மாதிரிகளின் மதிப்பை செயல்முறை விளக்கம் காட்டுவதற்கு கனடா முழுவதிலும் உள்ள 3,500 நகராட்சிகளுக்கு மேல் தேவைப்படும் ஒளியியல் மின்சார உற்பத்தி திறன் சம்பந்தமான ஒரு புள்ளி விவர கணினி பதிவு முறையை நாங்கள் அபிவிருத்தி செய்துள்ளோம்.


K. கண்ணன்
- Marketing Director -
kannan.k@thaiveedu.com

■ ■ ■

KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

# இலக்கியத் தோட்டம்

# இயல் விருது விழா - 2008

கனடிய தமிழ் இலக்கியத் தோட்டம் பல உன்னதமான சேவைகளை வழங்கிவருகிறது. இவ்வமைப்பு 2001 ஆம் ஆண்டு ரொறொன்ரோவில் ஆரம்பமானது. தமிழ், ஆங்கில நூல்களை மொழிபெயர்ப்பது, அரிய தமிழ் நூல்களை மீள்பதிப்புச் செய்வது, தமிழ் பட்டறைகள் நடத்துவது, நூலகங்களுக்கு இலவசமாக தமிழ் நூல்களை அளிப்பது, மாணவர்களுக்கு தமிழ்ப் புலமைப்பரிசில் வழங்குவது, தமிழ் சேவையாளர்களுக்கு விருதுகள் வழங்குவது போன்ற இன்னோரன்ன பணிகள் இதனுள் அடங்கும்.

அந்தவகையில் 2008க்கான இயல் விருது விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (24.05.2009) மாலை 6.00 – 8.30 மணிவரை ரொறொன்ரோ பல்கலைக்கழகம், டிரினிட்டி கல்லூரி, சீலி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு இலங்கையிலிருந்து பேராசிரியர் எம்.ஏ.நு.ஃமான், இந்திய பெண்ணிய எழுத்தாளர் அம்பை, கலாநிதி முருகர் குணசிங்கம், ஜேர்மனியிலிருந்து சுரதா யாழ்வாணன், எழுத்தாளர்கள் பால மனோகரன் மற்றும் கருணாகரமூர்த்தி ஆகியோர் வருகை தந்திருந்தனர்.





சரியாக மாலை ஆறு மணிக்கு சிற்றுண்டி, குளிர்பான உபசாரத்துடன் விழா ஆரம்பமானது. திரு. கனக செல்வநாயகம் தலைமையேற்று இவ் விழாவை திறம்பட நடத்தினார். ஒரு நிமிட மௌன அஞ்சலியைத் தொடர்ந்து திரு. கனக செல்வநாயகம் வரவேற்புரையை வழங்கினார்.

“இலங்கையில் இடம்பெற்ற இடம்பெயர்வுகள், மனித அவலங்கள், பாரிய உயிரிழப்புக்களின் கவலைகளைச் சுமந்தவர்களாக நாம் அனைவரும் இருக்கிறோம். புயலுக்குப் பின் அமைதி ஏற்படுவதைப் போல இலங்கையிலும் எதிர்காலம் சுபீட்சமாக அமையும் என்று நம்புவோம்” என்று அவர் தனது உரையில் தெரிவித்தார். காலச் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சிகள் சில இரத்துச் செய்யப்பட்டு நேரடியாக விருது வழங்கும் நிகழ்வு ஆரம்பமானது.




முதலாவதாக புனைவு இலக்கியத்திற்காக பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை நினைவுப் பரிசு – “வார்ஸாவில் ஒரு கடவுள்” என்ற நாவலுக்காக எழுத்தாளர் தமிழவன் (முனைவர் கார்லொஸ் சபரிமுத்து) அவர்களுக்கு வழங்கப்பட்டது. போலந்தின் சமகால வரலாறு, அவர்கள் கம்யுனிச ஆட்சியை எதிர்கொள்ளும் முறை, இந்தியர்களின் மீது அவர்கள் வைத்துள்ள அக்கறை போன்றவை நாவலுள் விரவிக்கிடக்கின்றன. தமிழுக்கு முற்றிலும் அந்நியமான உத்தியும், சொல்முறையும் கொண்டது. ஒரு புதிய பரிமாணத்தை தமிழ் வாசகர்களுக்கு இந்நாவல் வழங்கியிருக்கிறது.

அடுத்து, திரு. தி.தி. கனக சுந்தரம்பிள்ளை மற்றும் உலக தமிழ் ஆசிரியர் நினைவாக 2008 ஆம் ஆண்டுக்கான அபுனைவுப் பரிசு கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்களுக்கு “இலங்கையில் தமிழர்” என்ற நூலுக்காக வழங்கப்பட்டது. இலங்கைத் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்கள், அரசியல், சமூக, சமய, மொழி, கலை, கலாச்சாரம் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய புலமைசார் வரலாறாக இந்நூல் விளங்குகிறது. திரு ரவீந்திரவர்மன், லலிதா ஜெயராமன் ஆகியோர் விருதினை வழங்க, கலாநிதி முருகர் குணசிங்கம் விருதினைப் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து திரு. குணசிங்கம் உரையாற்றுவதற்காக அழைக்கப்பட்டார்.

“தமிழர்கள் பற்றிய இந்த வரலாற்று நூல் காலத்தின் தேவை. என் ஐந்து வருட தொடர்ச்சியான ஆய்வின் வெளிப்பாடு இது. பல கஷ்டங்கள், வேதனைகள், சோதனைகள், இடைஞ்சல்களைத் தாங்கியபடி இதனைச் செய்து முடித்தேன். இந்த விருது எனக்குக் கிடைத்த ஒரு கௌரவம்” என்று குறிப்பிட்ட குணசிங்கம் அவர்கள் தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பாளரான எழுத்தாளர் திரு. அ. முத்துலிங்கம் அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்தார்.

2008 ஆம் ஆண்டுக்கான பேராசிரியர் ஆ.வி. மயில்வாகனம் கவிதைப் பரிசு லீனா மணிமேகலைக்கு வழங்கப்பட்டது. இவர் எழுதிய “உலகின் அழகிய முதல் பெண்” என்ற கவிதைத் தொகுப்பிற்கே மேற்படி பரிசு வழங்கப்பட்டது. பண்பு, மரபு, ஒழுக்கம் என்ற கொள்கைகளால் பெண்களை அடக்கி வைத்திருந்த நிலையில் அவற்றுக்கெதிரான சொல்லாடல்களைக் கையாண்டு தன் கவிதைகளால் அந்த வரம்புகளை கேள்விக்குள்ளாக்கினார். சற்றும் மறைவில்லாத அந்தரங்க விபரிப்புகள் மனக் கூச்சங்களுக்கு சவாலாக எழுகின்றன. இவ்வாறான இவரது கவிதைகள் தமிழுக்கு புதுவரவு.

தொடர்ந்து தமிழ் தகவல் தொழில்நுட்பத்திற்காக, 2008 ஆம் ஆண்டுக்கான சுந்தர ராமசாமி விருது சுரதா யாழ்வாணனுக்கு வழங்கப்பட்டது. தமிழ் எழுத்துருக்களை “யுனிக்கோட்” உருமாற்றி மூலம் எவரும் வாசிக்கக் கூடிய முறையை அறிமுகப்படுத்தியமைக்காக இவருக்கு இப்பரிசு வழங்கப்பட்டது.

சுரதா யாழ்வாணன் தனது உரையில், “தமிழ் கணனித்துறைக்கு ஒரு அங்கீகாரம் கொடுத்திருக்கிறது இந்த விருது வழங்கும் நிகழ்வு. சாதாரணமாக ஒரு பல்கலைக்கழகமோ, அல்லது அரசாங்கம் ஒன்றோ வழங்கியிருக்க வேண்டிய இத்தகையதொரு விருதினை வழங்கிய, தமிழ் இலக்கியத் தோட்டத்திற்கும், சுந்தர ராமசாமி அறக்கட்டளையினருக்கும் எனது நன்றிகள்” என்று குறிப்பிட்டார்.

அடுத்ததாக தமிழ் மாணவர்களுக்கு இடையேயான மிகச் சிறந்த கட்டுரையாளர் விருது வழங்கப்பட்டது. இவ்விருது செல்வி அஞ்ஜெலா பிரிட்டோவிற்கு வழங்கப்பட்டது. அஞ்ஜெலா தமிழ் ஆர்வத்தோடு தன்னைப் வளர்த்த பெற்றோருக்கும், தன்னை வழிநடத்திய தமிழ் ஆசிரியர்களுக்கும் நன்றி தெரிவித்தார். இவ்வாறான விருது மாணவர்களுக்கு வழங்குவதை இட்டு மகிழ்ச்சியை தெரிவித்த அஞ்ஜெலா தமிழ் கல்வி மீதும், தமிழ் கலாச்சாரம் மீதும் இளம் சமுதாயம் பற்றுக்கொள்ள இவ்விருது தூண்டுகோளாக அமையும் என்றார்.

இறுதியாக விழாவின் சிறப்பு விருதான 2008 ஆம் ஆண்டுக்கான வாழ்நாள் இயல் விருது எழுத்தாளர் அம்பைக்கு வழங்கப்பட்டது. கடந்த நாற்பது ஆண்டு காலமாக தமிழ் எழுத்துலகில் மட்டுமன்றி தன் செயல்பாட்டை பெண்கள் வாழ்க்கையின் சகல துறைகளுக்கும் விரித்து தன் பதிவுகளை இலக்கியத்துக்கும் அப்பால் வேறு வடிவங்களுக்கும் கடத்தியவர் என்ற வகையில் அம்பை அவர்களுக்கு இந்த வாழ்நாள் தமிழ் இலக்கியச் சாதனை விருது வழங்கப்பட்டது. கவிஞரும், எழுத்தாளருமான பேராசிரியர் எம்.ஏ.நு.ஃமான் இயல் விருது பெறும் அம்பையை அறிமுகம் செய்துவைத்தார்.

“சிலர் விருதுகளால் பெருமை பெறுகிறார்கள். சிலரால் விருதுகள் பெருமை பெறுகின்றது. இந்தவகையில் அம்பை இரண்டாவது வகையைச் சார்ந்தவர் என்பது எனது கருத்து.” என்று குறிப்பிட்டார் நு.ஃமான். “சமூகத்தில் பெண்கள் பற்றிய ஒரு முழுமையான பார்வையைக் கொண்டிருப்பவர் அம்பை. சமகால எழுத்தாளர்களுள் முதன்மையானவர். இவருடைய கதையாளுமை, மொழியாற்றல், வாழ்க்கை பற்றிய இவருடைய பார்வை, அதை கதையாக்கித் தரும் அழகியல் செய்நேர்த்தி என்பன பெண், பெண்ணியம் என்ற எல்லைகளுக்கு அப்பாலும் இவரைக்கொண்டு நிறுத்துகின்றன.” என்று அம்பையைப் பற்றிய கருத்துக்களை முன்வைத்தார் பேராசிரியர். அம்பைக்கு முன் இலங்கையில் பெண்ணியம் பற்றி எழுதிய பெண் படைப்பாளியான பவானி ஆழ்வாப்பிள்ளை பற்றியும் அவர் குறிப்பிடத்தவறவில்லை.

எழுத்தாளர் அம்பை ஏற்புரை வழங்கினார். இந்தியாவிலோ அல்லது தமிழ்நாட்டிலோ கூட தனக்கு தமிழ் இலக்கியத்திற்கு இப்படி ஒரு விருதும் கிடைக்கவில்லை என்று தெரிவித்த அம்பை இது ஒரு அபூர்வமான தருணம் என்று குறிப்பிட்டார். பெண்களை, பெண் எழுத்தாளர்களை சமூகம் எப்படிப் பார்க்கிறது என்பது பற்றிய ஒரு ஆழமான பேச்சாக அம்பையின் பேச்சு அமைந்திருந்தது. பெண் மீதான உடல் சார்ந்த பார்வைகள் தவறானவை. அதில் தனக்கு என்றுமே உடன்பாடில்லை என்றும் குறிப்பிட்டார். பெண் உடல்சார்ந்த பார்வைகள் மறுவாசிப்பு செய்யப்பட வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தினர்.

இறுதியாக சங்கரி செல்வநாயகத்தின் நன்றியுரையுடன் கூட்டம் சரியாக 8.30 மணிக்கு நிறைவுபெற்றது.

திருமதி. கங்காதர்சினி அகிலேஸ்வரன்


Arajen Beauty Centre
• Make Up
• Hair Style & Hair Care
- Dying & Highlighting
• Bridal Make Up & Arangetram
• Skin Care (All Kind of Facial)
- Threading & Waxing
• Skin Treatment
• Nail Art
• Dress Making (Saree & Blouse)
• Permanent Hair Removal
• Pedicure, Manicure
• Mehindi
• Bouquet, Sadainagam
• Cryotherapy
• Micro Dermabrasion
Beauty Classes
அழகியல் கலையை கற்க விரும்புகிறீர்களா? எங்களது கலை வகுப்புகளில் இணைந்து கொள்ளுங்கள்
Certificate Courses & Seminars
அரஜன் அழகு நிலையம்
2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)
இப்போது ஆண்களுக்கான சேவைகளும்
Tel: 416.509.7978
Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca


உங்கள் முகவரி சொல்ல
ஒரு முதன்மை முதலீடு
வீடு
$274,900
Markham & Lawrence
3BR, 2WR
Bright And Spacious Main Level. Finished Bsmt Apt With Living Rm, Large Kitchen
$279,900
Markham/Lawrence
3 BR, 2WR
Large Bungalow House With Basement Apartment And Separate Entrance Steps Away From Public Transit.
$284,900
Mccowan / Denison
3 BR, 2 WR.
Demand Location, Close To School, Park, Bus And Shopping
$285,000
Mccowan/Ellemere
3 BR, 2 WR.
Spacious Bungalow, Near Scarborough General Hospital. Basement Apartment
$354,900
Mccowan/14th Ave
3 BR, 3 WR.
With Spacious Open Concept Design. Bright Living Room, Modern Style Kitchen, Sun-Filled Family Room With
$369,000
Markham/Steeles
3 BR, 3WR.
Builders Model House! Fabulous 3 Yr Old,4 Bdrm Home, Approx.2000 Sq
$369,000
Markham/Steeles
4 BR, 3WR
Builders Model House! Fabulous 3 Yr Old,4 Bdrm Home, Approx.2000 Sq
$479,900
14th/Mccowan
3 BR, 3WR
Quality Built 'Tormina' Home In Devlped Markham Area. Raised Bungalow With High Ceiling
$475,000
Ninth Line And Steeles
4 BR, 3WR
Newer Detached Home.Beautiful & Cozy Open Concept. 9Ft. Ceiling On Main Fl
$499,500
14th & 9th Lane
5 BR, 4WR
Markham Boxgrove*Bright & Spacious*6 Months New Stunning Home*Unique And Stunning Layout
PROPERTY MAX
Realty Inc. Brokerage
சொக்கலிங்கம் பிரபாகரன்
Sockalingam Prabaharan
3321 McNicoll Ave
Toronto, Ont., M1V 5B3
Bus: 416•291•3000
Fax: 416•298•9963
Direct: 416•522•3314

from the firm foundations of creative photos

l a p h o t o g r a p h i e e s t u n a r t





digimedia creations

**karuna photography**

- Wedding Photography
- Bridal Portrait Sessions
- Custom Reception Slideshows
- DVD Slideshows
- Custom Designed Albums
- Parent Albums
- Digital Proofs
- Digital Retouching
- Framed Prints & Canvases

elegant memorable real

www.digimediaphoto.com

416.467.4952

# Carbon Monoxideம் அதன் தாக்கமும்

உங்கள் வீடுகளில் Carbon Monoxide (CO) வாயு இருக்கின்றதா?. கார்பன் மோனாஸை டிலிருந்து எப்படி நீங்கள் உங்களைக் காப்பாற்றப்போகிறீர்கள்?, உங்கள் வீட்டிற்காக COவை மிக துல்லியமாக கண்டுபிடிக்கும் கருவியை எப்படி நீங்கள் தேர்ந்தெடுக்கப் போகிறீர்கள்? கார்பன் மோனாக்ஸைட் வாயு உங்கள் வீட்டிற்குள் நுழையாவண்ணம் பாதுகாப்பது எப்படி என்பன போன்ற விடயங்களைப்பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

## கார்பன் மோனாக்ஸைட்

கார்பன் மோனாக்ஸைட் (CO) நிறம் மற்றும் மணம் இல்லாத ஒரு வாயு. அதை நீங்கள் பார்க்கவோ, சுவைக்கவோ அல்லது முகரவோ முடியாது என்பதால் அது இருப்பது உங்களுக்கு தெரியவருவதற்கு முன்புகூட, அது உங்களையோ அல்லது உங்கள் குடும்பத்தினரையோ பாதிப்படையச் செய்து விடும். மிக குறைந்த அளவிலான திறந்த நிலையில் இருந்தாலும் கார்பன் மோனாக்ஸைட் மிக ஆபத்தான உடல் நலப் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். CO மிகவும் தீங்கானது. ஏனென்றால் அது வேகமாக இரத்தத்துடன் கலந்து விடும். மேலும் இரத்தத்தின் பிராணவாயுவை எடுத்துச் செல்லும் திறனை இல்லாமல் ஆக்கிவிடும்.

## கார்பன் மோனாக்ஸைட் எங்கிருந்து வருகிறது?

புதைபடிவ எரிபொருள்கள் எரியும் நிலையில் கார்பன் மோனாக்ஸைட் ஒரு சாதாரண துணை பொருளாக வெளிவருகிறது. அனேகமான எரிபொருளை எரியவைக்கும் இயந்திரம் தகுந்த முறையில் அமைக்கப்பட்டு மற்றும் பாராமரிக்கப்பட்டால், மிககுறைந்த அளவிலான COவைதான் உற்பத்தி செய்யும். எரியும் நிலையிலிருந்து வெளிவரும் துணைப்பொருள்கள் வழக்கமாக வெளியேறும் வழியாக உடனே வெளியே உள்ள இடத்திற்கு சென்றுவிடும். ஆயினும் வெளியேறும் வழியில் ஏதாவது அடைத்துக்கொண்டிருந்தால், CO வின் உற்பத்தி மிக விரைவில் ஆபத்தான அளவுக்கு உயர்ந்து விடும். விறகு, மண் எண்ணெய், நிலக்கரி மற்றும் கரிக்கட்டை ஆகியவைகளை எரிக்கும் போது CO உரு வாகிறது. Gasoline இயந்திரங்கள் COவை உற்பத்திச் செய்கின்றன. குளிர்ச்சியான இயந்திரத்தை ஸ்டார்ட் பண்ணும் போது மிக அதிக அளவிலான CO உற்பத்தி செய்யப் படுகிறது. உங்கள் கார் அல்லது புல்வெட்டும் இயந்திரத்தை ‘கராச்சினுள்’ வைத்து ஸ்டார்ட் பண்ணுவது பின்னர் நிறுத்துவது போன்ற வீணான பொழுதுபோக்கு வேலையில் நீங்கள் ஈடுபட்டால் அது ஆபத்தை விளைவிக்கும். இணைப்பு சுவர்கள் அல்லது கதவு திறப்பு கள் வழியாக CO அடங்கிய புகைகள் வீட்டிற்குள் நுழையும். மேலும் வெகு விரை வில் அது ஆபத்தான அளவுகளை எட்டிவிடும்.


## COவின் ஆதாரமான காரணங்களை வீட்டிலிருந்து நீக்கமுடியுமா

கரியமலவாயுவின் நச்சுத்தன்மையில் இருந்து பாதுகாப்பதற்கு, கரியமலவாயு உங்கள் வீட்டிற்குள் நுழையும் அனைத்து சந்தர்ப் பங்களையும் இல்லாமல் ஆக்குவது தான்.

- குளிர்காலத்தின் குளிர்ச்சியான கால நிலை தொடங்குவதற்கு முன், எரிபொருளால் இயங்கும் உபகரணங்களை, அவை நல்ல முறையில் இயங்குன்றனவா என்பதை உறுதிசெய்வதற்கு தகுதிவாய்ந்த தொழில் நுட்ப வல்லுனரால் சோதனை செய்யுங்கள் மற்றும் சுத்தப்படுத்துங்கள்.
- பிளவுகள், அடைப்புகள் (உதாரணம் பறவையின் கூடுகள், சிறு கிளைகள், பழைய சுண்ணாம்பு காரை), சிதைவு அல்லது ஓட்டைகள் ஆகியன புகைபோக்கிகள் மற்றும் காற்று வெளியேறும் வழிகளில் உள்ளனவா என்பதை வருடந்தோறும் கண்காணியுங்கள்.
- கணப்பு அடுப்புகளில் புகைக் கரிகள் அடைத்துள்ளதா என்பதை சோதனை செய்யுங்கள்.
- வெப்பப்படுத்தும் மற்றும் கொதிநீர் இயந்திரத்தை ஒரு சிறிய அறையில் அடைத்து வைப்பதற்கு முன், தகுந்த முறையில் எரிபொருள் எரிவதற்கு போதுமான காற்று உள்ளது என்பதை உறுதி செய்வதற்கு சோதனை செய்யுங்கள்.




- உங்களுடைய சமையல் அறையில் காற்றை வெளியேற்றும் வலிமை வாய்ந்த ஒரு விசிறி அல்லது down draft top இருந்தால், அது இயங்கும்போது புகை போக்கியின் புகைகளை கீழே இழுக்காமல் இருக்கும்படி ஆவன செய்யுங்கள்.
- உங்கள் வீட்டை உஷ்ணப்படுத்துவதற்கு ஒரு போதும் புரோப்பைன் அல்லது இயற்கை வாயு ஸ்ட்டவ் மூடிகளை அல்லது அவன்களை பயன்படுத்தாதீர்கள்.
- மோட்டார் வண்டிக் கராச் கதவு அடைக்கப்பட்டிருக்கும் போது ஒரு போதும் உங்கள் வாகனத்தை ஸ்டார்ட் பண்ணா தீர்கள். முதலில் கராச் கதவுகளை திறவுங்கள். காரை உடனே வாகனப்பாதைக்கு ஓட்டிச்செல்லுங்கள். பின்னர் அசுத்தமான புகைகள் வீட்டிற்குள் நுழைந்து விடாத படி கராச் கதவை மூடுங்கள்.
- ஒரு கராச் அல்லது வீட்டிற்குள்ளே புல் வெட்டும் கருவி, பனிக்கட்டி உடைக்கும் கருவி அல்லது Whipper Snipper & Pressure Washer போன்ற எந்த Gasoline எரிபொருளால் இயங்கும் கருவியை ஒரு போதும் இயங்க வைக்காதீர்கள்.
- குளிர்சாதனப்பெட்டி, சமையல் வேலை உபகரணங்கள், வெப்பப்படுத்தும் கருவிகள், கூடாரங்களில் விளக்குகள் எரிவதற்கு, மற்றும் வீடுகளில் மோட்டார்கள் ஆகிய வற்றிற்கு புதைபடிவ எரிபொருளை பயன் படுத்துவது மிகவும் ஆபத்தானது. அனைத்து உபகரணங்களின் புகை வெளியேற்று குழாய்களும் வெளிப்புறம் செல்லும்படி செய்யுங்கள். மேலும் மின்சாரம் அல்லது பட்டரியால் இயங்கும் கருவிகளை பயன் படுத்துவது நல்லது.
- லின்ட்துணி சணல்பனி அல்லது வெளியே உள்ள இடத்திலுள்ள செடிகள் போன்றவைகள் ஆடைகளை உலரவைக்கும் கால்வாய் மற்றும் வெளிப்புறத்திலுள்ள வெளியேறும் வழியில் அடைத்துள்ளனவா என்பதை அடிக்கடி சோதனை செய்து, சுத்தப்படுத்துங்கள்.
- வீட்டிற்குள் Fondue ஹீட்டர்களை பயன் படுத்துவதை குறையுங்கள் அல்லது விட்டுவிடுங்கள்.
- போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள சாலையில் உங்கள் வீடு இருந்தால், வெளியே உள்ள கார்பன் மோனாக்ஸைட் வாயு, முக்கியமான நெருக்கடியான நேரங்களின் போது, உங்கள் வீட்டினுள் உள்ள காற்றை மாசுப்படுத்தும். இந்த மாதிரியான அளவு உள்ள COவால் அலாரம் மணியை அடிக்க ஒன்றும் வைக்கமுடியாது. ஆனால் கார்பன் மோனாக்ஸைட் அளவுகள் லேசாக உயர்ந்துள்ளன என்று COவை கண்டுபிடிக்கும் கருவி தன்னுடைய திரை யில் காட்டும்.



## கார்பன் மோனாக்ஸைடை கண்டுபிடிக்கும் கருவியும் அவசியமும்.

மேற்கண்ட நடவடிக்கைகளை நீங்கள் எடுத்தால், கார்பன் மோனாக்ஸைடை நச்சுத் தன்மையிலிருந்து நீங்கள் உங்களை பாது காக்க முடியும். ஆனால் ஆபத்தான விளைவு களை குறைப்பதற்கு எவ்வளவுதான் நடவடிக்கைகள் நீங்கள் எடுத்தாலும், சில எதிர் பாராத அசம்பாவித சம்பவங்கள் நடப்பதை நாம் தடுக்கமுடியாது. ஒரு சிறந்த முன் எச்சரிக்கை நடவடிக்கையாக, குறைந்த பட்சம் ஒரு கார்பன் மோனாக்ஸைடை கண்டுபிடிக்கும் கருவியாவது உங்கள் வீட்டில் இருக்க வேண்டும். சில நகராட்சிகளில் இது ஒரு சட்டாமாகவே ஆக்கப்பட்டுள்ளது.

## கார்பன் மோனாக்ஸைட் கண்டு பிடிக்கும் கருவியை வாங்கும் போது கவனிக்க வேண்டியவை

- கனடாவின் தரநிர்ணய அளவு சங்கம் (CSA) வெளியிட்டுள்ள பட்டியலில் காணப் படும் ஒரு கண்டு பிடிக்கும் கருவியை தேர்ந்தெடுங்கள். சோதனை செய்யப்பட்டது சம்பந்தமான அடையாளச் சின்னங்கள் உற்பத்தி பொருளின் மீது குறிக்கப்பட்டிருக்கும்.
- நீண்டகால குறைவான அளவு CO தொடர்பு மற்றும் குறுகிய கால அதிக மான அளவு CO தொடர்பு ஆகியவற்றை நீங்கள் கண்காணிக்க விரும்பினால், ஞாபகத்திறன் உள்ள ஒரு கண்டு பிடிக்கும் கருவியை நீங்கள் தேர்ந்தெடுங்கள்.
- பட்டரியில் இயங்கும் கண்டுபிடிக்கும் கருவியை உங்களுக்கு மிகவும் பொருத்தமான இடத்தல் வைக்கலாம். ஆயினும் பழதான பட்டரிகளை அகற்றிவிட்டு புதிய பட்டரிகளை வைப்பதில் தான் உபயோகிப்பவரின் அக்கறை அடங்கியுள்ளது.


மோகன் சுப்பிரமணியம்
- வீடு விற்பனை முகவர் -

- சுவரிலுள்ள Switchசால் கட்டுப்படுத்தப் படும் மின்சாரம் வெளிச் செல்லும் துவா ரங்களில் கருவியின் plug சொருகாதீர்கள்.
- எந்த கண்டு பிடிக்கும் கருவிகளும் என்றென்றும் சரியாக இயங்காது. தயாரிப்பாளர் ஒரு குறுகிய அல்லது நீண்டதால பாவனை ஆயுளை குறிப்பிடவில்லை என்றால், ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை அவைகளை புதிதாக மாற்றுங்கள்.

தயாரிப்பாளர்கள் தங்களுடைய கார்பன் மோனாக்ஸைட் கண்டுபிடிக்கும் கருவிகளில் முடிவு தேதிகளை அச்சிடுவது அவசியம். இதனால் நீங்கள் நடப்பிலுள்ள மிகப்புதிய முழுஆயுள் உள்ள கண்டுபிடிக்கும் கருவியை வாங்கமுடியும்.

## கார்பன் மோனாக்ஸைட்டை கண்டு பிடிக்கும் கருவியை எங்கு வைக்க வேண்டும்

அனேகமான தயாரிப்பாளர்கள் CO கண்டு பிடிக்கும் கருவியை எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்பதை குறிப்பிட்டிருப்பார்கள். பொதுவாக நீங்கள் உறங்கும் போது அலாரம் மணி ஒலி கேட்கும் இடத்தில் அதை வைப்பது தான் மிகச்சிறந்தது. ஏகதேசம் காற்றின் எடைதான் COவிற்கும் உண்டு. மேலும் ஒரு அறை முழுவதும் சமமான அளவில் அது பரவும். எனவே கண்டுபிடிக்கும்கருவியின் அலாரம் ஒலி கேட்க கூடிய தூரத்தில் அதை எந்த இடத்திலும் மற்றும் எந்த உயரத்திலும் வைக்கலாம். வீட்டைச்சுற்றியுள்ள, குழந்தையின் படுக்கையறை போன்ற மற்ற இடங்களில் கூடுதலான கருவிகளை வைக்கலாம்.

## கார்பன் மோனாக்ஸைட்டை கண்டுபிடிக்கும் கருவிகளை வைப்பதற்கு தவிர்க்கவேண்டிய இடங்கள்

- உஷ்ணமடையாத வீட்டின் அடித்தளங்கள், மேல்மாடியின் சிறிய அறைகள் வாகனத் தரிப்பிடங்கள்.
- ஈரப்பதம் அதிகம் உள்ள இடங்களில்.
- தலைமுடிக்கான ஸ்ப்ரேய் திரவம், கிருமி நாசினி ஸ்ப்ரேய் திரவங்கள் உள்ளிட்ட வேதியல் சால்வன்ட்கள் அல்லது சுத்தப படுத்தும் திரவங்கள் பயன்படுத்தப்படும் இடங்களில்.
- காற்று வெளியேறும் வழிகள், புகைகள் வெளியேறும் வழிகள், அல்லது புகை போக்கிகள் ஆகியவற்றுக்கு அருகில்.
- உஷ்ணப்படுத்தும் மற்றும் சமையல் உபகரணங்கள் இருக்கும் இடங்களில் 2 மீட்டர்கள் (6அடி) தூரத்திற்குள்.
- கட்டாயமாக அல்லது தானாக காற்று வெளியேறும் துவாரங்களுக்கு அருகில்.
- இயற்கையான காற்றோட்டம் குறைவாக இருக்கும் மூலைகள் அல்லது அதுபோன்ற இடங்களிலிருந்து 2 மீட்டர் தூரத்திற்குள் வைப்பதைத் தவிருங்கள்.

mohansubramaniyam@thaiveedu.com

■ ■ ■

# பிரிவினை கோரியதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன

நடராஜா முரளிதரன்



1962இல் இந்தியப் பிரதமராக இருந்த நேரு, இந்தியா மீதான சீனப் படையெடுப்பின் போது இந்தியப் பாராளுமன்றத்தில் பிரிவினை கோருகின்ற, பிரிவினை வாதம் பேசுகின்ற கட்சிகள் தடை செய்யப்படும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுகின்றார். அப்போது "அண்ணா" தலைமையிலான "திராவிடமுன்னேற்றக்கழகம்" அது வரை முழங்கிய, கோசித்த "திராவிடநாடு" தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டுக் கொண்டது.

காஞ்சிபுரத்தில் உள்ள தன் வீட்டுத் திண்ணையில் குந்தியிருந்து கொண்டாவது திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடாது இறுதிவரைக்கும் போராடுவேன் என்று கூறிய "அண்ணா" ஆயுதப் போராட்டத்தைத் தனது போராட்ட நெறியாக வரித்துக் கொள்ளாதவர். ஆயினும் அந்தக் கோசத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு தமிழகத்தில் உள்ள இடதுசாரி இயக்கங்களால் சாதிக்க முடியாத "மக்கள் அமைப்பைக் கட்டுதல்" என்ற வியாக்கியானத்தைத் தமிழகத்தில் செயற்படுத்திய வலுப்படைத்தவராக அண்ணா அவர்களைக் கருத முடியும்.

இவ்வாறான அண்ணா திராவிடநாடு பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடுகின்ற அவ் வேளையில் கூறிய வாசகம் இந்தியக் கூட்டாட்சி வரலாற்றிலே மிகப் பிரசித்தமானது. இன்றும் கூடத் தமிழக வரலாற்று ஆய்வாளர்களால் அவ்வாசகம் எடுத்தியம்பப்படுகின்றது.

"நாங்கள் பிரிவினைக் கோரிக்கையைக் கை விட்டு விட்டோம். ஆனால் பிரிவினை கோரியதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன" என்ற கூற்றே அண்ணா கூறிய அந்தப் பிரசித்தி பெற்ற வாசகமாகும்.

மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி அதிகாரங்களை உள்ளடக்கிய மொழி வழி மாநிலங்களைக் கொண்ட இந்தியக் கூட்டாட்சி அமைப்பின் கீழ் தமிழ்மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட அன்றைய சென்னை மாநிலத்தின் சார்பிலே அண்ணா அந்த வாதத்தை முன்னெடுத்திருந்தார். எனினும் திராவிடத்தின் உள்ளடக்கமான ஆந்திர, கர்னாடக, கேரள மக்களது ஆதரவு கிஞ்சித்தும் அந்தக் கோரிக்கைக்குக் கிடைத்திருக்கவில்லை.

அந்த வாதம் முன்னெடுக்கப்படும் அவ்வேளைகளில் இந்திய இராணுவம் தமிழகத்தின் எந்த மூலைகளுக்குள்ளும் நுழைந்திருக்கவில்லை. அடக்குமுறை வெறியாட்டம் காட்டு மிராண்டித்தனமான வகையில் தமிழகத்து மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கவில்லை. உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலான மனித உரிமை மீறல்கள் உச்சம் பெற்றதற்கான சாட்சியங்கள் அங்கு ஏதுமில்லை. அதற்காக அங்கு எல்லாம் இனிதே நிகழ்ந்தன என்று கூறவும் நான் முற்படவில்லை. அத்தகைய சூழ்நிலையிலே தொடர்ந்து அண்ணா எழுப்பிய முக்கிய கோசமானது "மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி" என்ற முக்கிய சுலோகமாகும். அந்தச் சென்னை மாநிலம் தான் பின்னர் அண்ணாவின் ஆட்சிக்காலத்தில் "தமிழ்நாடு" எனப் பெயர் மாற்றம் பெறுகின்றது.

இதைக் கூறிவிட்டு அறுத்துக் கொண்டு உடனே பின்னடைவுக்குள்ளான ஈழவிடுதலைக்கான போராட்டம் குறித்துக் கருத்துக் கூறுகின்ற குர்திஸ் தேசியவாதி "Shexmux Amet" அவர்களிடம் செல்லவிரும்புகின்றேன். கடந்த சில வாரங்களாக இவர் ஈழப் போராட்டத்திற்கு இன்று ஏற்பட்டுள்ள நிலை குறித்துக் கூறிய கருத்துக்கள் இணையத்தள, மின் ஊடகங்கள் பலவற்றில் வெளியாகிப் பிரபலமடைந்துள்ளன. பின்னால் இந்த இருவர் கருத்துக்களுக்குமான தொடர்புகள் பற்றிப் பார்ப்போம். "Shexmux Amet" அவர்கள் கூறுகின்றார், இன்று விடுதலைப் புலிகளின் ஈழ விடுதலைப் போராட்டம் பின்னடைவுக்குள்ளானது போன்று வரலாற்றில் குர்திஸ் மக்களும் தங்கள் விடுதலைக்கான போராட்டத்தில் பல்வேறு தடவைகள் தோல்வியடைந்துள்ளார்கள் என்று.

1925, 1938, 1946, 1975, 1988, 1991 என குர்திஸ் மக்கள் அடைந்த தோல்விகளின் வரலாற்றுப் பட்டியல் நீளுகின்றது. அது மட்டுமல்லாது இன்றும் அவர்கள் "குர்திஸ் தான்" என்ற தனிநாட்டை அமைப்பதில் வெற்றி பெற்றுக் கொள்ளவில்லை. அமெரிக்கத் தலையீட்டின் காரணமாக ஈராக்கில் அமைந்துள்ள "குர்திஸ்தான்" மாத்திரம் ஈராக்கிய மத்திய ஆட்சிக்குட்பட்ட வரையறுக்கப்பட்ட அதிகாரங்களையுடைய சுயாட்சிப் பிரதேசமாக அங்கீகாரம் பெற்றுள்ளது. அவர் மேலும் கூறுகையில் உங்கள் போராளிகள் இறுதிவரை நெஞ்சுரத்தோடு போராடி மரணித்த இவ்வரலாறானது உங்கள் மொழியில் அமையப்பெறும் பாடல்களிலும், இலக்கியங்களிலும் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் சாட்சியங்களாக எதிர்கால வரலாற்றில் அமையப் பெறும் என்று குறிப்பிடுகின்றார்.

தொடர்ந்து அவர் முன் வைக்கும் விமர்சனத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் எதிர்பார்ப்புகள் மிக இறுக்கமானவை என்று கூறுகின்றார். "தங்களது தமிழீழத் தாயகக் கோரிக்கைக்குப் பரந்துபட்ட பன்னாட்டு ஆதரவு திரளாத நிலையில் இலங்கையில் தமக்கான சுயாட்சியை உறுதிசெய்யும் ஒரு கூட்டாட்சிக்கான ஒப்பந்தத்தை ஏற்பதே யதார்த்த நிலையை ஒட்டிய தீர்வாக இருந்திருக்கும். அதே சமயம் இலங்கை அரசானது தொடர்ந்து தமிழ்மக்களின் ஆதார உரிமைகளை மீறும் பட்சத்தில் இந்தப் போராட்டத்தைத் தமிழ்மக்களின் அடுத்த தலைமுறையினர் முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றிருக்கவும் வழிவகுத்திருக்கும். அந்தக் கட்டத்தில் கூட்டாட்சி அடிப்படையில் அமைந்த தமிழர்களின் சுயாட்சி அரசுக்கு மேலதிக பன்னாட்டு அங்கீகாரம் கிட்டியிருக்க முடியும். தவிர, விடுதலைப்புலிகள் அமைப்பு "பயங்கரவாத அமைப்பு" என்ற முத்திரையுடன் மேற்கத்தேய அரசுகளால் தனிமைப்பட்டுப் போகாமல் இருந்திருக்கலாம்" என்ற வகையிலெல்லாம் அவருடைய விமர்சனம் அமைகின்றது.

ஆனால் தமிழ்த்தேசியத்தின் தீவிர ஆதரவாளர்களால் முன்வைக்கப்படும் வாதமானது சிறிலங்கா அரசானது எந்தச் சூழ்நிலையிலும் இனப்பிரச்சினைக்கு மாற்றுத்தீர்வாக ஒற்றையாட்சிக்கு அப்பாற்பட்டுத் தமிழ் பேசும் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வாக இதய சுத்தியுடன் "சமஸ்டி" அடிப்படையிலான எந்த அரைகுறைத் தீர்வையும் கூட நடைமுறைப் படுத்தத் தயாராக இருக்கவில்லை என்பதேயாகும். அதற்கான ஆதாரங்கள் வரலாற்றில் நிரம்பவே இருக்கின்றன. எனவேதான் "Shexmux Amet" அவர்களின் மேற்கூறிய விமர்சனத்தில் உள்ள இலங்கையில் தமிழர்கள் தமக்கான சுயாட்சியை உறுதிசெய்யும் ஒரு கூட்டாட்சிக்கான ஒப்பந்தத்தை ஏற்பதே யதார்த்த நிலையை ஒட்டிய தீர்வாக இருந் திருக்கும் என்ற விமர்சனத்தை நடைமுறைச் சாத்தியமானதுதானா என்ற தர்க்கத்தின் அடிப்படையோடு ஒப்பிட்டு நோக்க வேண்டியுள்ளது.

"உயிரோடு இருப்பதற்காக வெட்கப்படுகிறேன், எவ்வளவு இழப்புகள். எவ்வளவு குருதிப் பெருக்கு. யாவும் ஒடுக்கப்பட்ட, சொல்ல முடியாத துயரம் இந்த ஒரு வரியில் வெளிப்படுகிறது. நாம் என்ன ஆயுதம் எடுக்க வேண்டும் என்பதை நமது எதிரியே முடிவு செய்கிறான் என்று சொன்ன புரட்சிக் கருத்துகளை நேற்று வரை கொண்டாடி வந்த பலரும் இன்று வன்முறையிலான பாதை தவறானது. வன்முறையில்லாமல் நாம் அமைதியாகப் போராடி வெற்றி பெற வேண்டும் என்ற யோசனைகளை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் இரத்தம் சிந்தாமல் எந்த சமூகமும் மாறியதில்லை என்பதே வரலாறு திரும்பத் திரும்பச் சொல்லும் உண்மை. காந்தி வழியில் தான் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தது என்ற பள்ளி பாடச் சரித்திரம் உண்மையில்லை என்பதை இந்திய சுதந்திரப் போரில் வெள்ளையர்களால் அடிபட்டும், வன்கொலைக்கு உள்ளாகியும் இறந்தவர்களின் எலும்புகள் என்றும் சொல்லும். நான் வன்முறையை வளர்க்கச் சொல்லவில்லை. ஆனால் வன்முறை என்பது ஆயுதங்கள் ஏந்திப் போரிடுவது மட்டுமில்லை. அதிகாரம் மேற்கொள்ளும் அத்தனை செயல்களிலும் வன்முறை பீறிட்டுக் கொண்டுதானே இருக்கிறது" என்று எழுத்தாளர் எஸ்.ராமகிருஸ்ணன் தனது இணையத்தளத்தில் பின்னடைவுக்குள்ளான ஈழப் போராட்டம் குறித்து எழுதுகிறார்.

ஏனவேதான் "ஷெக்ஸ்முஸ் ஆமெட்" அவர்களின் இறுதி விமர்சன வார்த்தைகளான "அறிவும் திறமையும் ஆற்றலும் கொண்ட ஈழத்தமிழ் மக்களே, இந்தத் தீயின் சாம்பலிலிருந்து நீங்கள் எழுவது நிச்சயம்! உம் கனவுகள் உயிரோட்டத்துடன் இருக்கட்டும், அப்போது துப்பாக்கித்தோட்டாக்களோ, வாக்குச்சீட்டுகளோ கொண்டு நீங்கள் ஈழத்தை அடைவதும் நிச்சயம்!" என்ற சொல்லாடல்களையும் பொருத்திக் கொண்டு அண்ணா மொழிந்த "நாங்கள் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டோம். ஆனால் பிரிவினை கோரியதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன" என்ற வார்த்தைகளுக்குள் நுழைவதற்கான சாத்தியங்கள் குறித்து சிந்திக்கத் தலைப்படுகின்றேன்.

muralitharan.n@thaiveedu.com

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*

*Fax: 416-849-0594*

*Tel: 416-646-3422*

N.K.S
Drapery & Blinds Fabric LTD



திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

# எல்லாமும் எல்லோரும் பெற வேண்டும்

## Non Medical Insurance up to Age 85

- Life Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Home Equity Line of Credit
- RESP / RRSP

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

RBC Insurance

Manulife Financial


Unity Life of Canada

Canada Life







3 Bedroom + 1 Washroom
**$ 184,900**



3+1 Bedroom, 3 Washroom
**$ 349,900**



3 Bedroom + 2 Washroom
**$ 229,000**




3+1 Bedroom + 3 Washroom
**$ 335,000**



2 Bedroom + 1 Washroom
**$ 199,000**



3+1 Bedroom, 1 Washroom
**$ 269,900**



2+1 Bedroom + 2 Washroom
**$ 227,000**



3 Bedroom + 2 Washroom
**$ 229,500**



3 Bedroom +2 Washroom
**$ 235,000**




3+2 Bedroom, 2 Washroom
**$ 274,900**



3+1 Bedroom + 3 Washroom
**$ 229,900**



2 Bedroom + 1 Washroom
**$ 189,900**



2 Bedroom + 1 Washroom
**$ 79,000**



Gas Station
**$ 199,000**




3 Bedroom + 3 Washroom
**$ 285,000**



2 Bedroom + 2 Washroom
**$ 88,888**

RE/MAX®
**Rouge River Realty Ltd. Brokerage**
Independently Owned and Operated
37-31 Tapscott Rd. Toronto, ON. M1B 4Y7
Tel : 416-321-1999 Fax : 416-321-2290

## Uthayan Nadarajah
Broker
Direct : 416-727-9945



Apex Creations - 416-297-0707

# தலையை வெட்டி வீழ்த்தினாலும் உயிர்வாழும் உயிரினம்!

நாம் விரும்புகின்றோமோ இல்லையோ, சிலர் எங்கள் நண்பர்களாக வந்து நமக்கு வாய்த்து விடுகின்றார்கள். அவர்களினால் எவ்வளவு சிக்கல்கள் வந்தாலும் அந்த நட்பை மட்டும் எங்களால் முறித்துக் கொள்ள முடிவதில்லை.

அது போல எங்கள் வீட்டுக்குள்ளும் சில பேர் நமது விருப்பத்தையும், அனுமதியையும் மீறி எங்களோடு வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் ஒருவர் தான் கரப்பான் பூச்சி.

கரப்பான் பூச்சிகள் மனிதர்கள் தோன்றுவதற்கு முன்னரே உருவாகிவிட்டன. சுமார் 400 மில்லியன் வருடங்களுக்கு முன்னதாக அவை தோன்றிவிட்டன. மனிதர் உருவானதற்கு 100 மடங்கு முன்னையக் காலப்பகுதியே இது.

கரப்பான் பூச்சிகளின் தலையை வெட்டி வீழ்த்தினாலும் சுமார் ஒரு மாத காலத்திற்கு தொடர்ந்து உயிர்வாழ இவற்றினால் முடியும்.

இதற்குக் காரணம் பூச்சிகளின் சுவாசம், ஒட்சிசன் கடத்தப்படும் செயல் முறை என்பன அவற்றின் மூளையினால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. எனவே தலை வெட்டப்பட்டு மூளை இல்லாவிட்டாலும் இந்த செயல்முறைகள் தொடர்ந்து நிகழும். அத்தோடு இவற்றின் இரத்த அழுத்தமும் மிக மிகக் குறைவு என்பதால் கரப்பான் தலையை வெட்டுவதால் இரத்தம் வெளியேறி மரணத்தை ஏற்படுத்தாது. இது மட்டுமல்ல கரப்பான் பூச்சி ஒரு நாள் உணவு உட்கொண்டால் அது ஒரு மாத காலம் வரை போதுமானது. இந்த எல்லாக் காரணங்களினாலும் கரப்பான் பூச்சியினால் தலை இல்லாமல் ஒரு மாத காலம் வரை உயிர் வாழமுடியும். இச்சமயத்தில் இவை இடம் பெயர்ந்து திரியாது.

கரப்பான் பூச்சிகளில் 3,500 வகைகள் உள்ளன. கடந்த 200 வருடங்களுக்கு மேலாக வைத்தியசாலை, கட்டிடங்கள், உணவுச் சாலைகள், வீடுகளில் தங்கி வாழும் கரப்பான் பூச்சிகள் வளர்ச்சியடைந்துள்ளன.

மனிதர்களைக் கடிக்கின்ற கரப்பான்களும் உள்ளன. American Cockroaches மனிதர்களைக் கடிக்கவும் செய்யும். குழந்தைகளின் தசை கடிப்பதற்கு இலேசாக இருக்கும் என்பதால் இந்த வகை கரப்பான் குழந்தைகளை கடிக்கின்றன.

கனடா வீடுகளில் உள்ளது German cockroach ஆகும். இவற்றுக்கு வெப்பமான, இருளான, நீர்ப்பதம் நிறைந்த இடங்கள் மிகப்பிடித்தமானது. சமையல் அறை, குளியல் அறை இவற்றுக்கு மிகவும் பிடிக்கும் என்பதால் அங்கே பெரும்பாலும் இவை இருக்கும்.

German cockroach பெண் கரப்பானில் 30-48 முட்டைகள் இருக்கும். ஒரு பெண் கரப்பான் பூச்சி மாதம் ஒரு தடவை முட்டை போடும். முட்டை 100 நாட்களில் முழுமையான கரப்பான் பூச்சியாக உருவெடுத்து விடும்.

கரப்பான் பூச்சியின் ஆயுள் சராசரி 6-12 மாதங்களாகும். ஒரு பெண் கரப்பான் தனது வாழ்க்கைக் காலத்தில் 120 முதல் 386 வரையான கரப்பான் பூச்சிகளை உருவாக்கும்.

முட்டைகளைக் காவித்திரிகின்ற ஒரு பெண் கரப்பான் பூச்சி வீட்டுக்குள் வந்து சேர்ந்தால், அது ஒரு வருடத்தில் பல ஆயிரம் கரப்பான் பூச்சிகளாக பல்கிப் பெருகிவிடும்.

கரப்பான்கள் பத்து மீற்றர் தூரத்தை 1.09 செக்கனில் கடக்கக் கூடியன. ஆண் கரப்பான் பூச்சியை விட பெண் கரப்பான் பூச்சிக்கு நீளமான செட்டை உள்ளது. பெண் கரப்பான் பூச்சி காவித்திரியும் முட்டைகளைப் பாதுகாப்பதற்காகவே இவ்வாறான நீளமான செட்டைகள் அவற்றுக்கு உள்ளன.

மனிதர்களைப் போலவே கரப்பான் பூச்சிகளும் நித்திரை கொள்கின்றன. நாம் சுறுசுறுப்பாக இயங்குகின்ற நேரம் அவை அமைதியாகத் தூங்கிவிடுகின்றன. ஆனால் நாம் நித்திரை கொண்ட பின்னர் பரபரப்பாக இயங்க ஆரம்பிக்கின்றன.

பொதுவாக இரவில் மின்விளக்குகள் அனைந்ததின் பின்னர், நான்கு மணிநேரம் வரை கரப்பான் பூச்சிகள் வெகு பரபரப்பாக இயங்கும். தமக்குத் தேவையான உணவையும், நீரையும் பெற்றுக் கொள்வதற்காக நமது சமயல் அறை, குளியல் அறைகளில் இவை ஓடித்திரியும். தங்களுக்குத் தேவையான உணவு, நீரை பெற்றுக்கொள்ள இந்த நான்கு மணி நேரம் இவற்றுக்குப் போதுமானது.

இதனால்த் தான் இரவு பன்னிரெண்டு மணிக்கு





குளிர்சாதனப்பெட்டியில் உள்ள தண்ணீர்ப் போத்தலை எடுப்பதற்காக நீங்கள் செல்லும் போது உங்கள் சமயல் அறையில் கரப்பான் பூச்சிகள் ஓடித்திரிவதை உங்களால் காணக்கூடியதாக உள்ளது.

கரப்பான் பூச்சிகளால் மனிதர்களுக்கு பெரும் சுகாதாரக் கேடு ஏற்படுகின்றன. உணவுப் பொருட்களை நஞ்சூட்டும் பற்றீரியாக்களை கரப்பான் பூச்சிகள் காவித்திரிந்து பரப்புகின்றன என்பது ஒரு சிறிய உதாரணம். நமது சமையல் அறை மேசைகளில், பாத்திரங்களில், திறந்து வைத்திருக்கும் உணவுக்கு மேலாக எல்லாம் கரப்பான் பூச்சிகள் ஓடித் திரியும் போது இந்தப் பற்றீரியாக்களையும் விட்டுச் செல்கின்றன.

கரப்பான் பூச்சியின் உடைந்த பாகங்கள், நன்கு நொறுக்கப்பட்ட ஒரு மிளகில் இருந்து பறந்த ஒரு துகள்களைப் போல இருக்கும். இந்த துகள்கள் ஒவ்வாமை நோயை (Allergic) சிலருக்கு உருவாக்கும்.

வீட்டுத் தூசியினால் Allergic ஏற்படுபவர்களுக்கு கரப்பான் பூச்சியினாலும் Allergic ஏற்படும். கரப்பான் பூச்சியினால் அடிக்கடி Allergic ஏற்படுபவர்களுக்கு காலக்கிரமத்தில் அஸ்மா நோய் ஏற்படவாய்ப்புள்ளது. குறிப்பாக சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் இவ்வாறான நிலைமை ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

பத்தில் ஒருவருக்கு கரப்பான் பூச்சியினால் Allergic ஏற்படுகின்றது. அதே சமயம் அஸ்மா உடையவர்களில் 50 வீதத்தினருக்கு கரப்பான் பூச்சியினால் Allergic ஏற்படுகின்றது.

கரப்பான் பூச்சிகளை அழிப்பதற்கு ஒரு தடைவயால் முடியாது. மறுபடி மறுபடி என்று சளைக்காமல் அழித்துக் கொண்டே இருக்க வேண்டும். கரப்பான் பூச்சியின் வாழ்கை வட்டம் குறுகியது என்பதால் நீங்கள் கரப்பானை அழிக்கப் பாவிக்கும் 'பூச்சி கொல்லிக்கு' அவை வெகு விரைவில் இசைவாக்கம் அடைந்து விடும். அவ்வாறு ஒரு 'கொல்லிக்கு' கரப்பான் பூச்சி இசைவாக்கம் அடைந்து விட்டால் அதன் பிறகு அந்தக் 'கொல்லியைப்' பயன்படுத்தி கரப்பான் பூச்சியை அழிக்க முடியாது. அவ்வாறு ஒரே 'பூச்சி கொல்லியைப்' பாவித்து யாராவது கரப்பான் பூச்சியை அழிக்க முயற்சி செய்தால் அது அவருக்குத் தோல்விக்கு மேல் தோல்வியையே தரும். எனவேதான் கரப்பான் பூச்சியை அழிக்கும் 'கொல்லியை' அடிக்கடி மாற்றவேண்டும்.

கரப்பான் பூச்சிகளை வீட்டில் இருந்து ஒழித்துக் கட்டத்தான் வேண்டும். ஆனால் அதற்காகப் பாவிக்கப்படும் 'பூச்சி கொல்லிகள்' நமது உடல் நலத்திற்கு தீங்கை விளைவிக்கின்றன. இந்தக் கொல்லிகள் காற்றோடு சேர்ந்து நமது சுவாசப்பைகளையும், உணவோடு சேர்ந்து நமது ஏனைய உடல் பகுதிகளையும் அடைகின்றன.

கரப்பான் பூச்சியை அழிக்கப் பாவிக்கப்படும் Diazinon, Propoxur என்பன மனிதரின் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கக் கூடியன. மிகச் சிறிய அளவிலான இந்தப் பொருட்கள் பல வருடங்களுக்கு, அல்லது வாழ் நாள் முழுவதும் கூட நம்மை பாதித்துக் கொண்டிருக்கும்.

கரப்பான் பூச்சி தொல்லையில் இருந்து மீளவும், எந்தவிதமான உடல் நலக் கேடும் உங்களுக்கு ஏற்படாமல் இருக்கவும் வேண்டுமாயின் அனுமதிப்பத்திரம் (Licensed) பெற்ற நபர்களை அல்லது நிறுவனங்களை நாடுவதே சிறந்த யோசனை. உடனடியாக சற்று அதிக பணம் செலவானாலும், நீண்டகாலத்தில் ஏற்படக் கூடிய நோய்கள், அதனை ஒட்டிய பண இழப்புகளை இது தவிர்த்து விடும்.

தொடர்மாடிக் கட்டிடங்களில் உள்ளவர்களுக்கு கரப்பான் பூச்சி தொல்லை இருந்தால் அதை எழுத்து மூலமாக சுப்பிரின்டனிடம் தெரியப்படுத்தும் உரிமை உள்ளது. அதன் மூலம் உங்கள் தொடர் மாடியில் உள்ள கரப்பான் பூச்சிகளை ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எந்தக் கொல்லிகளை பாவித்து கரப்பானை அழிக்கலாம் என்பது தொடர்பான கேள்விகள் இருப்பின்

Pest Management regulatory Agency at Health Canada: 1800-267-6315 என்ற இலக்கத்தினை அழையுங்கள்.

- சிவா சுப்ரா -

## கரப்பான் பூச்சியை கட்டுப்படுத்த வேறு சில வழிகள்:

- சமையல் அறையை துப்பரவாக வைத்திருங்கள். அங்குள்ள Garbage Bagஐ இரவில் இறுகக் கட்டி வைத்துவிடுங்கள். பாண், பழம், கறி என்று எந்த உணவுப் பொருட்களோ நிலத்திலோ, மேசையிலோ இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- எண்ணெய், தண்ணீர் எதுவுமே நிலத்திலேயோ,மேசைகளிலோ, கோப்பைகளிலோ இருக்கக் கூடாது. இவற்றை எண்ணெய்த் தன்மை இல்லாமல் சோப்பினால் துடைத்து வையுங்கள்.
- கழுவாமலோ, உணவுப் பதார்த்தங்களுடனோ எந்தப் பாத்திரத்தையும் சமையல் அறையில் வைக்கதாதீர்கள்

இப்படிச் செய்வதன் மூலம் கரப்பான் பூச்சிக்குத் தேவையான உணவு உங்கள் வீட்டில் கிடைக்காமல் போகும். இதற்கு மேலாக இரவில் சமையல் அறை விளக்கை எரிய விடுங்கள். கரப்பான் பூச்சிகள் இதனால் நடமாட முடியாது.

இந்த நடவடிக்கைகளை செய்வீர்களாயின் கரப்பான் பூச்சிகள் உங்கள் வீட்டில் வாழ முடியாத சூழ்நிலை உருவாகும். அவை மெல்ல மெல்ல விலகிவிடும்


தண்ணீர், உணவு இல்லையெனில் இரண்டு வாரத்தில் கரப்பான் பூச்சிகள் இறந்து விடும். தண்ணீர் மட்டும் அருந்திக் கொண்டு ஒரு மாதத்திற்கு உயிர்வாழும். தாம் பதுங்கி இருக்கின்ற இடத்தில் இருந்து 10-12 அடி தூரம் வரை மட்டுமே இவை உணவுக்காகச் சென்று வரும்.

கரப்பான் பூச்சிகள் விஞ்ஞானிகளின் விசேட கவனத்திற்கு உள்ளாக்கி உள்ளன. உலகத்தில் ஒரு அணு ஆயுத யுத்தம் ஏற்பட்டால், அந்த கதிர் இயக்க தாக்குதலில் இருந்து மனிதர்கள் உட்பட எந்த உயிரினமே தப்ப முடியாது, எல்லா உயிரினமும் அழிந்துவிடும். ஆனால் இந்த அழிவின் பின்னர் உயிர் வாழக்கூடிய ஒரே உயிரினம் கரப்பான் பூச்சிகளே.

கரப்பான் பூச்சிகள் மட்டும் இந்த கதிர்இயக்கத் தாக்குதலில் இருந்து தப்பிவிடும் என்றும் இதன் பிறகான உலகம் இந்த கரப்பான் பூச்சிகளிடம் இருந்தே ஆரம்பம் ஆகும் என்று ஒரு நம்பிக்கை உள்ளது.

sivasubra@thaiveedu.com

■ ■ ■


BUY AND SELL HOMES AND BUSINESS
அனுபவம்! திறமை! நேர்மை!
Hall of fame award
CENTURION AWARDS
for 5 YEARS
தனிநபர், வீடுகள், அலுவலகம், வியாபாரம் முதலியவற்றிற்கு
அடமான வசதிகள்
ஒழுங்கு செய்யப்படும்.
Pat 416 490 7653 (SOLD)
PAT Pushpakanthan
Real Estate BROKER
Cell 416-894 1187
rpushpakanthan@trebnet.com
EXPERIENCE! COMMITMENT! RESULTS!
Midland/Finch
$249 000
Industrial Unit ...many use (16Ft Height) Close To Ttc, Bus Stop. Approx 200Sq/Ft Of MezzanineTotal Sq/Ft Of 1997 Sq.Ft
Warden/St.clair
Brand new home 10 min. to d'town
Brand New Home
Solid Brick W/Built-In Garage.Monarch Built 1915 Sqft+Bsmt;Porclean Tiles In Foyer;Natural Oak Stairs & Hardwood Floor Marble Countertop Pot Lights In Great Rm, Family Rm &, Great Rm & Liv/Dinin
Close to subway & great high .school
Condo Apt From $69000
Homes from 190000/-
New homes from 280000/-
Call 416- 894 1187
MARKHAM/14 th ave
$269000
Lowest price
Minutes To, Walmart, Restaurants, 24 Hrs Ttc U Of T And Centennial College, Close To 401, Professionally Finished Basement
Scarborough
$79000
2 bm condo apartment live and pay you mortgage as rent
Markham
Brand New Home Move In 30 Days,***Strip Hardwood Floors In Living/Dining And Main Floor
Markham / steeles
Land +bldg sale
Investment
6 unit auto Garages
Automobile mechanical Zoning, excellent locn, multi-unit(6),lots of parkg,behind wallmart, best investment
Scarborough
Quality Built Mattamy Home On Rouge Park
Scarborough
399000
In Demand Sqft. Well-Kept, Well-Maintained, Move-In Condition. $$$ Upgrades: Hardwood Floors, Pot Lights Everywhere
scarborough
Homes from 175 000
Buy .... power of sale properties
Condo apartment From 74 000
Or Dir: 416-894-1187
Markham
Brand New Home
Front Balcony, Strip Hardwood Floors In Living/Dining And Main Floor Hallway, Extended Kitchen Uppers, Gas Fireplace In Family Room, Granite Kitchen Counter Top. Extras: Elf's, Casement Windows, Granite Counter Top In Kitchen With Undermount Sink, Main Floor Laundry Room, 9'Main Floor Ceilings, Ceramic Tiles In Foyer, Kitchen, And Much More...
Ellesmere/Birchmount
NewER Condo
NEWER
Luxury Tridel Building, 2bm Extremely CleanTtc, Great Amenities Include Hot Tub, Tv Media Room, Guest Suites, Fitness Centre, Party Rm, Sauna, 24 Hr. Concierge
Mcleven/Nielson
$129000
Best Value In Complex! Great 2Br Floorplan. Large Eat-In Kitchen With Granite Counters. Indoor Pool, Whirlpool, Sauna, 2 bm2wm
Scarborough
NEW HOME
3 bm Home.
New. Must See near school., TTC
SCARBOROUGH
Basement Apartment
RENT AND LIVE
Charming 3 Bedroom Bungalow In Wexford Heights. Well Maintained & Updated And In Excellent Condition. Finished Basement/Separate Entrance W/Income
MARKHAM/STEELES
Absolutely Gorgeous Executive Homes On A Premium Ravine Lot. Quiet Street. Quality Upgrades
Mcleven/Nielson
$118000
Indoor Pool, Whirlpool, Sauna, Squash Crt, Tennis Crt, Exercise & Gym, Party Room, 24 Hour Gatehouse Security1 bm
Yonge street
cafetaria
Prime Location On Yonge St In The Heart Of Northyork. Surrounded By Office Buildings And Condos. Walking Distance To Subway
1.5%
Also available*
Century 21
Affiliate Realty Inc.
Tel: 416-290-1200
rpushpakanthan@trebnet.com
VISIT....WWW.PATPUSH.COM
Each office individually owned & operated
Selling your home !
...call free market evaluation 416-490-7653 (Sold)
*some condition applies ,call agent for detail ,color &shape may be different. Not intended to solicit buyers and sellers who are under contract



# வீடு வாங்க, விற்க அழையுங்கள்...

**Vasanthy Niranjan**

*Real Estate Broker*

**416-845-8272**

Tapscott & McLevin



**$189,000**
3 Bedroom, 2 Washroom

McCowan & Denison



**$284,900**
3 Bedroom, 2 Washroom

Middlefield & Finch




**$1,250**
2 Bedroom 1 Washroom

Warden & Sheppard



**$369,000**
3+2 Bedroom, 2 Washroom

Birchmount & McNicoll



**$379,900**
3 Bedroom, 3 Washroom

Birchmount & Finch



**$314,500**
3+2 Bedroom, 4 Washroom

Brimley & Denison



**$229,000**
3 Bedroom, 2 Washroom

Midland & Lawrence



**$152,900**
3 Bedroom, 1 Washroom

Markham & Elson



**$349,900**
4 Bedroom, 3 Washroom

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.**
**Brokerage***
31 Progress Ave. Suite 210
Toronto, ON M1P 4S6
*Independently Owned and Operated, REALTOR

# சகல சட்டத் தேவைகளுக்கும்

**Real Estate Law**

**Purchase, Sale & Mortgage**

**Immigration Law**


**Refugee Claim, Sponsorship, Work Permit & Student Permit**

**Business Law & Commercial Law**

**Accident Benefit Claims**

**Translation Services**

**Tamil, English & Sinhala languages**



தமிழ் வழக்கறிஞர்

## Raphael Maharaja

Barrister, Solicitor & Notary Public

**Tel: 416-847-7077**
**Fax: 416-847-7088**

**GTA SQUARE**
**5215 Finch Ave. East, Unit 219**
**Scarborough, ON**
**M1S 0C2**

# மோசமான சாரதி


செந்தூரன் புனிதவேல்
- காப்புறுதி முகவர் -

- தொடர் 2 -

சேமமான சாரதி கட்டுரைத்தொடரின் இரண்டாவது அங்கம் இது. வாகனம் சேமமாகச் செலுத்துவதற்கு வேண்டிய சில முக்கிய நிபந்தனைகளை இக்கட்டுரை தரும். விபத்து வந்தவுடன் அடடே என்று தலையைச் சொரிவதிலும் பார்க்க, இக்கட்டுரைத் தொடரில் உள்ளபடி செலுத்தினால் விபத்துகளை தவிர்த்து, மகிழ்ச்சியாக இருக்கலாம்.

**கட்டளை 3: விட்டுக்கொடுங்கள்:**
ஒவ்வொருவரும் விட்டுக்கொடுப்பதனால் விபத்துநேரவில்லை என்பதை நீங்கள் கட்டாயம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். யார் முதலில் செல்வது என்பதில் சிறு சந்தேகம் இருப்பினும் உங்கள் உரிமையை விட்டுக் கொடுங்கள். மற்றவர் பிழையாக இருப்பினும் நீங்கள் படுகாயத்திற்கு உள்ளாவதை அல்லது மரணத்திற்குள்ளாவதை தவிர்த்துக் கொள்வீர்கள். யதார்த்தம் என்னவெனில் வாகனம் செலுத்துவதில் விட்டுக் கொடுக்கும் வேளையில்தான் உரிமை உணரப்படும். யாருக்கு முதல் செல்லும் உரிமை என்பதற்கான சட்டங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தவறாக அறியப்படுகிறது. மேலும் சில சந்தர்ப்பங்களில் சட்டம் தெளிவாக விளங்கப்படாமலும் இருக்கிறது. இத்தகைய நிலையில் யார் முதல் செல்லுவது என்ற சந்தேகம் வரும்வேளையில் மற்றச் சாரதிக்கு விட்டுக் கொடுப்பது விபத்தைத் தவிர்க்க மிக எளிமையான வழி. அடிப்படையில் சேமமான சாரதியை தீர்மானிப்பது, ஏற்பட்டிருக்கக்கூடிய விளைவுகளில்தான் தங்கி இருக்கும்.

**கட்டளை 4:**
**வேகமாகச் செலுத்தார்தீர்கள்:**
சட்டவிதிகளுக்கு அதிகமான வேகத்தில் அல்லது சாலை நிலவரத்திற்கும் அதிகமான வேகத்தில் வாகனத்தை செலுத்துவது இரு விதத்தில் ஆபத்தை அதிகரிக்கும். ஒன்று: உங்களுக்கு விபத்தை தவிர்க்கத் தரப்படும் நேரம் குறைக்கப்படும், அடுத்தது வாகனத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டிய விசை அதிகமாயிருக்கும். இப்படியான ஆபத்துகளுக்கு முகம் கொடுக்கவேண்டுமா என எண்ணிப்பாருங்கள்.

மேலே தரப்பட்ட இரு காரணிகளும் பௌதீக விஞ்ஞானமும், கணக்கும் சேர்ந்த ஒரு விடயம். இதில் எவ்வித தவிர்ப்பும் செய்ய முடியாது. வேகம் கூடும்வேளையில் ஆபத்திற்கு முகம் கொடுக்க தரப்பட்ட நேரம் உங்களுக்கு தேவையான நேரத்திற்கு குறைவாக இருந்தால் விபத்து நிச்சயம். பொதுவாக விபத்துக்கு முகம் கொடுக்க எடுக்கும் சராசரி 0.75 செக்கனுக்கும் 1.5 செக்கனுக்கும் இடைப்பட்டதாக இருக்கும். இதற்கு வேண்டிய இடைவெளி 50 M.P.Hஇல் செல்லும் வாகனத்திற்கு 83 அடியாகும். அதே வாகனம் 70 M.P.H வேகத்தில் செல்லுமானால் தேவையான இடைவெளி 115 அடியாகும். இந்த நீளம் ஏழு கார்கள் அடுக்கடுக்காக வைத்த இடைவெளியாகும். சராசரி இடைவெளி 50 M.P.Hஇற்கும் 70 M.P.Hஇற்கும் இடையில் 32 அடியாகும் நீங்கள் வாகனத்தின் Brake இனை மட்டும் நம்பி வாகனத்தை செலுத்துவீர்களானால் ஏற்கனவே உங்களுக்கு பிரச்சினை உண்டு. விபத்தைத் தவிர்ப்பதற்கு வேண்டிய அளவு வேகமாக உங்களால் செயற்படுவது மிக்க சிரமமாய் இருக்கும். இது இரவுவேளைகளில் கூடிய கடினமாயிருக்கும். காரணம் இரவில் உங்கள் பார்வை மிகத் தெளிவாய் இருக்காது. உங்கள் வாகன விளக்கு எவ்வளவு தூரத்திற்கு தடையைக் காட்டும். மேலும் இருளில் உங்கள் கண்பார்வையின் தெளிவு எத்தகையது? வாகன விளக்கு தடையை காட்டும் வேளையில்



நீங்கள் ஏற்கனவே மிகக்கிட்ட வந்திருப்பீர்கள். வல்லுனர்கள் ஆய்வின்படி 50 M.P.H வேகமே மிகவும் அதிகமெனவும் எனவும் (இரவில்) அதிகம் குறைவாய் இருப்பதுவே சிறந்தது எனவும் குறிப்பிட்டுள்ளனர். நீங்கள் ஒரு சுவரை நேராக இடிப்பதாய் இருந்தால், அதுவும் அந்த சுவர் கெட்டியானதாய் இருந்தால் வாகனத்தை 100 மைல் மணித்தியாலய வேகத்திலா அல்லது 10 மைல் மணித்தியாலய வேகத்திலா செலுத்த விரும்புவீர்கள். இதற்குப் பதில் மிக எளிதாக சொல்லமுடியும். 10 மைல் வேகத்தில் தான் விரும்புவீர்கள். வேகம் அதிகரிக்க அதிகரிக்க வாகனத்தில் சேர்ந்து வைக்கப்படும் விசையும் அதிகரிக்கும். இப்படி அதிக விசை அதிக அழுத்தமான விபத்தில் முடியும். இதற்கு ஒரு உதாரணத்தை கவனித்தால் விளைவு தெளிவாக தெரியும். உங்கள் வாகனம் 60 மைல் வேகத்தில் செலுத்தப்படும் வேளையில் உங்கள் உடலில் சேமிக்கப்படும் விசை 16,000 இறாத்தல் அடியாகும். இந்த வேகத்தில் செலுத்தும் வேளையில் வாகனம் அசையாத ஒரு தடை மரத்தில் இடிக்கிறது என்று கொண்டால் உங்கள் தலையில் “வின்ட் ஸ்கிறீன்” 16,000 இறாத்தல் அடி விசையில் இடிக்கும் இது தேவையா?

ஒரு பாதுகாப்பான சாரதி இயன்றவரையில் முன்னால் செல்லும் வாகனத்தின் வேகத்திற்கு ஈடாக சட்டத்திற்கு மீறாத வேகத்தில் தன் வாகனத்தை செலுத்துவார். வாகனங்கள் மிக அதிக வேகத்தில் செல்லுமானால் நீங்களும் அந்தவேகத்தில் செல்ல வேண்டும். அல்லது வலதுபக்கத்தில் விலகி மற்ற வாகனங்களை செல்லவிட வேண்டும். இதுதான் சட்டம் எதிர்பார்ப்பதாகும். மற்ற வாகனத்துடன் இயைந்து செலுத்த வேண்டும். ஊரோடு ஒத்தோடுவது போல். அல்லது விலகி வழி விடவேண்டும். மற்றைய வாகனத்தின் வேகத்தை கட்டுப்படுத்துவது உங்கள் கடமையல்ல. எனவே குறைந்தவேகத்தில் செல்லுவதானால் விலகி வழிவிடுங்கள். மேலும் போதிய அளவு இடைவெளி விட்டு வாகனத்தை செலுத்துங்கள்.


நாம் அனைவரும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய விடயம் வேகம் அதிகம் நேரத்தை மிச்சம் பிடிக்காது என்பதே. பலரும் நேரம் போய்விட்டது என்பதற்காக வாகனத்தை செலுத்துகின்றார்கள். நீங்கள் வேகமாக செலுத்தும் வேளையில் பல சமயங்களில் ஆமை போல் ஊர்ந்து செல்பவர் சிகப்பு விளக்கில் நிற்கையில் உங்களுக்கு பக்கத்தில் வந்து நிற்பதை கவனித்திருப்பீர்கள். உடனே நீங்கள் பக்கத்து ஒழுங்கைக்கு உங்கள் வாகனத்தை செலுத்தியும் இருப்பீர்கள். ஆனால் உடனே அந்த ஒழுங்கை மெதுவாகப் போவதாகத் தெரியும். இத்தகைய வேகக் கட்டுப்பாட்டிற்கு காரணம் நகரவீதிகளில் உள்ள வண்ண விளக்குகள்தான். இந்த நிறுத்தி செலுத்தும் சமிக்ஞைவிளக்கு வீதியில் வாகனங்களை ஒட்டுமொத்தமாக கட்டுப்படுத்துகிறது. அதையும் மீறி நீங்கள் செலுத்துவதனால் சிவப்புவிளக்கு எரியும் வேளைகளில் தொடர்ந்து செல்லவேண்டும். இப்படி சட்டத்தை மீறுபவர்களை பிடிப்பதற்காகத் தான் வேகக்கமரா (Speed Camera) நிறுத்தி வைத்தள்ளார்கள்.

அப்படி அல்லது வேகமாக செலுத்தி, சிவப்பு விளக்குகளில் நிற்பாட்டுபவர்கள் சிவப்புவிளக்கில் கூடியநேரம் நிறுத்தி பின்செல்லுவதால் வேகம் கட்டுப்படுகிறது. இப்படிச் செய்வதால் சிவப்பு விளக்கில் கூடிய நேரம் நிற்பதுமல்லாமல் கூடிய அளவு பெற்றோலை விரயமாகக்குவதுடன் உங்கள் டயர், பிரேபாட் ஆகியவை அதிகம் தேய்வதாகும். உங்கள் பொறுமையை சோதித்து, வீணாக மனநிலையில் கோபம் வந்து உங்கள் Blood Pressure கூடி ஆரோக்கியமும் பாதிக்கப்படுகிறது. இது தேவைதானா? பெருவீதிகளிலும் நீங்கள் வேகத்தை கூட்டுவதால் அதிகநேரம் மீதமாகப் பெறுவதில்லை. ஒருவரை முந்திக்கொண்டு சென்று சொற்பதூரத்தில் உள்ள நகரத்தில் வெளியேறுகையில் நீங்கள் முந்தியவர் உங்களுக்கு பின்னால் நிற்பதை அவதானித்திருப்பீர்கள். இத்தனைக்கும் இடையில் பொலீஸ் மறித்தால் ஆமை உங்களை முந்திக்கொண்டு செல்வதை பார்த்துக்கொண்டிருப்பீர்கள் வழியில். பெரும்தூரத்தில் இருக்கும் ஒரு நகரத்திற்கு செல்கையில் கொஞ்சநேரம் மீதம்பிடிக்கலாம் என்பது உண்மை. உதாரணத்திற்கு 65 M.P.Hஇல் போகும் பாதையில் 80 M.P.Hஇல் செலுத்தினால் நீங்கள் 50 மைல் தூரம் உள்ள நகரத்திற்கு 8.7 நிமிடங்கள் முந்திப்போவீர்கள் - பொலிஸ் பிடிக்காவிட்டால். டொரொண்டோவுக்கும் ஒட்டாவாவிற்கும் இடையில், கம்பர் சொன்ன போர்க்களத்திலிருந்து திரும்பும் இராவணன் மாதிரி எத்தனை சாரதிகள் நிற்பதை கண்டிருப்பீர்கள். எனவே வேகம் விவேகமாகாது என்பது தான் நாலாவது கட்டளை.

அடுத்த பிரதியில் குடிகடிக்கும் எனும் விடயம் பற்றிய கட்டளையை கவனிப்போம்.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

எலி பூச்சித் தொல்லையா...?
RUBAN PEST CONTROL

▶▶ வீடுகள்
▶▶ தொடர்மாடி வீடுகள்
▶▶ தொழிற்சாலைகள்
▶▶ வியாபார நிலையங்கள்
ஆகிய அனைத்து இடங்களிலும்
எலி, பூச்சித் தொல்லைகளை
அறவே நீக்க அழையுங்கள்!
KANTHAN
416•291•3997

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER


# தற்போதைய பொருளாதார சூழலும் மாதாந்த கட்டுப் பணங்களும்

### தற்போதைய இறுக்கமான சூழலில் எப்படி ஆயுட்காப்புறுதிக்காக பணத்தை செலவிட முடியும்

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமான காரணிகளில் ஒன்று அவர்களின் உழைப்பு அல்லது வருமானம் (Income) ஆகும். எங்கள் வருமானத்தைப் பொறுத்தே எங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியும்.

எங்களின் எதிர்பாராத மரணத்தால் எங்கள் குடும்பத்தின் வருமானம் பாதிக்கப்படும். அதனால் எங்கள் குடும்பத்தின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படும்.

ஒரு மனிதனின் வாழ்க்கைப் பயணத்தில் பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்ந்து பயணம் செய்ய வேண்டிய நிலை உள்ளது. இந்த வாழ்க்கைப் பயணத்தின் வழியில் மீண்டும் இருந்த இடத்திற்கு அல்லது ஆரம்பித்த இடத்திற்கு வரமுடியாது. (U- Turns செய்ய முடியாது) பாதைகளை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் திரும்பி வர முடியாது. எனவே எமது வாழ்க்கைப்பயணத்தை பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படாமல் தொடர்வதற்கு மிகவும் அவசியமானது ஒரு காப்புறுதித் திட்டமாகும்.

எந்த ஒரு மனிதனுக்கும் எதுவும் எப்போதும் நடக்கலாம். அதனால் ஆகக் குறைந்த அடிப்படையான பாதுகாப்பையாவது நாம் செய்து கொள்ளவேண்டியது எமது கடமை.

தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் பலர் வேலை வாய்ப்புக்கள் இல்லாமலும் வருமானம் குறைந்தும் உள்ள நிலையில் எப்படி ஆயுட்காப்புறுதிக்கு பணம் செலுத்த முடியும் என்பதை கவனிக்க வேண்டிய தேவை உள்ளது.

எது எப்படி இருந்தாலும் எமது அடிப்படைத் தேவைகளை நாம் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. உணவு, உடை, உறைவிடம், மருத்துவச் செலவுகள், குழந்தைகளின் கல்வி போன்றவை மிகவும் அடிப்படையான தேவைகள். இந்தத் தேவைகளை பூர்த்தி செய்த பின்பு தான் நாம் அடுத்த விடயங்களை சிந்திக்க முடியும்.

எனவே இந்த அடிப்படையான அவசியமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் வருமானம் அல்லது உழைப்பு தேவைப்படுகிறது.

ஒவ்வொரு குடும்பத்தினரின் வருமானத்தையும் அல்லது உழைப்பையும் பாதுகாப்பதற்கு ஆயுட் காப்புறுதி தேவைப்படுகிறது.

ஒரு ஆயுட்காப்புறுதித் திட்டமானது ஒரு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய உதவுகின்றது.

எனவே இந்த காலகட்டத்தில் ஒவ்வொருவரும் தங்கள் வசதிக்கேற்ப மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதித் திட்டங்களை பெற்றுக்கொள்வதன் மூலம் தற்காலிகமான பாதுகாப்பை பெற்றுக் கொள்ள முடியும். பின்பு பொருளாதார நிலை வசதியாக உள்ள போது இந்த தற்காலிகமான காப்புறுதியை நிரந்தரமான ஆயுட்காப்புறுதியாக



மாற்ற முடியும். மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதி 10 வருடங்களுக்கான தவணைக் காப்புறுதித் திட்டம். இந்தத் திட்டம் 10 வருடங்களின் பின்பு மீளப் புதுப்பிக்க (Renewable) அல்லது நிரந்தர ஆயுட்காப்புறுதியாக மாற்ற முடியும் (convertable). நிரந்தர ஆயுட்காப்புறுதியாக 65 வயதுக்கு முன்பு மாற்றம் செய்யாவிட்டால் தவணைக் காப்புறுதிகள் எல்லாம் 85 வயதுடன் முடிவடைந்துவிடும். 10 வருடங்களுக்கான தவணைக் காப்புறுதி நீங்கள் பெற்றுக்கொண்ட வயதில் இருந்து முதல் 10 வருடங்களுக்கு மாதாந்தக் கட்டணம் மாற்றமடையாது பின்பு ஒவ்வொரு 10 வருடங்களின் பின்பும் அதிகரித்துக் கொண்டு போகும்.

உங்கள் வசதிக்கேற்றவாறு கூடிய தொகைக்கான காப்புறுதியை மிகக் குறைந்த மாதாந்தக் கட்டணத்தில் பெற்றுக்கொள்ள முடியும். உதாரணமாக ஒரு 30 வயது ஆண் $500,000 டொலர் காப்புறுதியை மாதாந்தம் 23.95 கட்டணத்தில் பெற முடியும்.

### குறைந்த வயதில் கூடிய தொகைக்கு காப்புறுதி பெற்றுக் கொள்வதால் ஏற்படும் நன்மைகள்

- மாதாந்த கட்டணம் மிகக் குறைவாக இருக்கும்
- ஆயுட் காப்புறுதியாக மாற்றம் செய்யும் போது மருத்துவப் பரிசோதனை எதுவும் வேண்டியதில்லை.
- சிறுவயதில் மருத்துவ பரிசோதனைகள் செய்வதால் இலகுவாக ஆயுட் காப்புறுதி பெற்றுக்கொள்ள முடியும்.
- எதிர்பாராத மரணம் ஏற்பட்டால் பெருந் தொகைப் பணம் கிடைக்கும்.

அத்துடன் பணவசதிக்கேற்றவாறு தேவையான தொகையை ஆயுட்காப்புறுதியாக மாற்றவும் முடியும். ஆயுட் காப்புறுதியாக மாற்றும் போது மருத்துவப் பரிசோதனைகள் எதுவும் வேண்டியதில்லை.

எனவே இன்றைய பொருளாதார நெருக்கடியில் மிகக் குறைந்த கட்டணத்தில் பெறக்கூடிய தவணைக் காப்புறுதித் திட்டத்தை பெற்றுக் கொண்டு பின்பு பொருளாதாரம் வசதியாக இருக்கும் போது சிறந்த திட்டங்களை உங்கள் வசதிக்கேற்ப மாற்றிக்கொள்ளலாம்.

### ஆயுட் காப்புறுதி யாருக்கு அவசியம்?

இதற்கு மிகவும் சுருக்கமான பதில் ஒவ்வொருவருக்கும் அவசியம் என்பதே. ஆனால், குறிப்பிட்ட சிலருக்கு ஆயுட்காப்புறுதி மிகவும் அவசியம்.

### குடும்பத் தலைவர்:

ஒரு குடும்பத்தின் தலைவருக்கு ஆயுட்காப்புறுதி மிக மிக அவசியம். காரணம், அவரின் மாத வருமானத்தில் அல்லது அவரின் உழைப்பில் குடும்பம் தங்கி இருந்தால் அவருக்கு எதிர்பாராத மரணம் ஏற்பட்டு விட்டால் அவரின் பொருளாதார இழப்பை ஈடுசெய்வதற்கு ஆயுட்காப்புறுதி மிகவும் அவசியமாகின்றது.

### வீட்டு உரிமையாளர்:

வீட்டுச் சொந்தரக்காரர்கள் (Home Owners) உங்கள் குடும்பத்தின் தலைவருக்கு அல்லது குடும்பத்தலைவிக்கு எதிர்பாராத உயிரிழப்பு ஏற்பட்டால் ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் தொடர்ந்து அதே வீட்டில் வாழ்வதற்கு ஆயுட் காப்புறுதி அவசியமாகின்றது.

### அன்புக்குரியவர்கள்:

அடுத்தவர் அல்லது அன்புக்குரியவர்களை அக்கறை செலுத்துபவர்கள் ஆயுட்காப்புறுதி பெற்றிருப்பதன் மூலம் உங்கள் பிள்ளைகள் அல்லது உங்கள் அன்புக்குரியவர்களின் எதிர்காலத்தை வளப்படுத்துவதற்கு வழிவகுக்க முடியும். ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடித்த பொதுத் தர்ம நிறுவனங்கள், வைத்தியசாலைகள், அல்லது கோவில், தேவாலயம் போன்றவற்றிற்கும் ஆயுட்காப்புறுதி மூலம் உதவி செய்ய முடியும். மாதாந்தம் ஒரு சிறு தொகைப்பணத்தை ஆயுட்காப்புறுதியாக செலவு செய்து அதனால் கிடைக்கும் ஆயுட்காப்புறுதிப் பணத்தை உங்களுக்கு பிடித்த ஆலயம் அல்லது தேவாலயம் அல்லது ஒரு பொது நிறுவனத்திற்கு நன்கொடையாக கொடுக்க முடியும்.


சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -
sritharan.t@thaiveedu.com,

■ ■ ■

தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

**இறுக்கமான சூழலில் இ ல கு வா ன தீர்வு**

- நிரந்தர ஆயுட் காப்புறுதி
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி
- ஈட்டுக்கடன் காப்புறுதி
- வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
- RRSP • RESP

**சிறீதரன் துரைராஜா**
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®

**416.918.9771**
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



RBC Insurance | INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Unity Life of Canada | Canada Life™

# மில்லியன் டொலருக்கான ஆயுட்காப்புறுதி

# மிகக் குறைந்த கட்டணத்தில்

- **வயோதிபர்களுக்கான காப்புறுதி - Non Medical Insurance**
  85 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை
- **ஆயுட்காப்புறுதி - Life Insurance**
  மாதாந்தக் கட்டணம் மாறாது.. கட்டிய பணத்தை மீளப்பெறமுடியும்
- **கொடிய நோய்களுக்கான காப்புறுதி - Critical Illness Insurance**
  கொடிய நோய்கள் ஏற்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி
- **குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம் - RESP**
  20% - 40% அரச மானியத்துடன் 15% அதிக போனஸ்

## ஒரு மில்லியன் டொலருக்கு

# $28.80

## மாதாந்தம்*

Rate based on 30 year female elite - non smoker (10 year term insurance)

Rate for 30 year male elite - non smoker (10 year term insurance)
**$42.30** per month

Sun Life Financial
Canada Life
Industrial Alliance Insurance and Financial Services Inc.
RBC Financial Group
Assumption Life
Unity Life of Canada

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

LiLand Insurance Inc. 759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்


Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
LIC: M08002487
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

ACCESS LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
INJURED?
Car Accident (MVA) Claims
Work Accident (WSIB) Claims
Bankruptcy
416-733-8880

APEX CREATIONS 416.297.0707
PRINTING - SIGN - BANNERS
103-50 Nashdene Rd. Scarborough, ON. M1V 5J2







இம்மாதப் புகைப்படக் கலைஞர்
**K.S. பாலச்சந்திரன்**
கனடாவில் வசித்துவரும் காண்பியல் கலைஞரும், எழுத்தாளருமான இவர், தனது ஓய்வு நேரங்களில் புகைப்படத்துறையிலும் ஆர்வம்காட்டி வருகின்றார்.

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**
புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.


• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

Insurance Ocean
PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi